# காதல் பரிசு

என்.சீதாலெட்சுமி



# காதல் பரிசு



## 1



''சஷ்டியை நோக்க சரவண பவனார்

சிஷ்டருக்கு உதவும் செங்கதிர் வேலோன்

பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை

கீதம் பாடக் கிண்கிணி ஆட...''

காலை மணி ஆறு. திருச்சி மாநகரில் இருக்கும் ஒரு பெரிய பங்களாவில் கந்தர் சஷ்டி கவசம் டேப்பில் ஓடிக் கொண்டு இருந்தது.

வீட்டுத் தலைவர் சிவநாதன் மூத்த மருமகள் மீராவுடன் நடைப் பயிற்சி முடிந்து வீட்டுக்குள் வந்தார். வீட்டு

வராந்தாவில் உள்ள கூடை நாற்காலியில் அமர்ந்து தினசரியை வாசிக்கத் தொடங்கினார்.

மீரா சென்று காபியை எடுத்து வந்து அவருக்குக் கொடுத்துவிட்டுத் தானும் அருந்தினாள்.

செய்திகளை வாசித்துக் கொண்டு இருக்கும்போதே, சிவநாதனின் மனைவி சாருமதி பூஜை முடித்துவிட்டு வந்து அவர்களுடன் அமர்ந்தார்.

மீரா அவரைப் பார்த்தவுடன் ஒரு கப் காபி ஊற்றப் போனாள்.

சாருமதி வேகமாக, ''வேண்டாம்மா. இன்னிக்கு சாயி பாபா விரதம். அதனால மதியம்தான் சாப்பிடுவேன்!'' என்றார்.

அதைக் கேட்டவுடன் சிவநாதனின் முகத்தில் இருந்த கவலை ரேகை அதிகமானது.

சாருமதி இரண்டு வருடங்களாகத் தான் இப்படி விரதம் என்று வாரத்தில் நான்கு முதல் ஐந்து நாட்கள் இருப்பது.

அதற்கு முன்னரும் இருப்பார் தான். ஆனால் செவ்வாய், வெள்ளியில் மட்டும்தான்.

அதற்கே அவர்களது மூத்த மகன் விபாகருக்குக் கோபம் வரும். ''என்ன அம்மா விரதம்? சாமி கேட்டாரா உங்களைப் பட்டினி இருக்கச் சொல்லி? பக்தி மனசில் இருந்தால் போதும்!'' என்பான்.

ஆனால் இப்போது எல்லாம் அவன் ஒன்றும் சொல்வது இல்லை. கேட்டால் முகம் மட்டும் இறுகி விடும். அவனுக்குத் தெரியுமே, அம்மா எதற்கு விரதம் இருக்கிறார் என்று. அவனது பிரார்த்தனையும் அதுதான் என்பதால் ரொம்பக் கோபம் வருவது இல்லை.



தன் எண்ண ஓட்டத்தில் இருந்து வெளிவந்த சிவநாதன், மனைவியின் வழிபாடுகளைத் தான் என்ன சொன்னாலும் மாற்ற முடியாது என்பது நடைமுறையில் புரிந்து இருந்ததால், ''விபு வந்தால் காபி குடிச்சுட்டேன்னு சொல்லு, மதி, என்ன,'' என்று மட்டும் சொன்னார்.

கணவர் சொல்ல வருவது புரிந்து, ''சரிங்க!'' என்று விட்டு, மருமகளிடம் திரும்பி, ''சஹி குட்டி பால் பணியாரம் கேட்டாள். செய்யச் சொல்லி இருந்தேன். கொஞ்சம் நல்லா வந்து இருக்கான்னு பார்த்துக்கோமா... நான் கோவிலுக்குப் போய்ட்டு வந்துடறேன்,'' என்றார்.

மருமகளின் குணம் தெரிந்தவர் என்பதால், ''அப்புறம் இன்னொன்னு. உன் புருஷன்கிட்ட உண்மைதான் பேசுவேன்னு சொல்லி என்னை மாட்டி விட்டுராதே, என்ன?'' என்றும் சொன்னார்.

லேசாகச் சிரித்து, ''சரிங்க அத்தை,'' என்று விட்டுத் தன் மகனைப் பார்க்க எழுந்து சென்றாள் மீரா.

அவுங்க அவுங்க வேலையில் மூழ்கி இருக்கும்போது நாம் ஒரு சின்ன இன்ட்ரா பார்க்கலாம்.

சிவநாதன் திருச்சியில் உள்ள பெரும் பணக்காரர்களுள் ஒருவர். சாருமதியைக் காதலித்து மணம் புரிந்தவர்.

அவரது திருமணத்திற்குச் சில நாட்கள் முன்புதான் அவரது தந்தை காலம் ஆனார். மனைவியாய் வரும் சாருமதியால்தான் இப்படி ஆகிவிட்டது என்று சொந்தங்கள் குறை கூறியபோது, அவரது தாயார் தேவகிதான் எல்லோர் வாயையும் அடக்கி மணம் செய்து வைத்தார்.

அடிப்படையிலே நல்லவரான சாருமதி, மாமியாரின் இந்தச் செயலுக்குப் பிறகு மிகுந்த பாசப் பிணைப்புடன் குடும்பத்தில் ஒருவராகி விட்டார்.

சிவநாதனின் முதல் தங்கைக்கு முன்னரே திருமணம் ஆகி இருந்தது அடுத்த தங்கையின் திருமணம், இரண்டு தங்கைகளுக்கும் பிரசவம் எல்லாம் சாருமதிதான் பார்த்தார். இரண்டு நாத்தனார்களும் அண்ணியிடம் நல்ல ஒட்டுதலுடன் இருந்தனர்.

சாருமதி - சிவநாதன் தம்பதியர்க்கு நான்கு மக்கள்.

இரண்டு மகன்கள். இரண்டு மகள்கள். மூத்தவன் விபாகரன். அடுத்து இரட்டைக் குழந்தைகள் - கதிரவன், சந்த்யா, கடைசியாக ஒரு பெண் மிருதுளா.

விபாகரனும், சந்த்யாவும் ரொம்ப அமைதி. தேவை இல்லாமல் பேச மாட்டார்கள். கதிரவனும், மிருதுளாவும் தான் ரொம்ப வாலுகள்.

அதுவும் மிருதுளா ரொம்ப குறும்பு. அப்பா, அண்ணா, அக்கா, அண்ணி, அத்தான் என்று அவளுக்குச் செல்லம் கொடுக்கும் பட்டியல் ரொம்பப் பெரிது.

கதிரவன் செல்லம் கொடுக்கா விட்டாலும் மிருதுளாவை வெளியாள் ஒருவர் குறை சொன்னால் பொங்கி விடுவான். அனைவரும் செல்லம் கொடுப்பதால் சாருமதி எப்போதும் மிருதுளாவிடம் கண்டிப்புதான்.

விபு, கதிர் இருவரும் தொழில் நீதி படிப்பு படித்தனர்.

சந்த்யா இன்டீரியர் டெகரேஷன் கோர்ஸ் படித்தாள்.

படித்து முடித்தவுடன் சிங்கப்பூரில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வரும் ஹரியின் குடும்பத்தில் இருந்து பெண் கேட்டு வந்தனர். பார்த்த முதல் பார்வையிலேயே இருவருக்கும் பிடித்துவிட, உடனே திருமணம் முடிந்து விட்டது. இரண்டு வருடம் கழித்து அழகான பெண் குழந்தை பிறந்தது.



மூவரையும் அவர்களுக்குப் பிடித்த கோர்ஸ் படிக்க வைத்தவர், மிருதுளா மட்டும் மருத்துவம் படிக்க வேண்டுமென்று ரொம்ப ஆசைப்பட்டார்.

மகளும் மறுப்பு ஏதும் சொல்லாமல் +2வில் நல்ல மதிப்பெண் எடுத்துச் சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தாள்.

இனி நம்ம ஹிரோயின் மிருது பத்தி கொஞ்சம் துணுக்குகள்.

மிருதுளா செய்யும் குறும்புகள் எண்ணில் அடங்காதவை.

ஒரு நாள் கூடப் படியில் நடந்து இறங்க மாட்டாள். கைப்பிடியில் சறுக்கிக் கொண்டுதான் இறங்குவாள். இரண்டு மூன்று தடவை அவள் விழுந்து வாரியதில் மண்டை பிளந்து ஒரே ரத்தம். அதில் இருந்து, இன்றுவரை, படி முடிவில் ஒரு ஸோஃபா போட்டு வைக்கப்பட்டு இருக்கும்.

ஒவ்வொரு நாளும் சாப்பிடும்போது கதிருடன் சண்டை பிடித்து, சாருமதியிடம் நன்றாகத் திட்டு வாங்காவிட்டால் அவளுக்குத் தொண்டையைத் தாண்டி உணவு இறங்காது.

மிருதுளா ஒரு ம்யூஸிக் பைத்தியம். ரூமில் எந்த நேரமும் பாட்டு ஓடிக் கொண்டே இருக்கும்.

முறையாகக் கர்நாடக சங்கீதம் பயின்று, தனியாகச் சாமி பாடல்கள் போடும் அளவுக்கு இசை ஞானம் உண்டு.

அவளைப் பார்த்தாலே கழுதை போல் கத்தி வம்பிழுக்கும் கதிர் கூடத் தன் நண்பர்களிடம் சொல்லிப் பெருமைப் பட்டான்.

அவனே இப்படி என்றால், நாதன் சாருக்குத் தலை கால் புரியாத சந்தோஷம், பெருமை. அவர் மற்றப் பிள்ளைகள் அவருக்குப் படிப்பிலும், தொழிலும் வாங்கித் தந்ததை விடக் கடைசிச் செல்ல மகள் முதல் கேசட் கொண்டு வந்து கொடுத்தபோது மிகவும் சந்தோஷம். விபு அவளது பிரெண்ட், பிளாஸபெர், கைட், எனிமி எல்லாமே.

அவர்களது அத்தை மகள் நீலாவை மிருதுவிற்குப் பிடிக்காது என்பதற்காகவே, அத்தை வீட்டில் திருமணத் திற்குக் கேட்டபோது விபு உறவில் திருமணம் செய்வது நல்லது அல்ல என்று சொல்லித் தட்டிக் கழித்து விட்டான்.

பிறகும் தன் செக்ரடரி மீராவிடம் காதலைச் சொல்லு முன் மிருதுவைக் கூட்டிப் போய்க் காண்பித்தான்.

மிருதுவோ அண்ணனின் ஆசைக்காதலியைக் கண்ட வுடன் சொக்கி விழுவது போல் நடித்துத் தன் சம்மதத்தைச் சொன்னாள்.

அத்துடன் இருந்து இருக்கலாம். நம்ம மேடம், தன் அண்ணன் இந்த ஜென்மத்தில் காதலைச் சொல்ல மாட்டான் என்று கண்டு விட்டு, மீராவிடமே சென்று தன் அண்ணன் சார்பாகச் சொல்லிச் சம்மதம் வாங்கிவிட் டாள். இந்த நற்பணியை வீட்டிலும் செய்து அண்ணன் திருமணம் நடக்க ஏற்பாடு செய்தாள்.

மீராவிற்குத் திருமணத்திற்குப் பிறகு நான்கு வருடங் கள் ஆன பின்னும் குழந்தை பிறக்கவில்லை. மிருதுளா அவளது சீனியர் ஒருவரிடம் கூட்டிச் சென்றாள். அவள் யு.எஸ். செல்லுமுன் கார்த்திக் பிறந்து விட்டான், மீரா விற்கு.

குறும்புக்கு நிகராக ரோஷமும் ஜாஸ்தி மிருதுவுக்கு.



+ 2 படிக்கும்போது உடன் படிக்கும் சில பெண்கள் இவள் மருத்துவம் படிக்கப் போகிறேன் என்று சொன்ன வுடன், ''உனக்கு என்ன உங்க அப்பா பணக்காரர்... நீ நல்ல மார்க் வாங்காவிட்டால் கூட பணம் கொடுத்து சீட் வாங்கிக் கொடுப்பார்!'' என்று கூறினர்.

அதில் ரோஷம் பிறந்து ரொம்ப முனைந்து படித்துப் பள்ளியில் முதலாவதாக வந்தாள். இயல்பிலேயே நன் றாகப் படிக்கும் அவளுக்கு அது ரொம்பக் கஷ்டமாகவும் தெரியவில்லை.

சென்னை மருத்துவக் கல்லூரியிலும் இடம் கிடைத்தது.

அவள் சென்னைக்குச் சென்ற பின் ஒரு வாரம் வீடே ஒரே சோகமயமாகக் காட்சியளித்தது. போகும் அன்று கண்ணீர் மழையில் வீட்டை நனைத்துவிட்டுத் தான் சென்றாள். வார விடுமுறையில் வந்தால் ஒரே கொண் டாட்டம், கொஞ்சல்ஸ், விருந்து என்று அமளி துமளிப் படும்.

ஹவுஸ் சர்ஜன் முடித்துவிட்டு, அமெரிக்காவில் சென்று மாஸ்டர்ஸ் செய்த போதும், இதே நிலைதான். வார விடுமுறை இல்லாமல் வருட விடுமுறையில் வந்தாள்.

இந்த சந்தோசம் வீட்டில் இருந்தது மூன்று வருடங்கள் முன்னால்.

இப்போதோ எல்லார் முகத்திலும் ஒரு கவலை ரேகை ஓடிக் கொண்டே இருக்கிறது.

இன்று கவலை ரேகை கொஞ்சம் கம்மியாகி இருப்ப தற்குக் காரணம் சந்த்யா, அவளது கணவன் ஹரி, மகள் சஹானா, மகன் சபரிஷ் அனைவரும் சிங்கப்பூரில் இருந்து வருகிறார்கள்.

சஹானா, கார்த்திக், சபரிஷ் மூவரும் இருப்பதால் தான் இப்போது எல்லார் முகத்திலும் கொஞ்சம் சிரிப்பு இருக்கிறது. அவர்கள் மூவரும் இல்லை என்றால் எப்போதும் ஒரு அசாத்திய அமைதி நிலவும்.



## 2



அடுத்த அரை மணி நேரத்தில் வந்த சகோதரர்கள் இருவரும் குளித்து ரெடியாகி வருவதற்கும், சந்த்யா தன் குடும்பத்தினருடன் ஏர்போர்ட்டிலிருந்து வீடு வந்து சேர்வதற்கும் சரியாக இருந்தது.

சின்னப் பிள்ளைகளைக் கொஞ்சி, பெரியவர்களைக் குசலம் விசாரித்து, சாருமதியும் சந்த்யாவும் பொழிந்த பாச மழையில் அனைவரும் நனைந்து, அதன் பின் அனைவரும் சாப்பிட அமர்ந்தனர்.

சாப்பாட்டு மேஜையில், சின்னக் குழந்தைகளின் சிரிப்புச் சத்தமும் ரகசிய உரையாடல்களும் ஒருபுறம் அரங்கேறிக் கொண்டு இருக்க, இளைய தலைமுறை ஆண்கள் தத்தம் தொழில் பற்றிப் பேசிக் கொண்டு இருந்தனர்.

சாப்பாடு முடித்தவுடன், ஹரி மாமனாரைத் தனியாக அழைத்து, ''கதிர் கல்யாண விஷயம் பற்றி போனில் சொன்னனே மாமா, வீட்டில் பேசி விட்டீர்களா?'' என்றான்.



''இன்னும் இல்லை ஹரி... எல்லாருக்கும் ஓகே. கதிர் தான் என்ன சொல்வானோ தெரியவில்லை... கல்யாணத்தைப் பற்றிப் பேசினாலே நரசிம்ம மூர்த்தி ஆகி விடுகிறான்.''

அங்கே வந்த சந்த்யா, ''என்னப்பா இது, அவன் சொன்னால் அப்படியே விட்டு விடுறதா? நீங்கதான் பக்குவமா சொல்லணும். எனக்கு மானஸாவை நல்லாத் தெரியும்பா. ரொம்ப நல்ல பொண்ணு. பந்தாவே இல்லாம டவுண் டு எர்த் பெர்சன். அவுங்க அப்பா அம்மாவும் நல்லவுங்க.''

''ஹே சது, ஐ ஹேவ் எ டவுட். நீ எங்க வீட்டைப் பத்தி ஏதாவது வத்தி வச்சியா என்ன, ஒரு பொண்ணை இவுங்க வீட்டுல கல்யாணம் பண்ணிக் கொடுத்து நான் படுற கஷ்டமே போதும். பையனை வேற இவுங்க சொந்தக்காரப் பொண்ணுக்குக் கல்யாணம் செய்யணுமான்னு மாமா நினைக்குறாரோ என்னமோ!'' என்று சொல்லி விட்டு, சந்த்யாவின் முறைப்பு, மூன்று அடிகள், ''தனியா வாங்க பேசிக்கிறேன்!'' என்ற திட்டு எல்லாவற்றையும் வாங்கிக் கட்டிக் கொண்டான்.

சிவநாதன் சிரித்துக் கொண்டே, சொன்னார். "சே, என்ன ஹரி, என் பெண்ணை நீங்க எப்படி வைத்துக் கொள்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாதா? நான் கதிரிடம் பேசாததற்கு அவன் கோபம்தான் காரணம் - வேறு ஒன்றும் இல்லை.''

''சரி மாமா, அப்போ நானும் சதுவும் சாயங்காலம் அவனிடம் பேசுகிறோம்.''

''நல்ல முடிவு வந்தால் சரிதான்... நீங்கள் பேசுங்கள்... வெளி வேலைகள் அதற்குள் முடிந்து விடுமா?''

''முடித்து விடுகிறேன் மாமா... நான் சிங்கப்பூர் செல்வ தற்குள் ஒரு முடிவுக்கு வந்து விட முயற்சி செய்கிறேன்,'' என்று விட்டுக் கிளம்பினான்.

சாயங்காலம் ஆறு மணிக்கு, டிபன் - காபி சாப்பிட்டு விட்டு (ஹரி சந்த்யாவிடம் சொல்லிவிட்டான், 'எனக்கு ரொம்பப் பசிக்குது... உங்க குடும்பத்துல கோவம் வந்தா சாப்பாட்டைத்தான் முதலில் குறி வைப்பீங்க... அது னால நம்ம சாப்பிட்டப்புறம் கதிர் கிட்ட பேசலாம்.') எல்லாரும் பேசிக் கொண்டு இருக்கும்போது ஹரி குழந்தைகளிடம் திரும்பி, ''மூணு பேரும் போய் டோரா பாருங்கடா செல்லம்!'' என்றான்.

சஹானா, ''ஏன் டாடி, நாங்க இங்கேயே விளையாடு றோம், ப்ளீஸ்!'' என்றாள்.

கார்த்திக், ''ஹே சஹி, அவுங்க மிருது அத்தை பத்திப் பேசப் போறாங்க... அதுதான் நம்மளைப் போகச் சொல் றாங்க,'' என்றான்...

மீரா, ''ரொம்ப வாய் ஜாஸ்தி ஆகிடுச்சு உனக்கு!'' என்று விட்டு அவர்களை மூவரையும் கூட்டிக் கொண்டு உள்ளே சென்றாள்.

கதிருக்கும் அவர்கள் பேசப் போவது புரிந்த போதும், ஹரியிடம் இருந்த மரியாதை மவுனமாக இருக்க வைத்தது.

ஹரி, ''கதிர்! நான் சொல்லப் போவதைக் கொஞ்சம் பொறுமையாகக் கேளு. தயவு செஞ்சு குறுக்க பேச வேண்டாம். என் சொந்தத்தில் ஒரு பொண்ணு இருக்கா. பேர் மானஸா. அவங்க அப்பா எனக்குச் சித்தப்பா முறை வேணும். நல்லா படிச்சு இருக்கா... நல்ல குணம், நான்



முன்னாடி நடந்தது எல்லாத்தையும் சொல்லிட்டேன்... அவுங்க நம்ம மேல தப்பு இல்லைங்கறதைப் புரிஞ்சுக் கிட்டாங்க. அத்தை, மாமா, விபு, சது, மீரா எல்லாருக்கும் ரொம்ப சந்தோசம். உன் சம்மதம் தான் பாக்கி!'' என்றான்.

''அத்தான்! முடிச்சுட்டீங்களா, நான் பேசலாமா?'' என்றான் கதிர்.

''ம்ம்ம்.''

''ஒரு தடவை கல்யாணம்-னு ஊரைக் கூட்டி நாம பட்ட அவமானம் பத்தாதா... எனக்குக் கல்யாணம் என்றாலே அந்த நாள் தான் ஞாபகம் வருது... ப்ளீஸ் வேண்டாம், விட்ருங்க.''

சாருமதிக்கு இதைக் கேட்டதும் அழுகை பெருக் கெடுத்தது. அதைப் பார்த்தவுடன் விபு, ''என்னடா ப்ளீஸ், எங்களுக்கும் அந்த அவமானம் இன்னும் வலிக்கத்தான் செய்யுது... அதை நினைச்சுக்கிட்டே இருந்து என்ன புண்ணியம் சொல்லு... மறையவா போகுது. உன் நல்ல துக்குத்தானே சொல்றோம்!'' என்றான்.

''எல்லாரும் இப்படி என்னைக் கட்டாயப்படுத்திக் கிட்டே இருந்தீங்கன்னா.. நானும் எங்கேயாவது போய்டு வேன், சொல்லிட்டேன்.''

சிவநாதன் கோபத்துடன் எழுந்து அவனை ஒரு அறை விட்டார். அனைவரும் அதிர்ந்து போய்ப் பார்த்துக் கொண்டு இருக்கும்போதே, ''பேசுகிற பேச்சைப் பாரு... ஒருத்தியை இழந்து விட்டு நான் படும் வேதனையே எனக்கு இந்த ஜென்மத்துக்குப் போதும். நீ வேற புதிதாக ஒன்றும் கொண்டு வரத் தேவையில்லை!'' என்று கத்தி விட்டு விடுவிடுவென்று உள்ளே சென்று மறைந்தார்.

பிள்ளைகளை இதுவரை கடிந்து ஒரு வார்த்தை சொல்லாதவர், இன்று கதிரை அடித்தது அனைவரையும் பேச்சிழக்க வைத்தது. சாருமதி தான், ''கண்ணா, அப்பாவிற்காக நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்... நீ வீட்டை விட்டுப் போக மாட்டாய் தானே?'' என்றார்.

''என்னம்மா, அப்பாவைக் கோபப்பட வைத்ததற்கு நான் தான் உங்களிடம் மன்னிப்புக் கேக்கணும்... இனி மேல் அப்படிப் பேச மாட்டேன்மா,'' என்றான்.

சாருமதி உடனே, ''அப்போ கல்யாணத்திற்கு ஒத்துக் கொள்கிறாயா கண்ணா?'' என்று ஆவலாகக் கேட்டார்.

''ச்சு. என்னம்மா, நான் எங்கே அப்படிச் சொன்னேன்... வீட்டை விட்டுப் போக மாட்டேன்னுதான் சொன் னேன்.''

முகம் வாடச் சாருமதி உள்ளே கணவனைப் பார்க்கச் சென்றார். அவருக்குத் தன் கணவரின் மனநிலை எப்படி இருக்குமோ... அதை மாற்ற என்ன செய்வது என்பதுதான் இப்போதைய கவலையாக இருந்தது. கதிரிடம் என்ன வாதாடினாலும் ஒன்றும் பெரிதாக நடக்கப் போவது இல்லை. எதற்கு வாதாடித் தன் நேரத்தையும் வீணாக்கி, மனதையும் புண்ணாக்கிக் கொள்ள வேண்டும் என்று எண்ணி உள்ளே சென்று விட்டார்.

அவர் செல்வதற்காகவே காத்திருந்தாற் போல் சந்த்யா பொரியத் தொடங்கி விட்டாள் ''ஏன்டா உன் வாய் அடங்கவே செய்யாதா? இந்தப் பேச்சுத்தான் அவளை நம்மை விட்டுப் பிரித்து விட்டது... அவ்வளவு பெரிய விஷயம் நடந்தப்புறமும் உனக்குப் புத்தி வருதா?''



இதைக் கேட்டவுடன் ஒரு நிமிடம் தலை குனிந்த கதிர் மறுநிமிடமே சிலிர்த்து எழுந்து, ''ஆமா, என்னை மட்டுமே சொல்லுங்க. நீங்க எல்லாம் அப்படியே திரு வாயை மூடிக்கிட்டு இருந்த மாதிரி. நான் அதை நினைத்து வேதனைப்படாத நாளே இல்ல, தெரியுமா..? ஏன் சந்து இப்படி சொல்லிச் சொல்லிக் காண்பிச்சு என்னை வதைக்குற!'' என்று கோபத்தில் தொடங்கிக் குரல் கம்ம முடித்தான்.

விபு, ''ஆமா சந்து, நாமளும்தானே அவள் செய்யா ததைச் செய்தாயா செய்தாயா என்று கேட்டு அவளை வதைத்தோம்.. அவன் அந்த நேர அதிர்ச்சியில் கொஞ்சம் அதிகமாகச் சொன்னதை, சொல்லிக் காண்பிச்சு, அவனை மட்டும் குறை சொல்லக் கூடாது'!' என்றான்.

அதைக் கூறியபோது 'Vibu anna... you too... I thought you knew me more than anyone in the world!' என்ற வரிகளே அவன் மனதில் ஓடி மறைந்தன.

ஒரு நாளைக்குக் குறைந்தது பத்துத் தடவையாவது மனதில் எண்ணும் வரிகள் தான் என்றாலும் ஒவ்வொரு முறை நினைக்கும்போதும் வலிக்கிறதே என்று எண்ணிக் கொண்டான்.

ஹரி, ''ஆமா, இப்போ யாரு கூடப் பேசுனா, யாரு குறைச்சுப் பேசுனானு ஒரு பார்ன் டவுன் சார்ட் வேணும்னா போடுவோமா... நாம் பேசுவது கதிர் கல்யாண விஷயம்னு நான் நினைத்தேன்... சது உன்னால தான் எல்லாம்... அத்தை உள்ளே போனவுடன் உன்னை யாரு பேசச் சொன்னா? வாய் மூடிக்கிட்டுப் பேசாம இரு. கொஞ்ச நேரம்,'' என்றான் அழுத்தமான குரலில்.

''இங்க பாரு கதிர், ஒரு தடவை தப்பாகப் போய் விட்டது என்பதற்காகத் திரும்பவும் தப்பாப் போகணும்னு ஒன்னும் சட்டம் இல்லை. இந்தத் தடவை எல்லாம் நல்லபடியா நடக்கும், நான் க்யாரண்ட்டி தரேன். என் மேல் நம்பிக்கை வைத்துச் சரின்னு சொல்லு. அத்தையும் மாமாவும் ரொம்ப மனசு வருத்தப் படுறாங்கடா ப்ளீஸ்.''

''எனக்கும் அவுங்க வருத்தம் புரியுது அத்தான்... பட் என்னால முழு மனசோட கல்யாண வாழ்க்கையில் ஈடுபட முடியும்னு தோணல... ஒரு பொண்ணோட வாழ்க்கையும் இதில் அடங்கியிருக்கு அத்தான்... மிருது எங்க எப்படி இருக்கான்னே தெரியாம எப்படி அத்தான் நான் மட்டும் சந்தோஷமா இருக்க முடியும்.''

உடனே சந்த்யா, கணவனின் சொல்லை மறந்து, ''ஹரி, அவ இருப்பா தானே! ஒண்ணும் ஆகி இருக்காது தானே அவளுக்கு!'' என்றாள் கலங்கிய குரலில்.

ஹரி, ''உன்னை... நாலு போட்டாத்தான் சரியா வரும்... வாயை மூடு சந்த்யா... ஷி இஸ் நாட் எ கவார்ட்... ஷி வில் பி ஃபைன் அன்ட் ஹேப்பி...''

அவனது கோபக் குரலும், ''சந்த்யா'' என்ற அழைப்பும் வாயைக் கட்டிப் போட, பேசாமல் இருந்தாலும் சகோதரியை நினைத்துக் கண்கள் குளமாகின.

விபுவும், ''எனக்குத் தெரியும் சந்து, அவ கோழை கிடையாது... நமக்கு இருக்கும் வேதனை அவளுக்கும் இருக்கும். பட் என் உள்ளுணர்வு சொல்லுது, கொஞ்ச நாள் நாம் சொன்னதை நினைத்துக் கஷ்டப்பட்டு இருந்தாலும் ஷி வுட் ஹேவ் மேட் ஹெர் லைஃப் டு பி ஹேப்பி இன் ஹெர் வே. அவ நல்லாத்தான் இருப்பா...



என்னோட அவளோட ரோஷம் தான் நம்மகிட்ட வராம இருக்கக் காரணம்... நமக்கும் இது தேவைதான், ம்ம்ம் கதிர், அதுனால அவளைப் பத்தி கவலைப்படாம நீ கல்யாணம் பண்ணிக்கோ,'' என்றான்.

''கொஞ்ச நாள் போகட்டுமே ப்ளீஸ்...'' என்றான் கதிர்.

ஹரி, ''எத்தனை கொஞ்ச நாள்டா... எனக்கு ஒரு முடிவு வேணும் இன்னைக்கு இதுக்கு...'' என்றான் கொஞ்சம் கோபத்துடன்.

''முடிவு கடையிலயா விக்குது உடனே வாங்கிக் கொடுக்கிறதுக்கு... அப்படி இருந்தாலும் கடைக்குப் போக டைம் வேணும்ல. சோ... ப்ளீஸ்...'' என்றான் கதிர்.

விபு இடையிட்டு, ''ஜோக்கா இது... சகிக்கலை... உன்னோட ப்ராப்ளம் மிருது எப்படி இருப்பாளோன்னு தானே... என்னோட உள்ளுணர்வு ஒரேயொரு தடவை தவிர ஒழுங்காத்தான் வேலை செஞ்சுருக்கு... சோ நீ தயங்கத் தேவையில்லை.''

அவன் ஏதோ சொல்ல வர, அவசரமாக இடை புகுந்து, ''இந்த தடவை மட்டும் எப்படி கரெக்ட்டா இருக்கும்? இதுவும் தப்பானா என்ன செய்வேன்னு விதண்டாவாதம் செய்யாதே! சொல்லிட்டேன்,'' என்றான்.

''என்ன சொல்ற கதிர்?'' என்றான் ஹரி.

''சரி அத்தான், பட் இரண்டு கண்டிஷன்ஸ்... பர்ஸ்ட் நான் அந்தப் பொண்ணு கூடப் பேசி எல்லாத்தையும் விளக்கின பிறகு தான் என்னாலும் சரியா, ஒரு முடிவெடுக்க முடியும். செகண்ட் இஃப் எவ்ரிதிங் கோஸ் ஃபைன் கல்யாணத்தை ரொம்ப க்ராண்டா பண்ணக் கூடாது... சிம்பிளா கோவில வச்சுத் தான் தாலி கட்டுவேன்.''

''முதல் கண்டிஷன் ஓகேடா... மானஸா நல்ல பொண்ணு... ஆனா அடுத்தது தான்... எவ்வளவு பெரிய குடும்பம், எவ்வளவு பெரிய வியாபார வட்டம்... என் னடா இது.''

''இதுதான் என் முடிவு... முதல்ல கல்யாணம் கல்யாணம்-னு படுத்துனீங்க. இப்போ இதுவா? திஸ் இஸ் மை ஃபைனல் டிஸிஷன்!'' என்றுவிட்டு உள்ளே எழுந்து சென்று விட்டான்.

சந்த்யாவும், விபுவும், ''விடுங்க ஹரி. அவன் இது வரை சரியென்று சொன்னதே போதும்,'' என்றனர் ஒரே குரலில்.

ஹரி ஒரு பெருமூச்சை வெளியேற்றி, ''மாமா முதல்லே அடிச்சு இருக்கலாம் போல, இன்னும் முன்னாலேயே கல் யாணம் முடிஞ்சு இருக்கும்.. பையன் ரொம்ப அரண்டு போய்ட்டான்!'' என்றான்.

''சரி வாங்க. மாமா கிட்ட போயி சொல்லலாம்... பாவம் அத்தை வேற ரொம்ப நொந்து போயிருப்பாங்க!'' என்று விட்டு உள்ளே செல்லத் திரும்பினான்.

அவர்கள் உள்ளே செல்ல எழும்போது ஒரு கார் உள்ளே வரும் சத்தம் கேட்டது. சபரிஷ் போட்ட சத்தத்தில் சந்த்யா உள்ளே சென்றுவிட ஹரியும், விபுவும் நின்று திரும்பிப் பார்த்தனர்.

''இதுவரை இவனைப் பார்த்ததே யில்லேயே... ஒருவேளை மற்ற இருவரின் புது நண்பனாயிருக்குமோ!'' என்று எண்ணிக் கொண்டு அந்த நெடியவன் அவர்களை நெருங்கி வரும் வரை காத்து இருந்தனர்.





# 3



அந்த நெடியவன் திருச்சியில் சிவநாதன் வீட்டிற்குள் நுழையும்போது மாலை மணி ஏழு.

உலகத்தின் மறுகோடியில் இருக்கும் Vancouver - Canada -வில் மணி காலை ஆறரையாகி இருந்தது.

வேன்கூவரைச் சுற்றி உள்ள சின்ன நகரமான ரிச்மாண்ட்ல ஒரு தனி வீட்டில் வெங்கடேஸ்வர சுப்ரபாதம் ஓடிக் கொண்டு இருந்தது.

அந்த வீட்டரசி வாசுகி, ''சுப்ரபாதம் முடிந்தவுடன், கிருஷ்ண கானம் சிடி இன்னைக்குப் போட வேண்டாம் என்ன... ரிது இன்னைக்கு ஆயர் பாடி மாளிகையில் பாடுவாள்... நேத்தே கேட்டேன். சரிம்மா கண்டிப்பா படு றேன்னு சொன்னா,'' என்றார் தன் கணவரான விஸ்வ நாதனிடம்.

''என்னமா பாடி இருக்கார் இல்ல எஸ்.பி.பி. நம்ம ரிதுவுக்கும் நல்ல வாய்ஸ். தேன் மாதிரி... கேக்குறவங்கள அப்படியே உருக்கிடும்.''

விஸ்வநாதன், ''அவ பாடுறது இருக்கட்டும். முதல்ல போய் அவளை எழுப்பி விடு, இன்னைக்குச் சீக்கிரம் போகணுமுன்னு சொன்னா.. லேட் ஆயுடுச்சுன்னா சாயந்திரம் பாடட்டும். என்ன...'' என்றார்.

''ஆமா, அவளப் போய் எழுப்புறேன்... நைட் வேற லேட் ஆகிடுச்சு படுக்க.''

''நல்லா கதை பேச வேண்டியது. அப்புறம் லேட் ஆகாம என்ன செய்யும்... நிகில் ஊரில் இல்லாதது உங்களுக்கு ரொம்ப வசதியா போச்சு. அவன் இருந்தா உங்களை விரட்டிக்கிட்டே இருப்பான்... இந்த டைமில யாவுது கொஞ்சம் சீக்கிரம் படுக்கக் கூடாதா?'' என்றார்.

''ஆமா, அவன் கிடக்கான். சும்மா எல்லாத்துக்கும் அவளுடன் வம்பு செய்ஞ்சுகிட்டே இருக்கிறது... நீங்க வேற இதைச் சொன்னா இன்னும் ரொம்ப பேசுவான்... நான் போய் எழுப்புறேன்,'' என்று விட்டு மாடிக்குச் சென்றார்.

ரிதுவின் அறைக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்று அவளை எழுப்பிவிட்டுக் கிளம்பச் சொன்னவர், கீழே வந்து அவளுக்குப் பிடித்த காலை உணவான இட்லி, தக்காளி சட்னியைத் தயார் செய்யத் தொடங்கினார்.

கிளம்பிக் கீழே வந்தவள் வாசுகி, விஸ்வநாதன் இருவர்க்கும் காலை வணக்கம் சொல்லிவிட்டு, ''நிக்கி இல்லாம போர், இல்லபா!'' என்றாள்.

விஸ்வநாதன் சிரித்துக் கொண்டே, ''ஆமா சண்டை போட ஆள் இல்லாம நீ படுற கஷ்டம் பார்க்க முடியலமா எங்களால!'' என்றார்.

''ச்சு கரெக்ட்பா, சோ இன்னைக்கு நான் டபுள் ரோல் ப்ளே பண்ண முடிவு பண்ணி இருக்கேன்... என்ன சொல்றீங்க...''

''அது எப்படி டபுள் ரோல் ப்ளே பண்ணுவே.''



''முதல்ல நான் என்னோட வாய்ஸ்ல பேசுறேன்... தென் நிக்கி அதுக்கு என்ன பதில் சொல்வாங்களோ அதை நானே நிக்கி குரல்ல பேசுறேன். ஓகேவா?'' என்றாள்.

''அதை அப்புறம் பண்ணலாம், டைம் இருந்தா ஆயர் பாடி மாளிகையில் பாட்டு பாடுறியா?'' என்றார் வாசுகி ஆசையுடன்.

''ச்சே மறந்தே போயிட்டேன், கண்டிப்பா பாடுறேன் சுகிமா... நீங்க போய் விளக்கேத்துங்க...''

''ஏத்திட்டேன்டா, நீ சாமி கும்பிட்டுவிட்டுப் பாடு.''

மனமுருகி அவள் பாட, வாசுகியும் விஸ்வநாதனும் கண் மூடி ரசித்தனர். சாப்பாட்டு மேசையில் மூவரும் அமர்ந்து உணவு அருந்தத் தொடங்கிய போது, ''சுகிமா.. என்னோட வேலை பார்க்கிறாள் இல்லை சின்டின்னு, அவ ஒரு பர்ஸ் வாங்கி இருக்கா. சூப்பர்ப் பர்ஸ் தெரியுமா.. கிளாசிக்கா இருந்தது.''

''ஓ, இந்த வீக் என்ட்ல மெட்ரோ டவுன் போலாமாடா நம்ம... அங்க வாங்கலாம் என்ன.''

''ஹே தாங்க்ஸ் சுகிமா, ஓகே ஓகே. இப்ப நிக்கி இருந்தா என்ன சொல்வார் தெரியுமா?'' என்றாள்.

வாசுகியும், விஸ்வநாதனும் சிரிப்புடன் மறுப்பாகத் தலையாட்ட, ''நீங்க வாங்கி வச்சு இருக்கற ஹண்ட்பாக் எல்லாம் நான் செகண்ட் சேல் பண்ணா கூட ஒரு மாசத்துக்கான கிரோசெரி செலவு சரியாகிடும்... ரெண்டு பேரும் எங்க அப்பா இருபத்தைந்து வருஷமா சேர்த்து வச்சதை ஹாண்ட் பாக்லையே விட்டுடுவீங்க போல இருக்கே...'' என்று ஏற்ற இறக்கங்களுடன் சொல்லிச் சிரித்தாள்.

திரும்பித் தன் குரலுக்கு மாறி, "குதிரை வாலுல விட்டதையும் நாங்க ஹாண்ட்பாக்-ல விடுறதையும் திரும்பிப் புடிச்சதா சரித்திரமே இல்லை... போனது போனது தான். திரும்பி எல்லாம் எடுக்க முடியாது... என்னபா கரெக்டா?"

மூவரும் சிரிப்புடனே சாப்பாட்டைத் தொடர்ந்தனர்.

வாசுகி, "கொஞ்சம் நெய் ஊத்தவாடா ரிது... உனக்குப் பிடிக்குமே இட்லி மேல நெய் ஊத்தி, பொடி வச்சு சாப்புட்டா!" என்று கேட்டவுடன் -

"அகெய்ன் நிக்கி கம்ஸ் இன் டு பிளே!" என்று விட்டு, "வீட்டுப் படி தாங்குமான்னு தெரியல. எதுக்கும் ஒரு வாட்டி செக் பண்ணிடுங்க. ஏன்னா இப்படியே நெய்யும், பருப்புமா ஊட்டுனீங்க, அப்புறம் நல்லா டிரம் மாதிரி உருண்டு திரண்டுதான் வருவா... படி பாவம்!" என்றாள் அவன் குரலில்.

"ச்சே அப்படி எல்லாம் சொல்ல மாட்டான்டா. அவன் தான் போன தடவை நானும் அவனும் இந்தியன் ஸ்டோர் போனப்ப ரிது இன்னைக்கு நெய் கேட்டாள்ல, தீந்து போச்சோ, இன்னைக்கு மறக்காம வாங்கிடுங்கன்னு சொன்னான்டா."

"சரி, இப்படியே வம்பு பேசாத. அவன் இருந்தால்தான் இப்படிப் பேசிக்கிட்டே ஹாஸ்பிடலுக்கு அரக்கப் பரக்கப் போற. இன்னைக்காவுது கொஞ்சம் நிதானமா போ," என்றார் கை கழுவ எழுந்தபடி.

அவன் குரலில் - "டன் மிஸ்டர் அப்பா!" என்றவாறே எழப்போனாள்.

"ஹே இந்தப் பால குடிச்சுட்டுப் போ!" என்று அவளிடம் ஒரு கிளாஸ் நிறையப் பாலைத் திணித்தார் வாசுகி.



"எவ்ளோ பெரிய டம்ளர்!" தேவயானி பாணியில் சொல்லிக் கொண்டே, "கண்டிப்பா குடிக்கனுமா, வேணும்னா காபி மக்-ல ஊத்தித் தாரீங்களா சுகிமா? நான் மெது மெதுவா குடிச்சுக்கறேன்," என்று கெஞ்சினாள்.

"நீ மெது மெதுவா குடிக்குற ஆளா, உன்னை நம்ப முடியாது. பாதி நாள் கார்லேயே வச்சுட்டுப் போய்டுவே... மீதி நாள் கொண்டு போய்ட்டு ஒரு வாய் கூடக் குடிக்காம நான் போன்ல கேக்கும்போது தான் பால் நினைப்பே வரும்... சோ நத்திங் டூயிங்... குடிச்சிட்டு டேபிள் விட்டு எழுந்திரு."

"ம்ம்ம்" என்று முனகிவிட்டுக் குடிக்கத் தொடங்கினாள்.

ஒரே மூச்சில் குடித்து முடித்துவிட்டு, "நிக்கி சொல்லறதுக்கு ஏத்தாபுல நீங்களும் பண்றீங்க சுகிமா... இப்படியே சாப்பிட்டா ஒரு மாசத்துக்கு ஒரு கிலோ கணக்கு போய் மூணு நாலு கிலோ ஆகப் போகுது... அப்புறம் டிரம் இல்ல, யானை மாதிரி ஆகிடுவேன்."

"ச்சு, அப்படியெல்லாம் ஆகமாட்ட, மூணு பேருக்குச் சாப்பிட வேண்டாமா... இதுவே கம்மி. சொல்லிட்டேன்."

"இதுவே கம்மியா, இப்போவே நான் பாக்ஸிங் போற மாதிரி தான் இருக்கேன், வேண்டாம் இந்த விளையாட்டு. நோ சுகிமா நோ!" மிருது அரண்டு போய்க் கை கழுவ எழுந்து போனாள்.

வாசுகி அவள் மதியம் சாப்பிடுவதற்கான உணவை பாக் செய்ய ஆரம்பித்தார்.

"இது என்ன பிக்னிக் எங்கயும் போறோமா, திஸ் மச் பிக் பேக்."

"உனக்கு லஞ்ச்டா ரிது."

"லஞ்ச்சா இருந்தாலும் இப்படி ஊட்டி வளர்க்கக் கூடாது சுகிமா நீங்க."

"ஒழுங்கா சாப்பிட்டுவிடு என்ன."

விஸ்வநாதன்: "நான் வேன்னா டிரைவ் பண்ணிக் கொண்டு வந்து விடவா ரிது? முடியுமா உன்னால."

"நோ பிராப்ஸ்பா, ஐ வில் மேனேஜ்... டோன்ட் வொர்ரி!" என்று விட்டு காரை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

அவள் கார் சென்று மறையும் வரை பார்த்திருந்து விட்டு உள்ளே வந்த வாசுகியின் காதில் விஸ்வநாதன் போனில் பேசுவது நன்றாக விழுந்தது.

"நிகில் திருச்சி கிளம்பி விட்டானா சந்தோஷ்?"

"ஓ! காலையிலே கிளம்பிட்டானா... அப்போ இந்நேரம் அவுங்க வீட்டுக்குப் போய் இருப்பான்."

"மொபைல் எதுவும் கையில் வைத்து இருக்கானா?"

"சரி நம்பர் சொல்லு. நோட் பண்ணிக்குறேன்," என்று, நிகிலின் நண்பன் சந்தோஷ் சொன்ன நம்பரைக் குறித்தார்.

அவர் வைத்தவுடன், "நிகில்க்குப் பேசப் போறீங்களா இப்ப?" என்றார் வாசுகி.

"இல்ல. இன்னும் கொஞ்சம் நேரம் கழிச்சு அவன் பேசலைன்னா பேசலாம்... இப்ப அங்க என்ன நடக்குதோ?" என்றார் கவலை தோய்ந்த குரலில்.

"எல்லாம் நல்லா நடக்கும். நீங்க வேன்னா பாருங்க. ரிதுவுக்கு குழந்தை பிறக்கறதுக்குள்ள சரி ஆகிடும்."

"ம்ம்ம். நல்லதே நினைப்போம்."





# 4

ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி உள்ளே போனாரே சிவநாதன் சார். அவர் என்ன பண்றாருன்னு பார்க்க வேண்டாமா... வேண்டாம்னு நீங்க சொன்னாலும் நான் கூப்ட்டுப் போவேனே...

ஹாலில் விளையாடிக் கொண்டு இருந்த குழந்தைகள் ஒருவருடன் ஒருவர் சண்டை போட்டுக் கொண்டதன் விளைவாக மற்றவர்களைத் தங்கள் அறிவுக்கு எட்டிய மிருகங்களின் பெயரைக் கொண்டு அர்ச்சித்துக் கொண்டு இருந்தனர்.

சபரிஷ்க்கு 'ர' எழுத்து இன்னும் உச்சரிப்பு சரியாக வரவில்லை. எப்போதும் 'த' இல்லை 'யா' தான் அதற்குப் பதிலாக.

"போடி சஹி குண்டம்மா நீதான் குதங்கு... நான் ஒன்னும் குதங்கு இல்ல அம்மா கிட்ட சொல்தேன் பாது!" என்றான் அழுது கொண்டே.

இதைக் கேட்டவுடன், அவர்களைச் சமாதானம் கூடச் செய்யத் தோன்றாமல், அவரது இளைய மகள் மற்றும் அவளின் முதல் மற்றும் உயிர் நண்பன் விமலின் ஞாபகங்கள் அவரை ஆட்சி செய்ய ஆரம்பித்தன. எதைப் பார்த்தாலும் அவள் நினைவுதான்.

அப்போதுதான் மிருது பள்ளி செல்லத் தொடங்கிய சமயம். பள்ளி தொடங்கிய கொஞ்ச நாளில் ஒரு காலை வேளையில் சாருமதி மிருதுவைத் திட்டித் தீர்த்துக் கொண்டு இருந்தார்.

''ஏன் போக மாட்ட ஸ்கூல்க்கு நீ... எதுக்குன்னு சொல்லிட்டு அழு.''

''ம்ம்ம். நான் போக மாட்டேன். போக மாட்டேன்.''

''ஏன்னு சொல்லு கழுத, தொண்டையத் துறந்தி யானா திருச்சிக்கே கேக்கும்... மெதுவாத்தான் அழேன்டி. உங்கப்பா வந்துடப் போறாங்க.''

''நான் அப்பிதான் அழுவேன்... போமா... நான் ஸ்கூல் போக மாட்டேன்.''

''என்னவாவுது வாலுத் தனம் பண்ணினியா... மிஸ் அடிச்சுட்டாங்களா... நீ பண்ணாலும் பண்ணி இருப்பே.''

''நான் ஒண்ணும் பண்ணல... மிஸ் என்னை குட் சொல்லி இதுக்காங்க.''

''அப்புறம் என்ன... என்னனாலும் சரி. நீ இன்னைக்குப் போற, சொல்லிட்டேன்.''

''மாட்டேன் மாட்டேன் மாட்டேன்!'' என்று விட்டு உச்ச ஸ்தாயியில் தன் அலறலைத் தொடர்ந்தாள்.

அதைக் கேட்டு ஓடி வந்த சிவநாதன், ''என்னடா கண்ணா, ஏன் என் செல்ல பேபி அழுறா.. நீ அடிச்சியா மதி.''

சாருமதி ஏதோ சொல்லத் தொடங்கும் முன், ''இல்ல டாடி, அம்மா அடிக்கல பேபியை.''

''பார்த்தியா மதி... எப்போவும் என் செல்லம் உண்மை தான் பேசுவா... குட் கேர்ள்டா! குட்டு நீ.''



''உங்க குட் கேர்ள் ஏன் ஸ்கூல் போக மாட்டாளாம்... நீங்களே கேளுங்க.''

''ஏன்டா போக மாட்டீங்களா?'' என்று சிவநாதன் கொஞ்ச.

''ஆமா டாடி, நான் போகவே மாட்டேன்!'' என்றாள் அவரது கழுத்தைக் கட்டிக் கொண்டு.

''சரி. ஓகே... போக வேண்டாம்.''

''என்னங்க இது?''

''கொஞ்ச நேரம் நீ சும்மா இரு. நான் பேசிக்குறேன்... நீ போய்க் கதிரையும், சந்துவையும் பாரு...''

''அவுங்க எல்லாம் ஒழுங்கா கிளம்பிடுவாங்க... இந்தக் கழுதைதான்.''

''நான் ஒண்ணும் கதுதை இல்ல.. நான் கேத்ள் (கேர்ள் பா)... அதுவும் எல்.கே.ஜி. படிக்குத பிக் கேத்ள்!'' என்றாள் நம்ம குட்டி மேடம் ரோஷத்துடன்.

சாருமதி கேலியாகச் சிரித்துவிட்டு, ''ஆமா பிக் கேர்ள் தான் நீ... இன்னும் 'ர'வே வரமாட்டேன்னுது... பிக் கேர்ள் லாம் இவ.''

இதைக் கேட்டவுடன் அழுகை முரசு இல்லாத குறை யாகத் தெரு எங்கும் கேட்கும்படி ஓங்கி ஒலிக்க ஆரம் பித்தது.

அவளைச் சமாளித்துக் கூட்டிச் சென்று, சைரனை - அதுதான் அழுகையை - நிறுத்தி, அவளை மெதுமெது வாகக் கேட்க ஆரம்பித்தார்.

''என் பக்கத்துல விமல்-ன்னு ஒரு பாய் உக்காந்து இதுக்கான் டாடி... என்னைக் கேலி பண்ணிகிட்டே

இதுக்கான்... எனக்கு 'த'வே வதலயாம்... நான் தொம்ப குட்டி பொண்ணு சொல்தான். அவன் தான் பிக் ஆம் எல்லாத்கிட்டயும் மித்து (அவள் பெயர்தான்) தொம்ப குட்டி பொண்ணு... அவளுக்கு 'த' வே வதல... அவ பேதையே தப்பச் சொல்தான்னு சொல்தான். எல்லாதும் என்னை உனக்கு 'த' வதாதா வதாதா கேக்குதாங்க.''

அவள் கூறியது சிரிப்பை வரவழைத்தபோதும் சிரித்தால் இன்னும் மலைக்கோட்டை உச்சி வரை சென்றால் கூடக் கேட்கும் அளவுக்குக் கத்துவாளே என்று எண்ணி, சமாதான முயற்சியாக. ''நான் கதிர் அண்ணா இல்லனா, விபு அண்ணாவை உன் கிளாஸ்க்கு உனக்கு இன்டர்வெல் டைம்ல வரச் சொல்லி அந்தப் பையன் கிட்டே இனிமேல் கிண்டல் பண்ணாத சொல்லச் சொல்லறேன் ஓகேவாடா பேபி... இல்ல, நீயே உங்க மிஸ் கிட்டே சொல்லறியா...''

''ம்ம்ம் விபு அண்ணாவே வதத்தும்... கதி அண்ணா வேணாம்.''

''அப்போ போறியா ஸ்கூலுக்கு.''

''ம்ஹூம்... விபு அண்ணா பேசுன அப்தம் நான் போதேன்.''

அவள் பிடிவாதத்தை அன்று சமாளித்து அனுப்புவதற்குள் சாருமதி இரண்டு தடவை காளி அவதாரம் எடுத்து ஹை பிட்ச்-இல் கத்தி முடித்து இருந்தார்.

சாருமதி கத்துவதற்கு ஏற்றாற் போல் இவளும் செய்வாள் என்று எண்ணியவரின் எண்ணங்கள் திரும்பி விமல் இடம் சென்றன.



மிருதுவுடன் அன்று அவன் போட்ட சண்டைகள் என்ன, கிண்டல்கள் என்ன... அதன் பின் மிருதுவின் உயிர்த் தோழன் ஆகிப் போனான் விமல்.

வயது கூடக் கூட மிருது அவனை அடிக்கும் கிண்டல்களும், செய்யும் கேலிகளும் எண்ணில் அடங்காதவை. அவன் படும் பாட்டைப் பார்த்தே சாருமதிக்கு அவனை ரொம்பப் பிடிக்கும்... அவனுக்குச் சிறு வயதிலேயே தாயார் மறைந்து விட்டார். வந்த சித்தியோ அவனைக் கொடுமை செய்யா விட்டாலும் பாசத்தைச் சிறிதளவு கூடப் பொழிந்தது இல்லை. சாப்பாடு வேணுமானால் சாப்பிடு, வேண்டாமா... போய்க் கொண்டே இரு எனும் ரகம்.

ஆனால் அவளது குழந்தைகளுக்கு அவள் ஊட்டி ஊட்டி வளர்ப்பதைப் பார்க்கும் விமலுக்குத் தனக்கு அம்மா இல்லையே என்ற ஏக்கம் ரொம்ப அதிகம்.

அதனாலயே அவன் தூங்க மட்டும்தான் வீட்டுக்குச் செல்வது... குடும்பத்தில் ஒருத்தன் போல், போல் என்ன போல், குடும்பத்தில் ஒருவனாகவே இருந்தவன்.

மிருதுவை அவன் என்ன கேலி வேண்டுமானாலும் செய்யலாம்... கதிரும் அவனும் சேர்ந்தால் பாவம் என் செல்லக்குட்டி... ஆனால் ஒருவர் ஒன்று சொல்லி விட்டால் வீச்சருவாள் விருமாண்டி ரேஞ்சுக்கு சவுண்ட் ரொம்ப ஜாஸ்தியா இருக்கும். ஒரு தடவை போலீஸ் கேஸ் ஆகும் அளவுக்குச் சென்றும் இருக்கிறது. அவர்கள் நண்பர்களாகச் சுற்றுலா சென்று இருந்தபோது... அங்கே வந்த மத்த காலேஜ் பசங்கள் மிருதுவைக் கிண்டல் செய்ய, விமல் அவர்களிடம் பொது இடத்தில் சண்

டைக்குச் சென்று, பெரிய பிரச்சனையாகி, விபு கூட்டி சென்று கேஸ் விழாமல் பார்த்துக் கூட்டி வந்தான்.

முதலிலேயே சாருமதிக்கு அவள் அப்படி நண்பர்களுடன் தனியாகச் செல்வது பிடிக்காமல் இருந்த போதும், விமலின் கெஞ்சல்கள் அவரைச் சம்மதிக்க வைத்து இருந்தது. ஆனால் அதற்குப் பிறகு, மிருது வெளியே போகிறேன் என்றாலே அவள் நடை உடை பாவனை ஆகியவற்றைப் பரிசோதித்து, ஆயிரம் ஆயிரம் அறிவுரைகளுடன் தான் அனுப்புவாள்.

சொன்னதற்கு அரை மணி நேரம் தாமதம் ஆனாலும் போன் மேல் போன் போட்டுப் படுத்தி விடுவார். இதில் நொந்து போன மிருது இதற்குக் காரணமான விமலைத் திட்டாத வார்த்தைகளே அகராதியில் இல்லை.

கொஞ்சம் சாம்பிள்ஸ்.

''பெரிய கலியுகத்துக் கண்ணன் இவரு.... என்னைக் கிண்டல் பண்ணா உனக்கு என்ன மேன்...''

''சும்மா இந்தக் காதுல வாங்கி அந்தக் காதுல விட வேண்டியதுதானே... அவன் என்ன நமக்குச் சொந்தமா பந்தமா, அவன் சொல்ற எல்லா வார்த்தையும் நம்ம மேல வந்து ஒட்டிகிறதுக்கு...''

''தமிழ்ப் படம் பார்த்துப் பார்த்து ரொம்ப ரொம்பக் கெட்டுப் போய்ட்ட, சொல்லிட்டேன்...

இன்னும் கொஞ்ச நாளுக்கு நீ சினிமாக்குப் போனே, மகனே! உன்னைப் பேசிக்குறேன்.''

''ஆமா, நான் என்ன உன் லவர் - ஆ? எதுக்கு நீ இப்படி சீன் போடறே.''



''அப்படியே ஜெயில்ல விட்டுட்டு வந்து இருக்கணும்... உனக்கு மாத்ஸ் வேற நல்லா வரும்... அந்தக் கம்பிகளை எண்ணி, நம்ம Ancestor கண்டு பிடிச்ச 'ஜீரோ'வ தொடர்ந்து, நீ புதுசா எதாவது கண்டாவது புடிச்சு இருக்கலாம்...''

''சரியான விம் பார்-டா விம்ஸ் நீ.''

வேற வேற கல்லூரியில் படித்தாலும், வேற வேற துறையாக இருந்தாலும் மிருது திருச்சி வரும் சமயங்களில், விமலும் மதுரையில் இருந்து வந்து விடுவான்.

சனிக்கிழமை முழுவதும் அவர்கள் திருச்சி ரோடுகளை டேப் வைத்து அளக்காத குறையாகச் சுற்றி வருவார்கள்.

மிருது ஐந்தாம் ஆண்டு படித்துக் கொண்டு இருக்கும் போது விமல் வெளிநாடு சென்று தன் எம்.எஸ்.ஸை ஆரம்பித்தான். மிருது முடித்தவுடன் அவன் இருக்கும் நகரத்திலேயே இவளுக்கும் ஒரு நல்ல யுனிவர் சிட்டியில் இடம் கிடைக்க, நிம்மதியுடன் அனுப்பி வைத்தார் சிவநாதன்.

என்ன ஒரு அழகான ஆழமான நட்பு... கள்ளம் கபடம் இல்லாமல்.. ஹ்ம்ம்...



# 5



வாசலில் நின்று இருந்த விபுவையும், ஹரியையும் நோக்கி வந்தவன்...

''ஹாய் விபு, எப்படி இருக்கீங்க.. கொஞ்சம் இளைச்ச மாதிரி இருக்கு.. ரொம்ப கவலையோ... உங்க பிசினஸ் எல்லாம் எப்படிப் போகுது... அந்த மலேசியன் கான்ட்ராக்ட் சைன் ஆகிடுச்சா?'' என்று மூச்சு விடாமல் கேள்வி களை அடுக்கினான்.

ஹரி விபுவின் நண்பன் போல என்று அவன் பேச ஆரம்பித்தவுடன் நினைத்தவன் மூணு வருஷம் கழிச்சு அந்த மலேசியன் கான்ட்ராக்ட் பற்றி கேக்குறானே ரொம்ப நாள் கழிச்சுப் பார்க்கிறார்கள் போல.. நாம உள்ள போகலாம் என்று எண்ணித் திரும்பினான்.

''ஹாய் ஹரி, உங்களை முதல்ல விசாரிக்கலன்னு கோபமா... நம்ம ரெண்டு பேரும் ஒரே கூட்டாளி என்று நினைச்சு நான் உங்களை மறந்துட்டேன்... எப்படி இருக்கீங்க... உங்க அப்பாவுக்கு இப்போ பரவாயில் லையா... நார்மலா இருக்கிறாரா... குழந்தைகள் கூட்டி வந்து இருக்கீங்களா... I actually didn't expect you here... I thought of coming to Singapore to see you and sadhu anni அடுத்த செட் கேள்விகளை ஹரியை நோக்கி எறிந்தான்.

விபுவும், ஹரியும் குழப்பத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு இருக்க... என்ன இவன் சதுவாமே ரொம்பக் கொழுப்பு...

இவன் யாரு, ஹிஸ்டரி, ஜாக்ரபி தெரிந்தவன் மாதிரி பேசுறான்... ஒரு வேளை கதிரோட நண்பனா இருப் பானோ...

அவர்கள் இருவரும் தங்கள் எண்ணத்தில் முழுகி இருக்க, நம்ம ஹீரோ உள்ளேயே போய்ட்டார்...



''அட மீரா அக்காதானே இந்த ஃப்ளவர் செட் பண்ணினது... நல்ல ரசனை!'' என்று மெச்சிக் கொண்டே உள்ளே வந்தவன்,

எதிரே வந்த வேலையாளைப் பார்த்து ''சகாயம், நான் வந்த காருல ஒரு பெரிய பெட்டி இருக்கு... கொஞ்சம் எடுத் துட்டு வர முடியுமா?'' என்று விட்டு, வீட்டை நோட்டம் விட்டான்.

ஆகா! இவன் என்ன வீட்டுக்குள் சென்று விட்டான்... என்று எண்ணிக் கொண்டே திரும்பிய ஹரியிடம், ''ஹரி உங்களுக்குத் தெரிந்தவரா, தீவிரவாதி கூட்டம் மாதிரி கூட்டாளின்னு சொல்றான். உங்க ஃப்ரண்ட்ன்னு நினைச்சேன்!'' என்றான் விபு.

அவனை முறைத்துவிட்டு, ''என்ன விபு, உங்ககிட்ட தானே முதலில் குசலம் விசாரித்தான்... நான் உங்களுக் குத் தெரியும்னு நினைத்தேன்... வேலையாள் வரை தெரிந்து வைத்து இருக்கான். ஒரு நாள் கூடவா வீட்டுக்கு வரல''... ஹரிக்கு அவன் சது என்று சொன்னது இன்னும் சமாதானம் ஆகவில்லை.

''இல்ல ஹரி, நான் அவரைப் பார்த்ததே இல்லையே... ஒரு வேளை கதிரோட நண்பனாக இருக்கும், அவர் உள்ள போய்ட்டார். வாங்க, போலாம்,'' என்று அழைத் தான்.

''அவனுக்கு என்ன மரியாதை வேண்டி இருக்கு?'' என்று முணுமுணுத்துவிட்டு ரெண்டு பேரும் அவனைத் தொடர்ந்தனர்.

அதற்குள் சார், குழந்தைகள் சத்தம் கேட்ட திசையில் சென்று டி.வி. ரூமை அடைந்து இருந்தார்.

''ஹாய் குட்டிஸ் எல்லாரும் என்ன பண்றீங்க... ஓ டோராவா.. இன்னைக்கு டோரா மேடம் எங்க போய் இருக்காங்க...'' என்று விசாரித்தபடி சட்டைப் பையில் இருந்து சாக்லேட் பார்களை எடுத்துக் கொடுத்தான்.

ஆ வென்று பார்த்துக் கொண்டு இருந்த மூவரும் சாக்லேட்டைப் பார்த்தவுடன் ஒரு தேங்க்ஸ் அங்கிள் சொல்லி வாங்கிக் கொண்டனர்...

''ஹேய் சகி குட்டி, உன் பரத நாட்டியம் எல்லாம் எப்படி இருக்கு... அரங்கேற்றம் முடிஞ்சுடுச்சா... சிங்கப்பூர்-ல பண்ணினியா... இல்ல திருச்சியிலையா...''

''சிங்கப்பூர்-லயும் நடந்துச்சு, திருச்சியிலையும் நடந்துச்சே... உங்களுக்கு நான் டான்ஸ் கத்துக்கறது தெரியுமா...?''

''ஓ நல்லாத் தெரியுமே... இதை விட நெறைய தெரியும். பாக்குறியா, உனக்குப் புடிச்ச கலர் ப்ளூ. புடிச்ச ஐஸ்கிரீம் ஸ்ட்ராபெர்ரி ஃபிளேவர், புடிச்ச டிரஸ் பட்டுப் பாவாடை. கரெக்ட்.''

''சூப்பர் அங்கிள்... நீங்க யாரு அங்கிள்? உங்களை நான் பார்த்ததே இல்லையே. உங்களுக்கு எப்படித் தெரியும்...''

ம்ம்ம், சஸ்பென்ஸ்.

கொடுத்த சாக்லேட்டைக் கர்ம சிரத்தையாகச் சாப்பிட்டுக் கொண்டு இருந்த கார்த்திக்குக்கும், சபரிஷ்க்கும் இதில் கவனம் செல்லவில்லை... அவன் பரத நாட்டியம் பற்றிப் பேச ஆரம்பித்தபோதே...'' ஐயோ இனி இவள் அதையும் இதையும் ஆடிக் காண்பித்து நல்லா ஆடுறியேன்னு நல்ல பேரு வாங்குவா... இதை யார் கேக்குறது?''ன்னு



கார்த்திக், சபரிஷைக் கூட்டிக் கொண்டு டி.வி. முன் அமர்ந்து விட்டான்.

''ஹாய் கார்த்திக்... ஹளவ் ஆர் யு? இன்னும் நீ சாப்பிட்டு ஒரு கிலோ வெயிட் போட்றதுக்கு உங்க அம்மாக்கு ரெண்டு கிலோ வெயிட் கம்மியாகுற மாதிரி படுத்துறியா... ஹய்யோ! அப்போ மீரா அக்கா ஜீரோ கிலோ ஆகிட்டாங்களா?''

அவன் பேசுவதைக் கண்ணை விரித்துக் கேட்ட கார்த்திக்கைப் பார்த்தவன், ''அப்படியே என் பேபி மாதிரியே கண்ணுடா உனக்கு... செம பெருசு. ஒரு ஆளையே முழுங்கிடும்... விழுந்தவனை அப்படியே அமுக்கியும் வச்சுக்கும்.''

''உங்களுக்கு பேபி இருக்கா அங்கிள்?'' என்று சகானா கேக்க, ''இன்னும் இரண்டு மாதத்துல பொறக்கப் போகுதுடா... ஒண்ணு இல்ல ரெண்டு பேபி.''

நம்ம சபரிஷ் சார் இடை புகுந்து, ''பொதகவே இல்லயா? அப்போ எப்பி அது பெத்சு சொல்தீங்க? ம்ம்ம். அப்தம் எப்பி நீங்க கண்ணுல விதுன்தீங்க... கண்ணுல வித முதியுமா?'' என்று தன் சந்தேகங்களை அடுக்கினான்.

''ஆஹா! இந்தக் குட்டி மாஸ்டர்க்கும் என் பேபியோட ஹாபிட் இருக்கே.''

''நான் கண்டு புடுச்சுட்டேன், உங்க வீட்டு ஆன்ட்டியைத் தானே நீங்க பேபினு சொல்றீங்க?'' என்றான் நம் பெரிய மனிதன் கார்த்திக்.

''நூறு சதவிகிதம் கரெக்ட். செம ஸ்மார்ட் போ நீ.''

விபுவும், ஹரியும் உள்ளே வரும்போது கீழே இறங்கி வந்த கதிர், ''என்ன உங்க பிரெண்ட்டைத் தனியாக

விட்டுட்டு இங்க என்ன பண்றீங்க?'' என்றான் இருவரையும் பார்த்து.

''ஆஹா, உன் பிரெண்ட்னு நாங்க நினைச்சா எங்க பிரெண்ட்னு சொல்ற?''

ஹரி, ''ஹய்யோ! அவன் வேற குழந்தைகள் இருக்கற ரூம்க்கு சென்று இருக்கான்டா!'' என்றான் கலவரமாக.

''ச்ச, அப்படி எல்லாம் தெரியல அவனைப் பார்த்தா,'' என விபு அவனுக்குப் பரிந்தான்.

அவர்கள் நால்வரும் பேசி முடிக்கும்போது, விபு, ஹரி, கதிர் என்ற மூவர் படை அங்கு வந்து சேர்ந்து இருந்தது.

அவர்கள் வந்த அரவம் கேட்டு நிமிர்ந்தவன் கதிரை நோக்கிக் கை நீட்டினான்...

''கதிர்! ரொம்பக் கோபமா, இனிமேல் எல்லாம் சரியாகிவிடும்... எப்படி இருக்கு உங்க கார்மெண்ட்ஸ் யூனிட்?''

மூவரும் கேள்வி மழை பொழிந்தனர். அவனை நோக்கி,

''ஹல்லோ நீங்க யார் சார்.''

''சும்மா எல்லாரையும் தெரிந்த மாதிரி பேசிகிட்டு.''

''Where did you get all these information?''

''ஏதாவது டிடக்டிவ் ஏஜென்ஸி மூலமா தகவல் சேகரிச்சீங்களா?''

''ஆமா, குழந்தைகள் கிட்ட என்ன பேச்சு.''

சாக்லேட் கவரைப் பார்த்தவுடன் ஹரி உச்ச ஸ்தாயியில், ''யாராவது சாக்லேட் கொடுத்தா உடனே வாங்கிச் சாப்டு விடுறதா?'' என்று குழந்தைகள் மேல் பாய,

''என்ன ஐடியாவுல வந்து இருக்கீங்க மிஸ்டர்.''



''மரியாதையாக உண்மையைச் சொல்லுங்க, இல்ல, நல்லாவே இருக்காது.''

மூவரின் உச்ச கட்டக் குரல்களைக் கேட்டு வீட்டில் இருந்த அனைவரும் அங்கு ஒரு சில நிமிடங்களில் வந்து சேர்ந்து இருந்தனர்.

அனைத்தையும் ஒரு புன்னகையுடன் கேட்டுக் கொண்டு இருந்தவன் 'Cool cool, no tension, relax. என்ன மீரா அக்கா, ஹரி - அண்ணாவுக்குப் பிடிக்கும்னு இன்னைக்கு ஈவினிங் மிளகா பஜ்ஜியா டிபனுக்கு! இந்தக் குதி குதிக்குறாங்க...''

''பொண்ணு பாக்குற டைம்-ல தான் சாப்புட கொடுத்து வைக்கல. இப்பவாவது கொடுங்க... கொஞ்சம் இருந்தா எடுத்துட்டு வரீங்களா... செம பசி... மதியம் ஒரு செம நாஸ்டி கம் காஸ்ட்லி கேவலமான சாப்பாடு சாப்பிட்டேன்...''

''டேய் உன்னை...'' கதிர் அவனிடம் பாய்வதற்குள் சிவநாதன் அவனுக்கு ஒரு ஹால்ட் போட்டு, ''யார் தம்பி நீங்க?'' என்றார் அமைதியாக.

''ஹான் இப்ப இப்ப கேட்டீங்களே, இது கேள்வி. இது நியாயம்... அதை விடுங்க. நீங்க எப்படி இருக்கீங்க? உங்க சுகர் எல்லாம் கன்ட்ரோல்டா இருக்கு இல்ல? யாருக்கும் தெரியாம தெரியாம ஸ்வீட் சாப்பிட்றீங்களா இன்னும்.''

''ஆமா, நாங்க இதுவரை நீ யாருன்னு கேக்காம நாங்க யாருன்னு உங்ககிட்ட கேட்டு இருந்தமா?'' என்று கதிர் முணுமுணுக்க.

''கடவுளே! இவன் குசலம் விசாரிச்சே உயிரை வாங்குறான்... இந்த வீட்டுக்கு டெய்லி - காலையில வர

காக்கைலயிருந்து நாங்க எல்லாம் நல்லாதான் இருக்கோம்..'' என்றான் ஹரி எரிச்சலில்.

''கூல் பிரதர். ஐ ஆம் நிகிலன்.''

''நெப்போலியன் மாதிரி இருக்கான் நிகிலன்!'' ஆம்... திஸ் இஸ் ஹரி அகெய்ன்.

''ஆமா, நீ என்ன பின்லேடனா எல்லாருக்கும் தெரிஞ்சு இருக்க?'' என்றான் கதிர்.

''லெட் மீ கம்ப்ளீட் சார்.''

''உங்க வீட்டுச் செல்லப் பிசாசு இப்ப எங்க வீட்டுல இருந்து என்னைப் படுத்துது...''

''இன்னும் புரியலையா, என் பேபி தான்பா. செம ஃபாஸ்ட் இந்த வீட்டுல...''

''ஐ ஆம் நிகிலன், மிருதுளாஸ் ஹஸ்பண்ட்.''



# 6



முதலில் சுதாரித்த மீரா, ''என்ன சொல்றீங்க, நீங்க சொல்றத நாங்க எப்படி நம்புறது?'' என்றாள் ஆராயும் பார்வையுடன்.

இதைக் கேட்டவுடன், ''ஐயோ! எல்லாம் பொய்யாகிப் போய் விடுமோ... எத்தனை பேர் உங்க பொண்ணு மாதிரி இருந்தது... அங்க பாத்தேன் இங்க பாத்தேன் என்று சொல்லி, அங்கெல்லாம் தேடிப் போய் ஏமாந்து இருக்



கோம். இதுவும் அப்படியா?'' என்ற நினைவில் கண்ணில் உயிரை வைத்துக் கொண்டு அவனை ஆவலாக நோக்கினார் சிவநாதன்.

''நீங்க என்ன சி.ஐ.டி. சகுந்தலா ஆன்ட்டி மாதிரி கேள்வி கேக்குறீங்க... என்ன சொன்னா நம்புவீங்க, மீரா அக்கா...''

''சரி, இந்த போட்டோ பாருங்க... அப்புறமும் உங்களுக்கு நான் பொய் சொல்றேன்னு தோணுச்சுன்னா... என்ன பண்றதுன்னு பார்க்கலாம்,'' என்று விட்டு, சகாயம் கொண்டு வந்த பெட்டியில் இருந்து ஒரு ஆல்பத்தை எடுத்தான்.

அவன் பேசிக்கொண்டு இருக்கும்போதே விபு மீராவிடம், ''இல்ல மீரா, அவருக்கு மூணு வருஷம் முன்னாடி நம்ம வீட்டுல நடந்தது முதல், நம்ம வீட்டுல இருக்குறவங்க பேர் வரை தெரியுது... வேலைக்காரர்கள் முதற்கொண்டு...'' என்றான் தணிந்த குரலில்.

அவளுக்கு இது தெரியாது என்பதால் கொஞ்சம் குழம்பி விட்டு, ''அவர் எடுக்கும் ஆல்பத்தைப் பார்க்கலாம் முதல்ல,'' என்றாள்.

சாருமதி அவன் எடுப்பதற்கான சில நிமிடங்களில் அவன் அருகில் போய் நின்று தன் பெண்தான் அதில் இருக்கிறாள் என்று முழுதாக நம்பியவர் போல அவன் அதை அவரிடம் கொடுப்பதற்காகக் காத்திருந்தார்.

அவன் கொடுத்த ஆல்பத்தை வேகமாகப் புரட்டியவர் கண்களில் ஆனந்தக் கண்ணீர் ஆறாக ஓடியது... ''நம்ம மிருதுதாங்க... இங்க பாருங்க மாசமா இருக்கா போல... எவ்வளவு அழகு பாருங்க... எங்கடி ராஜாத்தி போன நீ... பாருங்களேன்!'' என்று சிவநாதனை நோக்கியவர்,

இத்தனை நாள் நெஞ்சை அழுத்திய வேதனை மறைந்ததில் மயங்கிச் சரிந்தார். "என் குழந்தை உயி ரோடுதான் இருக்கிறாள்... ரொம்ப நன்றியப்பா முருகா!" என்ற வார்த்தைகளை முணுமுணுத்துக் கொண்டே.

அடுத்து வந்த சில நிமிடங்கள் சிவநாதனைக் கவனிப் பதில் போக, கொஞ்சம் தண்ணீர் தெளித்து, கொஞ்சம் காபி கொடுத்து அவரை நிதானத்திற்குக் கொண்டு வந்தனர்.

"என்ன மாமா, இப்படியா பயமுத்துறது... ஒரு சின்னப் பையனை வச்சுக்குட்டு... சின்னப் பையன்னு நான் என்னைச் சொல்றேன். இந்தப் பொடுசுங்கள இல்லை. ஓகே?"

"எனக்கு ஒரு பேர் தான் மாமா இருக்கு... நிகில்னு. நீங்க என்ன முருகானு கூப்புடுறீங்க... ஹோ, சாமியச் சொல்றீங்களா? நான் செஞ்சது எல்லாத்துக்கும் அவர்க்கு கிரெடிட்ஆ! too bad too bad... நிகில் உன்னை யாருமே புகழவே மாட்டாங்கடா... ரொம்ப ரொம்பப் பாவம்டா கண்ணா நீ!" என்று அவரிடம் பேச ஆரம்பித்துத் தனக் குத்தானே பேசி முடித்தான்.

"எல்லாத்தையும் நீயே பேசிடாத! அவுங்களும் கொஞ்சம் பேசட்டும்!" என்று தந்தையின் குரல் அருகில் கேட்பது போல இருக்கத் தன் வாய்க்குக் கொஞ்சம் கேட் போட்டான்.

அவன் பேசி முடித்தவுடன் அவன் கைகளைப் பற்றிக் கொண்டு, "ரொம்ப சந்தோசம் மாப்பிள்ளை... என்ன சொல்லி என் நன்றிய சொல்றதுன்னு எனக்குத் தெரி யல... என் பொண்ணை நீங்க நல்லா வச்சு இருப்பீங் கன்னு உங்க பேச்சுலையே புரியுது. ரொம்ப நன்றி."



"நான் உங்க பொண்ணை நல்லா வச்சு இருக் கேனா...? உங்க பொண்ணு தான் பெரிய மனசு பண்ணி என்னைக் கண் கலங்காம காப்பாத்துறா! நீங்க வேற..." என்றான் நிகில்.

அதற்குள் அந்த ஆல்பம் எல்லார் கையிலும் மாறி மாறி வலம் வந்து கொண்டிருந்தது. அவன் பேசியதில் சிரித்துக் கொண்டு இருந்தவர், ஆல்பத்தைக் கையில் கொடுத்தவுடன் சின்னக் குழந்தையின் ஆர்வத்துடன் அதைப் புரட்டினார்.

கல்யாணம் தொடங்கி, அவர்கள் வீட்டில் நடந்த விசேஷங்கள், அவர்கள் சென்ற ட்ரிப்கள் அனைத்திலும் எடுக்கப்பட்ட போட்டோக்களில் இருந்த மகளைப் பார்த்து மகிழ்ந்தவர்... கடைசியாக ஆல்பத்தில் இருந்த போட்டோ அவரது கண்களைக் குளமாக்கியது.

பெரிய வயிற்றுடன் மிருது நின்று இருக்க, நிகில் பின் னாடி இருந்து அவளை வயிற்றோடு அணைத்த மாதிரி இருந்த போட்டோ தான் அது.

ஆல்பத்தை அனைவரும் பார்த்து முடித்தவுடன் கேள்விக் கணைகளுடன் தயாராக இருந்தனர்...

"கொஞ்சம் வெயிட் வெயிட் வெயிட். நீங்கெல்லாம் கேக்கப் போற கேள்விக்கெல்லாம் பதில் சொல்லணும்னா என் வயிற்றுக்குக் கொஞ்சம் சாப்பாடு போடணும். இல்லனா ஒரு வார்த்தை கூட என்கிட்ட இருந்து வாங்க முடியாது. சொல்லிட்டேன்..."

"அவனுக்கு அந்த காஞ்சு போன மிளகாய் பஜ்ஜியக் கொண்டு வா சது!" என்றான் ஹரி.

''ஹேய் நிஜமாவே மிளகாய் பஜ்ஜியா, சது அண்ணி... ஆனா காஞ்சு போனதா? ஹரி, ஏன் உங்களுக்கு என் மேல இப்படி ஒரு காண்டு சார்...

''எனக்கு பிரெஷ் பஜ்ஜி தான்பா வேணும்... கொஞ்சம் மாப்பிள்ளை பந்தா காம்பிக்க வேண்டாம்... ஹ்ம்ம், சீக்கிரம் கொண்டு வாங்க.

''என்ன அத்தை மசமசன்னு நிக்குறீங்க... போங்க எனக்கு சூப்பரா ஒரு கப் காபி கொண்டு வாங்க, பார்க்கலாம்... ரிதுக்கு இதுலாம் தெரிய மாட்டேன்து... காபி கேட்டா டீ போட்டாக் கூடப் பரவாயில்ல... அவ போடுறத டிஸ்கிரைப் பண்ணக் கூடத் தெரியல எனக்கு... ஹ்ம்ம் என்ன பண்றது... அதுனால நானே அவளுக்கும் சேர்த்துப் போட்டுடுறேன் இப்பல்லாம்!'' என்று ஹரி சொன்ன ஒரு வாக்கியத்துக்கு 10 வாக்கியத்தில் பதிலளித்து எல்லாரையும் மிருதுவுக்கு மேல வாயாடியா இருப்பான் போல இருக்கே கடவுளே என்று எண்ண வைத்தான்.

பஜ்ஜியையும், காபியையும் ரசித்து ருசித்துச் சாப்பிட்டு முடித்தவன் கை கழுவி வரும் வரை அமைதியாக இருந்தவர்கள் அவன் வந்ததும், ''இப்போ நீங்க எங்க இருக்கீங்க?'' என்று முதல் கேள்வியை ஹரி கேட்டான்.

''ஹான் இங்கதான், உங்க முன்னாடி தானே உக்காந்து இருக்கேன். "What an awesome question?" என்றான் சிரிப்பினூடே...

ஹரி பல்லைக் கடிக்கவும், ''கூல்... கூல்.. இப்போ நாங்க கனடால வான்கூவர் என்ற ஊருல இருக்கோம்!'' என்றான் அவனை இன்னும் டென்ஷன் ஆக்காமல்.



விபு. ''மிருது என்ன பண்றா... உங்களுக்கு எப்ப கல்யாணம் ஆச்சு... இப்ப உங்க கூட வந்து இருக்காளா?'' அடுத்த செட் கேள்விகளுடன் அவனை நோக்கினான்.

''One question at a time pls!'' என்று விட்டுப் பதில் சொல்ல ஆரம்பித்தவன்,

''எனக்கு ஒண்ணு சொல்லுங்க, இன்னும் ரிதுவ தப்பா நினைக்குறீங்களா?'' என்றான் பார்வையைச் சிவநாதன் மேல் நிறுத்தி.

''இல்லை இல்லை. அவள் கிளம்பி ஆறு மாசத்துலயே உண்மை தெரிஞ்சுடுச்சு... விமல் வந்தான். எல்லாத்தையும் சொல்லிட்டு நாக்கைப் பிடுங்கிச் சாகுற மாதிரி நாலு கேள்வி கேட்டுட்டுப் போய்ட்டான்,'' என்றார் சாருமதி, கணவருக்குப் பதிலாக.

''அதற்குப் பிறகும் நாங்கள் தேடாத இடம் இல்லை... அவள் நியூயார்க்கில் படித்த காலேஜ் முதற்கொண்டு வந்து தேடினோம்... ஒரு விஷயமும் ஒழுங்காகக் கிடைக்கவில்லை,'' என்றான் விபு கம்மிய குரலில்.

''சோ உண்மை தெரிந்த பிறகுதான் தேடி இருக்கீங்க... அப்படித் தானே... அவ தப்பே பண்ணி இருந்தாலும் இப்படி நீங்க நடந்துகிட்டது சரின்னு நீங்க நினைக்குறீங்களா?'' என்று நிகில் அழுத்தமான குரலில் கேட்ட போது கனத்த அமைதி நிலவியது.

''பிறகும்ன்னு சொன்னாயே... அதுக்கும் முன்னாடியும் தேடினோம்... ஆனா அப்புறம் குற்ற உணர்வில் ரொம்ப மனசு உடைந்து போய் ரொம்ப முனைப்பாகத் தேடினோம்!'' என்றான் ஹரி இடைப் புகுந்து...

''ரிது கனடா வந்தது யார்க்கும் அங்கு தெரியாது... எல்லாருடனும் தொடர்பு வைத்துக் கொள்ளாததால் அவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை!'' - நிகில்.

''சரி, இப்போ சொல்றீங்களா?'' என்றான் கதிர்.

''ம்ம்ம்... எங்கள் கல்யாணம் ஒன்றரை வருஷம் முன்னாடி நடந்தது... இப்போ ரிது அங்க ஒரு ஹாஸ்பிடல்ல Gynecகா இருக்கா...'' ஒரு இடைவெளிவிட்டு அவன் நிறுத்த.

சாருமதி, ''அவளைக் கூட்டிகிட்டு வந்து இருக்கீங்களா மாப்பிள்ளை?'' என்று ஆவலாக வினவினார்.

மீரா கொஞ்சம் யோசனையுடன், ''இன்னும் குழந்தை பிறக்கவில்லை இல்லையா? அத்தை! இந்த டைம்ல டிராவல் பண்ண வேண்டாம்னு வரலையா இருக்கும்... அப்படித்தானே...'' அவனை எப்படிக் கூப்டுவது என்று தெரியாமல் நிறுத்தினாள்.

''என்னை நிகில் இல்ல நிக்கின்னு கூப்பிடுங்க மீரா அக்கா, அத்தை மாமா நீங்களும்தான்...'' என்றான் நிகில்.

''அவளுக்கு நான் இங்க வந்ததே தெரியாது... வேலை விஷயமா ட்ரிப்னு சொல்லிட்டுத்தான் வந்திருக்கேன்... அப்பா அம்மாக்கு மட்டும்தான் தெரியும்,'' என்றவன் கொஞ்சம் நிறுத்தி.

''ரொம்ப முக்கியமான விஷயம் என்னதான் உங்கள் எல்லாரையும் அவள் மிஸ் பண்ணினாலும், அந்தக் கோபம் இன்னும் ஒரு அரை கிலோ கூடக் குறையவில்லை!'' என்றான் ஒரு விதமான குரலில்.





# 7



எல்லாருடைய முகத்திலும் இருந்த சந்தோஷ ரேகைகள் மறைய செய்வதறியாமல் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

''என்னது இது, நான் என்ன தான் ஸ்மார்டா இருந்தாலும், நீங்க எல்லாரும் இப்படியா பார்த்து கண்ணு போடறது... எனக்கு ரொம்ப வெக்க வெக்கமா வருது!'' என்றான் நிகில்.

ஹரி ஏதோ சொல்ல வாயெடுக்கும் முன், நம்ம சாரே, தன் பேச்சை ஆரம்பித்தான்.

''அவ கோபம் இன்னும் குறையல தான்... ஆனா அவள் கன்சீவ் ஆனதிலிருந்து ரொம்ப கஷ்டப்படுறா...''

சாருமதி, ''ரொம்ப மசக்கையா இருக்கா... இப்ப எத்தனை மாசம்... ஒழுங்கா சாப்பிடுறாளா... செக்கப் எல்லாம் ஒழுங்கா கூட்டிட்டுப் போறீங்களா... மாத்திரையே பிடிக்காதே மிருது குட்டிக்கு... அய்யோ! எப்படி இருக்காளோ என் தங்கம்!'' என்று நடுவில் நிக்கி பேசுவதற்கே இடம் கொடுக்காமல் சரமாரியாகப் புலம்பினார்.

அவர் கொஞ்சம் மூச்சு வாங்கும்போது இடையில் புகுந்தவன், ''அப்பப்பா என்ன ஒரு ஸ்பீட்ல கொஸ்டீன் டெலிவர் பண்றீங்க!'' என்று என்னவோ இவன் அப்படிப்

பேசுவதே இல்லை என்பது போல வியந்துவிட்டு, "ரொம்ப வருத்தப்படாதீங்க, எங்க அம்மா இருக்காங்க, அவுங்க நல்லா பார்த்துப்பாங்க... ரிதுவும், அம்மாவும் ரொம்ப க்ளோஸ்!" என்று அவளுக்குச் சமாதானம் சொன்னவன் கதிரிடம் திரும்பி,

"உங்க கோபம் இப்போ கொஞ்சமாவது குறைந்து இருக்கா கதிர்? அப்படியில்லைன்னா நான் ரிதுவுக்காக உங்கிட்ட சாரி கேட்குறேன்!" என்றான் தணிந்த குரலில்.

அவன் சொல்லி முடித்ததும் ஒரு வேகத்துடன் அவனை அணைத்த கதிர், "பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க நிக்கி, நான் தான் அன்னைக்கு காட்டு மிராண்டி மாதிரி நடந்துகிட்டேன். உங்களாலும் மிருது வாலும் என்னை மன்னிக்க முடிந்தால் அதைவிட வேற எதுவும் எனக்குப் பெருசு இல்லை!" என்றான். உடல் குலுங்கியது.

"என்ன கதிர் இது, என்னைச் சொல்லிட்டு நீங்க சாரி சொல்றீங்க, ப்ளீஸ் கன்ட்ரோல் யுவர்செல்ப் கதிர்!" என் றான் அவனைத் தேற்றும் விதமாக.

"இந்தப் பிரச்னை-ல கதிர் அண்ணாவோட வாழ்க் கையும் சிக்கல் ஆகிடுச்சு. இப்போ கல்யாணம் ஆச்சோ இல்லையோ தெரியலனு சொல்லிட்டே இருப்பா!" என்றான் நிகில் அவனுக்கு ஆறுதலாக.

"மிருது எங்களைப் பற்றிப் பேசுவாளா?" என்றார் சிவநாதன் ஆவலாக.

அவரைப் பார்க்கப் பார்க்க நிகிலுக்கு ரிது மேல் மிகவும் கோபம் வந்தது. ரொம்ப திமிரு! உடம்பு முழுக்கத் திமிரு உனக்கு, முதல்ல காரத்தைக் குறைச்சு உப்பு கூட



ரொம்ப கம்மியா போட்டுச் சாப்பாடு போடணும் என்று எண்ணும்போதே, "மவனே! அம்மா மட்டும் கேட்டால் அவளுக்குக் காரத்தைக் குறைப்பதை விட்டுவிட்டு உனக்குச் சாப்பாட்டையே குறைத்து... ச்சே இல்லே, நிறுத்தியே விடுவார்கள்!" என்ற எண்ணமும் வந்து சிரிக்க வைத்தது.

"இங்க பாருங்க மாமா, என் காதுல ஒரு ஓட்டை தெரியுதா, உங்க பொண்ணு உங்களைப் பத்திப் பேசிப் பேசித்தான் இந்த ஓட்டை விழுந்துடுச்சு... அதுவும் இப்ப கொஞ்ச நாளா ரொம்ப தொணதொணங்குறா, ஓட்டை பெருசா ஆகுறதுக்குள்ள உங்களைப் பார்த்து கூட்டிட்டுப் போய்டலாம்னு தான் வந்தேன்!" என்றான் நிகில்.

"விசா எல்லாம் எடுக்கணும். நாளைக்கு வேண்டிய பேப் பர் எல்லாம் ரெடி பண்ணி டெல்லில இருக்கற கனடா ஹை கமிஷன்-க்கு அனுப்பிடலாம்... என்ன மாமா, அனுப்பலாம்தானே?" என்றான் தொடர்ந்து.

சிவநாதன் தலையை ஆட்டி ஆமோதித்துக் கொண் டிருக்க, விபு, "மிருது இன்னும் கோபமா இருக்கான்னு சொல்றீங்களே... நீங்க வேற அவளுக்குத் தெரியாம வந்து இருக்கீங்க... பிரக்னன்ஸி டைம்ல அவளை டென்ஷன் பண்ணணுமா?" என்று இழுத்தான்.

"எனக்கும் கொஞ்சம் பயம்தான்... ஆனா என்ன பண்ண முடியும்... ஏதாவது சொல்யூஷன் வேணும் இல் லையா இதுக்கு. எவ்வளவு நாள் தான் தள்ளிப் போடுறது சொல்லுங்க... பொத்திப் பொத்தி வச்சாத்தான் ரொம்ப கஷ்டம்... வெடிச்சாக் கூடப் பரவாயில்லை... மாமா அத்தை ரெண்டு பேரையும் பார்த்தா முதல்ல கொஞ்சம்

கோபப்பட்டாலும், சமாதானம் பண்ணலாம், பாஸிட்டிவ்வா நினைக்கலாம்,'' என்றான் நிகில்.

ஆறுதலாகப் பேசிய போதும் இந்த ரிது என்ன செய்வாளோ, இப்போது கூட என்னதான் அவர்களைப் பார்க்கணும் போல் இருந்தாலும், அதைக் கவனித்து அவன் கேட்டால், ''ஆமா, பார்க்கணும் போலத் தான் இருக்கு, ஆனா அது ஃபர்ஸ்ட் இரண்டு நிமிடம்தான், உடனே என்னை அப்படி நினைச்சாங்களே, அவுங்களை நான் ஏன் போய்ப் பார்க்கணும்னு தோணுது... நோ, ஐ கான்ட் அன்ட் ஐ வில் நாட் கோ அன்ட் ஸீ தெம்!'' அப்படின்னு டக்குனு முருங்கை மரம் ஏறி விடுகிறாளே என்று திகிலாகவே இருந்தது.

''இன்னும் ஒண்ணு எனக்குத் தெரியணும், ரொம்ப முக்கியம் இல்ல. பட் ஐ ஆம் ஜஸ்ட் கியூரியஸ்!'' என்று கூறியவனின் அடுத்த கேள்வியில் அந்த வீட்டில் இருந்த அனைவரின் நெஞ்சத்திலும் மிக உயர்ந்த இடத்திற்குச் சென்று விட்டார் நம்ம ஹீரோ.

''விமல் வந்து என்ன சொன்னான், மிருது மேல எந்தத் தப்பும் இல்லைன்னு எப்படித் தெரிஞ்சுதாம், அது தப்பான ஒரு குற்றச்சாட்டுன்னு நம்பிக்கை இன்னமும் எனக்கு இருக்கு, ஆனா அது எப்படி ப்ரூவ் பண்ணாங்க?'' என்றான்.

''அவள் மேல் எவ்வளவு நம்பிக்கை இருந்தால் அது தப்பு என்று நிரூபணம் ஆகாத போதும் இவ்வளவு அன்பைப் பொழிகிறான். இவன் நம்பிய அளவுக்குக் கூட நாம் நம்பவில்லையே!'' என்ற எண்ணம் எல்லார் மனதிலும் ஓட, பேசாமல் இருந்தனர் சற்று நேரம்.



விபு நிகிலின் கையைப் பிடித்துக் கொண்டு, ''மிருது ரொம்பக் கொடுத்து வச்சவ நிகில் - உங்கள மாதிரி ஒரு ஹஸ்பன்ட் கிடைக்க!'' என்றான் தழுதழுத்த குரலில்.

''இது என்ன ஆளாளுக்கு டர்ன் போட்டு ஃபீல் பண்ணுறீங்க, ரிலாக்ஸ், ரிலாக்ஸ், சொல்லுங்க விபு, விமல் என்ன சொன்னான்னு,'' என்றான் திரும்பவும்.

''சொல்றேன், நம்ம சாப்பிட்டுட்டு தனியா பேசலாம்,'' என்று அப்போதைக்குப் பெற்றோர் முன் சொல்லாமல் ஒத்தி வைத்தான் விபு.

அவர்களது அடுத்துச் செய்ய வேண்டிய வேலைகளைப் பட்டியலிட்டு, விசாவிற்கான டாகுமென்ட்ஸ் எல்லாவற்றையும் எடுத்து முடிக்கவும் இரவு உணவு நேரம் வரவும் சரியாக இருந்தது.

''நீங்க எல்லாரும் போய்ச் சாப்பிட ஆரம்பிங்க... நான் குளிச்சுட்டு வந்துடுறேன்,'' என்று நிகில் எழவும், விபு, ''மிருது ரூம்-லையே நீங்க தங்கிக்கோங்க!'' என்று வீட்டு வேலையாளைக் கூப்பிட்டு அவனது பெட்டியை மேலே எடுத்துப் போகச் சொன்னான்.

''இல்ல இல்ல, அது இங்கயே இருக்கட்டும், என் டிரஸ் வேற ஒரு குட்டி பாக்-ல இருக்கு... அதை நானே எடுத்துப் போய்விடுவேன்,'' என்றுவிட்டுப் படியேறியவன்,

கொஞ்சம் நின்று ''லெஃப்ட்ல இருக்குற செகண்ட் ரூம் தானே?'' என்றான்.

''ஆமா,'' என்று ஒரு சொல்லில் விடையளித்தான் விபு வியப்பினூடே.

உணவின்போது ''சித்தப்பா, எங்ககிட்டே மிருது சித்தி போட்டோ எல்லாம் காம்பிக்கவே இல்லயே... மித்த எல்லார்கிட்டயும் காம்புச்சீங்க. எங்கள மட்டும் பாருங் கன்னு சொல்லவே இல்ல யாரும்!'' என்று குறை கூறிய சகானாவிடம்,

''அவுங்க எல்லாம் சும்மா தானேடா பார்த்தாங்க... நான் உங்க மூணு பேருக்கும் ஒவ்வொரு போட்டோ வையும் டிஸ்கிரைப் பண்ணி காம்பிக்குறேன். ஓகே குட்டிஸ்!'' என்று சமாதானம் செய்தான்.

''உங்க அப்பா, அம்மா கிட்டே பேசணும் நிகில். எங்க நன்றிய சொல்லணும், அவளுக்கு ஒரு நல்ல வாழ்க் கையை அமைச்சுக் கொடுத்ததுக்கு!'' என்றார் சிவநாதன்.

''மறந்தே போயிட்டேன், அப்பா உங்களைப் பார்த்த வுடனே பேசச் சொன்னாங்க, சாப்பிட்ட பிறகு போன் பண்ணலாம்,'' என்றான் நிகில் பதிலுக்கு.

சிவநாதன் அன்று சாப்பிட்டதைப் பார்த்தவன், ''என்ன மாமா இது, இவ்வளவு கம்மியா சாப்புடுறீங்க!'' என்றான்.

''இல்ல, இன்னைக்கு மனசு நிறைஞ்சு இருக்கு, அது னால சாப்பாடு இறங்க மாட்டேன்து!'' என்றார் புன்னகை யுடன்.

''சத்தமா சொல்லாதீங்க, யாராவது ஆராய்ச்சிக்குத் தள்ளிக்கிட்டுப் போய்டப் போறாங்க!'' என்றான் சிரிப்பி னூடே.

எல்லாரும் புரியாமல் விழிக்க, ''எதுக்கு ஆராய்ச்சி?'' என்றாள் சந்த்யா.

''ஹய்யோடா! எவ்வளவு பெரிய சென்டன்ஸ் பேசிட் டீங்க, ரிதுவுக்கு அப்படியே ஆப்போசிட் சது அண்ணி



நீங்க!'' என்றவன் ஹரியின் முறைப்பைப் பார்த்து மன திற்குள் சிரித்தான்.

''எதுக்குன்னா மனசு இருக்குற இடத்துல்ல வயிறு இருக்கா, இல்ல வயிறு இருக்கற இடத்துல மனசு இருக்கான்னு செக் பண்ணத்தான்!'' என்றான்.

''பாவம் மிருது நீ... எங்களை விட்டுப் போன கஷ்டம் பத்தாதுன்னு இது வேறயா, கொடுமை!'' என்றான் ஹரி.

சிரிப்பினூடே சாப்பிட்டு முடித்தவுடன் வீட்டுக்குப் போன் செய்தான். அவன் போன் காலுக்குக் காத்திருந் தவர் என்பதால் முதல் ரிங்கிலேயே விஸ்வநாதன் எடுத்து விட்டார்.

அவரின் எல்லா விவரமும் கூறியவன், சிவநாதன் கையில் கொடுத்துவிட்டு எழுந்து வெளியே சென்றான்.

சம்பந்தி இருவரும் குசலம் விசாரித்து, நன்றி நவின்று, கவலை தெரிவித்து, எல்லாம் நன்றாக நடக்கக் கடவுளை வேண்டிக் கொள்வதாகக் கூறி போனை வைத்தனர்.

''என்ன மாமா போட்டோ காம்பிக்கவேயில்லல! வாங்க,'' என்று கார்த்திக் வந்து இழுத்துச் செல்ல, விபுவும், நிக்கி யும் பேசிக் கொண்டிருந்த விஷயம் உங்களுக்கு இப் போதைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஆல்பத்தை எடுத்துக் கொண்டு தரையில் உட்கார்ந் தவன், குழந்தைகள் மூவரையும் ஒரு வட்டமாக உட்கார வைத்துக் கொண்டு சொல்ல ஆரம்பித்தான்.

''இந்த போட்டோல, யாரு இருக்கா தெரியுதா... உங்க மிருது சித்தியும், எங்க மம்மியும்.''

''இவுங்க தான் என்னோட அப்பா.''

''இது எங்க கல்யாணம் ஒரு கோவில்ல நடந்துச்சா, அந்தக் கோவில் முன்னாடி நாங்க எல்லாரும் எடுத்து கிட்ட போட்டோ.''

''இது உங்க மிருது சித்தி. அங்க ஒரு மகாலக்ஷ்மி கோவில் இருக்கு. அங்க ஒரு ஃபங்ஷன்ல பாட்டுப் பாடும்போது எடுத்தது.''

''உங்க மிருது அத்தையை இந்தக் கோவில்ல வச்சு தான், ஒரு டைம் அவ பாடும்போது பார்த்துட்டு எங்க அம்மா வீட்டுக்குக் கூட்டிட்டு வந்தாங்க...''

கதிர், ''கூப்டவுடன் வந்துட்டாளா, பரவாயில்லையே, ரொம்ப சீக்கிரமா யார் வீட்டுக்கும் போக மாட்டாளே!'' என்றான்.

''நான் இருக்கறது தெரிஞ்சிருந்தா எங்க அம்மா கூப்பிடாமலே வந்திருப்பா. ஹ்ம்ம் என்ன பண்றது!'' என்று ஒரு பெருமூச்சு விட்டவன், ஹரியின் கிண்டலான சிரிப்பைப் பார்த்தவுடன் வாய்விட்டுச் சிரித்தான்.

''அவளைப் பத்தி நல்லா தெரிஞ்ச உங்ககிட்ட போய் இப்படிச் சொல்லி இருக்கக் கூடாது. மை பேட்...'' என்று திரும்பவும் அந்த நாள் நினைவுகளில் நகைத்தான்.

''அவ தனியா இருந்ததனாலோ, இல்ல எங்க அம்மாவைப் பார்த்தவுடன் ஒரு பாசப் பிணைப்பு வந்துருச்சோ என்னவோ, அவுங்க ரெண்டு பேரும் சீக்கிரமே நல்ல ஃபிரெண்ட்ஸ் ஆகிட்டாங்க, சோ அவளும் தயக்கம் எதுவும் இல்லாம வந்துட்டாள்...'' என்றான் தொடர்ந்து.

''ஆனா வந்து என்னை ஒரு நாள் வீட்டுல பார்த்ததுக்குப் பிறகு மேடம் ஒரு ஒன் மன்த் வீட்டுப் பக்கமே



தலை வச்சுப் படுக்கல!'' என்று வாய்பாடு சொல்லிக் கொண்டு இருக்க, அவனது எண்ண அலைகள் அவன் தன் காதலை ரிதுவுடன் சொன்ன தினம் ஞாபகம் வந்தது. ''என்ன ஒரு கோபம், என்ன ஒரு வெடிப்பு, உடம்பு புல்லா கொழுப்பு, என்ன திட்டு திட்டினே என்னைய!'' என்று அவன் பின்னோக்கிச் சென்று கொண்டே இருக்க,

சபரிஷின் குரல் நிகழ்காலத்துக்கு இழுத்து வந்தது. ''இது எங்க எதுதீங்க சித்தப்பா, மித்து முகத்துல்ல கேக்கா, என்ன கேக் சாக்லேட்ஆ?'' என்றான்.

''அது சித்தப்பாவோட பர்த்டே அன்னைக்கு எடுத்தது டா ராஜா!'' என்று விளக்கிக் கொண்டு இருக்கும்போதே அவனது மொபைல் அடித்தது.

சந்தோஷ் இல்ல அப்பாவாக இருக்கும் என்று எண்ணிக் கொண்டே மொபைலை எடுத்தவன், தலையில் அடித்துக் கொண்டு, 'ஓ காட், ஹவ் டிட் ஷீ கெட் த நோ?' என்றான் பதற்றத்துடன்.

''மிருதுவா?'' என்று ஹரி அவசரமாகக் கேட்க, ''ஆமா'' என்று விட்டு, போனை ஆன் செய்து பேசாமல் இருந்தான்.

''ஏதாவது அர்ஜென்ட் இன்பர்மேஷனா இருக்கப் போகுது... அட்டென்ட் பண்ணுங்க,'' என்றான் கதிர்.

ஹரி, ''ஆமா அட்டென்ட் பண்ணு நிகில். நாங்க யாரும் சுத்தி நின்னு பேசல. அவளுக்குக் கேட்டு விடப் போகுது!'' என்று விட்டு, ''சது, நீ குழந்தைகளைக் கூட்டிகிட்டு மேல போ!'' என்றான் மனைவியிடம்.

அதற்குள் ஒரு கால் முடிந்து அடுத்த 2 நிமிடத்தில் மொபைல் சீறியது.

"ஹே பேபி என்னடா, சொல்லுடா, எப்படி இருக்க?" என்றான் நிகில். சாதாரணமாக்கப்பட்ட குரலில்.

"நிகில், நீங்க இப்போ எங்க இருக்கீங்க. டோன்ட் ஃப்ளஃப் டு மீ. டெல் மீ த ட்ரூத்!" என்று மிருதுவின் இறுகிய குரல் மறுமுனையில் ஒலித்தது.



# 8



"ஹே கூல், என்ன ஆச்சு? எதுக்கு இவ்ளோ டென்ஷன்? உனக்கு எத்தனை தடவை சொல்லுறது. இந்த டைம்ல டென்ஷன் ஆகக்கூடாது, மூணு பேபிக்கும் ஆகாதுன்னு!" என்று நூல் விட்டுப் பார்த்தான்.

"உங்க பேபிங்க எல்லாரும் நல்லாத்தான் இருக்கோம். டோன்ட் சேஞ் த டாபிக், டெல் மீ வேர் ஆர் யூ?" என்றாள் அதே பிடியில்.

"நீங்க இல்லாம நாங்க நல்லாவேயில்ல, சீக்கிரம் வாங்கன்னு சொல்வேன்னு பார்த்தா, என்ன பேபி, என்னை மிஸ் பண்ணவே இல்லையா? சும்மாகாச்சும் கூட ஒரு 'ஐ மிஸ் யூ நிக்கி' சொல்லக்கூடாதா? உனக்கு என்னதான் சொல்லிக் கொடுத்தாலும் புரியவே மாட்டேன்து, நீயெல்லாம் எப்படித் தான் ஸ்கூல், காலேஜ் எல்லாத்துலயும் பாஸ் மார்க் வாங்கினியோ!" என்றான் இன்னும் விஷயத்துக்கு வராமலேயே.



மிருதுளா பொறுமை இழப்பது புரிந்தபோதும், அவள் கேள்விக்குப் பதில் சொல்லாமல் சார் டபாய்த்துக் கொண்டிருந்தார்.

"ச்சே, கேக்குறே கேள்விக்கு ஒரு பதில் சொல்லுங்கன்னா, எத்தனை எதிர்க்கேள்வி. ஏன் நிக்கி படுத்துறீங்க? எங்க இருக்கீங்க?" என்றாள் மிருது எரிச்சலுடன்.

'நான் படுத்துறேன்னா, நீ தான் எல்லாரையும் படுத்தி பருத்தியா விதைக்குற!" என்றான் நிக்கி கிண்டலாக.

"நான் பருத்தியா விதைச்சா நீங்க வேன்னா அதை எடுத்து பஞ்சு திரிச்சி, நூலாக்கி, புடவை நெஞ்சு ஊருக்கெல்லாம் கொடுங்க!" என்றாள் மிருது எரிச்சல் மிகுதியான குரலில்.

"ச்சே, நான் புடவை நெஞ்சா உனக்கு மட்டும் தான் பேபி தருவேன், யாருக்கும் கிடையாது. எனக்கு நீ மட்டும்தான், நீ மட்டும் தான், நீ மட்டும்தான்!" என்று எக்கோ எபெக்ட் கொடுத்தான்.

"நிக்கி, டென்ஷன் ஆகாதே ஆகாதேன்னு சொல்லிட்டு ஏன் நிக்கி மேல மேல டென்ஷன் படுத்துறீங்க."

"டென்ஷன் ரிலீவ் பண்றேன் பேபி உனக்கு."

"நிக்கிகிகிகிகிகிகிகி!" என்று அவள் பல்லைக் கடிக்கவும்,

"ஓகே ஓகே, உனக்கு என்ன தெரியணும், சொல்லு," என்றான்.

"என்ன தெரியணுமா, எவ்வளவு நேரமா எத்தனை கேட்டேன், எனக்கே மறந்துடப் போகுது," என்றாள்.

''அது தானே எனக்கு வேண்டும் செல்லம்!'' என்று முனகினான்.

அவளது பாம்புச் செவியில் அதுவும் விழுந்துவிட, ''அப்போ ஏதோ தில்லுமுல்லு பண்றியா மேன் நீ. எங்க இருக்க, எனக்குத் தெரியணும் இப்போ.''

''சென்னைலதான்டா பேபி, ஆபீஸ் வொர்க்குக்காக வந்தவன் அங்க தானே இருப்பேன்! என்ன கேள்வி இது ரிது?'' என்று தன் நடிப்புத் தெறமையை மழையாகப் பொழிந்தான்.

''அது தெரியும் எனக்கு. சென்னைல எங்க இருக்கீங்கன்னு தான் கேட்டேன் நான். மழுப்பாம பதில் சொல்லுங்க,'' என்றாள் மிருது.

''ஹப்பாடா, என்ன ஒரு மெகா எஸ்கேப், மச்சம்டா நிக்கி உனக்கு!'' என்று மனதிற்குள் மகிழ்ந்துவிட்டு, ஒரு பெரிய மூச்சை விட்டவன், ''சந்தோஷ் வீட்டுலதான் இருக்கேன். சுப்பர்ப் சாப்பாடு பேபி, சோ நல்லா தூக்கம் வருது!'' என்று ஒரு பொய்க் கொட்டாவியை வெளியேற்றி அவளுக்குத் தூக்கம் வருவதை அழுத்திக் கூறினான்.

பேசிக் கொண்டிருக்கும்போதே தான் அவளுடன் வசமாக மாட்டல என்பதைச் செய்கையில் தெரிவித்தான்.

''பொய் சொல்லாதீங்க. நீங்க வெளியில பாருக்கு போய் பீர் அடிக்கப் போறதா சந்தோஷ் அண்ணா ரைமிங்கா வேற சொன்னாங்களே!'' என்றாள் மிருதுளா கோபமாக.



''அடப்பாவி! இன்னைக்குக் காலையில நான் உன்னை உன் வொய்ஃப்கிட்ட போட்டுக் கொடுத்ததற்கு இப்ப இப்படிப் பழி வாங்கிட்டியே, உனக்கு இருக்கு மவனே! நான் கிளம்புறதுக்குள்ள உன்னை உன் வைஃப் கிட்டே தர்ம சாத்து வாங்குற மாதிரி பண்ணல, நான் நிகில் இல்லை!'' என்று மனதிற்குள் சூளுரைத்துக் கொண்டே ரிதுவைச் சமாதானம் செய்ய ஆரம்பித்தான்.

''ச்சே இல்லடா, நான் தான், நீ கன்சீவ் ஆன டைம்-ல உங்கிட்டே பிராமிஸ் பண்ணியிருக்கேன் இல்ல, இனிமேல் பீர் கூட குடிக்க மாட்டேன்னு. சந்தோஷ் சொல்றத நம்புறே. நான் உங்கிட்டே பொய் சொல்வேனா? என்னை நம்பலையா நீ?'' என்றான் அழுத்தமான குரலில்.

அந்தக் குரலும், பேச்சும் ஏதோ செய்ய, ''அப்போ சந்தோஷ் அண்ணா ஏன் அப்படிச் சொன்னாங்க?'' என்றாள் இறங்கிவிட்ட குரலில்.

அதற்கான காரணத்தை விளக்கிவிட்டு, அதற்கும், ''என்ன வேலை இது நிக்கி, உங்க வாய்க்கு ஒரு பூட்டுப் போட்டுத்தான் இனிமேல் வெளியே அனுப்பணும். இப்போ மாதிரி திருப்பி உங்களுக்கு அது ரிப்பீட் அடிச்சாலும் நீங்க திருப்பி ஒரு ரிப்பீட் தாக்குதல் தான் செய்வீங்களே ஒழிய பேசாம இருந்திருக்கீங்களா என்னைக்காவது!'' என்று அவன் மனதைச் சரியாய்ப் புரிந்து கொண்டதன் அடையாளமாக அவள் திட்டியதையும் வாங்கிக் கட்டிக் கொண்டான்.

''சரிப்பா, நீங்க தூங்குங்க, நான் வைக்கிறேன்,'' என்றவளுடன்,

"ஹே பேபி, கேன் யூ சிங் த குறை ஒன்றும் இல்ல சாங் ஃபார் மீ?" என்றான்.

'ஹ்ம்ம் சரி, ஆனா என்ன திடீர்னு கேக்குறீங்க."

"சும்மாடா, கேக்கணும் போல இருந்தது." என்றான். அவன் கேட்டதன் காரணம் சிவநாதன் மிருதுவை அடிக்கடி பாடச் சொல்லிக் கேட்கும் பாட்டு அது என்பதால் தான்.

"அப்பாக்கு இந்தப் பாட்டு ரொம்பப் பிடிக்கும் நிக்கி, ஹி வில் பீ ஜஸ்ட் குளோஸிங் ஹிஸ் ஐஸ் அன்ட் என்ஜாயிங் இட், தெரியுமா?" என்றாள். குரலில் ஏக்கம் வெளிப்படையாகத் தெரிந்தது.

"134ஆவது டைம்டா ரிது!" என்றான் நிகில், போனை ஸ்பீக்கர் மோடில் போட்டவாறே.

"என்னது, நான் பாடுறதா?" என்று வினவியவளுடன், "இல்ல, எங்க அப்பாக்கு ரொம்பப் பிடிக்கும் நிகில்ன்னு சொல்றது."

"ச்சே ச்சே! வெறும் 134 டைம்ஸ் தான் சொல்லிருக்கேனா, சீக்கிரமே 200 அடிச்சுடலாம். நோ ஒர்ரீஸ்!" என்று சிரித்துவிட்டு, "சரி சரி, பாடவா?" என்றாள்.

"ஹ்ம்ம்..." என்றான்.

"குறை ஒன்றும் இல்லை மறை மூர்த்தி கண்ணா
குறை ஒன்றும் இல்லை கண்ணா
குறை ஒன்றும் இல்லை கோவிந்தா
கண்ணுக்குத் தெரியாமல் நிற்கின்றாய் கண்ணா
கண்ணுக்குத் தெரியாமல் நின்றாலும் எனக்கு
குறை ஒன்றும் இல்லை மறை மூர்த்தி கண்ணா"



அவள் பாடப் பாட அனைவரது கண்களும் கலங்கின. நெடுநாள் கழித்து அவளது குரலைக் கேட்டதால் சிவநாதன் பெரும் உணர்ச்சிப் பெருக்கில் இருந்தார்.

அவள் பாடி முடித்ததும் கொஞ்சம் நேரம் அவளுடன் தனியாகக் கொஞ்சிவிட்டு, அவள் கொடுத்தது பத்தாது என்று வம்பு செய்து இன்னும் வாங்கிக் கொண்டு அவன் வரும் வரை யாரும் இருந்த இடத்தை விட்டு எழுந்து செல்லவில்லை.

அனைவரது முகமும் விரிந்து மலர்ந்து இருந்தது. சாருமதி அவன் கையைப் பிடித்துக் கொண்டு, "ரொம்ப நன்றி மாப்பிள்ளை!" என்று மட்டும் உணர்ச்சி மிகுந்த குரலில் சொல்லிவிட்டுப் பூஜை அறைக்குள் சென்று விட்டார்.

சிவநாதன் ஒன்றும் சொல்லாமல் கண் மூடி உட்கார்ந்து இருந்தார். அவர் அருகில் அமர்ந்து மெதுவாகக் கையைப் பற்றி அழுத்தினான் நிகிலன்.

அவன் கையை இன்னும் அழுத்திப் பிடித்தவர், "எத்தனை நாள் தெரியுமா நிகில் என் பெண்ணைப் பார்ப்பேனா, அவள் உயிருடன் தான் இருக்காளா, இந்த உலகத்தில் எத்தனை கொடூரமான சம்பவங்கள் நடக்கின்றன. அதை எல்லாம் நினைத்து நினைத்து மிருதுவுக்கு அப்படி ஒன்னும் ஆகி இருக்கக்கூடாது என்று வேண்டி வருந்தி, எங்கள் மேல் உள்ள கோபத்தில் எதுவும் செய்து கொள்ளாமல் இருக்க வேண்டுமே என்று எத்தனை நாள் தூங்காமல் விழித்துக் கிடந்திருக்கிறேன் தெரியுமா?" என்று விட்டு அவன் பதிலை எதிர்பார்க்காதவர் போல்,

''என்னால் நிம்மதியாகத் தொழிலையும் பார்க்க முடியவில்லை, வீட்டிலும் இருக்க முடியவில்லை, இந்தக் குழந்தைகள் இருந்ததால் ஏதோ போய்க் கொண்டிருந்தது. இன்னும் கொஞ்ச நாள் இது தொடர்ந்திருந்தால் எனக்கு ஒன்று பைத்தியம் பிடித்திருக்கும். இல்ல, நான் உயிரை விட்டு இருப்பேன்!'' என்றவரை அவசரமாக இடைமறித்து.

''ச்சே! என்ன மாமா பேச்சு இது. இப்போதுதான் எல்லாம் சரியாகி விட்டதே. பழசைப் பேச வேண்டாம். இனி மேல் நடப்பது நல்லதாக இருக்க முயற்சி செய்வோம்!'' என்றான் ஆறுதலாக.

''போய்ப் படுங்க மாமா, இன்னைக்காவுது நிம்மதியா தூங்குங்க,'' என்று அவரை அனுப்பி வைத்தான்.

மீராவும், சந்த்யாவும் குழந்தைகளைத் தூங்க வைக்கச் சென்றனர்.

ஆண்கள் நால்வர் மட்டும் அமர்ந்து நள்ளிரவு வரை பேசிக் கொண்டு இருந்து விட்டுப் படுக்கச் சென்றனர்.

அடுத்த நாள் காலையில், அவன் வாங்கி வந்த பரிசுகளை அவரவர்க்குக் கொடுத்தான். அவர்களுக்குப் பிடித்த பொருளாகவோ, இல்ல, அவர்களை நக்கல் செய்யும் விதமாகவோ இருந்த பரிசுகளைப் பார்த்து ஒரு முறை டர்ன் போட்டு வியந்துவிட்டு அவனிடம் நன்றி கூறினர்.

''எனக்குச் சென்னையில் கொஞ்சம் ஆபீஸ் வொர்க் இருக்கு. சோ நான் இப்போ கிளம்புறேன். விசா பேபர்ஸ் எல்லாம் நானே பார்த்து அனுப்பி விடுகிறேன். ஒரு வாரத்தில் வந்து விடும்னு நினைக்குறேன், விசிட்டிங்



விசா தானே, ஒண்ணும் பிரச்னை இருக்காது. நீங்க ஒரு வாரம், பத்து நாள்களில் கிளம்புற மாதிரி எல்லாம் ரெடி பண்ணிக்கோங்க,'' என்று விட்டுச் சென்னை கிளம்பி விட்டான் அன்று மதியமே.

ஒரு வாரத்தில் விசா வந்து விட, நிகிலின் வேலையும் அதற்குள் முடிந்து இருந்தது.

ரிதுவின் வளைகாப்புக்கு, முந்தியில் ஆலிலைக் கிருஷ்ணன் படம் நெய்த பட்டுப்புடவை வாங்கியவன், வாசுகி, சாருமதி, மீரா, சந்த்யா என்று மற்ற அனைவருக்கும் புடவைகள் எடுத்துக் கொண்டு திருச்சிக்குச் சென்றான்.

அங்கே சென்றால் சாருமதி அம்மா ஒரு பத்துப் பெட்டிகள் புடைசூழ அமர்ந்திருந்தார்.

''ச்சே! என்ன அத்தை வீடு எதுவும் காலி பண்றீங்களா, இதைவிடப் பெரிய வீடா பார்த்து இருக்கீங்களா? மிருதுக்கு ரெட்டைக் குழந்தை தான். அவள் வரும்போது அவள் ரூம்லேயே அவுங்க ரெண்டு பேரும் இருப்பாங்க,'' என்றான் நிகில் இன்னும் ஒன்றும் விளங்காத குரலில்.

''வாங்க வாங்க. எப்படி இருக்கீங்க, ஜூஸ் கொண்டு வரச் சொல்றேன். ரொம்ப அசதியா தெரியுறீங்க!'' என்று வரவேற்றவர் ஜூஸ் கொண்டுவரச் சொல்லி உள்ளே குரல் கொடுத்தார்.

பிறகு அவன் கேள்விக்குப் பதிலாக, ''ஐயோ மாப்பிள்ளை, இது எல்லாம் மிருதுக்கு, நம்ம போகும்போது கொண்டு போக,'' என்றார் மாமியார்.

''என்னது, நாம கொண்டு போகவா? நீங்க என்ன தனி ஏர்லைன்ஸ் எதுவும் நடத்துறீங்களா, பாருங்களேன், ரிது சொல்லவே இல்லை.''

''ஏன் மாப்பிள்ளை?'' என்றார் இன்னமும் புரியாமல்.

''எது ஏன், ரிது சொல்லாததா, உங்க பொண்ணைத் தான் கேக்கணும்,'' என்றான் சிரிப்பை அடக்கிய குரலில்.

''அது இல்ல, நாம தனியா காசு கொடுத்துட்டா எவ்வளவு வேணும்னாலும் கொண்டு போகலாம்னு விபு சொன்னானே, எல்லாம் மிருதுக்காகப் பார்த்துப் பார்த்து அவளுக்குப் புடிச்சதா, இந்த டைம்-ல விரும்புறதா வாங்கினேன்,'' என்றார் வருத்தத்துடன்.

''போகலாம் தான், அதுக்கு கொடுக்குற காசு, நாம கொண்டு போறதவிட ரொம்ப ஜாஸ்தியா இருக்கும். நீங்க அங்க வந்து அவளுக்கு நல்ல பிடித்ததா சமைத்துப் போடுங்க!'' என்றவன்.

''இந்தப் பத்துப் பெட்டியை ஆறு ஆக்கி விடலாமா?'' என்று விட்டு அவருக்கு உதவி செய்தான். அடுத்து வந்த இரண்டு நாட்களும் பொருட்கள் வாங்குவதிலும், அடுக்குவதிலும், சாருமதி லக்கேஜ் கவுண்ட்டை ஜாஸ்தி ஆக்கிவிடாமல் அணைபோடுவதிலும் சென்றுவிட, நிகில் தன் மாமனார், மாமியாருடன் வேன்கூவர் நோக்கிப் பயணமானான்.



## 9



இதே சென்னை விமான நிலையத்தில் 3 வருடங்கள் முன்னால் வந்திறங்கிய மிருதுவைப் பார்ப்போமா... யெஸ் த ஃபிளாஸ்பேக் இஸ் ஹியர்.



மேல் படிப்பை முடித்துவிட்டு வரும் மிருதுளாவை வரவேற்கச் சிவநாதன் சார், சாருமதி அம்மா, விபு எல்லோரும் வந்திருந்தனர். கதிர் அவர்களது தொழிற்சாலையில் லேபர் பிராப்ளம் ஒன்று தீர்க்க வேண்டியதால் வரவில்லை.

இமிக்ரேஷன், லக்கேஜ் செக் அவுட், கஸ்டம்ஸ் வெரிஃபிகேஷன் எல்லாம் முடித்துவிட்டு வந்த மிருதுளா, குடும்பத்தினர் அனைவரையும் பார்த்துவிட்டு, துள்ளலுடன் ஓடி வந்து தந்தையை அணைத்துக் கொண்டாள்.

''எப்படிடா இருக்கே, எவ்வளவு நாள் ஆச்சுடா பார்த்து, கன்னமெல்லாம் வத்திப் போச்சே!'' என்று அவள் கன்னத்தை வருடிக் கொஞ்சியவர் -

''என்ன டாடி இது, நல்லா சீஸ் பர்கரும், எக்ஸ்ட்ரா சீஸ் பிட்சாவுமா சாப்பிட்டு நானே 5 கிலோ வெயிட் போட்டுட்டேன்னு பீல் பண்றேன்... நீங்க என்னடான்னா, ஸ்டாண்டர்ட் டைலாக் டெலிவரி பண்றீங்க!'' என்று சிரித்துவிட்டு,

''நீங்க எப்படி இருக்கீங்க, சுகர் நம்ம விபு அண்ணா, சது அக்கா மாதிரி உங்க சொன்ன பேச்சு கேட்டு லிமிட்ல இருக்கா, இல்ல, கதிர் அண்ணா மாதிரி எகிறி எகிறிக் குதிச்சு ஹை லெவலுக்குப் போயிடுச்சா?'' என்றாள் கண்ணைச் சிமிட்டி.

சாருமதி செல்லமாகப் பெண்ணை அடித்துவிட்டு, ''வந்ததும் வராததுமா அவனை வம்பு பண்ணணுமா, என்னமோ நீ அப்படியே நான் சொல்ற பேச்சு கேக்குற

மாதிரி, உன் வாய் கொஞ்சம் கூடக் குறையல்ல!'' என்றவாறே சுற்று முற்றும் பார்வையைச் சுழல விட்டார்.

''அம்மா, நோ வன்முறை. எதுனாலும் நம்ம வீட்டுல போய்ப் பார்த்துக்கலாம்,'' என்று அஞ்சுபவள் போல் நடித்துவிட்டு விபுவின் பின்னாடி ஒளிந்தாள்.

விபு சிரித்துக் கொண்டே, ''என்ன அம்மா தேடுறீங்க, அவ சும்மா கிண்டல் தானே செய்றா, விடுங்க,'' என்றான்.

''இவன் வேற, அவளை ஒண்ணு சொன்னா வந்துடுவான் போர்வீரன் மாதிரி அவளைக் காப்பாற்ற. பெட்டியையே காணல. அதைத் தான் தேடுறேன், எங்கேடீ?'' என்றார் மகளிடம்.

தலையை மட்டும் விபுவின் பின்னால் இருந்து நீட்டி, ''என் பாய் பிரெண்ட் எடுத்துட்டு வருவான்,'' என்றாள் மர்மச் சிரிப்புடன்.

''பாய் பிரெண்ட் ஆ, அடிபாவி! உன்னைப் படிக்க அனுப்பினால் என்ன வேலை மிருது. நான் சொன்னேன் தானே, அவளைத் தனியா தொலைதூரத்துக்கு எல்லாம் அனுப்ப வேண்டாம்னு. கேட்டீங்களா ரெண்டு பேரும், இப்போ பாருங்க, யாரோ வெள்ளைக்காரனைக் கூட்டிட்டு வந்து நிக்குறா!'' என்று படபடவென்று பொரியத் தொடங்கினார்.

''ச்சு மதி சும்மா இரு,'' என்று மனைவியை அடக்கி விட்டு, மிருதுவிடம் திரும்பி ''என்னடா இது, யார் வந்திருக்கா உன் கூட?'' என்றார் அமைதியான குரலில்.



''பாய் பிரெண்ட் தான் டாடி. ஹி இஸ் கெட்டிங் ஆல் மை திங்ஸ் அலாங் வித் ஹிஸ். ஹி வில் பி ஹியர் இன் 2 மினிட்ஸ் டைம்!'' என்றாள் அப்பாவி முகத்துடன்.

விபு, ''என்ன கண்ணம்மா இது!'' என்று வருத்தப் பட்டுக் கொண்டு இருக்கும்போதே, நன்றாக நாலு தர்மச் சாத்து விழுந்தது விபு முதுகில். இல்லபா, மிருது முதுகில்.

''சரியான எருமை மாடு எல்லாத்தையும் என் தலையில் கட்டிவிட்டு மேடம் 'துள்ளித் துள்ளி நீ ஓடம்மா சீதையம்மா' பாட்டை யாரோ பேக்கிரவுண்ட்ல வாசிக்குற மாதிரி ஓடி வந்துட்டா, சரியான டொமாட்டோ!'' என்று துரத்தித் துரத்தி அடி வைத்து, திரும்பி நாலு வாங்கியவன் அட! நம்ம விமல் தாங்க.

மிருதுளா, ''உன்னை அப்புறம் எதுக்கு அங்க இருந்து வரச் சொன்னாங்களாம், தனியா வரப் பயந்து உன்னைத் துணைக்குக் கூப்பிட்டேன்னு நினைச்சியோ, சரியான முட்டைகோசுடா நீ!'' என்றவாறே விபுவையும், சிவ நாதனையும் சுற்றிச் சுற்றி ஓடினாள்.

''நீயும் நான் உனக்குத் துணைக்கு வந்தேன்னு நினைச்சியோ, நான் ஒரு பொண்ணை கரெக்ட் பண்ணி அவளோட திரும்ப யு.எஸ். போகலாம்னு தான் வந்தேன்... ஆனாலும் ரொம்ப சீன் பார்ட்டி டொமாட்டோ நீ.''

''டேய், என்னை டொமாட்டோ டொமாட்டோ சொல்லாதடா, முட்டைக்கோசு.''

''சரி, அப்பா பறங்கிக்காய்ன்னு சொல்லவா, இல்ல ஊர்ல எல்லாம் இந்த நெல் அரைப்பாங்களே ஒன்னு, குந்தாணின்னு. அது தான் apt name for you.''

"போடா போடா தேனு மிட்டாய்!" என்று பழிப்புக் காட்டினாள்.

"ஹேஹ, இப்போ எதுக்கு தேனு மிட்டாய் சொல்றே, ப்ளீஸ் மிருது. லெட்ஸ் மேக் எ டீல். ஐ நோ டொமாட்டோ, யூ நோ தேனு மிட்டாய், ஓகே?" என்றான் ஓடுவதை நிறுத்திவிட்டு.

"அது, அது... அந்தப் பயம் இருக்கட்டும்."

"ச்சு மிருது, போதும், சொல்லச் சொல்ல ஓடிகிட்டு, ஏர்போர்ட்-ல எல்லாரும் நம்மளத் தான் பார்க்குறாங்க, நீ இன்னும் சின்னப் பிள்ளையா?" என்றார் சாருமதி கண்டிப்பான குரலில்.

விமலை நலம் விசாரித்து, அவனது வேலை விபரங்களைக் கேட்டறிந்து, அவன் தனது தங்கை கல்யாணத்துக்காக மாப்பிள்ளை பார்ப்பதற்காக வந்திருப்பதை அறிந்து தாங்களும் உதவுவதாகச் சொல்லி முடித்தனர்.

காரை நோக்கி நடக்கும்போது, "என்னடா அது தேனு மிட்டாய்?" என்றான் விபு.

"அது ஒண்ணும் இல்லை, அண்ணா. அது வந்து எனக்குத் தேனுமிட்டாய் ரொம்பப் பிடிக்கும். அதைத் தான்..." என்றான் விமல் அவசரமாக இடைப் புகுந்து.

"எங்கப்பன் குதிருக்குள் இல்ல, இல்ல,' என்று விமல் குரலில் பேசிக் கொண்டே மிருது பின்னால் நகர்ந்தாள்.

"என்னைத் தானே அண்ணா கேட்டாங்க, நீ ஏன் பதில் சொல்றே முட்டைகோசு," என்றாள் சிரித்துக் கொண்டே.



"அண்ணா, நாட் நௌ ஓகே. ஐ வான்ட் திஸ் நேம் ஃபார் பிளாக்மெயில் ஃபார் சம் மோர் டைம், ஓகே அண்ணா?" என்றாள் விபுவிடம்.

"சரி, என்னமோ போங்க," என்றுவிட்டு காரில் சாமான்களை ஏற்றினார்.

திருச்சி நோக்கிப் பயணமான நால்வரும், நன்றாக விடிந்த பிறகே திருச்சியை அடைந்தனர். விமல் வீட்டுக்குச் சென்று அவனை இறக்கிவிட்டு விட்டு வீடு செல்வதாகத் திட்டம் என்பதால் விபு விமல் வீட்டை நோக்கிக் காரைச் செலுத்தினான்.

வீடு வந்ததும் விமல் முதலில் இறங்கி காலிங் பெல்லை அழுத்திவிட்டு, பெட்டிகளை இறக்கினான். அவன் இறக்கி முடிக்கும் வரை யாரும் வந்து கதவைத் திறக்கவில்லை. இதைப் பார்த்துக் கொண்டிருந்த சிவநாதனுக்கும், சாருமதிக்கும் மனதிற்குக் கஷ்டமாக இருந்தது. விமலுக்கோ முகம் அப்படியே தொங்கி விட்டது.

இரண்டு ஆண்டு மேல் படிப்பும், ஒரு வருடமாகப் பார்க்கும் வேலையும் கற்றுக் கொடுத்தது கைகொடுக்க, முகத்தைச் சில நிமிடங்களில் சீராக்கிக் கொண்டு, "தூங்கிட்டு இருப்பாங்க அங்கிள், நான் பார்த்துக்குறேன். நீங்க கிளம்புங்க," என்று விட்டு, அவர் கையைப் பிடித்துக் கொண்டு. "ரொம்ப தேங்க்ஸ் அங்கிள்!" என்றான் நெகிழ்ந்த குரலில்.

"என்ன விமல் இது. நீயும் விபுவும் எனக்கு வேறில்லை, சியர் அப் மை மேன்!" என்றார் நாதன்.

"இன்னைக்குக் கூட்டி வந்ததுக்கு மட்டும் இல்லை அங்கிள், இத்தனை நாளாக நீங்கள் செய்யும் எல்லாத்

துக்கும், அப்பா இறந்த பிறகு என்னை அனாதை போல் ஃபீல் பண்ண வைக்காமல் இருப்பதற்கு நான் உங் களுக்குக் கூடை கூடையாக நன்றி சொல்ல வேண்டும் அங்கிள், ரொம்ப தேங்க்ஸ்!'' என்றான் உடைந்த குரலில்.

''என்னப்பா இது, காலையில் இத்தனை பெரிய ஐஸ் வைக்கிறாய், இன்று மிருதுவைச் செய்யப் போகும் வம்புக்கு அடிப் போடுகிறாயா? இன்னும் தேனுமிட்டாய் ரகசியம் வெளிவரவில்லை, ஞாபகம் இருக்கட்டும், என்ன,'' என்றார் சிரித்துக் கொண்டே.

''ஐயோ, நீங்களுமா? அவள் தூங்குவதால் நீங்க அவளை ரீப்ளேஸ் பண்றீங்களா?'' என்றான் இயல்புக்குத் திரும்பியவாறே.

''அவ மட்டும் முழிச்சிருந்தா இதற்குக் கையைச் சொரிந்து, காலைச் சொரிந்து, ஹச் ஹச்ன்னு பத்துத் தடவையாவது தும்மியிருப்பா. அவள் தூங்குறதால பொழைச்சேடா நீ!'' என்று அவனைச் சிரிக்க வைத்து விட்டே விபு காரைக் கிளப்பினான்.

''பாவம் பையன், அதுவும் முருகன் இறந்த பிறகு, சரோஜா செய்வது கொஞ்சமும் நல்லாயில்ல!'' என்றார் நாதன்.

சாருமதி, ''ஆமா, அவன் சம்பாதித்து அவள் பொண் ணுக்கு மட்டும் கல்யாணம் செய்யணுமாம், ஆனா இவ அவ்வளவு தூரத்திலிருந்து வர பையனை வாசல் வரைக்கும் கூட வந்து வரவேற்கமாட்டாளாம், எந்த ஊர் நியாயமோ தெரியலே!'' என்று அங்கலாய்த்தவாறே வீடு வந்து சேர்ந்தனர்.



மீரா வாசலிலேயே வராண்டாவில் காத்துக் கொண் டிருந்தாள். கார் வரும் சத்தம் கேட்டதும் போர்டிகோ விற்கு வந்தாள்.

முதலில் இறங்கிய சாருமதியைப் பயண விபரங்கள் கேட்டவாறே, உள்ளே மிருதுவை எழுப்பினாள். சாரு மதியும் மீராவிற்கு உதவினார். மிருது என்ற அழைப்பும், சின்ன அடிகளும் நம்ம மேடமைக் கொஞ்சமும் அசைக்க வில்லை.

''ஹே மிருது, எழுந்திரி!'' என்று சாருமதி ஒரு உலுக்கு உலுக்கிய பின்தான் கண்ணைக் கசக்கி நினைவுக்கு வந்தாள் மிருதுளா.

''உனக்கு இடம் பொருள் ஏவல் ஒன்றும் தேவை யில்லை தூங்குவதற்கு, இத்தனூண்டு இடம் கிடைத் தாலும் தூங்கி விடுகிறாய், உன்னையெல்லாம் கல் யாணம் செய்து கொடுத்து ஒருவரின் வாழ்க்கையை உன்னை எழுப்புவதிலேயே கழிக்கச் சொல்ல வேண் டுமே என்று வருத்தமாக இருக்கிறது!'' என்று அவளை வசைபாடியவாறே உள்ளே வந்தனர்.

''அப்படி வருத்தப்படாத மாப்பிள்ளையாப் பார்த்துக் கலாம், அந்தக் காலத்துல சுயம்வரம் நடந்ததில்ல, அது மாதிரி நம்ம வேணா எழுப்பும் போட்டி வைத்து மாப் பிள்ளையைத் தேர்வு செய்யலாம், என்ன சொல்றீங்க அண்ணி, கரெக்ட்தானே!'' என்று அன்னையிடம் தப் பிப்பதற்காக அண்ணியிடம் ஒண்டினாள்.

சாருமதி, ''ஆமா அப்படியே நூறு பேரு கியூல நிற்கிற மாதிரி பேச்ச பாரு!'' என்றார் ஒரு சலித்த குரலில்.

''என் பொண்ணுக்கு என்ன மதி குறைச்சல், நூறு இல்லை ஆயிரம் பேர் வருவாங்க!'' என்றார் நாதன் பெருமையாக.

''ஆமா, நீங்க பேசுங்க இப்படியே. பொண்ணுக்கு வரன் பார்க்க ஆரம்பிச்சாதான் ஆயிரம் பேர் இருக் காங்களா இல்ல ஒருத்தரைக் கூட வலை விரிச்சுத் தேடணுமான்னு தெரியும்!'' என்றார் சாருமதி கவலை யாக.

யாரோ மூன்றாவது மனிதரைப் பற்றிப் பேசுவதைப் போல் மிருதுளா தன் அண்ணியிடம் கேலி பேசிக் கொண்டிருந்தாள். ''ஹாய் அண்ணி, எப்படி இருக்கீங்க? எங்க அண்ணாவ நல்லா பாத்துக்குறீங்களா, இல்ல உங்க பையனை மட்டும் கொஞ்சிக் கெஞ்சிச் சீராட்டிவிட்டு விபு அண்ணாவை டீல்ல விட்டுறீங்களா?''

மீரா எப்போதும் போல் ஒரு சின்னச் சிரிப்பை உதிர்த்துவிட்டு, ''உன்னோட படிப்பெல்லாம் எப்படி இருக்கு, வரதுக்கு முன்னாடி நயாகரா ஃபால்ஸ் இன் னொரு தடவை போகணும்னு சொன்னியே, போனியா இல்லையா?'' என்று மிருது வாய் ஓயாமல் பேசும் விஷ யங்களுக்குப் பேச்சை மாற்றினாள்.

கதிர் அப்போதுதான் டென்னிஸ் பயிற்சி முடிந்து வீட்டிற்குள் நுழைந்தான்.

மிருதுவைப் பார்த்தவன், ''ஹே மத்தளம், எப்ப வந்த? நீங்க வர இன்னம் அரை மணி நேரமாவது ஆகும் என்று நினைத்து நான் டென்னிஸ் ஆடப் போனால், நீங்க அதுக்குள்ளே வந்துட்டீங்க! அதிசயமா விபு அவனோட



40 கி.மீ. ஸ்பீட் லிமிட்ல இருந்து வெளிய வந்து ஆக்ஸிலேட்டரையும் எக்ஸ்ட்ரா யூஸ் பண்ணலாம், ஒண்ணும் தேயாதுன்னு முடிவு பண்ணி சீக்கிரம் வந்துட்டானா?'' என்று நீளமாகப் பேசியபடி, ஷூவைக் கழட்டிவிட்டு அருகில் வந்தான்.

''என்னை மத்தளம்ன்னு கூப்பிடாதன்னு உனக்கு எத்தனை தடவை சொல்றது!'' என்றாள் மிருதுளா அவனை அடிக்கக் கை ஓங்கியவாறே.

''எம்.டி. படிச்ச டாக்டர் மாதிரியா பிஹேவ் பண்றே நீ. சின்னப் பிள்ள மாதிரி, என்னம்மா பொண்ணு வளர்த்து வைத்திருக்கீங்க!'' என்று சாருமதியை உசுப்பேத்தி விட்டான்.

சாருமதி ஏதோ ஆரம்பிக்கும் முன்னரே, ''அம்மா ப்ளீஸ் நோ, என்னால திரும்பியும் கேக்க முடியாது. 2 இயர்ஸா போன்ல நீ இப்படிப் பேசும்போதெல்லாம் நான் மியூட்ல போட்டுட்டு என் வேலையைப் பார்ப் பேன். இப்போ அது வேற முடியாது, சோ ப்ளீஸ்...'' என்று வாய் தவறி உளறிவிட்டு அதற்கு சாருமதி பாடியதையும் வாங்கிக் கதிரிடம் ஃபார்வர்ட் செய்தாள்.

ஒரு வாரம் சிரிப்பும் கேலியுமாகச் செல்ல, சிவநாதன் மகளைக் கூப்பிட்டு, ''கண்ணா! நீ யாரையும் லவ் பண் றியா, இருந்தால் சொல்லு, பையனைப் பற்றி விசாரிச் சுட்டு மேல பேசலாம்'' என்றார்.

''நிஜமாவா அப்பா? யாரா இருந்தாலும் சரிப்பா?'' என்றாள் மிருது ஒரு சின்னச் சிரிப்புடன்.



# 10

"யாருன்னு முதல்ல சொல்லுடா. அப்பாவும் அண்ணாவும் போய்ப் பார்க்குறோம், அப்புறமா அம்மாகிட்டே சொல்லலாம்," என்றார் சிவநாதன்.

"எனக்கே தெரியலையே, சிவா, எனக்கே தெரியலையே, எங்க இருக்கானோ? குட்டையோ நெட்டையோ தெரியலையே... கொஞ்சம் டைம் தாங்க, ஒரு இரண்டு வருஷம். அதுக்குள்ள இந்த உலகத்துல எங்க இருந்தாலும் நான் தேடிக் கண்டு புடிச்சு உடனே உடனே கூட்டிட்டு வரேன்," என்றாள் சிரிப்புடன்.

"இப்ப கல்யாணம் வேணாம்னு சொல்லறதுக்கு என்ன என்னவெல்லாம் சொல்லிச் சுத்தி வளைக்குற கழுதை!" என்றார் சிவநாதன் செல்லமாக இரண்டு முதுகில் வைத்தவாறே.

"ஹப்பா! எப்போ சிவா இவ்வளவு இன்டலிஜென்ட் ஆன? அம்மா போடற சாப்பாட்டில் இந்த ரெண்டு வருஷமா ஏதாவது ஸ்பெஷலா இன்குளுட் பண்றாங்களா?"

"ச்சு மிருது கண்ணா, போதும் விளையாட்டு. அம்மா சொல்வது போல் எப்போது விளையாடுவது என்று இன்னும் தெரியவில்லை உனக்கு, ரொம்ப முக்கியமான விஷயம் பேசப் போறேன். விளையாட்டை எல்லாம்



விட்டுவிட்டு ஒழுங்காக கேள்," என்று கண்டிப்பான குரலில் சொல்லிவிட்டு, "இங்க வந்து அப்பா பக்கத்தில் உக்காரு கண்ணா!" என்றார்.

வாய் மேல் விரல் வைத்தபடி அருகில் வந்தமர்ந்தாள் மிருதுளா.

"ஒரு வரன் வந்துருக்குடா. பொண்ணு கொடுத்து பொண்ணு எடுக்குற மாதிரி!" என்று சிவநாதன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, "அச்சச்சோ, பையனைக் கொடுக்கிறது கூட பரவாயில்லை. நான் கண் கலங்காம வச்சுப்பேன். ஆனா அந்தப் பொண்ணு தான் பாவம்!" என்று அந்த முகமறியாத பெண்ணிற்குப் பாவப்பட்டாள் மிருது.

"மிருதுளா!" என்று சிவநாதன் அதட்டியவுடன் கிண்டலைக் கைவிட்டுப் பேசாமல் இருந்தாள்.

"பையன் பேரு சர்வேஷ். அவன் தங்கை பேரு ஷர்மிலா. தஞ்சாவூர் பக்கத்தில் நிறைய நிலபுலங்கள், ஒரு அரிசி ஆலை என்று நல்ல பணம் படைத்தவர்கள். அவர்களது அப்பா குருபாதம் நம்ம நரசிம்மன் அங்கிள்க்கு தெரிந்தவர். பையன் M.B.A முடித்துவிட்டு அவுங்க அப்பாவோட பிசினஸ் பார்த்துக்கிறான். நல்ல மாதிரி என்று தான் விசாரித்தவரை சொல்கிறார்கள்," என்று நீளமாக அவள் நடுவில் புகுவதற்கு இடம் கொடாமல் பேசி முடித்தார்.

"இன்னும் கொஞ்ச நாள் போகட்டுமே டாடி, I want to put a clinic here and practice எல்லாம் நல்லா போன பிறகு பார்க்கலாமா டாடி?" என்றாள் மகள்.

"திருச்சியும், தஞ்சாவூரும் ரொம்ப தூரமா என்ன, ரெண்டு இடத்திலயும் கிளினிக் போட்டுக்கலாம்டா,

மாறி மாறிப் பாத்துக்கோ. அவுங்களுக்கு இதுல எந்தப் பிரச்சனையும் இல்லைன்னு சொல்லறாங்க. இன்பாக்ட் அவங்க தான் இந்த ஐடியா கொடுத்தாங்க!'' என்றார் சிவநாதன், குரலில் ஒரு வேண்டுதலுடன்.

'ஹ்ம்ம், ஆனா எனக்குக் கொஞ்ச நாள் போனா நல்லா இருக்கும்னு தோணுதுப்பா. இப்ப தானே 2 Years கழித்து உங்களோட இருக்கேன்,'' என்றாள் இன்னும் சமாதானம் ஆகாமல்.

''என்னடா கண்ணா, எங்களுக்கும் இருக்காதா? ஆனா கல்யாணம் என்பது நடக்க வேண்டிய நேரத்துல நடக்கணும்டா, ரொம்ப தள்ளிகிட்டே போகக்கூடாது!'' என்றார் அவளைச் சம்மதிக்க வைக்க வேண்டுமென்ற எண்ணத்தில்.

அவள் யோசித்துக் கொண்டிருக்கும் போதே, ஒரு போட்டோவை அவளிடம் கொடுத்து, ''இந்த போட்டோவைப் பாரு. உனக்குப் புடிச்சிருந்தா மேல பேசலாம்,'' என்று விட்டு அவள் மறுத்து ஏதும் கூறுவதற்கு முன்னால் எழுந்து ஆபீஸ் அறைக்கும் சென்றுவிட்டார்.

போட்டோவில் பார்வையை ஓட்டியவளின் மனதிற்குள் பெரிய ரசாயன மாற்றங்கள் நிகழாவிட்டாலும் குறை என்றும் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

அந்தப் போட்டோவை எடுத்துக் கொண்டு தன் அறைக்குள் செல்ல எழுந்து நடந்தாள். அவள் அறைக்குச் செல்லும் வழியில் லேசாகத் திறந்திருந்த கதிரின் அறைக் கதவை நெருங்கி உள்ளே எட்டிப் பார்த்தால், சார் அங்கே போட்டோவை நெஞ்சில் வைத்துக் கொண்டு கற்பனையில் மூழ்கி இருந்தார்.



இயற்கைக்கு மாறாக அவனை வம்பு செய்யாமல் யோசனையுடன் தன் அறைக்குள் நுழைந்து படுக்கையில் விழுந்தாள்.

''அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள் மாதிரி நமக்கு ஒன்றும் தோன்றவில்லையே! இந்தக் கதிர் அண்ணாவுக்கு மட்டும் எப்படி?''

''வயிற்றுக்குள் பட்டாம்பூச்சி, ச்சே! ஒரு கொசு கூடப் பறக்க மாட்டேன்தே எனக்கு இந்த போட்டோவைப் பார்த்தா.''

''ஆனா ஏன் பிடிக்கலை என்று கேட்டா ஒரு Reason கூடச் சொல்ல முடியாது போலயே.''

''முதல்ல இப்படித் தான் இருக்குமோ? அப்புறம் பார்க்கப் பார்க்க, பேசப் பேச எல்லாம் பிடிக்குமோ?''

''ஆனாலும்...''

''ஆள் நல்லாத்தான் இருக்கான். நல்லா சிவப்பா, கரெக்ட் HEIGHT, கொஞ்சம் ஒல்லி.''

''இன்னும் கொஞ்சம் DARK COMPLEXION இருந்தா நல்லா இருக்கும். இன்னும் கொஞ்சம் கூட WEIGHT.''

''இவனைக் கல்யாணம் பண்ணா அப்பா அம்மா பக்கத்திலேயே இருக்கலாம், ரெண்டு இடத்துலயும் கிளினிக் போட்டு பார்த்துக்கலாம்.''

''இந்த REASONS-காகவெல்லாம் கல்யாணம் பண்ணுவாங்களா?''

''ச்சே என்ன இது, ஒரே குழப்பமாவே இருக்கே!'' என்று தனக்குள் வாதம் பிரதிவாதம் எல்லாவற்றையும்

நடத்தியும் ஒரு முடிவுக்கும் வர முடியாமல் விமலுக்கு போன் செய்தாள்.

அவனிடம் தன் குழப்பத்தைக் கூறி, அதை அலசி ஆராய மலைக்கோட்டையில் சந்திக்கலாம் என்று முடிவு செய்து கிளம்பி வெளியே வந்தவளிடம் சிவநாதன், ''என்ன கண்ணா, என்ன சொல்கிறாய், உனக்குப் பிடித் திருக்கா?'' என்றார்.

''விமலைப் பார்க்கப் போறேன்பா, பார்த்துட்டு அவ னோட கொஞ்சம் பேசிட்டு உங்களுக்கு முடிவு சொல் றேன்,'' என்றுவிட்டுப் படியிறங்கினாள்.

இந்த வரிகள் தன் தந்தை தன் மேல் கொண்ட நம்பிக்கையை இன்று இல்லாவிட்டாலும் வேறொரு நாள் ஆட்டம் காணச் செய்யப்போகிறது என்பதை அறி யாமல்.

அவனைப் பார்த்தவுடன், ''ஹே விமல், எனக்குப் பயங்கரக் குழப்பமா இருக்குடா, என்ன சொல்றதுனே தெரியல!'' என்று புலம்பலைத் தொடர்ந்தாள்.

''இதைத் தான் போன்லயும் சொன்ன. என்ன குழப் பம்னு சொல்லு. நான் இன்னும் கொஞ்சம் நல்லா குழப்பி விடுறேன்!'' என்றான் சிரிப்புடன்.

''ச்சி போ. உங்கிட்டே போய்ச் சொல்ல வந்தேன் பாரு என்னை.''

''செருப்பு ஸ்டாண்ட்ல இருக்கு. நான் வேன்னா போய் எடுத்துட்டு வரட்டா.''

''ஹ்ம்ம் போய் எடுத்துட்டு வா. உன்னை நல்லா மொத்துறேன்!'' என்றுவிட்டு ''ப்ளீஸ் விமல் Be serious ஒகே!'' என்றாள் கெஞ்சலாக.



''சரி சரி சொல்லு, என்ன உன் Problem?''

''Problem எல்லாம் ஒண்ணுமில்ல, Confusion தான்.''

அவள் நடத்திய வாதப் பிரதிவாதங்கள் எல்லாவற் றையும் அவனுக்குச் சொல்லிவிட்டு, ''உனக்குத் தேனு மிட்டாய் பார்க்கும் போது எப்படி இருக்கும் விமல், சொல்லேன். எனக்கும் அது மாதிரி இருக்கான்னு கிராஸ் செக் பண்ணிக்குறேன்,'' என்றாள்.

''அடி பாவி! எக்ஸாம் பேப்பரை டிக் போடுற மாதிரி பேசுறே. ஒரோருத்தருக்கும் வேற வேற மாதிரி பீலிங்ஸ் வரும் மிருது. லூசு மாதிரி பேசாத!'' என்றான் விமல்.

''எல்லாருக்கும் பார்த்தவுடனே பிடிக்கணும்னா உலகத்தில ஒரு வருசத்துக்கு 10 கல்யாணம் கூட நடக் காது. சில பேருக்கு அவங்க ஏதாவது Impressive-ஆ செஞ்சா பிடிக்கும், சில பேருக்கு அவங்க பேசுற விதத்தை வைச்சு பிடிக்கும், சில பேர் பார்க்க பேச கொஞ்சம் Reserved-ஆ இருந்தாலும் They will be very good at heart and they will be close to their partners, இப்படி நிறைய இருக்கு மிருது. பார்த்தவுடனே கெமிக்கல் ரியாக்சன் நடக்க அந்த போட்டோல இருந்து ஏதாவது Liquid-ஆ flowஆ ஆகுதா என்ன, அவரைப் பார்த்துப் பேசிப் பழகிப் பாரு, உனக்குப் பிடிக்கும்!'' என்று நீளமாகப் பேசி முடித்தான்.

''உனக்குப் புடிச்சிருக்கா விமல்?'' என்றாள் மிருதுளா.

மனம் நெகிழ, ''He is looking calm and quiet. quite opposite to you. as opposite poles attract each other, I am sure that he will be a good pair for you!'' என்றான்.

அந்த வார்த்தைகள் நிஜமாகாமல் போய்த் தன்னையும் அவளையும் இன்னும் 15 நாட்களில் நரகத் தீயில் த்ள்ளப்போவது புரியாமல், ஒரு தெளிவு வந்துவிட்ட மிருதுளாவை வழியனுப்பி வைத்துவிட்டு வீடு வந்து சேர்ந்தான்.

மறுநாள் தன் சம்மதத்தைச் சிவநாதனிடம் கூறிய வுடன் எல்லாம் மளமளவென்று நடந்தது.

அவர்கள் வீட்டின் முக்கியமான அங்கத்தினர்களும், சிவநாதன் சார் வீட்டின் முக்கியமான அங்கத்தினர்களும் தஞ்சாவூர்ப் பெரிய கோவிலில் சந்தித்து இரண்டு பெண் பார்க்கும் படலத்தையும் ஒன்றாக முடித்தனர்.

அப்பொழுதே தட்டை மாற்றி உறுதி செய்து கொண்டு, கல்யாணத்திற்கு முதல் நாள் நிச்சயதார்த்தம் வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்தனர்.

கூடவே அழைத்து வந்த அய்யரை நாள் பார்க்கச் சொல்லி இன்னும் 15 நாட்களில் ஒரு நல்ல முகூர்த்தம் இருப்பதாக அவர் கூற, கல்யாணத் தேதியும் குறித் தாகியது.

சாருமதி தான் ஒரே மேடையில் இரண்டு கல்யாணம் செய்தால் கொஞ்சம் நல்லதில்லை என்று சொல் வார்களே, ஒரு கல்யாணம் தான் நிலைக்கும் என்பார் களே என்று தயங்கினார். மற்றவர்களிடம் சொல்லாமல் கணவனிடம் மெதுவாகச் சொன்னவரது வாயை, ''அது எல்லாம் ஒன்றுமில்லை, யாராவது வேலை இல்லா தவன் ஏதோ சொன்னான் என்று இவளும் கவலைப் படுகிறாள். அய்யரே நாள் குறித்துக் கொடுத்துவிட்டார்,



அப்புறம் என்ன?'' என்று அதட்டி அடக்கிவிட்டார் சிவநாதன்.

அவர்களுக்குத் தெரியவில்லை, ஒன்றில்லை, இரண் டுமே நிலைக்கப் போவதில்லை என்று.

பிறகு வந்த நாட்களில் எல்லாருக்கும் முதுகு ஒடிய வேலை இருந்தது.

இரண்டு தடவை, சர்வேஷ் வந்து அவளை வெளியே அழைத்துச் சென்றான்.

இரண்டு முறையும் மிருது பேசுவதைக் காது கொடுத்துக் கேட்டவன் மிஞ்சி மிஞ்சி நான்கு வாக்கியங்கள்தான் பேசினான்.

கதிர், ஷர்மிளாவுடன் போனில் நன்றாகக் கடலையை வறுக்க, சர்வேஷ்க்கு அவளது போன் நம்பரை வாங்கிய பின்னும் பேச நேரமில்லை. அவனது பெற்றோரின் உடல்நிலை காரணமாக எல்லா வேலையும் அவனே பார்க்க வேண்டி இருந்ததால் அப்படி இருக்கிறான் என்று மிருதுவே காரணம் கற்பித்துக் கொண்டாள்.

நிச்சயதார்த்த நாள் அழகாக விடிய, அதன் முடிவு தான் அலங்கோலம் ஆகிப் போனது.

மாலையில் சுற்றமும் நட்பும் வாழ்த்த, முதலில் ஷர்மிளாவை அமர வைத்து நலங்கு சுற்றினர்.

மாப்பிள்ளை வீட்டுச் சார்பில் சர்வேஷ், கதிருக்கு மோதிரம் அணிவித்து, புது டிரஸ் கொடுக்க வேண்டிய நேரம் நெருங்கவே சர்வேஷைத் தேடினர்.

கண்கள் சிவப்பாக மேடைக்கு வந்தவன், ''ஷர்மி! எழுந்திரி, இந்தக் கல்யாணம் நடக்காது!'' என்று உறுமினான்.

''ஏன், என்ன ஆச்சு?'' என்று எல்லாரும் பதற, ''என்னாச்சா, பாருங்க உங்க வீட்டுப் பொண்ணு பண்ணியிருக்குற வேலையை. இதைப் பார்த்த பின்பும் நான் தாலி கட்டினாலோ, என் தங்கையைக் கொடுத்தாலோ என்னை ஊரில் வக்கிலாதவன்னு சொல்வாங்க!'' என்று விட்டு ஒரு கவரைத் தூக்கி எல்லார் முன்னாடியும் எறிந்தான்.

அதைப் பார்த்த அனைவரும் ஸ்தம்பித்து நிற்க, கதிர் புயலென மிருது தங்கி இருந்த அறைக்குள் சென்றான்.



# 11

மணமகளுக்கான அறையிலிருந்த மிருதுவை நோக்கிப் புயலென வந்தவனைப் பார்த்து ஒன்றும் புரியாமல், ''என்ன கதிர் அண்ணா, ஷர்மி ஜபத்தை நிறுத்தி விட்டு இங்க வந்துட்டே!'' என்று கேலி பேசியவளின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விழுந்தது.

மீரா, சந்த்யா அனைவரும் ஷர்மிலாவிற்கு நலங்கு வைப்பதற்காக மேடையில் இருந்தபடியால் மிருதுவின் தோழிகள் மற்றும் வயதில் சின்னவர்களான இரு அத்தை பெண்கள் மட்டுமே அந்த அறையில் இருந்தனர்.



அவன் அடித்ததைப் பார்த்ததும் அனைவரும் மிருதுவை மட்டும் அங்கே விட்டுவிட்டு அங்கிருந்து பயத்துடன் நழுவினர்.

தடுமாறி விழுந்தவள் கன்னத்தைப் பிடித்துக் கொண்டு எழுந்து, ''என்ன அண்ணா, ஏன் அடிக்கற?'' என்றாள் கண்ணீருடன்.

''கொல்லாம இருக்கேனேன்னு சந்தோஷப்படு. நீ பண்ண காரியத்துக்கு!'' என்று உறுமியவன், அடுத்து அவள் பேசுவதற்கு இடம் கொடாமல் அடுத்த அறையைக் கன்னத்தில் இறக்கினான்.

''அண்ணா ப்ளீஸ், என்னனாலும் சொல்லிட்டு அடி அண்ணா, ரொம்ப வலிக்குது!'' என்றாள் ஆறாய்ப் பெருகிய கண்ணீரைத் துடைத்தபடி.

''வலிக்குதா? அவனோட ஊர் சுத்தும் போது இனிச்சுது இல்ல. இப்ப நல்லா வலிக்கட்டும்!'' என்று தொடர்ந்து இடியாய் அடிகளை இறக்கினான்.

அவன் அடிகளின் வேகத்தில் ஒரு முறை மிருது தடுமாறி விழ, டிரெஸ்ஸிங் டேபிள் முனை அவள் கையைப் பதம் பார்த்தது.

அவளுடைய கண்ணீரும், ரத்தமும் கூட அவனை அடக்கவில்லை எனும்போது அவள் நடுநடுவே கேட்ட ''யாரோட அண்ணா,'' ''சொல்லிட்டு அடி கதிர் அண்ணா,'' ''நான் எந்த தப்பும் பண்ணலை,'', ''ப்ளீஸ் கொஞ்சம் கேளேன்!'' என்ற எதுவும் அவனைக் கொஞ்சமும் எட்டவில்லை.

இங்கே மிருதுவின் உடலை அவள் அண்ணன் புண்ணாக்கிக் கொண்டிருக்க, அங்கே அவளது வருங்காலக்

கணவன் என்று நிச்சயிக்கப்பட்டவனோ அவள் மானத்தைக் கூறு போட்டு விற்றுக் கொண்டிருந்தான்.

சர்வேஷின் தந்தை குருபாதம், ''கொஞ்சம் பொறுமையா இரு சர்வேஷ். நம்ம பொண்ணு வாழ்க்கையும் அடங்கி இருக்கு!'' என்றார்.

''இந்தக் குடும்பத்துல போய்ப் பொண்ணைக் கொடுக்குறதா? பொண்ணே இப்படி ஊர் மேயுறான்னா அவங்க பையன் எப்படி இருப்பான். அவனுக்குக் கல்யாணம் செஞ்சு கொடுக்குறதுக்கு அவளை நம்ம வீட்டுலேயே கல்யாணம் ஆகலைனாலும் வச்சுக்கலாம்!'' என்றான் கோபமாக.

''எனக்கு அப்பவே சந்தேகம் அப்பா, ஒரு நல்ல குடும்பத்துப் பொண்ணு இப்படி இருப்பாளான்னு. என்னோட பேசும் போது பாதி நேரம் இந்த விமல் புராணம்தான். அப்புறம் என்னோட வந்து இரண்டு தடவையும் அவள் வழிந்தது இருக்கே. நான் மட்டும் கொஞ்சம் உறுதியா இல்லேன்னா, நான் எங்க கூப்பிட்டாலும் வந்துருப்பா!'' என்று அவளோடு ஒரு தடவை கூடப் பேசாமல் இருந்தது மட்டுமின்றித் தன்னை ஒரு முத்தம் கூடக் கொடுக்கவிடாத ஒருத்தியைப் பற்றி வாய் கூசாமல் பழி சொன்னான்.

கல்யாண மண்டபத்தில் இருந்த பலரின் கையில் அது மாறி மாறி வந்து கண் இமைக்கும் நேரத்தில் பல பல கட்டுக் கதைகளுக்கு வித்திட்டது.

இது எல்லாம் நடந்து குருபாதத்தின் குடும்பம், சுற்றம் மற்றும் நட்பு அனைத்தும் மண்டபத்தைக் காலி செய்ய 10 நிமிடமே ஆனது.

மிகவும் கொச்சையான, மூன்றாம் தரப்பட்ட போட்டோக்கள் மிருதுளாவையும், விமலையும் கொண்டிருந்தன என்பதே சிவநாதனைப் பாதி கொன்றது.



அந்த நிலையில் அவை பொய்யாக இருக்குமோ, யாரும் வேண்டும் என்றே செய்திருப்பார்களோ என்று எண்ணவே யாராலும் முடியவில்லை. எல்லோரது கோபமும் மிருது மேலும், விமல் மேலும் தான் இருந்தது. கல்யாண மேடை வரை வந்து ஒரு பெரிய அவமானம் நடந்துவிட்டதே. இவள் முன்னரே விமலை விரும்புகிறேன், அவனைத் தான் மணந்து கொள்வேன் என்று சொல்லியிருக்கலாமே. இப்படி ஊரைக் கூட்டி அவமானப்படுத்திவிட்டாளே என்றே எண்ணினர்.

சிவநாதனும், சாருமதியும் இடிந்து போய் அமர்ந்திருக்க, சந்த்யா குழந்தைகளை அந்த இடத்திலிருந்து அகற்றி வேலைக்காரர்களிடம் கொண்டுவிடச் செல்ல, மீரா மிருதுவைத் தேடிச் சென்றாள்.

''என்ன கதிர் இது. காட்டுமிராண்டி மாதிரி! விடுங்க கதிர்!'' என்று மீரா மிருதுவை அடித்துக் கொண்டிருந்த கதிரைப் பிடித்து நிறுத்த முயன்றாள்.

கோபத்தின் உச்சத்தில் இருந்த கதிர், ''அவளை அடிச்சா உங்களுக்கு என்ன, அவ உங்க காதலுக்கு உதவி செஞ்சான்னு, நீங்களும் அவ செய்யுற தப்புக்கு எல்லாம் உடந்தையா?'' என்று விஷத்தைக் கக்கினான்.

''கதிர்ர்ர்!'' என்று கத்திவிட்டு, அவன் ஒரு நிமிடம் அதிர்ந்து நோக்கிய வேளையில், வலியில் புழுவாய்த் துடித்துக் கொண்டிருந்த மிருதுவை அந்த அறையை விட்டு வெளியே அழைத்து வந்தாள்.

''ஏன் அண்ணி, நான் என்ன தப்பு பண்ணேன், யாராவது சொல்லுங்க?'' என்று ஈன சுரத்தில் கெஞ்சியவளிடம் சந்த்யா அந்தப் போட்டோக்களைத் திணித்துவிட்டு

''ஏன்டி, நம்ம அம்மா வயித்துல பொறந்துட்டு இப்படிப் புத்தி போகுது உனக்கு!'' என்றாள் முகத்தில் வெறுப்பை அப்பட்டமாகக் காட்டியபடி.

அந்தப் போட்டோவை பார்த்தவள், அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டு, ''ஐயோ ஐயோ, இது நான் இல்லை. நான் இல்லை. ஐயோ! என்ன நம்புங்க!'' என்று வீறிட்டாள்.

சரிந்தமர்ந்து அழுதவள் தந்தையை ஏறிட்டாள். சிவநாதன் அவளைப் பார்த்த ஒரு பார்வையில், ''உன் மேல் எவ்வளவு நம்பிக்கை வச்சிருந்தேன், எல்லாத்தையும் அழிச்சுட்டியே!'' என்ற செய்தி இருந்தது.

அதற்குள் சாருமதி அவளிடம் வந்து தன் பங்கிற்கு ஒரு அறையைப் பரிசளித்துவிட்டு, ''அப்பா கேக்கும் போதாவது சொல்லி இருக்கலாம் இல்ல. ஏன்டி, ஏன்டி உன் வாழ்க்கையும் கெடுத்து சம்பந்தமே இல்லாம கதிர் வாழ்க்கையும் கெடுத்துட்ட!'' என்று உடைந்து போய் அழுதார்.

அதற்குள் ஹரியும், விபுவும் விமல் மேல் பாய்ந்திருந்தனர்.

''எத்தனை நாளாடா, இப்படிச் செய்யணும்னு திட்டம் போட்டுச் செஞ்ச? உன்னைக் குடும்பத்துல ஒருத்தனா நினைச்சதுக்கு நீ பண்ற கைமாறா இது?'' என்று ஹரி அவன் சட்டையைப் பிடித்து உலுக்க.

''எங்ககிட்ட சொல்லி இருக்கலாம் இல்ல. உங்க ரெண்டு பேருக்கும் நாங்களே மனசார நல்லபடியா கல்யாணம் செய்து வச்சிருப்போம்தானே, இப்படிப் பண்ணிட்டீங்களே!'' என்று விபு புலம்பினான்.



''இல்ல, விபு அண்ணா. இதுல ஏதோ தப்பிருக்கு. நாங்க நல்ல friends மட்டும்தான். சத்தியமா நம்புங்க விபு அண்ணா!'' என்றான் விமல் கண்ணீருடன்.

''இன்னும் நடிக்கிறான் பாருங்க. விபு அண்ணாவாம்! கண் முன்னாடி இருக்கும் போட்டோக்களும், வந்திருக்கும் வீடியோ கேசட்டும் பொய்யாடா?'' என்றான், ஹரி அவனை அடிக்கக் கை ஓங்கியவாறே.

''விடுங்க ஹரி. சரி, இப்ப மிருது கழுத்துல தாலிய கட்டி இந்த அவமானத்தைக் கொஞ்சம் குறைக்கும் காரியத்தையாவது செய்கிறாயா?'' என்றான் விபு.

''ஐயோ! அவ என்னோட உயிர்த் தோழி அண்ணா, அவளைப் போய் எப்படி அண்ணா? என்னால அது மாதிரி மிருதுவை நினைக்கக் கூட முடியல!'' என்றான் விமல் கெஞ்சுதலாக.

''உயிர்த் தோழியோட தான் இந்த மாதிரி படமெல்லாம் எடுத்துப்பீங்களோ! நல்ல நட்புடா உங்களது! சும்மா for fun பண்ணிட்டு வேற யாரையாவது கல்யாணம் செய்துப்ப இல்ல!'' என்றான் ஹரி கோபத்தில் குரல் நடுங்க.

''என்னடா நினைக்க முடியல! அது மாதிரி இருந்தே விட்டு, நினைக்கக் கூட முடியலையாம்! என்ன நடிப்புடா?'' என்றான் விபுவும் கோபமாக.

அப்போது விமலின் சித்தி, ''யாரைக் கேட்டு அவனை உங்க வீட்டுக்கு மாப்பிள்ளை ஆக்குறீங்க? அவள் இவனோட மட்டும் தான் சுத்தினாளா, வேற யாரு கூட எப்படி எப்படி எல்லாம் இருந்தாளோ, யாருக்குத் தெரியும்?'' என்றாள் நாக்கில் நரம்பில்லாமல்.

''சித்தி! வாயைக் கழுவுங்க. என்ன பேசுறீங்க? ப்ளீஸ் கொஞ்ச நேரம் பேசாம இருங்க!'' என்றான் விமல் கோப மாக.

''ஆமாப்பா, நீ அந்தக் கழுதையைக் கல்யாணம் செஞ்சு கிட்டு பெரிய குடும்பத்து மாப்பிள்ளை ஆயுடுவே. என் பொண்ணுகளை அவள் அண்ணனே இப்படி இருந்தான் என்று தெரிந்தால் ஒருத்தன் கூடக் கல்யாணம் பண்ண முன் வரமாட்டான்!'' என்றாள் அப்பொழுதும் தன்னை யும், தன் மகள்களையும் நினைத்தபடி.

தன் சித்தியைச் சமாதானம் செய்யும் நோக்கத்தில், ''நான் அவளைக் கல்யாணம் செய்யமாட்டேன் சித்தி!'' வாக் கியத்தை விமல் முடிக்கும் முன்னரே ஹரி அவனைப் புரட்டி எடுக்க ஆரம்பித்தான்.

அந்தப் போராட்டத்தின் முடிவில் விமல் ஒருவாறு மிருதுவைக் கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று சொன்ன பின்னரே ஹரி அவனை விட்டான்.

அதைக் கேட்டவுடன், ''அவளைத் தாலி கட்டிக் கூட்டி வந்தியோ உனக்கும் அந்த வீட்டுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று தலை முழுகி, ஒரு பைசா சொத்துக் கூட உனக்கு வர விடமாட்டேன்!'' என்று கத்திவிட்டு, மண் டபத்தை விட்டு வெளியேறினாள் சரோஜா.

அடுத்த நாள் குறித்த முகூர்த்தத்தில் மிருதுவுக்கும், விமலுக்கும் மட்டுமாவது கல்யாணம் செய்துவிடலாம் என்று ஒருவாறு சமாதானம் செய்து கொண்டனர்.

மிருதுவோ, ''ஐயோ வேண்டாமே, நான் தப்பு பண் ணல. விமலை எப்படிக் கல்யாணம் செய்யறது.



''நான் சொல்றதை கொஞ்சம் கேளுங்க ப்ளீஸ்.

''இதுல ஏதோ சூழ்ச்சி இருக்கு. எனக்கு ஒரு 10 days time கொடுங்க ப்ளீஸ். நான் யாரு செஞ்சதுன்னு கண்டுபிடிக்கிறேன்.

''ஐயோ, ப்ளீஸ் புரிஞ்சுக்க மாட்டீங்களா? என்னால முடியாது.

''எனக்குக் கல்யாணமே வேண்டாம். என்னை விட் டுருங்க.

''என்னை விட்டுருங்க. உங்க காலுல விழுந்து கேக்குறேன். ப்ளீஸ் விபு அண்ணா.

''அத்தான்! ப்ளீஸ், சொல்லுங்க.

''சது அக்கா! நான் தப்பு பண்ணல அக்கா. நம்பவே மாட்டியா?

''டாடி! நான் உங்க பொண்ணு டாடி, நான் தப்பு பண்ணுவேனா? நான் பண்ணல டாடி.''

அவள் அழுது புலம்பியது ஏதும் யார் காதில் விழுந் தாலும் மனதில் பதியவில்லை. அவர்களது எண்ணமோ ''ஆசைப் பட்டது எல்லாம் சரி தான். இப்படித் தப்பும் பண்ணிவிட்டு, தெரிந்தவுடன் இல்லை என்று சாதிக் கிறார்களே, நம்மிடம் முன்னாடியே சொல்லி இருந்தால் இந்த அவமானம் நமக்கு நிகழ்ந்திருக்காது. அவர்களும் இந்தக் கஷ்டம் எல்லாம் இல்லாமல் நன்றாக வாழ்ந் திருப்பார்களே!'' என்று அந்தப் போட்டோக்களை நம்பியே சுற்றி வந்தது.

எல்லாரும் அவரவர் எண்ண அலைகளில் மூழ்கி யிருக்க, அந்த இரவு முடிவில்லாமல் நீண்டது அனை வருக்கும்.

ஆனால் காலையிலோ மிருதுவின் அறையில் அவளுக்குப் பதிலாக ஒரு கடிதம் மட்டுமே அவர்களுக்கு மீதியிருந்தது.

அந்தக் கடிதம் தாங்கியிருந்த செய்தி இதுதான். ''உங்களை எல்லாம் விட்டு நான் போகிறேன், ரொம்ப தூரமாய்.

என்னால் விமலை அப்படிக் கற்பனை செஞ்சு கூடப் பார்க்க முடியல. ஒரு சதியின் காரணமாய் நடக்கும் இந்தத் திருமணத்திற்கு என்னால் சரி சொல்ல முடியல.

ஆனா நீங்க எல்லாரும் ஏன் என்னை நம்பல? நான் உங்க நம்பிக்கையைக் கெடுக்குற மாதிரி நான் என்ன செஞ்சேன்னு எனக்கு இன்னும் புரியல.

அந்தப் போட்டோ உண்மைன்னு நீங்க எப்படி நம்பலாம்?

*Vibu anna, I thought you know me more than anyone in this world... but.. bye forever. I will not come back.* என்னைத் தேட வேண்டாம்.

*Finally, daddy I love you. Take care of your health.*''



## 12



*Iet us stop the flashback for here sometime and come to the present.*



நிகில் கனேடியன் பாஸ்போர்ட் வைத்திருந்த படியால் சிவநாதனும், சாருமதியும் மட்டும் இமிக்ரேஷன் எல்லாம் முடித்து வர ஒரு மணி நேரமானது.

வெளியே வந்தவுடன், ''park n fly-ல கார் இருக்கு. இந்த பஸ்-ல போய் அங்க இறங்கிட்டு, அங்கிருந்து கார்ல வீட்டுக்குப் போய்டலாம்,'' என்று அவர்களை அழைத்துச் சென்றான்.

வரும் வழியெல்லாம் அந்த ஊரைப் பற்றி நிகில் வாய் ஓயாமல் பேசிய எதுவும் இரு பெரியவர்களின் மனதில் பதியவே இல்லை. பெண்ணைப் பார்க்கப் போகிறோம். என்ன சொல்வாளோ, இந்த நிலைமையில் அவள் இருக்கும் போது வந்திருக்கோமே, அவள் உடல்நிலைக்கு எந்தப் பாதிப்பும் வந்துவிடக் கூடாதே கடவுளே என்று மிருதுவையே சுற்றி வந்தது.

அங்கிருந்து காரில் 20 நிமிடப் பயணத் தூரத்தில் இருந்த அவர்களது வீட்டை அடைந்தபோது, விஸ்வநாதனும், வாசுகியும் அவர்ளுக்காக வெளியேயே நின்று கொண்டிருந்தனர்.

அவர்களது வீட்டை நெருங்கும் போதே, ''அந்த வீடு தான், அப்பாவும் அம்மாவும் வெளியே நிக்குறாங்க!'' என்று விட்டு, ''நான் நீங்க immigration-இல் நிற்கும் போதே போன் பண்ணிச் சொல்லிவிட்டேன். அது தான் நமக்காகக் காத்திருக்கிறார்கள்,'' என்றான் கூடவே.

அப்போது தான் நினைவு வந்தவராக, ''மிருது வீட்டுல தான் இருப்பாளா இந்த நேரத்துல, இல்ல ஹாஸ்பிடல் போய் இருப்பாளா?'' என்றார் சிவநாதன் பதற்றமும் ஏக்கமும் கலந்த குரலில்.

"இல்ல, வொர்க் போயிருப்பா. அந்த டைம் பாத்து தான் நான் flight புக் பண்ணினேன்!" என்றான் நிகில் சாதாரணமாக.

ஆனால் அந்த வார்த்தைகள் சிவநாதனை வெகுவாகப் பயமுறுத்திவிட்டன. "மாப்பிள்ளை, ரொம்ப கோவமா இருக்காளா? அவ உடம்புக்கு ஒன்னும் இதுனால வந்துடாதே!" என்றார் மேலும் பதற்றமாக.

அவர் பேச ஆரம்பிக்கும் போதே வேகத்தைக் குறைத்திருந்தான் நிகில். "ச்சே! அதெல்லாம் ஒன்னும் ஆகாது மாமா. ரொம்ப மனச போட்டு குழப்பிக்காதீங்க. பொண்ணைப் பார்க்கப்போறோம்ன்னு சந்தோஷமா இருங்க. எல்லாம் நல்லபடியா நடக்கும். நான் இருக்க பயமேன்?" என்று சமாதானம் செய்யவும், அவர்கள் வீட்டை நெருங்கிக் காரை நிறுத்தவும் சரியாக இருந்தது.

இறங்கியவுடன் இரண்டு நாதன்களும் ஒருவரின் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு நலம் விசாரித்துக் கொண்டனர்.

வாசுகியைப் பார்த்தவுடன் சாருமதிக்கு முதல் பார்வையிலேயே பிடித்துவிட, இருவரும் இரு குடும்பத்தின் நலன்களைப் பரிமாறிக் கொண்டனர்.

சிவநாதன் தழுதழுத்த குரலில், "எங்க பொண்ணை எங்களைவிட நன்றாகப் பார்த்துக் கொண்டதற்கு, உங்களுக்கு நாங்கள் ரொம்ப கடமைப் பட்டிருக்கிறோம்!" என்றார் இருவரையும் பார்த்து.

அவர்கள் பதில் சொல்வதற்கு முன் நிகில் முந்திக் கொண்டு, "ரிது, அவுங்களுக்கு மருமகள் இல்லை. பேத்தி, செம செல்லம், அவ வைத்ததுதான் சட்டம், மூன்று



பேரும் சேர்ந்து என்னைத் தான் படுத்துவாங்க!" என்றான் போலியான வருத்தத்துடன்.

வாசுகி, "ச்சு போடா, எங்களுக்குப் பெண் குழந்தை இல்லாத குறையைத் தீர்ப்பவளே அவள் தான். அதற்கெல்லாம் நீங்க நன்றி சொல்ல வேண்டாம்!" என்றார்.

"நீங்க குளிச்சு, சாப்பிட்டுட்டு கொஞ்ச நேரம் படுங்க. நீங்க எழுந்துகறதுக்கும் ரிது வேலை முடிஞ்சு வாதுக்கும் கரெக்டா இருக்கும்!" என்றார் விஸ்வநாதன்.

அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த அறையில் சென்று குளித்துவிட்டு வந்தனர் சிவநாதனும், சாருமதியும்.

ஹாலில் மிருது நிகிலின் கழுத்து வளைவில் தலை வைத்து, மார்போடு ஒட்டி நின்று எடுத்துக் கொண்ட படம் ஒன்று இருந்தது.. சிவநாதன் அதைப் பார்த்துக் கொண்டே கொஞ்ச நேரம் நிற்க, "என்ன மாமா, நான் போடோல பார்க்க நல்லா இருக்கேனா, இல்லை நேர்ல தான் ஸ்மார்ட்டா?" என்றான் நிகில்.

"உன்னை ஒன்னும் பார்க்கல அவங்க. அவங்க பொண்ணைப் பார்க்குறாங்க. over confidence உடம்புக்கு ஆகாது கண்ணா!" என்றார் விஸ்வநாதன் கேலியாக.

"எனக்கு எதிரி வெளியிலிருந்து வர வேண்டியதில்ல, உள்ளவே இருக்காரு ஒருத்தர். நீங்க தான் என்னைப் பத்தி பெருமைப்பட்டுக்கல என்றாலும் நானே செய்யறதையும் ஏன் mr. appa கெடுக்குறீங்க?" என்றான் நிகில் வருத்தமாக.

அவர்கள் உரையாடலில் சிரித்தபடி மூவரும் உணவு மேடைக்கு வந்தனர். சாருமதி இந்தியாவிலிருந்து

அவர்களுக்காக வாங்கி வந்த பரிசுகளையும், வீட்டில் அரைத்துக் கொண்டு வந்திருந்த பொடிகளையும் கொடுத்தார்.

''இந்த இட்லிப் பொடி கொண்டு வந்திருக்கீங்களா, எனக்கு நல்லாவே வராது. நீங்க இங்க வரும் போது செய்யச் சொல்லிக் கத்துக்கணும்னு நினைச்சேன். ஆனா லும் பரவாயில்லை. எனக்காக ஒரு தடவை இங்க சொல் லித் தறீங்களா?'' என்றார் வாசுகி சிறு குழந்தையின் ஆர் வத்துடன்.

''கண்டிப்பா சொல்லித் தரேன்!'' என்று சாருமதி உறுதி கொடுத்துக் கொண்டிருக்கும் போதே.

''ச்சு ச்சு'' என்று இருவர் பரிதாபப்படும் சத்தம் கேட்டது.

சாருமதி புரியாமல் பார்க்க, வாசுகியோ, ''என்னைக் கேலி பண்ணலைன்னா, உங்க ரெண்டு பேருக்கும் தூக்கமே வராதே!'' என்றார் சிரிப்புடன்.

''அச்சோ, பாவம் அத்தை நீங்க! உங்களைப் பார்த்தா எனக்கு ரொம்ப ரொம்ப பரிதாபமா இருக்கு!'' என்றான் நிகில்.

''ஏன் மாப்பிள்ளை?'' என்றார் சாருமதி இன்னும் குழப் பத்துடன்.

''நான் ஒரு example சொல்றேன் சம்பந்தியம்மா. நீங்களே அதுலயிருந்து நாங்க ஏன் பரிதாபப்படுறோம்னு புரிஞ்சுப்பீங்க,'' என்றுவிட்டு மனைவியின் முறைப்பைப் பரிசாகப் பெற்றுக் கொண்ட போதும் விஸ்வநாதன் தொடர்ந்தார்.

''சுகி ஒரு தடவை ஒரு பஞ்சாபி பாமிலி எங்க வீட்டுக்கு வந்திருக்கும்போது அவங்ககிட்ட அது என்ன



சுகி, பேரு மறந்து போச்சு எனக்கு. ஆலு என்னமோ வருமே.''

''ஆலு மேத்தி!'' என்றார் வாசுகி சிரிப்புடன். அன்று இருவரும் அடித்த கிண்டலும் ரிது தனக்கு சப்போர்ட் செய்ததும், நிக்கியை அதற்காகத் துரத்தித் துரத்தி அடித்ததும் பசுமையாக நினைவில் வந்தன.

''ஹான், ஆலு மேத்தி, ஆலு மேத்தி! அவங்க ஒன்னு ஒன்னா சொல்லச் சொல்ல ஒழுங்கா கேக்குற மாதிரி கேட்டுட்டு தான் இருந்தா. கடைசியில கேட்டாளே ஒரு கேள்வி, விடிய விடியக் கதை கேட்டு சீதைக்கு ராமன் சித்தப்பன் என்ற மாதிரி, ஆலு மேத்தின்னு சொன்னீங் களே, மேத்தியை எப்போ போடணும்னு சொல்ல லையே என்று.''

''அவங்க சொல்லாம விட்ருப்பாங்க அண்ணா!'' என் றார் சாருமதி வாசுகிக்குப் பரிந்து கொண்டு.

''அவங்க ஒரு 10 நிமிஷம் அந்த மேத்தி கீரையோட புராணத்தைப் படிச்சுட்டு, இந்த டிஷ் செய்யும்போது அதோட கசப்புத் தன்மை குறைஞ்சுடும், அதுக்கு என்ன வெல்லாம் செய்யணும்னு சொன்னாங்க,'' என்றார்.

நிகில் அவர் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து, ''அதுல இருந்து அவங்க, அம்மா என்ன ரெசிபி கேட்டாலும் காத தூரம் ஓடிடுவாங்க, நீங்களும் அந்த லிஸ்ட்ல சேருற நாள் வெகு தூரத்திலில்லை!'' என்று அறிவித்தான்.

''இவங்க ரெண்டு பேருக்கும் எப்பவும் கிண்டல் தான். என்ன சமைச்சுப் போட்டாலும் அது காரம், இது உப்பு ஜாஸ்தி அப்படின்னு குறை தான் சொல்லத் தெரியும். அதெல்லாம் ரிது தான் சமத்து. நான் நெட்ல

பார்த்துச் சமைக்கிறதைப் பாராட்டி ரசிச்சு ருசிச்சு சாப் பிடுவா!'' என்றார் பெருமையாக.

''ரொம்ப பெருமைப்பட்டுக்காதீங்க! என்ன, அவ ளுக்குத் தானா சமைக்கவும் தெரியாது. வெளியேயும் ரொம்ப சாப்பிடப் பிடிக்காது. அதனாலே வேற வழி யில்லாம சாப்பிட்டுட்டு இருந்தா. இப்ப அவங்க அம்மா வந்துட்டாங்க. ஞாபகம் இருக்கட்டும். என்ன சுகிமா சமைக்குறீங்க. எங்கம்மா கிட்ட இருந்து கத்துக்கோங்கன்னு சொல்லப் போறா பாருங்க,'' என்றான் நிகில்.

''அப்படி நடந்தா சந்தோஷபடப் போற முதல் ஆள் நான் தான்டா. ஆனா அவ வந்து என்ன சொல்வாளோன்னு தான் ரொம்ப பயமாருக்கு!'' என்று சுற்றி இருப்பவர்களை மறந்து சொல்லிவிட்டு நாக்கைக் கடித்துக் கொண்டார் வாசுகி.

சிவநாதனின் முகம் மேலும் வாடிவிட, விஸ்வநாதன், ''கவலைப்படாதீங்க. எல்லாம் சரியாகிவிடும். முதல்ல கொஞ்சம் கோபமா பேசினாலும் ரிது புரிஞ்சுப்பா. ரிது ரொம்ப அடமேண்ட் இல்லை. பார்க்கலாம்,'' என்று தேற்றி னார்.

அப்புறம் பொதுவான விஷயங்களாகப் பேசி, கவன மாக மிருதுவைப் பற்றிய பேச்சைத் தவிர்த்து உணவு உண்டு முடித்தனர்.

சிவநாதனுக்கும், சாருமதிக்கும் தூங்குவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டு ஹாலில் கணவன் அருகில் வந்தமர்ந்தார் வாசுகி.

''எனக்குப் பயமாவே இருக்குப்பா. இந்த டைம்ல ரிது டென்ஷன் ஆனா ரொம்ப கஷ்டம். நாம முன்னாடியே



போய்ப் பார்த்து இவங்களைக் கூட்டிட்டு வந்திருக்கனும். இத்தனை நாள் தள்ளிட்டோமே!'' என்று புலம்பலைத் தொடர்ந்தார்.

''என்னமோ அன்னைக்கு, எல்லாம் சரியாகிடும் அப்படி இப்படின்னு டயலாக் பேசின. என்ன டயலாக் தெரியுமா நிக்கி உங்கம்மா, இப்ப பாரு செம பல்டி!'' என்றார் விஸ்வநாதன்.

''அம்மா, அதுதான் ஓவரா தமிழ் படமா பார்க்காதீங் கன்னு சொல்றது. முதல்ல இந்த தமிழ் ஸ்டோர் போறதை நிறுத்தனும்பா, டைம் நெருங்க நெருங்கப் பயம் வருதா, ஓவர் டயலாக் உடம்புக்கு ஆகாது வாசுகி ஆகாது!'' என்றான் நிகில் ஏற்ற இறக்கங்களுடன்.

''எனக்கு உடம்புக்கு ஆகாதா, மகனே! நீ தான் போய் அவங்களைக் கூட்டிட்டு வந்திருக்க, உன்னைத் தான் செம மொத்து மொத்தப் போறா. தெரிஞ்சுக்கோ, என்ன,'' என்றார் வாசுகி சிரிப்புடன்.

''ஐயோ! ஆமா இல்ல?'' என்று முதலில் பயந்துவிட்டு, பிறகு, ''எதையும் தாங்கும் இதயம் நிக்கி உனக்கு. U can manage anything, மிருதுவைச் சமாளிக்க உனக்குத் தெரியாத வழியா, ஏகப்பட்டது இருக்கே! அதுல ஒரு ரெண்டு மூன்றை எடுத்துவிட்டா போதும்!'' என்று தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டான்.

''நிகில், அவளை இன்னைக்கு மார்னிங் நான்தான் ட்ராப் பண்ணேன், ஈவினிங் நீ போய் பிக்கப் செய் துடுறியா?'' என்றார் விஸ்வநாதன்.

''ஓ, சரிப்பா... ஏன், உடம்புக்கு ஏதும் முடியலையா, ஏன் நீங்க ட்ராப் பண்ணீங்க?'' என்றான் சிறிது கவலை யுடன்.

"காலையில தூக்கமா வருதுப்பா, இன்னைக்கு ஹாஸ்பிடல் போகலைனு ஒரு குண்டைப் போட்டா, அப்புறம் நான் தான் 1 hour permission போடு, இன்னைக்கு நான் ட்ராப் பண்றேன்டா, ஈவினிங் நிக்கி வந்து உன்னை வீட்டுக்குக் கூட்டிட்டு வருவான்னு சொல்லி அனுப்பி வச்சேன்," என்றார் விஸ்வநாதன்.

மிருதுவின் ஹாஸ்பிடல் நெருங்கும் போதே, அவளை போனில் அழைத்தான்.

அவன் எண்ணைப் பார்த்ததும், முதல் ரிங்கிலேயே எடுத்தவள், "நிக்கிகிகி!" என்றாள். குரலில் ஏக்கம் அப்பட்டமாகத் தெரிந்தது.

"பேபி எப்படி கண்ணா இருக்க?" என்றான் நிக்கியும் 15 நாட்களாகப் பார்க்காத ஏக்கம் குரலில் தெரிய.

"ஹ்ம்ம், நீங்க எப்போ வந்தீங்க? ஏன் வந்தவுடனே எனக்கு போன் பண்ணல, FLIGHT லேட்டா?" என்று கேள்விகளை அடுக்கினாள்.

"அதான் இப்போ உன்னைப் பார்க்க நேரவே வந்துட்டேனே, அப்புறம் என்ன, சீக்கிரம் கீழ வா, I will be there at your work place in few mins!" என்றான் சமாதானமாக.

"You are here?" என்ற கேள்வியில் சந்தோசம் வெளிப்படையாகத் தெரிந்தது...

"Ya ya! Come down, fast, fast!" என்றுவிட்டு போனை வைத்தான்.

ஹாஸ்பிடல் உள்ளே உடுத்திக் கொள்ளும் உடையைக் களைந்து விட்டு வேறு உடை மாற்றிக் கொண்டு கீழே இறங்கி வந்தாள் மிருதுளா.



லாங் ஸ்கர்ட்டும், pregnancy டைம்ல அணியும் stretchable டாப்பும் அணிந்து ஒரு தேர் போல் அசைந்தாடி வந்தவளை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் நிகில்.

காரில் ஏறியமர்ந்தவள், "என்ன நிக்கி, அப்படிப் பார்க்குறீங்க!" என்றாள் சீட் பெல்டை மாட்டியவாறே.

"You look so beautiful and precious to me daa!" என்றான் நிக்கி.

எப்போதும் போல் வம்பு வளர்க்காமல் "ஹ்ம்ம்" என்றாள் அவனது கையைப் பிடித்துக் கொண்டு.

அவளை ஒரு தரம் அணைத்து விடுவித்தவன் காரை எடுத்தான்.

"எனக்குப் பசிக்குது நிக்கி, DQ-ல எனக்கு Triple Berry smooth வாங்கித்தாங்க!" என்றாள் ரிது.

அவள் ஒன்றைக் கேட்டு இல்லை என்று நிக்கியால் சொல்ல முடியுமா, அதுவும் 15 நாள் பிரிந்திருந்து விட்டுச் சந்தித்திருக்கும் போது.

வீட்டில் காத்திருப்பவர்களெல்லாம் இரண்டாம் பட்சம் ஆகிவிட DAIRY QUEEN-க்குச் சென்று அவள் கேட்டதை வாங்கிக் கொடுத்து, அவள் பருகி முடித்ததும் அங்கிருந்து கிளம்பினார்கள்.

15 நாட்கள் அவள் என்ன செய்தாள் என்று காலையில் எழுந்தது முதல், படுக்கப் போகும் வரை நடந்தது அனைத்தையும் அதைக் குடிக்கும் போது சொல்லி முடித்தவள், "நீங்க என்ன பண்ணீங்க?" என்று அவனைத் துளைக்க ஆரம்பித்தாள்.

ஏதேதோ சொல்லிச் சமாளித்தவனை ரொம்பவும் மெனக்கெட வைக்காமல் மிருது தூங்கி இருந்தாள்.

சந்தோஷப் பெருமூச்சை வெளியேற்றியபடி வீடு வந்து சேர்ந்தான் நிகில்.

அவள் இன்னும் முழிக்காமல் இருப்பதைப் பார்த்து விட்டு, காரை நிறுத்திவிட்டு, சுற்றி வந்து அவளை இரு கைகளிலும் ஏந்தியபடி உள்ளே வந்தான்.

இது எப்போதும் நடப்பது என்பதுபோல வாசுகி கீழ இருக்கும் ஒரு அறையில் இருந்த படுக்கையைச் சரி செய்து நிகில் அவளை அதில் கிடத்த வகை செய்தார்.

சிவநாதனும், சாருமதியும் பெண்ணைப் பார்த்த சந்தோஷத்தில் வாயில் வார்த்தை வராமல் இருந்தனர்.

சாருமதிக்கு எப்போதும் அவள் இப்படித் தூங்கும் போது தான் சொல்லும் வார்த்தைகளும், அவள் பதிலுக்குச் சொல்லும் வம்புப் பேச்சும் ஞாபகத்திற்கு வந்து கண்கள் பனித்தன.

''கொஞ்ச நேரத்தில முழிச்சுடுவா!'' என்றுவிட்டு நிகில் அந்த அறைக்கதவை ஓசைப் படாமல் சாத்திவிட்டு ஹாலிற்கு வந்தான்.

யுகங்களாகத் தோன்றிய ஒரு மணி நேரத்திற்குப் பிறகு வெளியே வந்தவள், முதலில் பார்த்தது சிவநாதனைத் தான். அவள் வந்தது தெரியாமல் நிகிலோடு பேசிக் கொண்டிருந்தார் அவர். கனவோ என்றெண்ணிக் கண்ணைக் கசக்கிக் கொண்டு திரும்பவும் பார்த்தவள், நிஜமாகவே தன் தந்தை தான் என்று உறுதியாகத் தெரிந்த பின்பு, ''டாடி'' என்று கதறிக் கொண்டு அவரை நோக்கித் தன்னால் முடிந்த அளவு வேகமாக நடந்தாள்.





## 13



மிருதுவின் குரலில் திரும்பிய சிவநாதன், கண்களிலிருந்து நீர் அருவியாய் வழிய மகளை அணைத்துக் கொண்டு வார்த்தைகள் தடைபெற, மகள் முகத்தைத் தடவி, தலையை வருடி, உச்சி முகர்ந்து தன் பாசத்தை எல்லாம் வெளிப்படுத்தினார்.

மகளும், ''டாடி, டாடி'' என்ற வார்த்தைகள் தவிர ஒன்றும் சொல்லாமல் அவர் தோளில் சாய்ந்து கொண்டாள்.

இந்தப் பாச மழையின் பார்வையாளர்களாக இருந்த நிகிலும், விஸ்வநாதனும் முகம் கனிய அதில் நனைந்தனர். விஸ்வநாதன் நிகிலிடம், ''நான் சொன்னேன் இல்ல, ரிது ரொம்ப அடமேண்ட் கிடையாது, மன்னிச்சுடுவானு!'' என்றார் கவலை அகன்ற குரலில்.

''இது first reaction அப்பா, நானும் இதை எதிர்பார்த்தேன். ஆனா எனக்குத் தெரிஞ்ச வரைக்கும் ரிது அவ்வளவு சீக்கிரம் சமாதானம் ஆகமாட்டாள்!'' என்றான் அடிக் குரலில்.

ஐயோ அப்படி ஏதும் நடந்து விடுமோ என்ற பயத்தில், ''நீயே சொல்லிக்கொடு, சும்மா இருடா, அதெல்லாம் அவள் மறந்து விடுவாள்!'' என்றார் விஸ்வநாதன் பயத்தைக் கோபமாக மாற்றி.

''ஹ்ம்ம் பார்க்கலாம்...'' என்றான் நிகில் நம்பிக்கை சிறிதுமில்லாமல்.

கிச்சனில் வாசுகியுடன் இரவு உணவைத் தயார் செய்து கொண்டிருந்த சாருமதி அரவம் கேட்டு ஹாலுக்கு வந்தார். மகளை, ''மிருதுமா, எப்படி இருக்கே?'' என்று கேட்டவாறே மறுபுறத்தில் இருந்து அணைத்தார்.

''அம்மமமா!'' என்று இன்னும் உடைந்தாள் மிருதுளா.

அவள் கண்களைத் துடைத்தவர், ''அழாதடா ராஜாத்தி, உடம்பு அலண்டுவிடும்!'' என்று தேற்றினார். ஆனால் அவர் கண்களோ நேர்மாறாகக் கண்ணீரை உதிர்த்துக் கொண்டே இருந்தன.

கொஞ்ச நேரத்தில் சமாளித்த சிவநாதன், ''எங்களை மன்னிச்சுடுடா கண்ணா. தப்பு ரொம்ப தப்பு பண்ணிட்டோம்!'' என்றார் மகளைத் தன் தோளில் சேர்த்து அணைத்தபடி.

நிகில், ''அச்சச்சோ போச்சு, மாமா ஏன் இந்த வார்த்தை சொன்னாங்களோ, டக்குனு முருங்கை மரம் ஏறிடுவாளே!'' என்றான் கவலையாக.

அவன் கவலை சரியே என்பது போல மிருதுவும் முகம் மாற, தந்தையிடம் இருந்து விலக முயற்சி செய்து கொண்டே, ''ஆமா நீங்க எல்லாரும் ஏன் என்னை நம்பல... நான் என்ன தப்பு செஞ்சேன் நீங்க நம்பாமப் போக, அதை என்னால மறக்கவும் முடியாது, மன்னிக்கவும் முடியாது!'' என்றாள் கண்ணீருக்கு இடையே கோபமாக.

''என்ன கண்ணா, அதுக்காக நாங்க வருத்தப்படாத நாளே இல்ல தெரியுமா?'' என்றார் சாருமதி தவிப்புடன்.



''ஏன் முதல்ல சந்தேகப்படணும், அப்புறம் ஏன் வருத்தப்படணும்? உங்களுக்கு உங்க பையன் கல்யாணம் நின்னதுதான் பெருசா இருந்தது. என் மேல நம்பிக்கை இல்ல. நான் சொன்னதை யாரும் காது கொடுத்துக் கூடக் கேக்கலேயே!'' என்று தன் முழுப் பலத்தையும் கூட்டி அவர்களிடம் இருந்து விடுபட்டவள் நிகிலை முறைத்தாள். ''உங்க வேலையா? இதுக்குத் தான் அத்தனை பொய் சொல்லிப் போனீங்களா, நீங்களும் என்னை ஏமாத்துறீங்க இல்ல!'' என்று அவனிடம் பொரிந்தவாறே மாடியேறிச் சென்றாள்.

''கண்ணமா, இல்லடா.''

''கொஞ்சம் நில்லேன் கண்ணா, ப்ளீஸ்.''

''தப்புதான், ரொம்ப பெரிய தப்புதான், என்னால மன்னிப்புத் தான்டா கேக்க முடியும் இப்ப, மன்னிக்கவே மாட்டியா?''

''மிருதுமா, இத்தனை நாள் உன்னைப் பார்க்காம இருந்ததே பெரிய தண்டனையா இருந்துச்சுடா.''

''ப்ளீஸ் அப்பாவக் கொஞ்சம் பாரேன்,'' என்று பலவிதமாய்ச் சிவநாதனும் சாருமதியும் கெஞ்சியதைக் காதில் வாங்கியும் தன் கோபத்திலேயே நின்று கொண்டு படியேறினாள்.

அவளைத் தொடர்ந்த நிகில், ''நீ பண்றது கொஞ்சம் கூட நல்லாவே இல்ல, சொல்லிட்டேன். வயசுல பெரியவங்க இந்தக் கெஞ்சு கெஞ்சுறாங்க, அப்படி என்ன கோபம், நல்லதே இல்ல ரிது இது!'' என்றான் அடிக்குரலில்.

''என்ன நல்லதே இல்ல, நான் என்ன கெஞ்சு கெஞ்சினேன். தெரியுமா, உங்களுக்கு, தெரியுமான்னு கேக்கு

றேன், சும்மா என்னைச் சொல்லறதுக்கு வந்துட்டீங்க!'' என்று கத்தியவாறே அறைக்குள் நுழைந்து கதவை மூடப் போனாள்.

அவள் மூடுவதற்குள் தன் பலத்தைக் கூட்டி அந்த முயற்சியை தடுத்துவிட்டு அவளுடன் உள்ளே நுழைந்து கதவைச் சாத்தினான் நிகில்.

அவளிடம் திரும்பியவன், ''ஏன் பேபி, உன்னையும் ஏமாத்தி அவங்களையும் நோகடிச்சு, ஏன் இப்படி பண்றே. இதனால யாருக்கு என்ன லாபம் சொல்லு, கொஞ்சம் யோசியேன் பேபி!'' என்றான் இதமாகவே.

''இப்போ எதுக்கு வந்தீங்க உள்ள. வெளிய போங்க. உங்களோட எனக்குப் பேசப் பிடிக்கல. கல்யாணம் ஆகும் போதே நான் சொன்னேன் இல்ல. அவங்க யாரும் நமக்கு வேண்டாம்.. நான் ஒரு அனாதைன்னு நினைச்சு தான் கல்யாணம் செஞ்சுக்கணும். போய் அவங்களைப் பார்க்கக் கூடாதுன்னு சொன்னேன்தானே! இப்போ எதுக்கு நீங்க அங்க போனீங்க, பணக்கார மாமனார் கோடி கோடியா வரதச்சிணை கொடுப்பார். அள்ளிக்கிட்டு வரலாம்னா?'' என்று படபடவென்று பட்டாசாய் வெடித்தாள்.

''பல்லைத் தட்டிடுவேன், ஆமா. ரெண்டு வருஷம் கழிச்சு வரதட்சிணை வாங்கப் போனேன். லூசு மாதிரி பேசாத ரிது!'' என்றான் நிகிலும் கோபமாக.

''ஆமா, லூசு தான், எல்லார் மேலயும் நம்பிக்கை வைக்கிற நான் லூசு. நான் வைக்கிற நம்பிக்கை எல்லாத்தையும் உடைக்கிற நீங்க எல்லாம் ரொம்ப TIGHT!'' என்றாள் வேகமாக.



''நடந்து முடிஞ்சத பத்தியே நினைச்சுக்கிட்டு இருந்து, இப்ப நடக்க வேண்டிய சந்தோஷமான நிகழ்வுகளையும் ஏன் ரிது கெடுக்குற!'' என்றான் நிகில் அழுத்தமான குரலில்.

''யாரு, நான் கெடுக்குறேனா? நான் கெடுக்குறேனா?'' என்று கோபத்தில் குரல் நடுங்கக் கேட்டாள் மிருதுளா.

''பின்னே என்ன ரிது, அவங்க எவ்வளவோ வருத்தப் படுறாங்க தெரியுமா, உன்னைத் தேடித் தேடி எப்படி நொந்து போயிருக்காங்க தெரியுமா. நீ என்னடான்னா இப்படிப் பண்றே!'' என்றான் ஆற்றாமையோடு.

''அவங்க வருத்தப்படுறது மட்டும் தான் உங்களுக்குத் தெரியுதா? நான் பட்ட அவமானம், கஷ்டமெல்லாம் தெரியல இல்ல!'' என்றாள் உயர்ந்த குரலில்.

அந்தக் குரல் இன்னும் கோபத்தைக் கிளப்ப, ''ஏன் இந்தக் கத்து கத்துறே, மைக் Volume கொஞ்சம் Reduce பண்ணு!'' என்றான் நிகில்.

''நான் அப்படித் தான் கத்துவேன். நீங்க வெளியே போங்க!'' என்றாள் இன்னும் அடங்காத கோபத்துடன்.

''நான் ஏன் வெளியே போகணும்? நான் ஒண்ணு ஒண்ணா உண்மையா சொல்றேன் இல்ல. அதைக் கேக்கும் போது பண்ற தப்பு உறைக்குதில்ல, அதனாலயா?'' என்றான் நக்கலாக.

''நான் என்ன தப்பு பண்றேன். அது நீங்க பேசித்தான் எனக்குத் தப்புன்னே உறைக்கும் அளவுக்கு!'' என்றாள் மிருதுளாவும் மிடுக்காக.

''இன்னும் புரியலையா, வயசில பெரியவங்க மன்னிச்சிடுன்னு கெஞ்சுறாங்க. வேற என்ன வேணும் உனக்கு,

அவங்க இதுக்கு மேலயும் என்ன செய்யணும்னு நினைக்கிற நீ?'' என்றான் அவள் கணவன் கோபமாக.

"இப்ப வந்து மன்னிப்புக் கேட்டா ஆச்சா? என்னோட கோபம் எல்லாம் என்னை அன்னைக்கு யாரும் நம்பல என்பது தான். அந்தக் கோபத்தையெல்லாம் மறக்க நான் ஒன்னும் முற்றும் துறந்த துறவி இல்ல!'' என்றாள் மிருதுளா காரமாக.

இன்னும் கோபத்திலிருந்து இறங்காமல் இருந்த நிகில், "மன்னிக்கிறதுக்குத் துறவியா இருக்கணும்னு அவசியம் இல்ல தெரிஞ்சுகோ. நல்ல மனசு இருந்தா போதும்!'' என்றான்.

மிருதுளவோ கடைசி வாக்கியத்தைப் பிடித்துக் கொண்டு, "என்னைப் பார்த்தா இப்படிச் சொல்றீங்க, எனக்கு நல்ல மனசு இல்லையா? நான் யாருக்கும் மனசார ஒரு நிமிஷம் கூட கெடுதல் நினைச்சது இல்ல தெரியுமா? என்னைப் போய்...'' என்று குமுறினாள்.

"Rithu, dont take the exact meaning of each and every word I say!'' என்றான் நிகில் பல்லைக் கடித்தவாறே.

"அப்புறம் என்ன பெரிய meaning அந்த லைன்க்கு?'' என்றாள் மிருதுளா நக்கலாக.

"We are not talking about meanings of words here, rithu. அவங்களையும் கொஞ்சம் புரிஞ்சுக்கோ என்று தான் சொல்றேன், உன்னைக் குத்தம் சொல்லிவிட்டு அவங்க மட்டும் சந்தோஷமா இருந்திருந்தா நீ இப்ப பண்றது கரெக்ட். ரெண்டு பேரும் வருத்தப்படுற ஒரு விஷயத்தைக் கொஞ்சம் விட்டுக் கொடுத்து மறந்திருன்னு



தான் சொல்றேன், ப்ளீஸ் understand பண்ணிக்கோ பேபி!'' என்றான் இதமாகவே.

"என்னால முடியாது!'' என்றாள் அவளும் பிடிவாதமாக.

அவளைக் கத்தாதே கத்தாதே என்று சொல்லிக் கொண்டிருந்த நிகிலோ இந்தப் பிடிவாதத்தில் கோபத்தின் உச்சிக்கே சென்று என்ன பேசுகிறோம் என்று தன்னிலை அறியாமல், "ரொம்ப ஈகோ ரிது உனக்கு. ரொம்ப அடமேண்ட் இடியட் ஆகிட்ட நீ. இவ்வளவு cold hearted person ஐ லவ் பண்ணிக் கல்யாணம் பண்ணிகிட்டேனேன்னு எனக்கு வருத்தமா இருக்கு இப்போ!'' என்று கத்தினான்.

இந்த வார்த்தைகள் ஏற்கெனவே நொந்திருந்த மிருதுளாவை முழுதுமாக மனமுடையச் செய்தன. அத்தனை நேரம் கத்தி அவனைக் கோபமுறச் செய்தவள் இப்போது ஒன்றும் பேசாமல் அவனை வெறித்து நோக்கினாள்.



# 14

அவள் அதற்குப் பதிலாக ஏதும் சொல்லுவாள் என்று எதிர்பார்த்துக் கண் மூடிக் காத்திருந்தான் நிகிலன்.

ஆனால் இரண்டு மூன்று விநாடிகளுக்கு மேல் தொடர்ந்த மௌனமும், தான் உதிர்த்த வார்த்தைகளின் அர்த்தமும் சேர்ந்து மனதை உறுத்த விழி திறந்து அவன்

பார்க்கும்போது மிருதுளா அவன் முன்னே நின்று கொண்டிருக்கவில்லை.

தான் செய்த தவறு உறைக்க, அவள் எப்போதும் கோபம் கொண்டால் போய் உட்காரும் பால்கனி நோக்கி அவனின் பார்வை தன்னிச்சையாய்ச் சென்றது.

அவனது கணிப்பு சரியே என்பது போல அவனது அருமை மனைவியும் அங்கே தான் இருந்தாள். ஆனால் முந்தைய செல்லச் சண்டைகள் போலல்லாமல் இந்த முறை பால்கனி கதவு வெளிப்புறமாகச் சாத்தியிருந்தது.

தான் பேசிய வார்த்தைகள் அவளிடம் ஏற்படுத்திய பாதிப்பை வலியுடன் உணர்ந்தவன், பால்கனியின் கண்ணாடிக் கதவின் ஸ்க்ரீனை விலக்கிவிட்டு, கதவைத் தட்டி அழைத்தவாறே, ''பேபி! சாரி கண்ணா, நான் அப்படிப் பேசினது ரொம்ப தப்பு, ப்ளீஸ் உள்ள வாடா!'' என்றான் கெஞ்சலாக.

அவன் பேசிய கோபச் சொற்களை உள்ளிருந்து கேட்டவள், அவனது கெஞ்சல்களைக் காது கொடுத்துக் கேட்க எண்ணியிருந்தாலும் சாத்தியிருந்த கதவு தன் வேலையை ஒழுங்கே செய்ததால் கேட்க முடியவில்லை. அதுவும் அல்லாமல் அவள் பலதரப்பட்ட எண்ண அலைகளில் சிக்கித் தவித்ததாலும் அவன் அழைத்தது மனதில் பதியவில்லை.

''நான் என்ன பிழை செய்தேன், எல்லாரும் கடைசியில் என்னையே எல்லாவற்றுக்கும் காரண கர்த்தாவாக்கிக் குற்றம் சுமத்துவதற்கு? முன்னே குடும்பமே என்னைப் பழி சொன்னது, இப்போது என்னை உயிருக்கு உயிராகக் காதலிக்கும் நிக்கி கூட என்னைக் குற்றம் செய்தேன் என்று திட்டும்படி ஏன் இப்படியெல்லாம் நடக்கிறது?''



''அவர்கள் செய்தது தப்புதானே, உலகமே வந்து என்னைக் குற்றம் சொன்னாலும் அப்பாவும் அம்மாவும் என்னை நம்பியிருக்க வேண்டாமா????''

''கதிர் அண்ணா என்னை அடித்தபோது கூட யாரும் அவனைத் தடுக்கவில்லையே! இதுவே அவன் இந்தத் தப்பை செய்திருந்தால் இப்படித் தான் அடிப்பார்களா????''

''அவர்களை விட்டுவந்து ஒரு வருடம் நான் பட்ட துன்பம் என்ன, ஒரு நாள் கூட நான் நிம்மதியாகத் தொடர்ந்து தூங்கியிருக்கிறேனா????''

''எத்தனை நாள் அழுதழுது முகம் வீங்கி, சாப்பிடாமல் படுத்திருக்கிறேன்! அவர்கள் மட்டும் தான் வேதனைப் பட்டார்களா? நான் படவில்லையா? அவர்களுக்குக் குற்றம் செய்த குறுகுறுப்பு. அழுதார்கள். வேதனைப் பட்டார்கள். நான் ஒரு சின்னத் தவறு கூடச் செய்யாமல் எத்தனை தூரம் நொந்து போய் இருக்கிறேன். நிக்கி! நீங்களுமா! ஏன் நிக்கி????''

ஏன் ஏன் ஏன் - திரும்பத் திரும்ப இதே கேள்வியே மனதிலோட மிருதுளா வானத்தை வெறித்தவாறே பால்கனியில் அமர்ந்திருந்த நேரத்தில், அறையில் இருந்த நிகில் தவித்து விட்டான். அவளே நொந்து போயிருக்கும் போது என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் என்ன என்ன வார்த்தைகள் சொல்லியாகிவிட்டது. ஒண்ணைக் கூடத் திரும்பப் பெற முடியுமா? கடவுளே! இந்த நேரத்தில் அவள் நல்லதுக்கு என்று செய்த எல்லாமும் கெட்டு விடும்படி நானே செய்துவிட்டேனே. அவளை அவனின் குரலோ, கதவைத் தட்டிய ஒலியோ சிறிதும் அசைக்கவில்லை.

VANCOUVER-இல் ஸ்ப்ரிங் தொடங்கிய சமயம் என்பதால் தினமும் மழை பெய்து கொண்டே இருந்தது.

அடித்துப் பெய்யாவிட்டாலும், எப்போதும் சிறு சிறு சாரல்களாக மழை விடாமல் பெய்யும். மிருதுளாவிற்கு மழை பிடிக்கும் என்றாலும் அவளால் குளிர் தாங்க முடியாது. தட்பவெப்பம் 15-20 டிகிரி இருக்கும் போது கூட ஜாக்கெட் அணியாமல் அவளால் வெளியே இருக்க முடியாது. அதற்கே அப்படியென்றால் வின்டர் டைம்-இல் அவளை வீட்டை விட்டுக் கயிறு கட்டித் தான் இழுக்க வேண்டும்.

அரை மணி நேரத்தில் அவள் வெளியே குளிரில் நடுங்க ஆரம்பிக்க, உள்ளே நிகில் காதலில் கரைந்து உருகிப் போனான்.

கதவைப் பலமாகத் தட்டி, ''ப்ளீஸ் பேபி, உள்ளே வாயேன், வந்து என்னை என்ன வேண்டுமானாலும் செய்துகொள் கண்ணா. என் மேல் உள்ள கோபத்தில் உன்னை வருத்திக் கொள்ளாதே. ப்ளீஸ்.''

''நனைகிறாயே, ஹய்யோ! உள்ளே வந்துவிடு ப்ளீஸ். உள்ளே வந்து என்னிடம் என்ன சண்டை வேண்டு மானாலும் போடு.''

''நீ யாரிடமும் பேச வேண்டாம். உள்ளே மட்டும் வந்துடுடா.''

"I will not compel you anymore on this daa, Take your time. Please come inside baby!'' இப்படி பலவாறாக அந்த அரை மணி நேரமும் கெஞ்சியவன் அவள் சிறிதும் அசைந்து கொடுக்காததைக் கண்டு மனமும் உடலும் பதறக் கீழே ஓடினான்.



கீழே பெரியவர்கள் நால்வரும், அவர்கள் இருவரும் இறங்கி வருவதற்காக மாடி மேலே கண் வைத்துக் காத் திருந்தனர்.

நேரமாக ஆக சாருமதியின் கண்ணீரும், சிவநாதனின் வேதனை படிந்த முகமும் நிகிலின் தாய் தந்தையரை வருத்தின. நிகில் எப்படியும் சமாளித்து அவளை அழைத்து வந்துவிடுவான் என்று அவர்களுக்கு நம் பிக்கை ஓடிக் கொண்டே இருந்தாலும், அவர்களையும் பயம் பற்றிக் கொண்டது. கிட்டத்தட்ட ஒரு மணி நேரக் காத்திருப்புக்குப் பின் மிருது இல்லாமல் தனியே இறங்கி வந்த நிகிலைப் பார்த்த நால்வருமே நம்பிக்கை இழந்தனர்.

சிவநாதனின் முகத்தைப் பார்த்தவன், ''எல்லாம் சரியாக நடக்கும் என்று நம்பித் தான் மாமா உங்களை அழைத்து வந்தேன், ஆனால்..'' என்றான் வருத்தத்தோடு.

''வேண்டாம் மாப்பிள்ளை, அவள் நன்றாக இருக் கிறாள் என்று தெரிந்ததே எங்களுக்குப் போதும். நாங்க போறோம். இதனால் உங்களுக்குள் சண்டை வர வேண் டாம்!'' என்று உடைந்தார்.

''சண்டை போட்டால் கூடப் பரவாயில்லை மாமா, குளிரில் பால்கனியில் உட்கார்ந்து கொண்டு உள்ளே வரமாட்டேன் என்கிறாளே!'' என்று தவித்தான் கணவன்.

''ஹய்யோ, என்னடா சொல்லித் தொலைத்தாய், நிறை மாதத்தில் ஏன் நிக்கி இப்படிச் செய்கிறாய்?'' என்று தன் தவிப்பை மகனிடம் கொட்டியபடி வேகமாக மருமகளை நாடிச் சென்றார் வாசுகி.

''என்ன நிக்கி, கொஞ்சமும் யோசனை இல்லாமல்'' என்று வருத்தப்பட்டாலும், ''இப்ப என்ன செய்யப் போகிறாய்?'' என்று மகனோடு சேர்ந்து யோசித்தார்.

''கதவின் லாக்கை உடைத்து எடுக்க வேண்டியது தான். வேறு ஒன்னும் செய்ய முடியாது. நான் போய் டூல்பாக்ஸ் எடுத்துட்டு வரேன் கராஜ்ஜிலிருந்து!'' என்று பதிலளித்தவாறே பின்புறம் ஓடினான்.

பெரியவர்கள் மூவரும் அந்த அறையை நெருங்கி அவளைக் கத்தி அழைக்க ஆரம்பித்தனர்.

விஸ்வநாதன், பால்கனிக்குக் கீழே நின்று கொண்டு தன் உயர்ந்த குரலால் அவளைக் கிளப்ப முயன்றார்.

நிகில் வந்து கதவின் தாழ்களை அகற்றி உள்ளே பாய்ந்து அவளை நெருங்கிய போது, உடம்பு முழுதும் சில்லிட்டு, கொஞ்ச நேரத்தில் விரைத்துப் போகுமள விற்கு இருந்தாள் மிருதுளா.

அவளைக் கைகளில் ஏந்தியவனை, ''இந்த cold hearted person-ஐ தூக்கும் பாவம் உங்களுக்கு வேண்டாம்!'' என்று ஈன சுரத்தில் முனகியவாறே தடுக்க முயன்றாள்.

அவளது அந்த முயற்சியை அலட்சியம் செய்து, ''ப்ளீஸ் பேபி, I am terribly sorry for those words!'' என்று அணைத்துத் தூக்கினான்.

''என்னை விடுங்க. நான் வரமாட்டேன். நான் இங்கே தான் இருப்பேன்!'' என்று முனகிக் கொண்டே அவள் செய்த எந்தத் தடுப்பு முயற்சியும் நிகிலை நிறுத்த வில்லை.



''என்ன மிருதுமா, இப்படிக் குளிரடிக்கும் அளவுக்கா இருப்பது. எங்கள் மேல் உள்ள கோபத்தை உன் உடம் பின் மீதும், வயிற்றில் இருக்கும் குழந்தைகள் மீதுமா காட்டுவது!'' என்று மகளைக் கடிந்து கொண்டார் சாருமதி.

மனதின் வருத்தமும், எண்ணப் போராட்டங்களும், உடலின் சோர்வும், குளிரும் எல்லாமுமாய் மிருதுளாவை ஒன்றாகத் தாக்க, அந்த அழுத்தம் தாங்காமல் கண்ணீர் வழியத் தொடங்கியது.

''உடம்பைத் துடைத்து வேற டிரஸ் போட அவளுக்கு ஹெல்ப் பண்ணுங்க நீங்க ரெண்டு பெரும். நாங்க வெளியே நிக்கிறோம், பேபி! ப்ளீஸ் கொஞ்சம் சொல் வதைக் கேள், தயவு செய்து,'' என்று வாசுகியையும் சாருமதியையும் பார்த்துச் சொல்லியவன் மனைவியிடம் வந்து நிறுத்தினான்.

''ம்ம்ம் மாட்டேன், மாட்டேன்!'' என்று பலவீனமாய் முனகியவளை இரு தாய்மாரிடமும் விட்டுவிட்டு ஆண்கள் மூவரும் வெளியே வந்தனர்.

சிறிது நேரத்தில் வெளியே வந்த வாசுகி, ''அண்ணி பார்த்துக்குறாங்க. நான் போய் அவளுக்குச் சாப்பிட ஏதாவது சூடா கொண்டு வரேன்,'' என்று விட்டு கிச்ச னுக்குள் சென்றார்.

சாருமதி கட்டிலில் அமர்ந்து மகளின் தலையை வருடிக் கொடுக்க, மகளோ சற்று முன் போட்ட சண்டை, சத்தம் எல்லாவற்றையும் மறந்து தாய் மடியில் முகம் புதைத்திருந்தாள்.

சிவநாதன் மறுபுறம் அமர்ந்து ஒன்றும் பேசாமல் மகளின் முதுகை வருடினார். ''மிருது! என்ன கோபம்,

என்ன வருத்தம் என்றாலும் இந்த நேரத்தில் உன் உடம்பைப் பார்த்துக்க வேண்டாமா? இரண்டு குழந்தை களுக்கு அம்மாவாகப் போகிறாய். இன்னும் சிறு பிள்ளைத் தனமாக என்னடா இது!'' என்றார் சிறிது நேரம் கழித்து.

யூகலிப்டஸ் ஆயில் எடுத்து வந்து அவள் கால் மற்றும் கைகளில் தேய்த்தவன், பெற்றோருடன் அவளை விட்டுவிட்டுக் கீழே வந்தான்.

கொஞ்ச நேரத்தில் சுயநினைவு அடைந்த மிருதுளா, எழுந்து கட்டிலில் கால் நீட்டி அமர்ந்தாள். சிவநாதன் அவள் கையைப் பிடித்துக் கொண்டு அவளைக் கெஞ்சுத லாகப் பார்த்தார்.

''அப்பா கொஞ்சம் பேசட்டாடா, கோபப்படாம கேக் குறியா கண்ணமா!'' என்று கேட்டு அவள் ஒரு வித மாகத் தலை அசைத்த பிறகே பேச ஆரம்பித்தார்.

''நாங்க எல்லாரும் செஞ்சது ரொம்ப பெரிய தப்பு, தப்பு இல்லை, குற்றம். அதுவும் நீ அவ்வளவு சொன்னப் பிறகும் நாங்க அப்படி நடந்துகிட்டது ரொம்ப ரொம்ப பெரிய தப்பு. வீட்டில் இதை நினைத்து வருத்தப்படாத ஆளும் நாளும் இல்லை!'' என்றார்.

நிமிர்ந்து சாருமதியைப் பார்த்து, ''கதிர் அண்ணா கூடவா?''என்றாள் கண்ணீர் திரும்பிக் கண்ணை நிறைக்க.

''ஐயோ கண்ணமா, அவன் செய்த தப்புக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுடா, நீ அழாதே!'' என்று மகளின் கண்களைத் துடைத்தார்.

''இப்போ மட்டும் பதறுறீங்க, அன்னைக்கு உடம்பை விடுங்க, என் மனசு எப்படி வலிச்சது தெரியுமா, ஏன்பா



நீங்க யாருமே நம்பல? எத்தனை நாள் எத்தனை யோசித்தும் எனக்குப் புரியவே இல்லை. இப்ப எனக்குத் தெரியணும்!'' என்றாள் பிடிவாதமாக.

''அந்த நேரத்தில் கல்யாணம் நின்றதும், அதனால் வந்த அவமானமும் தான் பூதாகரமாகத் தெரிஞ்சது கண்ணா. நீயும் விளையாட்டாய்ச் சொன்னதை எல்லாம் நான் நிஜமென்று நம்பி, அதுவும் வேற யார் கூட இருந்தாலும் நம்பியிருப்போமோ என்னமோ, விமலுடன் என்றவுடன் நீங்க விளையாட்டாய், வெகுளித்தனமாய்ச் செய்த பல விஷயங்களுக்குத் தப்பர்த்தம் கற்பித்துக் கொண்டோம். செய்திருக்கக் கூடாது தான். அன்னைக்கு எனக்கிருந்த சூழ்நிலையைச் சொல்றேன். ஆனா அது கரெக்ட் என்று சொல்லல!'' என்றார் சிவநாதன் தன்னை விளக்கிவிடும் நோக்கத்தில்.

''ம்ம்ம்'' என்று கேட்டாலும் மனது முழுதும் சமா தானம் ஆகவில்லை மிருதுளாவிற்கு. அம்மாவை ஒட்டி அமர்ந்து கொண்டு தாயைச் சுற்றிக் கை போட்டிருந்தாள் இப்போது தானாக.

அவள் கோபம் கொள்ளாமல் கேட்டதே அந்த நாளின் வெற்றியாகப் பட சிவநாதன் கொஞ்ச கொஞ்சமாக அவளை மாற்றிவிடலாம் என்ற நம்பிக்கை பெற்றார்.

என்ன என்னவோ கேட்க வேண்டும், பேச வேண்டும் போல் இருந்தாலும், மூவரும் மௌனத்திலேயே தங்கள் பாசத்தை வெளிப்படுத்திக் கொள்ள, சற்று நேரத்தில் வாசுகி கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்தார். ''சாப்பிட லாம் அண்ணா. ரொம்ப நேரமாகிவிட்டது. ரொம்ப தூரம் உட்கார்ந்து கொண்டே வந்தது உடம்பும் அசத்தும்,

நீங்க சாப்பிட்டுப் படுங்க, வாங்க!'' என்று சிவநாதனையும் சாருமதியையும் அழைத்தார்.

மிருதுவிடம் திரும்பியவர், ''நீ செஞ்ச வேலைக்கு உன்னோட நான் பேசக்கூடாது தான், ஆனா மனசு வர மாட்டேன்தே!'' என்றார் கொஞ்சம் கோபமாக.

நகர்ந்து வந்து அவர் கையைப் பிடித்துக் கொண்டு, ''சாரி சுகிமா, இனிமேல் பண்ண மாட்டேன். இந்த டைம் மட்டும் தான். நான் பண்ணமாட்டேன்னு சொன்னா பண்ணமாட்டேன் தானே! சோ நோ கோபம் ப்ளீஸ்!'' என்றாள் கெஞ்சுதலாக.

''சரி விடு, நிக்கிகிட்ட ரெண்டு பேருக்கும் சாப்பாடு கொடுத்து அனுப்புறேன். ஒழுங்கா எல்லாத்தையும் சாப்பிடுற. சொல்லிட்டேன், என்ன?'' என்றார் அதிகார மாக.

''ம்ம்ம் சரி சுகிமா!'' என்றாள் மருமகள்.

மாமியார் ரூபத்தில் இன்னொரு தாய் தன் பெண் ணிற்குக் கிடைத்திருப்பதை எண்ணி மகிழ்ந்த சாருமதி, ''நல்லா சாப்பிட்டு தூங்குடா, நாளைக்கு என்ன சண்டை என்றாலும் அம்மா கூடப் போடலாம், என்ன!'' என்றார் கொஞ்சம் சிரிப்புடன்.

''இன்னும் சண்டையா? போதும் சாமி போதும்!'' என்றார் வாசுகி.

''ஆமா சண்டை தான், நாளைக்கு இருக்கு உங்களுக்கு கச்சேரி. போங்க. போய் இன்னைக்குச் சாப்பிட்டு நிம் மதியா தூங்குங்க!'' என்றாள் மகளும் தாயிடம் சின்னச் சிரிப்புடன்.



''சரி சரி, நாங்க கீழ போறோம். நீ நல்லா சாப்பிட்டு, தெம்பா நாளைக்குச் சண்டை போடு என்ன!'' என்றுவிட்டு இருவரையும் அழைத்துக் கொண்டு கீழே சென்றார்.

சாப்பாடுடன் உள்ளே நுழைந்த நிகிலை நேரே பார்க்காமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள் மிருதுளா.

''அம்மா அப்பா கூட எல்லாம் ராசியாகிட்டீங்க மேடம். நான் மட்டும் என்ன செஞ்சேன். ஹ்ம்ம்.''

ஒன்றும் சொல்லாமல் கட்டிலில் படுத்துக் கண்ணை மூடிக் கொண்டாள்.

''ஹோ, தூங்கிட்டியா? ரொம்ப நல்லது. இன்னைக்கு அம்மா இடியாப்பம் பண்ணாங்க, உன்னோடதையும் சேர்த்து நானே சாப்டுடுறேன். என்ன ரிது?'' என்றான் நிகில் அவளை உசுப்பேத்தியவாறே,

அப்போதும் அவள் ஒன்றும் சொல்லாமல் படுத் திருக்க, ''சரி விடு, யு என்ஜாய் நிகில். உனக்குத் தான் எல்லாம்!'' என்று தனக்கே சொல்லிக் கொண்டு இடியாப் பத்தை ஒரு கை பார்க்க ஆரம்பித்தான்.

''ச்சே! அம்மா இன்னைக்கு கிச்சடி (எங்க ஊர்ல பாசிப் பருப்புச் சாம்பாரை இப்படிதான் சொல்லுவோம்.) சூப்பரா செஞ்சிருக்காங்க, யம்மி.''

''அடடா! கோஸுமல்லி வேற இருக்கா - சைடு டிஸ்க்கு. சூப்பர் வசு, கலக்குற வசு நீ!'' என்று ஒன்று ஒன்றாக அவன் சப்புக் கொட்டிச் சாப்பிட, மிருதுளா,

''ஒரு கேரியிங் லேடி சாப்பிடாம படுத்து இருக்கேன், என்ன கமெண்ட் வேண்டியிருக்கு!'' என்றாள் கோபமாக.

''நான் எங்க அம்மா சமைச்சதை ரசிச்சு, ருசிச்சு, சப்புக் கொட்டி, கமெண்ட் அடிச்சு எப்படி வேணுமானாலும்

சாப்புடுவேன் உனக்கு என்னம்மா, பேசாம தூங்குடா ராஜாத்தி!'' என்றான் நிகில் சிரிப்புடன்.

''நான் தூங்கணும். நீங்க அந்த கேப்ல எல்லாத்தையும் சாப்பிட்டு ஏப்பம் விட்டுருவீங்க இல்ல, அதெல்லாம் முடியாது.''

''என்ன ஒரு நல்ல எண்ணம்! நீயும் சாப்பிட மாட்டே, நானும் சாப்பிடக் கூடாது. ரொம்ப நல்லவ ரிது குட்டி நீ!'' என்றான் நிகில் விரிந்த சிரிப்புடன்.

''நான் எங்க சாப்பிட மாட்டேன்னு சொன்னேன்?'' என்றாள் ரிதுவும் சிரிப்பைக் கட்டுப்படுத்தியவாறே.

''அப்ப இந்தா சாப்பிடு,'' என்று ஒரு தட்டில் வைத்து நீட்டினான்.

''ம் ஹூம்ம்ம். மாட்டேன்.''

அவளது நோக்கம் புரிந்தவனாக, எடுத்து ஊட்டிவிடத் தொடங்கினான்.

''என் பக்கத்தில் வாங்க நிக்கி!'' என்று நகர்ந்து உட்கார்ந்தாள் ரிது. அவளைத் தன் தோள் மேல் சாய்த்துக் கொண்டு உணவை ஊட்டினான் கணவன்.

''நீங்களும் சாப்டுங்க நிக்கி!'' என்றாள் நான்கு வாய் வாங்கிய பிறகு.

''முதல்ல உள்ள இருக்கற ரெண்டு குட்டீஸ்ஸும் சாப் பிடட்டும், அப்புறம் நம்ம சாப்பிடலாம், ஓகே?'' என்றான் நிகில்

''ஹ்ம்ம். சரி.''

''நான் சொன்னது புரிஞ்சதா, நம்ம சாப்டலாம்!'' என்றான், ''நம்ம வில் அழுத்தி.



''புரிஞ்சுதான் சரி சொன்னேன், வேண்டாம்னா விட்டுடலாம்,'' என்றாள் மிருதுளா கண்ணோரம் சுருங்க.

''நான் எங்கே வேண்டாம்னு சொன்னேன். 15 நாட்கள் ஆச்சு ரிது, நீ என்னைக் கவனிச்சு. உனக்காக எத்தனை வேலையெல்லாம் பண்ணி இருக்கேன். இன்னைக்கு ஸ்பெஷல் ஓகே??'' என்றான் நிகில் அவளது கழுத்தை வருடியவாறே.

''சும்மா இருங்க நிகில், ஒழுங்கா கட்டிப் பிடிக்கக் கூட முடியாது, தொப்பை இடிக்கும்'' என்றாள் மிருதுளா ரகசியக் குரலில் அவனது மார்பை வருடியவாறே.

''நான் சும்மா ஒரு லாலிபாப் தான் கேட்டேன், நீ என்ன நினைச்சே?'' என்றான் நிகில் ரகசியக் குரலில் உடல் குலுங்க.

''அய்யே, ரொம்ப நல்லவர் மாதிரி சீன்க்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை!'' என்று பழிப்புக் காட்டிவிட்டு, ''இன்னைக்கு நான் உங்களுக்கு நல்லா மண்டகப்படி நடத்தணும்னு நினைச்சேன், ஆனா...'' அவள் முடிக்கும் முன்பே,

''டேய், அதை மறந்துவிடுடா. அதற்கு நீ கொடுத்த தண்டனையே போதும், இனிமேல் எதையும் நம்மளால தாங்க முடியாது சாமி.

''நான் எப்படி துடிச்சுப் போயிட்டேன், தெரியுமா? ப்ளீஸ் இது இனிமே என்ன கோபம் என்றாலும் என்னை என்ன வேண்டுமானாலும் செய் என்ன, இப்படிச் செய்யாதடா ப்ளீஸ், ரொம்பவும் பயந்துட்டேன்!'' என்றான் நிகில் அப்போதும் பதறியபடியே.

''சாரி நிக்கி, நீங்க சொன்னதும் ரொம்பக் கஷ்டம் ஆகிடுச்சு. அதுதான், நான் ஒண்ணுமே பண்ணல இல்ல

நிக்கி, அப்பறம் ஏன் எனக்கு மட்டும் இப்படி நடக்குதுன்னு..." என்றாள் மிருதுளா.

"போதும்டா, இதே பேசிப் பேசி மனசு நொந்தது எல்லாம் போதும். ஓகே, சந்தோஷமா பேசலாமா?" என்றான் நிகில், அவள் கன்னத்தில் ஒரு முத்தத்தைப் பதித்து.

"ம்ம்ம் பேசலாம்," என்றாள் மிருதுளா உள்ளே சென்ற குரலில்.

கன்னத்தை வருடியபடியே, "குரலே காணோம், எங்கேடா போச்சு?" என்றான்.

"ச்சு பேபி ரெண்டு பேரும் இருக்காங்க இல்ல, மெதுவா பேசுங்க, முழிச்சுக்கப் போறாங்க!" என்றாள் மிருதுளா இன்னும் உள்ளே சென்ற குரலில்.

"ஹ்ம்ம் சரி சரி, நான் ஒண்ணு சொல்றேன், பேச்சே வேண்டாம், செயல்ல காட்டலாம். இப்போதைக்கு அவுங்களுக்குத் தெரியாதில்ல!" என்றான் அவனும் ரகசியமாகக் காதைக் கடித்தவாறே,

'ம்ம்ம்.' அவன் முதல் பேபியின் குரல் அதற்கு மேல் கேட்கவேயில்லை. ஏன்னா சார் அதற்கு வேண்டியதைச் செய்து முடித்திருந்தார்.



## 15



காலையில் தன் வயிற்றைச் சுற்றிக் கை போட்டுப் படுத்திருந்த நிகிலைத் தலையைத் திருப்பிப் பார்த்தவள்,



"எனக்காக என்னவெல்லாம் செய்திருக்கிறான், என் செல்ல நிக்கி!" என்று பெருமையாக எண்ணினாள். எண்ணியபடியே அவன் தலையைக் கலைத்து விளையாடி, முன்னுச்சியில் இதழ் பதித்து எழ முயன்றாள்.

எழ முடியாமல் அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்து, "கொஞ்ச நேரம் தூங்கு பேபி, என்ன அவசரம்?" என்று கண்களைத் திறக்காமலேயே முணுமுணுத்தான்.

"ஐயோ இன்னுமா, மணி என்ன தெரியுமா, எட்டு. அம்மாகிட்டே நல்லா திட்டுவாங்கப் போறேன்னு நானே பயந்துக்குட்டு இருக்கேன். இன்னும் தூங்கறதாம், விடுங்க நிக்கி!" என்று பலம் கொண்ட மட்டும் அவனைத் தள்ளினாள்.

"அடடா, நீ மாமியாருக்குக் கூட இப்படிப் பயப்பட்டது இல்லையே, அம்மாக்கு இந்தப் பயமா? இது தெரியாம போச்சே எனக்கு, இனிமேல் மாட்டி விட வேண்டிய இடத்தில மாட்டிவிட்டு நான் என்ஜாய் பண்றேன்!" என்றான் தூக்கம் கலைய எழுந்து உட்கார்ந்தபடியே.

"உங்களுக்கு மாட்டி வைக்க ஒரு ஆள் தான் இருக்காங்க. எனக்கு ஊரே இருக்கு. ஞாபகம் இருக்கட்டும்," என்று மிரட்டிவிட்டுக் கட்டிலை விட்டு இறங்கினாள்.

"நான் மாட்டிக்குற மாதிரி ஒரு தப்பும் பண்ண மாட்டேன் பேபி, நான் ரொம்ப நல்லவன்!" என்றான் அப்பாவியாய் முகத்தை வைத்துக் கொண்டு,

"யாரு நீங்களா? அதை நான் சொல்லணும், சரியான ஸெல்ப் டப்பா நிக்கி நீங்க!" குளியல் அறை நோக்கி நகர்ந்தவளைக் கைப்பிடித்து நிறுத்தியவன்.

''என்னவாவேன்னா இருந்துட்டுப் போறேன். நான் என் குழந்தைகளுக்குக் கொடுக்கிறதை நீ வாங்கிகிட்டுப் போ!'' என்று விட்டு அவளது மேடிட்டிருந்த வயிற்றில் மென்மையாக இருமுறை முத்தமிட்டான்.

தன் வாயே தனக்கு எதிரி என்று தெரியாமல், ''அவுங்களுக்கு மட்டும் தானா? எனக்கும் வேணும்!'' என்று அடம் பிடித்து அவனுக்கு உதவி புரிந்தாள்.

''உனக்கு இல்லாததா, வா வா!'' என்று அவன் முன்னேற, தன்னை மறந்து கொஞ்ச நேரம் இடம் கொடுத்தவளைத் தானாகவே விலக்கி, ''உங்க அம்மா ஒண்ணும் சொல்ல மாட்டாங்களா பேபி, மணி எட்டரை!'' என்றான் நமட்டுச் சிரிப்போடு.

''யூ யூ பண்றதெல்லாம் பண்ணிட்டு, என்ன கொழுப்பா!'' என்று முறைத்தவாறே தன் காலைக் கடன்களை முடித்துவிட்டுக் கீழே இறங்கிச் சென்றாள்.

இரு தந்தையரும் வாக்கிங் சென்றிருக்க, சாருமதியும் வாசுகியும் சமையல் அறையில் நின்றிருந்தனர்.

மிருதுளாவைப் பார்த்தவுடன், அவள் சொன்ன காலை வணக்கத்திற்குப் பதில் கூறியவாறே,

''என்ன குடிக்கிறாய் ரிது, காபியா, ராகி கஞ்சியா?'' எனக் கேட்டார் வாசுகி.

''காபி தாங்க சுகிமா!'' என்று விட்டுத் தன் தாயை நெருங்கி நின்று கொண்டு, ''நீங்க என்ன குடிக்கிறீங்க அம்மா?'' என்றாள் உபசரிக்கும் எண்ணத்தில்.

''ஹான், எவ்வளோ நேரம் கழித்து விசாரிக்கிற! இது தான் ஒரு கல்யாணம் ஆன பொண்ணு நடந்துக்கிற



லட்சணமா? கொஞ்சம் கூட நல்லா இல்ல ரிது. அண்ணி ஒண்ணும் சொல்லாம செய்யறாங்க இல்ல, அந்தக் கொழுப்பு!'' என்று கோபமாகப் பேசிய சாருமதியிடம் ஒரு பதிலும் சொல்ல முடியாமல், தப்பு என்று உணர்ந்தே இருந்ததால் வாய் மூடி மௌனமாக நின்றாள் மிருதுளா.

வாசுகி தான், ''ச்சே என்ன அண்ணி, அவளுக்குச் செய்யாமல் யாருக்குச் செய்யப் போறேன். அதுவும் இன்னைக்குத் தான் கொஞ்சம் லேட் ஆகிடுச்சு. நேத்து உடம்பு சரி இல்லாமல் இருந்ததால் தூங்கி விட்டாள், விடுங்க. இந்தா ரிது காபி!'' என்று காபி கப்பை அவளிடம் நீட்டினார்.

''சாரிமா, சாரி சுகிமா!'' என்று மன்னிப்புக் கேட்டு விட்டுக் காபியைப் பருகத் தொடங்கினாள்.

''மாப்பிள்ளை எழுந்து விட்டால் அவருக்கு ஏதானும் கலந்து கொண்டு போய்க் குடு!'' என்று மகளை ஏவிய சாருமதிக்கு ரிது பதில் அளிக்குமுன் வாசுகி, ''அதெல்லாம் அவன் வருவான், அவனே வந்து கலந்து கொள்வான், நம்ம கலந்தா நூறு நொள்ளை சொல்லுவான், அவனே வரட்டும் அண்ணி!'' என்றார்.

அப்போது உள்ளே நுழைந்த நிகில், ''நீங்க ஒழுங்கா காபி போட்டா நான் ஏன் நொள்ளை சொல்றேன்? காபி என்ற பெயரில் ஒரு விவரிக்க முடியாத ஒரு தண்ணி தருவீங்க! அத்தை. நீங்க போடுங்க காபி இன்னைக்கு. ரிது! ஓடிப் போய் ஒரு பேப்பர் எடுத்துட்டு வந்து நோட் பண்ணிக்க, சீக்கிரம், சீக்கிரம்!'' என்று அவள் தோளைத் தொட்டு ஹால் பக்கமாகத் திருப்பி விட்டான்.

"ஆஆ. விடுங்க. சுகிமா, பாருங்க சுகிமா. தோள்பட்டை வலிக்குது!" என்று ஹாலுக்குள் செல்லாமல் திரும்பி வாசுகியிடம் சரண் புகுந்தாள் மிருதுளா.

"ச்சே! என்னடா இது முரட்டுத்தனம் குழந்தையிடம்!" என வாசுகி மகனைக் கடிந்து கொள்ளவும், "யாரு இவ குழந்தையா? இந்த அட்டகாசத்தைக் கேட்க யாருமே இல்லையா, குழந்தையாமே??" என்று நிக்கி ஆச்சரியப் பட்டான்.

"ஆமா ஆமா, உன் பேபியைத் தான் குழந்தைன்னு சொன்னேன்!" என்று 'பேபி'யில் அழுத்தம் கொடுத்து நமட்டுச் சிரிப்புச் சிரித்தார் வாசுகி.

வாசுகியின் பின் நின்று கொண்டு அவனைப் பார்த்து வெற்றிச் சிரிப்பு சிரித்த மனைவியையும், தன்னை மடக்கிய தாயையும் பார்த்து, "அம்பேல், உங்க ரெண்டு பேர்கிட்டயும் பேச முடியுமா?" என்று கூறிச் சிரித்தான்.

"ஹப்பா, அப்போ இன்னைக்குக் கொஞ்சம் வாயை மூடிகிட்டு இரு. நாங்க நிம்மதியா இருப்போம். இல்லடா ரிது?" என்றார் வாசுகி ஒரு போலிப் பெருமூச்சை வெளி யேற்றியபடி.

அவள் ஏதோ சொல்லத் தொடங்குமுன், "ஹே டாபிக் சேன்ஜ் பண்ணாதீங்க. அத்தை! காபி போடுங்க. ரிது! கத்துக்கோ."

"ரொம்ப ஓவர் சொல்லிட்டேன் நிக்கி. நீங்க போடுற கழனித் தண்ணியக் குடிச்சுக் குடிச்சு உங்களுக்கு நாங்க போடுற சூப்பர் காபி கேவலமா இருந்தா நாங்க என்ன பண்ண முடியும்?"



இப்படியாக வம்பு செய்து காலை உணவு நேரம் சென்றது.

உணவு முடிந்தவுடன் both V's கிளம்பி க்ரோசெரி வாங்கி வருவதாகச் சொல்லிவிட்டு, பெற்றோருக்கும் மகளுக்கும் தனிமை கொடுத்து வெளியே கிளம்பிச் சென்றனர்.

நிகில், "நான் ஆபீஸ் போய்க் கொஞ்சம் பார்த்துட்டு வரேன்டா, 15 நாள் ஆச்சு!" என்று கிளம்ப முற்பட்டான்.

"அதெல்லாம் திங்கட்கிழமை பார்த்துக்கலாம், Please be with me for this weekend Nikki please!" என்று மிருதுளா கெஞ்சிய பிறகு, அவனால் போவதைப் பற்றி யோசிக்கக்கூட முடியவில்லை.

நால்வருமாக ஹாலில் அமர்ந்தனர். ஒரு நூறு கேள்வி களுக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டு, "வீட்டுக்குப் பேசுவோமா கண்ணா, எல்லாரும் ரொம்ப ஆவலாக இருக்காங்கடா உன் கிட்ட பேசணும்னு, நேத்தே விபு கூப்பிட்டான் நீ அப்போ தான் அசந்து தூங்கியிருந்த. அதுனால எழுப்பல!" என நயமாக மகளிடம் வேண் டினார்.

"ம்ம்ம் பேசலாம்பா," என்று கூறும்போது, குரலில் வேண்டிய உற்சாகம் ஒலித்தாலும், கொஞ்சம் கோபமும் கலந்திருந்தது.

நிகில் திருச்சி வீட்டு நம்பரைக் காலிங் கார்டு மூலமாக டயல் செய்துவிட்டு ஸ்பீக்கரில் போட்டான்.

முதல் ரிங்கிலேயே போனை எடுத்த சந்த்யா, "ஹலோ, யாரு?" என்றாள் அவசரமாக.

''ஹலோ சது அண்ணி, நான் நிக்கி பேசுறேன். ரிது, அத்தை மாமா எல்லாரும் இருக்காங்க, பேசுங்க!'' என்றுவிட்டு மிருதுளாவிடம் கண் ஜாடை காட்டினான்.

''மிருதுக் குட்டி, எப்படிடா இருக்க, உடம்பு எப்படி இருக்கு?'' என்றாள் பாசம் நிரம்பி வழிய.

''ஹ்ம்ம் நல்லா இருக்கேன்!'' என்ற மிருதுளாவைச் சிவநாதனும், சாருமதியும் கவலையாகவும், கலவரமாகவும் பார்க்க, நிகில் கெஞ்சுதலாகப் பார்த்தான்.

மிருதுளாவின் மனநிலையோ வேறு விதமாக இருந்தது. என்னதான் எல்லாரிடமும் நன்றாகப் பேச வேண்டும், அந்த நாள் நினைவுகளை மறக்க வேண்டும் என்றெல்லாம் நிகில் காலையில் கூறியதெல்லாம் மனதில் இருந்தாலும், மனம் அந்த நாளைச் சுற்றிச் சுற்றி வந்தது. அவள் ஒன்றும் மறக்க மன்னிக்கத் தெரிந்த உயர்ந்த கொள்கையுடையவள் அல்லவே. கோபத்துக்கும், பாசத்துக்கும் இடையே தத்தளித்து அவளது மனம்.

அதற்குள் சந்த்யாவிடம் இருந்து பிடுங்காத குறையாகப் போனை வாங்கிய விபு, ''மிருது, எப்படி இருக்கம்மா, எத்தனை நாள் ஆச்சு மிருது உன்னைப் பார்த்து, உன்னை நினைக்காத நாளே இல்லமா!'' என்றபோது அவன் உடைந்து அழுவது தெரிந்தது.

அவன் அழுதது அங்கே எல்லார் கண்ணிலும் நீரை வரவழைத்து, இங்கே இருந்த பெற்றோரையும் உடைய வைத்தது.

அப்போதும் ஒன்றும் பேசாமல் தன் வார்த்தைகளைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்த மிருதுளாவை நெருங்கி, அவள் கையைப் பிடித்து அழுத்தி, 'ப்ளீஸ் பேபி, எனக்காக!'' என்றான் நிகில்.



பெற்றோர் இருப்பதை மறந்து, அவனை நெருங்கி அவன் இடுப்பைச் சுற்றிக் கை போட்டு அவனிடம் ஒண்டினாள். ''என்னால மறக்க முடியல நிக்கி, நீங்க சொல்றதெல்லாம் புரியுது. ஆனா ஆனா...'' என்று விசும்பியவளை, ''என்ன பேபி, நீ முழுசா மன்னிக்க வேண்டாம்டா, கொஞ்சம் நார்மலா பேசுறியா அவுங்ககிட்டே, பாவம்டா ரிது அவுங்களும்!'' என்று கண்ணைத் துடைத்தான்.

''மிருது மிருது, சாரி கண்ணமா, பேசுடா. ப்ளீஸ் உன்னைக் கெஞ்சிக் கேட்குறேன். என்னால முடியலடா. இந்தக் குற்ற உணர்வு தினம் தினம் என்னைக் கொல்லுது!'' என்றான் விபு ஒரு பரிதவிப்புடன்.

அந்தக் குரல் என்ன செய்ததோ, ''அண்ணா, எப்படி இருக்கீங்க? அண்ணி, கார்த்திக் ரெண்டு பேரும் நல்லா இருக்காங்களா, அழாதீங்க அண்ணா ப்ளீஸ்!'' என்றாள் மிருது உருகிப் போனவளாக.

''ரொம்ப தேங்க்ஸ்டா, ரொம்ப தேங்க்ஸ்!'' என விபு திரும்பத் திரும்பக் கூறியதிலேயே அவன் எவ்வளவு தூரம் தவித்திருக்கிறான் என்று விளங்கியது.

அவனது தவிப்பு தன்னுடைய தவிப்புக்குக் கொஞ்சமும் குறைச்சல் இல்லை, பாவம் அண்ணா என்ற எண்ணம் தோன்ற, ''அண்ணா, என்ன அண்ணா, போதும். எனக்கு ஒரு மாதிரி இருக்கு!'' என்றாள் தங்கை.

விபு இயல்புக்கு வரும் முயற்சியில் இறங்கி, ''உன் உடம்பு எப்படி இருக்கு? அத்தை மாமா எல்லாரும் நல்லா இருக்காங்களா?'' என்றான்.

''உடம்பு நல்லா இருக்கு. ஆமா, யாரு அத்தை மாமா?'' எனப் புரியாமல் வினவினாள் மிருதுளா.

"என்னடா, நிகிலோட அம்மா அப்பாவைக் கேக்கிறேன் கண்ணா!" என விளக்கினான் விபு...

"ஹோ சுகிமாவும், அப்பவுமா? நல்லா இருக்காங்க, வெளியே போய் இருக்காங்க. நான் அம்மா, டாடி, நிக்கி மட்டும் தான் இருக்கோம் வீட்டுல. அங்க யாரு யாரெல்லாம் இருக்கா? அண்ணிகிட்ட கொடுங்க அண்ணா!" என்றாள் மிருதுளாவும் உற்சாகத்துடன்.

அண்ணியிடம் நலம் விசாரித்து முடித்து, குழந்தைகள் பிறந்தவுடன் தூக்கிக் கொண்டு வருவதாக உறுதி கூறி முடித்தால், அடுத்து சந்த்யா ஆவலுடன் காத்திருந்தாள்.

"அக்கா, ஹவ் ஆர் யூ? சகி பாப்பா எப்படி இருக்கா அக்கா? எனக்கு உங்களையெல்லாம் பார்க்கணும் போல இருக்கு. இப்போ லீவ் தானே அக்கா. நீ வாயேன் இங்க ஹாலிடேய்ஸ்க்கு!" என்றாள் இடைவெளி விடாமல்.

"ஹப்பா, பேசி முடிச்சுட்டியா? முதுகு, மூச்சு ஏதும் புடிக்கப் போகுது மிருது!" சிரிப்பும், அக்கறையுமாகச் சகோதரிகள் இருவரும் உரையாடினர்.

"அத்தான் கிட்டே கேட்டுட்டு நான் வரதைப் பத்திச் சொல்றேன். உன் டெலிவரி டைம் அப்போ வர முடியுமா பார்க்கிறேன். ஆனா அப்போ இந்த வாலுகளையும் கூட்டிட்டு வந்தா வீடு ரெண்டு பட்டுடும்!" என்று சந்த்யா கூற, "அவுங்க இல்லாம வந்தியோ, ஏர்போர்ட்லேயே திருப்பி பாக் பண்ணி அனுப்புச்சுடுவேன், மரியாதையா குழந்தைகளைக் கூட்டிட்டு வா, என்ன!" என்ற மிரட்டலோடு போன் குழந்தைகளிடம் கை மாறியது.



அத்தை, சித்தி, மித்து சித்தி என்ற மழலைகளில் தன் நெஞ்சத்தைப் பறி கொடுத்தவள், இடை இடையே கணவனிடமும், பெற்றோரிடமும் அவர்களைப் பற்றி ஆச்சரியப்படவும் மறக்கவில்லை.

கடைசியாகக் கார்த்திக், "அத்தை, இருங்க, கதிர் சித்தப்பா பேசணுமாம்!" என்று கூறியதும் மிருதுளாவின் முக மாற்றத்தை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த நிகிலின் புருவம் நெரிந்தது.



## 16



மூவரும் மிருதுளாவை ஒரு திகிலோடு பார்த்துக் கொண்டிருக்க, அவளோ போனையே வெறித்துக் கொண்டிருந்தாள்.

அதற்குள் அங்கே கதிர், 'மிருதுமா, ரொம்ப ரொம்ப சாரிடா. ப்ளீஸ்மா நான் செய்தது எல்லாம் மன்னிக்க முடியாத தப்பு தான். நான் வேற என்ன செய்ய முடியும்? சாரி சாரி சாரி!" என்று படபடத்தான்.

அவன் சொல்வது காதில் விழுந்த போதிலும், ஒன்றும் சொல்லாமல் இன்னும் கொஞ்சம் நேரம் அந்த போனையே பார்த்துக் கொண்டிருந்தாள். பார்வை அதில் இருந்த போதிலும் மனம் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த அந்தக் கோரச் சம்பவத்தையும், தான்

வாங்கிய அடிகளையும் எண்ணி அடங்கியிருந்த வருத்தம் கோபமாக வெளிப்படக் காத்திருந்தது.

''மிருது! மிருது!'' என்று அவன் தவிக்க, இங்கே நிகில், ''பேபி ப்ளீஸ்!'' என்று சற்று முன்னர் செய்த அதே சமாதானக் கொடியைப் பறக்கவிட நினைத்தான்.

யாரும் எதிர்பாராத சமயத்தில் போனை கட் செய்தவள், வேகமாக எழுந்தாள். எழுந்தவளைக் கைப்பற்றி நிறுத்திய நிகில், ''ரிது, என்ன பழக்கம் இது? உனக்குப் பேசப் பிடிக்கலனா, சும்மா எழுந்து போக வேண்டியதுதானே, நாங்க பேசுவோம் இல்ல'?' என்றாள் கடுப்பாக.

ஒன்றும் சொல்லாமல் கையை உதறித் தன்னை விடுவித்துக் கொண்டு, அங்கிருந்து நகர எத்தனித்தாள். சாருமதி அவளை நெருங்கி, ''கண்ணமா, அவன் செய்தது தப்பு என்று தான் சொல்கிறானே, அவனோடு பேசக்கூடாதா? ரொம்ப பாவம் மிருது அவன்!'' என்றார்.

''எப்போ பார்த்தாலும், உங்களுக்கு அவன் தான் ரொம்ப உசத்தி, அவன் செய்தது பத்தாது என்று நீங்களும் தானே அடிச்சீங்க, என்னால மன்னிக்க முடியாது, யாரோடும் பேச முடியாது!'' என்று வேதாளம் திரும்பி மரம் ஏறியது.

''சும்மா இருங்க அத்தை, இப்ப என்ன நீ யாரோடையும் பேச மாட்டே! அவ்ளோதானே! போ, மேல போய் உட்காரு, நான் வரேன்'' என்று விட்டுத் திரும்பி போனைக் கையில் எடுத்தான்.

அவன் சொன்னது எல்லாம் மறக்க, ''யாருக்கு போன் பண்றீங்க, கதிருக்கா, அவனோடு நீங்க பேசக்கூடாது!'' என்று அவன் கையிலிருந்து போனைப் பிடுங்கினாள்.



''ஹே, அறிவு கெட்டவளே! எதுக்கு இப்ப பறிக்கிற போனை. நான் யாரோடு வேணுமானாலும் பேசுவேன் - உனக்கு என்ன, உனக்குத் தான் பேசப் பிடிக்கல இல்ல, பேசாம ரூமுக்குப் போ!'' என்றவாறே திரும்பவும் டயல் செய்தான்.

கோபத்தில் குரல் நடுங்க, ''நீங்க நீங்க... இப்ப அவன் கிட்ட பேசுனீங்க, நான் திரும்பப் போய் பால்கனில போய் உட்கார்ந்துப்பேன். என்ன செய்தாலும் வரவே மாட்டேன்!'' என்றாள்.

சிவநாதன் அதில் பதற்றமடைந்து, ''ஐயோ வேணாம் கண்ணம்மா. உடம்புக்கு எதாவது வந்து விடும். மாப்பிள்ளை, பண்ணாதீங்களேன்!'' என்று நிகிலிடம் மன்றாடினார்.

அவரைக் கண் ஜாடையில் சும்மா இருக்கச் சொல்லிவிட்டு மனைவியிடம், ''போ ரிது கண்ணா போ, போய் உக்காந்துக்கோ. உன்னை யாரும் கூப்பிடவே மாட்டோம். நீ போ ராஜாத்தி!'' என்று அவளை விரட்டுவதிலேயே குறியாக இருந்தான்.

தன் கடைசி ஆயுதமும் செல்லுபடியாகாததினால் அவனைத் தன் முறைப்பில் குளிப்பாட்டிவிட்டு மேலே சென்றாள். அவள் நகர்வதற்காகவே காத்திருந்தாற்போல் நிகில் கையிலிருந்த போன் சீறியது.

அதை எடுத்தவன், ''ஹலோ கதிர், நீங்களும் ட்ரை பண்ணிட்டிருந்தீங்களா? கவலைப் படாதீங்க கதிர். இன்னும் ரெண்டு மூணு நாளுல சரியாகிடுவான்னு நம்பலாம். அத்தைகிட்ட தரேன்,'' என்று சாருமதியிடம் கொடுத்தான்.

மாமனாரிடம் ''மாமா, உங்கள் பெண்ணெனும் பிசாசு என்ன செய்கிறது என்று பார்த்துவிட்டு வரேன், நீங்க பேசுங்க!'' என்றான்.

''அவளை ஒன்றும் சொல்லாதீங்க மாப்பிள்ளை, பார்த்துப் பேசுங்க என்ன!'' என்றார் ஒரு சங்கடமான முறுவலுடன்.

''சரி மாமா,'' என்று அவனும் சிரித்துவிட்டுப் படியேறினான்.

கட்டிலில் உர்ரென்று அமர்ந்திருந்தவளைப் பார்த்தவன் பார்க்காதது போல் பால்கனிப் பக்கம் போய் எட்டிப் பார்த்துவிட்டு, ''அய்யயோ இங்கே யாரோ வந்து கதவை பூட்டிக் கொள்ளப் போவதாகச் சொன்னாங்களே! நீ யாரையாவது பார்த்தியா ரிது? ரொம்ப வீராப்பா சொல்லிட்டு வந்தாங்களா, அது தான் காணோமே என்று கேட்டேன்!'' என்றான் அப்பாவியாக - இன்னும் எங்கேயோ தேடிக் கொண்டிருப்பது போல் பாவனை செய்து கொண்டு.

''கொழுப்பு கொழுப்பு, உடம்பில இடமில்லாம வெளியே வழிஞ்சு ஓடுது!'' என்று சத்தமாகவே முணு முணுத்தாள் மிருதுளா.

''என்ன பாராட்டுறியா ரிது, அதைக் கொஞ்சம் சத்தமாத்தான் செஞ்சால் என்னவாம்!'' என்றவாறே அருகில் அமர்ந்து அவள் கன்னத்தில் தட்டினான்.

''ஆமா, பாராட்டுறாங்க உங்களை! கதவிலிருந்த லாக் எல்லாம் எங்கே? ரூம் டோர் லாக் கூடக் காணோம்!'' என்றாள் எரிச்சலுடன்.



''ரூம் டோர் லாக் மட்டுமில்ல, பாத்ரூம் லாக் கூட இருக்காதே. நீ பார்க்கலையா?'' என்றான் முகத்தை இன்னும் பாவமாக வைத்துக் கொண்டு.

''ச்சே, என்ன நிக்கி, ஏன் இப்படிச் செய்றீங்க???'' என்றாள் எரிச்சல் மிகுதியாக.

''ஆமா, நீ பாட்டுக்கு எங்கேயாவது போய் லாக் பண்ணிட்டு என்னைத் தவிக்க விடுவ? இன்னைக்குக் கண்டிப்பா இது மாதிரி நடக்கும்னு எனக்குத் தெரியும், அதனாலதான், எப்படி நம்ம ஐடியா!'' என்றான் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு.

''அய்யே, சகிக்கல, நீங்களும் உங்க ஐடியாவும்!'' என மிருது சலித்துக் கொள்ள,

''என்னோட ஐடியாவக் குறை சொல்றது இருக்கட்டும், மேடம்க்கு இதை விட்டா வேற ஐடியாவே கிடைக்காதா? சரியான குந்தாணி ரிது குட்டி நீ!'' என்றான் சிரிப்புடன்.

''யூ, குந்தாணி சொல்லாதீங்க சொல்லாதீங்க எத்தனை தடவை சொல்றது. இருங்க இருங்க. என்னையா குந்தாணி சொன்னீங்க, அப்பாவும், சுகிமாவும் வரட்டும். என்ன செய்றேன் பாருங்க. அவுங்க வரவரைக்கும் ஏன் இருக்கணும்??? எங்க டாடிகிட்ட போய்ச் சொல்றேன்,'' என்று எழுந்தவளை இழுத்துத் தன் மடியில் அமர்த்திக் கொண்டவன்.

''இன்னும் சின்னக் குழந்தை மாதிரி கம்ப்ளைன்ட் ரிப்போர்ட் வாசிச்சுகிட்டு, கொஞ்சமாவது வளருடா ரிது!'' என்றான்.

''விடுங்க, என்னைக் கொஞ்சம் முன்னாடி திட்டினீங்க இல்ல, இப்போ என்ன கொஞ்சல் வேண்டியிருக்கு, நான்

போகணும்.'' என்று அவன் பிடியிலிருந்து விடுபட முயன்றாள்.

''சும்மா சும்மா, எண்ணெயில விழுந்த அப்பளம் மாதிரி குதிக்காத! என்ன பிரச்சனை உனக்குக் கதிர்கிட்ட பேசுறதுல?'' என்றான் அவளை இன்னும் இறுக்கியவாறே.

''அவன் என்னை எப்படி அடித்தான் தெரியுமா, ரத்தம் எல்லாம் வந்துச்சு!'' என்று சிறு குழந்தை போல் கூறியவளை மனம் கொள்ளை போகக் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டான்.

''நான் அடி வாங்கினேன்னு சொல்றேன். அதுக்குப் போய் கிஸ் பண்றீங்க, என்ன நிக்கி!'' என்று கன்னத்தைத் துடைத்துக் கொண்டாள்.

''அடிப்பாவி, நான் கிஸ் பண்ண கன்னத்தையா துடைக்கிற?'' என்று விட்டு இன்னும் இன்னும் அவளை வம்பு செய்து அடிகள் பல வாங்கினான்.

''அச்சோ, அம்மாவும், டாடியும் கீழே இருக்காங்க. நான் போகணும். கொஞ்சம் விடுறீங்களா??'' என்று கடைசியில் வன்முறையைக் கைவிட்டுக் கெஞ்சலுக்குத் தரை இறங்கினாள்.

''சரி சரி, ரொம்ப கெஞ்சுற! பார்க்க ரொம்பப் பாவமா இருக்கு, On one answer I will leave you!'' என்றான் மிகுந்த பிகுவுடன்.

''என்னது, சீக்கிரம் சொல்லுங்க, நான் போகணும்,'' என்று திரும்பிப் பழைய பாட்டைப் பாடினாள் மிருதுளா.

''அது என்ன, விபு, சது அண்ணி, மீரா அக்கா எல்லார் கூடவும் பேசுற. கதிர் மட்டும் என்ன பாவம் பண்ணினார்?'' என்றான் அவள் கண்களை நேராக நோக்கி.



''இப்போ தானே சொன்னேன், எல்லாரும் தப்பா நினைச்சாங்கதான், ஆனா கதிர் அண்ணாவும், அத்தானும் நாங்க ரெண்டு பேரும் பண்ணாத தப்புக்கு எல்லார் முன்னாடியும் எங்களை எப்படி அடிக்கலாம்? அவுங்ககிட்ட எல்லாம் பேசினேன் என்றால் எனக்கு எல்லாரும் தேடி வந்தது, கொஞ்சம் கோபம் குறைந்து ஏக்கம் வந்துவிட்டது. அதுனாலதான். அதோட நீங்களும் காலையில் ரொம்ப சொன்னதால் கோபத்தை மனதில் வைத்துக்கொண்டே இருப்பதால் என்ன புண்ணியம் என்றெண்ணித் தான் பேசினேன்,'' என்றாள் அவளும் அவன் கண்களைப் பார்த்து. சொல்வதில் பிழை ஒன்றுமில்லை என்னும்பொழுது ஏன் தயங்க வேண்டும்?

''எல்லாம் சரி தான் பேபி. அதே போலக் கதிரிடமும் பேசுவதற்கு என்ன என்று தான் கேட்கிறேன்,'' என்றான் நிகிலும் அவன் பிடியில் நின்றவாறே.

''கோபம் குறைந்துவிட்டது என்றுதான் சொன்னேனே ஒழிய முழுதாகப் போகவில்லை, முழுதாகப் போக அவர்கள் ஒன்றும் சின்னத் தப்பு செய்யவில்லை. ஞாபகம் இருக்கட்டும். ஆமா, நீங்க ஏன் அவர்கள் பக்கமே யோசிக்குறீங்க, என் பக்கம் உள்ளதையும் என்னோட மனசையும் ஏன் புரிஞ்சுக்க மாட்டேன்றீங்க?'' என்றாள் அவளும் அவனுக்குச் சளைத்தவள் இல்லை என்பது போல தன் பிடியில் நின்று கொண்டே.

''உன்னை உன்னைவிட எனக்குத் தெரியும் என்பதால் தான் சொல்கிறேன்!'' என்றான் அவள் கண்ணை ஊடுருவியபடி.

''இல்ல நிக்கி, என்னால மறக்க முடியல. எனக்குக் கொஞ்சம் டைம் கொடுங்க. புரியலையா நிக்கி?'' என்று

அவள் கெஞ்சவும் அது தாங்காமல், "Ok baby, take your time, I will be happy if you change your mind before your delivery!" என்றான் கணவன்.

"ஹ்ம்ம்" என்று அரை மனதாக ஒத்துக் கொண்டு எழுந்தவள். "அந்த பாத்ரூம் லாக்கையாவது மாட்டுங்க, ப்ளீஸ்!" என்றாள் அவன் கன்னத்தைப் பலமாகக் கிள்ளி.

"ஆஆஆ, வலிக்குது!" என்று விட்டுக் கதவைச் சரி செய்யச் சென்றான்.

கதவைச் சரி செய்துவிட்டு அவன் கீழே சென்றபோது சிவநாதனும் சாருமதியும் கவலை அப்பிய முகத்துடன் அமர்ந்திருந்தனர்.

"என்ன ஆச்சு மாப்பிள்ளை?"

"சும்மாதானே இருக்கா, ஒண்ணும் பிரச்சனை இல்லையே?"

"அவளை எங்கே காணோம்?"

"இன்னும் கோபம் ஜாஸ்தி ஆகிடுச்சா?"

"எங்க மேலயும் நேத்திக்கு வடிந்த கோபம் திரும்ப ஏறிவிட்டதா?" என்று ஆயிரம் ஆயிரம் கேள்விகளால் அவனைத் திணறடித்தனர்.

"அய்யயோ, உங்க பொண்ணுக்கு ஒண்ணும் இல்லை, எனக்குத் தான்!" என்றான் அவனும் பாவமாக.

"என்ன ஆச்சு மாப்பிள்ளை, உங்களைக் கோபித்துக் கொண்டு விட்டாளா? பேச மாட்டேன் என்று விட்டாளா என்ன?" என்றார் சாருமதி கவலையாக.

"சும்மா ஒண்ணும் கோபிச்சுக்கல, பாருங்க, என்னை எப்படிக் கிள்ளி வைத்திருக்கான்னு, உங்க பொண்ணுக்கு



கை ரொம்ப நீளம் அத்தை. கொஞ்சம் கண்டிங்க என்ன? அவ வந்தவுடன்!" என்று அவள் வந்து இவனைப் பற்றி கம்ப்ளைன்ட் ரிப்போர்ட் வாசிப்பதற்கு முன் சாரே ஒரு கிள்ளுதல் ரிப்போர்ட் வாசித்தார்.

"அச்சோ, என்ன வேலை பண்றா பாருங்க உங்க பொண்ணு!" என்று கணவரிடம் முறையிட்டு விட்டு, தன் அருமை மருமகனிடம் திரும்பி, "வரட்டும் மாப்பிள்ளை. நான் கேட்கிறேன்," என்று சிறிது கோபத்துடன் சொல்லிவிட்டு மகள் வருவதற்காகக் காத்திருந்தார்.

கீழே இறங்கி வந்த மிருதுளா தந்தையிடம் போய் அமர்ந்து கொண்டு, "சாரி டாடி, ரொம்ப நேரமா தனியா உக்கார வச்சுட்டுப் போயிட்டேன். நான் கொஞ்சம் உங்க மடியில படுத்துக்கட்டா?" என்றாள் அவர் கைகளை வருடியவாறே.

"கேக்கணுமா கண்ணா? படுத்துக்கோ!" என்று மகளைத் தன் மடியில் சாய்த்துக் கூந்தலை வருடி விட்டார்.

அதை நெகிழ்வுடன் பார்த்துக் கொண்டிருந்த சாருமதியிடம் கண்ணைக் காண்பித்துத் தான் சொன்னதை நினைவூட்டினான்.

"மிருது, கோபம் இருந்தா வாயால பேச வேண்டியதுதானே, எதுக்குக் கை நீட்டி மாப்பிள்ளையை அடிக்குற?" என்றார் சாருமதி கோபமாக.

ஒன்றும் புரியாமல் முழித்துவிட்டு, "நான் எங்க அடிச்சேன்?" என்று குழம்பி, பின் தன் அரும்பெரும் கணவனின் திருவிளையாடல் என்று முடிவு செய்து அவனை முறைத்தவள், "யாரு, உங்க அழகு மாப்பிள்ளை

சொன்னாராக்கும்! அவர் சொல்லறதை நம்பி நீங்களும் என்னைக் கேட்குறீங்களே. உங்களை என்ன செய்றது?'' என்று முறைப்பைத் தாயிடம் குடிபெயர்த்தாள்.

''ச்சு, மாப்பிள்ளை ஒண்ணும் பொய் சொல்ல மாட்டார். நீதான் சும்மா ஏதானும் வம்பு செய்திருப்பாய்?''

''ஹய்யோடா, உங்க மாப்பிள்ளை பெரிய ஹரிச்சந்திரர், பொய் சொல்ல மாட்டாராம். ரொம்ப தான் சொல்லிட்டேன்!'' என்று சலித்துக் கொண்டவள் தந்தையிடம் திரும்பி,

''பாருங்க டாடி, நான் ஒண்ணுமே செய்யல!'' என்று சிணுங்கினாள்.

சிவநாதன் ஒன்றும் சொல்லாமல் மெல்லச் சிரித்துக் கொண்டே மகளையும் அவள் கணவனையும் ரசித்தார்.

''என்னைக் குந்தாணி குந்தாணின்னு சொல்றாங்க டாடி நிகில், அதை உங்ககிட்டே சொல்லுவேன் என்று மிரட்டினதுக்குத் தான் அம்மாகிட்டே இல்லாததையும் பொல்லாததையும் போட்டுக் கொடுத்துருக்காங்க!'' என்று இரு குழந்தைகளின் தாய் ஒரு சிறு குழந்தையாய் மாறிப் புகார் செய்தாள்.

''ஹே பேபி, முழுப் பூசணிக்காயை உன் கண்ணுக்குள்ள மறைக்காத, என்னைக் கிள்ளல நீ?'' என்று அவனும் வம்பு செய்தான்.

அவன் பேசியதில் உண்மை இருந்தாலும் ஒத்துக் கொள்ள மனம் வராமல், ''ஹ்ம்ம் ஆமா அப்படித் தான் கிள்ளுவேன், இன்னொரு டைம் கிள்ளட்டா? ரொம்பப் பேசுனா, சுகிமா வந்தவுடன் கூட்டணி போட்டு



உண்டில்லைன்னு பண்ணிடுவேன், ஜாக்கிரதை!'' என்று தன் மிரட்டலை முன் வைத்தாள்.

''நீ உங்க மாமியார் கூடக் கூட்டணி போட்டால், நான் என் மாமியார் கூடக் கூட்டணி போட்டுட்டுப் போறேன், இந்த மிரட்டல் வேலை எல்லாம் வேண்டாம் பேபி, வேண்டாம்!'' என்றான் சிரிப்புடன்.

''போடுங்களேன் யாரு வேண்டாம் என்று சொன்னா? உங்களுக்கு மாமியார் மட்டும் தான் கூட்டணி. புரியுதா? எனக்கு எங்க டாடி, எங்க அப்பா எல்லாரும் இருக்காங்க. ஞாபகம் இருக்கட்டும் என்ன,'' என்றாள் அவளும் சிரிப்புடன்.

மதிய உணவு நேரம் வரும் வரை இந்த வம்பு தொடர, வாசுகியும் விஸ்வநாதனும் வந்தவுடன் இன்னும் களைகட்டியது.

மிருதுவிற்குப் பிடித்த உணவு வகைகளைத் தன் கையால் தயாரித்து, தன் கையாலேயே அவளுக்கு ஊட்டி தன் பாசத்தைச் சாருமதி வெளிப்படுத்த, சிவநாதனோ தன் மகளின் வாழ்க்கையை நல்லபடியாக அமைத்துக் கொடுத்த இறைவனுக்கும், அவளுக்குத் தாய்க்குத் தாயாய், தோழிக்குத் தோழியாய் இருக்கும் வாசுகிக்கும், தந்தைக்கு நிகராகத் தன் மகள் மதிக்கும் விஸ்வநாதனுக்கும் மனதால் மட்டுமல்லாமல் வார்த்தையாலும் தன் நன்றிகளை நவின்றார்.

உணவு முடிந்து மிருதுளாவைத் தாய் தந்தையிடம் விட்டு விட்டு மற்ற மூவரும் ஒரு சின்னத் தூக்கம் போடச் சென்றனர். அவள் கிளம்பி வந்த அந்த மூன்று ஆண்டுகளில் நடந்த அனைத்து நிகழ்வுகளையும் இருவரையும்

மாறி மாறித் துளைத்தெடுத்தவள் அவள் பிரிந்து வந்ததற்குக் காரணமான தினத்தை மட்டும் கவனமாகத் தவிர்த்தாள்.

அவள் முயற்சி புரிந்து சிவநாதனும் அதைப் பற்றிப் பேசாமல் அவளுக்குப் பிடித்ததாகப் பேசினார். கடைசியாக, ''கண்ணம்மா, நான் கதிர்க்குப் பரிந்து பேசுகிறேன் என்று நினைக்காதே. மீராவும் அவனோடு இந்த மூன்று ஆண்டுகளாக என்ன சொல்லியும் பேசுவதில்லை, அவனும் கல்யாணம் என்றாலே உன் நினைவால் வேண்டாம் வேண்டாம் என்கிறான். ஒரு நாள் கூட அவன் இதை நினைத்துக் கண்ணீர் விடாமல் தூங்கியதில்லை. அதனால் நீ ஏதாவது முடிவு செய்திருந்தால் அதைக் கொஞ்சம் மறு பரிசீலனை செய் என்றுதான் கேட்கிறேன்,'' என்று மிருதுளாவைத் திகைக்க வைத்தார்.

''என்னது, மீரா அண்ணி ஏன் பேசுறதில்ல?'' என்றவளுக்கு அன்று மீராவைக் கதிர் கூறிய வார்த்தைகளை ஒரு சங்கடத்துடன் சாருமதி கூறினார்.

''ஹோ, அப்படிச் சொன்னானா? அப்போது நான் இருந்த மனநிலையில் எனக்கு ஒன்றும் புரியவில்லை என்று நினைக்கிறேன், ஆனாலும் ரொம்ப ஜாஸ்தி டாடி அவனுக்கு. அவனை யாராவது அப்படிச் சொன்னால் என்ன செய்வான், சரியான ஸ்டுபிட்!'' என்று பொரிந்தாள்.

அதன் பின் பெற்றோர் இருவரும் அவளைப் பாதிக்கும் அந்த விஷயத்தை அப்போதைக்கு ஒத்தி வைத்தனர். எந்த நம்பிக்கையில் என்று கேட்கறீங்களா? என்ன நம்பிக்கை என்று போகப் போகத் தெரியும்.



மாலையில் அனைவரும் பக்கத்தில் இருக்கும் பீச் வரை சென்று அங்கே சன்செட் பார்த்துவிட்டு அருகிலிருந்த பார்க்கில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

சிவநாதனும், சாருமதியும் அவளது பிரசவம் முடியும் வரை அங்கே இருக்கலாமா என்று கேட்க வாசுகி, ''அப்புறம் எங்கே போகப் போறீங்க? உங்களை நாங்க விடுறதா இல்ல. குழந்தை பிறந்து ஒரு இரண்டு மாதமாவது இருக்கணும்,'' என்று கூறித் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்தார்.

அடுத்த வாரயிறுதியில் நண்பர்கள், சுற்றி இருக்கும் சில தூரத்து உறவினர்களை அழைத்து வளைகாப்பு நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. நடுவில் இருந்த ஒரு வாரமும் நிகில் தன் அலுவலகத்தில் பிஸியாக இருக்க, ரிது வேலை முடிந்து வீட்டில் இருக்கும் மீதி நேரத்தைத் தன் பெற்றோருடன் செல்லம் கொஞ்சுவதில் பிஸியாக இருந்தாள்.

வளைகாப்பு நாள் அழகாக விடிய, நிகிலும் விஸ்வநாதனும் மாலையில் நடக்கவிருக்கும் விழாவிற்குத் தேவையானவற்றை வாங்குவதில் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தனர். வாசுகியும், சாருமதியும் மிருதுளாவின் மேற்பார்வையில் சமையலில் ஜமாய்த்துக் கொண்டிருந்தனர். சிவநாதனோ எப்போதும் போல் மகிழ்ச்சியில் பேச்சில்லாமல் தன் நன்றிப் படலத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தார்.

மாலையில் நிகில் சென்னையில் இருந்து வாங்கி வந்த அந்த அழகிய, குட்டிக் குட்டி கிருஷ்ணன் போட்ட புடவையைச் சாருமதியின் உதவியுடன் அணிந்து மனையில் வந்தமர்ந்த மிருதுளாவை விட்டு நிகிலின் பார்வை ஒரு கணம் கூட அகலவில்லை.

கண்ணோடு கண் நோக்கித் தன் கணவனிடம் மௌன பாஷையில் உரையாடிக் கொண்டிருந்தவள் வந்தவர்களைச் சரியாகக் கவனிக்கவில்லை.

கைகளை வந்தவர்களுக்குக் கொடுத்துவிட்டு, மனதை நிகிலிடம் வைத்திருந்தவளை, ''மிருதுமா, இந்தப் புடவையில் ரொம்ப அழகா இருக்கடா!'' என்ற குரல் தான் இருக்கும் இடத்திற்குக் கொண்டு வந்தது.

நிமிர்ந்து அந்த குரலுக்குச் சொந்தக்காரரைப் பார்த்தவுடன், அதிர்ச்சியிலும், ஆச்சரியத்திலும், சந்தோசத்திலும் தன்னையும் அறியாமல் கண்ணில் நீர் தேங்கியது மிருதுளாவிற்கு.



## 17



''அண்ணா!'' என்று அழைத்தவாறே மனையை விட்டு எழுந்தவளை, ''மிருதுமா'' என்று பாசம் பொங்க அணைத்து நெற்றியில் முத்தமிட்டான் கதிரவன்.

''எப்படி இருக்க அண்ணா? எப்ப வந்தே?'' என்றாள் மிருதுளா சந்தோசம் ததும்பிய குரலில்.

''நல்லா இருக்கேன்டா, நீ எப்படி இருக்கே, உன்னைப் பார்த்து எத்தனை நாள் ஆச்சுடா!'' என்று அண்ணன் தழுதழுக்க, தங்கையும், ''நான் எல்லாரையும் ரொம்ப மிஸ் பண்ணினேன் தெரியுமா?'' என்று கூறி ஒரு பாசமலரை அரங்கேற்றினாள்.



''என்னை மன்னிச்சுடுடா, நான் செய்ததற்கு என்னைத் திரும்ப ஒரு நூறு அடி வேண்டுமென்றாலும் அடிச்சுக்கோ. பேசாம மட்டும் இருக்காதே. நீ எல்லார்கிட்டயும் பேசிட்டு என்னை மட்டும் தவிர்த்த போது ரொம்ப கஷ்டமா... ஏன்டா இருக்கோம் என்றிருக்குடா?'' என்றான் தமையன் அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு.

''நூறு அடி போதுமா, நான் ஆயிரம் அடி வைக்கலாம் என்றிருக்கேன்!'' என்று மறு கையால் அவனது கண்களைத் துடைத்தபடி. அவன் தன்னை இவ்வளவு தூரம் வந்து பார்த்து மன்னிப்பு வேண்டுவதாலோ, தாய்மையும், காதலும் தந்த மயக்கமோ, ஏதோ ஒன்று அவளை அப்படிச் செய்ய வைத்தது.

''எத்தனை வேண்டுமென்றாலும் அடிச்சுக்கோ, பேசுவேதானே?'' என்றான் தவறு செய்து மாட்டிக் கொண்ட சிறுவனைப் போல்.

''ஆனா நீ ஏன் என்னை அடிச்சே?'' என்று திரும்ப ஆரம்பித்த இடத்திற்கே வந்தாள் மிருதுளா.

அருகில் நின்றிருந்த வாசுகி நிலைமை மோசமாகி விடுமோ என்று பயந்து, ''அதை அப்புறம் கேட்டு, உங்க அண்ணாவிடம் நைட் முழுசும் சண்டை பிடிக்கலாம், இப்போ எல்லாரும் வெயிட் பண்றாங்க. உக்காரு ரிது! நீங்க வாங்க தம்பி!'' என்று இருவரையும் தற்காலிகமாகப் பிரித்து ஒரு மன்னிப்பு வேண்டும் படலத்தைத் தவிர்த்தார்.

வந்தவர்கள் அனைவரும் வளையல் போட்டு முடித்தவுடன், நிகிலை அழைத்தனர். இவள் என்னுடையவள்

என்ற கர்வத்துடனும், பூரிப்புடனும், மனம் கொள்ளாக் காதலுடனும் வந்த நிகிலனை அப்படியே இருக்கும் இடம் மறந்து தழுவிக் கொண்டு நெஞ்சில் முகம் புதைக்க வேண்டும் என்றெழுந்த பேராவலைப் பெரும் பாடுபட்டு அடக்கி அவனைப் பார்த்தபடி அமர்ந்திருந் தாள் மிருதுளா.

கன்னம் நிறைந்த சந்தனமும், கை கொள்ளா வளையல்களும், தாய்மையின் பூரிப்பும், தாய் தந்தை யரைப் பார்த்துவிட்ட நெகிழ்வும், உடன் பிறந்தவர் களிடம் பாராட்டி வந்த கோபம் குறைந்த மனநிலையும் இயற்கையிலேயே அழகோவியமாய் இருந்தவளை மெருகேற்றி இருந்தது.

அவளிடம் வந்தவள் குளித்துச் சந்தனத்தைக் குழைத்துக் கன்னத்தில் பூசிவிட்டு, பூத் தூவி அவளை மனதார வாழ்த்தி, அவளுக்கு நல்ல உடல் நலம் இருக்க வேண்டும், ஒரு குறையும் இல்லாமல் பெற்றுப் பிழைக்க வேண்டும் என்று இறைவனை வேண்டினான். பிறகு தன் சட்டைப் பையில் இருந்து அவன் அவளுக்காக வாங்கியிருந்த வைர வளையல்களை எடுத்து அவள் கை நோகாமல் அதை அணிவித்தான்.

இவை அனைத்தையும் கண் கொட்டாமல், இமைக்க மறந்து, கன்னம் சிவக்க ரசித்திருந்தாள் மனைவி. முத்த மிடத் துடித்த இதழ்களை அடக்கி அவள் கன்னத்தைத் தட்டிவிட்டு அங்கிருந்து நகர்ந்தான் நிகிலன்.

வளையல் போடும் நிகழ்வு முடிந்தவுடன், எல் லாரையும் வீட்டின் பின்புறம் உள்ள தோட்டத்தில் வைக் கப்பட்டிருந்த பஃபே முறை உணவிற்கு அழைத்துச் சென்றனர் வாசுகி, நிகில் மற்றும் விஸ்வநாதன்.



நிகிலும், விஸ்வநாதனும் விருந்தினர்களைச் சுற்றிச் சுற்றி வந்து கவனிக்க, வாசுகியும் சாருமதியும் கிளம்பு பவர்களுக்குக் கொடுப்பதற்குத் தாம்பூலப் பைகளைத் தயார் செய்து கொண்டிருந்தனர்.

மிருதுளா தன் உடன் வேலை செய்பவர்களின் அருகில் நின்று அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தாள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாட்டில் இருந்து இங்கே வந்தவர்கள் என்பதால், அன்று நடந்த சடங்குகள், அவளைக் கேள்வி கேட்டுத் துளைப்பதற்கு ஏதுவாக இருந்தன.

ஒரு அளவிற்குப் பதில் சொன்னவள், பொறுமை இழக்கும் சமயத்தில், அவளது பார்வையைப் புரிந்து கொண்டு நம்ம ஆபத்பாந்தவர் வந்து அவளைக் காப்பாற்றிச் சிவநாதனிடம் விட்டுவிட்டுத் தன் நண்பர் களிடம் சென்றான்.

''என்ன கண்ணமா, ரொம்ப சோர்ந்து தெரியுறே, அம்மாவ வரச் சொல்லட்டா? ஏதாவது வேணுமா மிரு துமா?'' என்று உருகியவரிடம்,

''இல்ல டாடி, அம்மாவும் சுகிமாவும் ஏதோ வேலையா இருக்காங்க, நீங்க இப்போ போய்க் கூப்பிட்டா அம்மா வந்து, 'குனிஞ்சு நிமிந்து வேலை செஞ்சா இந்த சோர் வெல்லாம் வராது, நீ ஒண்ணும் செய்யாதே! அண் ணியே எல்லாம் செய்யட்டும்... நல்லா வேடிக்கை பாரு! உன்னைச் சொல்லி ஒண்ணும் ஆகப் போறதில்லை... அண்ணி ஒண்ணும் சொல்லலை என்பதற்காக நீ இப்படி இருக்கணும்னு ஏதாவது சட்டம் இருக்கா என்ன?' என்று முடிவே இல்லாம திட்டுவாங்க. நம்மளால கேக்க முடியாதுபா!'' என்றாள் பாவனையுடன்.

''சரியான வாய்!'' என்று செல்லமாகத் தலையில் தட்டிவிட்டு, ''அம்மா சொல்வது போல் ஏன் செய்கிறாய் கண்ணா?'' என்றார் அவர் பங்கிற்கு.

''நீங்களுமா?'' என்பது போல் பார்த்துவிட்டு, ''என்ன என்று தெரியவில்லை, என்ன மாயமோ, என்ன மந்திரமோ!'' என ராகம் படித்தவள் கொஞ்சம் சீரியஸ் ஆக மாறி, ''சுகிமா எனக்கு ரொம்பவே செல்லம் கொடுக்குறாங்க. நிகில் விட நான் தான் ரொம்ப செல்லம்! சோ என்னை ஒன்றும் செய்யவிட மாட்றாங்க. நான் என்ன செய்யட்டும்?'' என்று தன் மேல் எந்தப் பிழையும் இல்லை, தான் ரொம்ப நல்லவள் என்பது போல் முடித்தாள்.

''ஆமா ஆமா, நீ என்ன செய்வே? பாவம்டா கண்ணா நீ!'' என்றார் தந்தையும் சிரிப்புடன்.

''உங்களுக்குத் தெரியுது, உங்க மனைவிக்கும், மருமகனுக்கும் தெரியுதா, சரியான டியூப்லைட் ரெண்டு பேரும்!'' என்று கூறிக் கிண்கிணியாய்ச் சிரித்தாள்.

''என்ன ஜோக் சொல்லுங்க? நானும் சேர்ந்து சிரிப்பேன் இல்ல!'' என்று வந்தான் கதிர்.

''வேற என்ன ஜோக்? எப்போதும் போல் அம்மாவை வம்பு தான்! இப்போது நிகிலும் சேர்ந்திருக்கிறார்!'' என்றார் சிவநாதன் பதிலாக.

''சாப்பிட்டாயா அண்ணா?'' என்று குடும்பத் தலைவியாய் மாறி உபசரித்தவளைப் பார்த்துப் புன்னகை செய்து, ''சாப்பிட்டேன் மிருதுமா, எல்லாம் நல்லா இருந்தது!'' என்றான்.



''நல்லா இல்லாமல் போக வழியே இல்லையே!'' என்றவளைப் புரியாமல் பார்த்து, ''ஏன் நீ செய்தாயா?'' என்றான்.

''ச்சே ச்சே, அந்தக் கெட்ட பழக்கம் எல்லாம் நமக்குக் கிடையாதுபா. நான் தான் எல்லாத்தையும் சுவை பார்த்து, பாஸ் மார்க் போட்டு... இங்கே அனுப்பி வைத்தேன்!'' என்றாள் சிரிப்புடன்.

''கழுதை!'' என்று தந்தை செல்லமாக வைய, ''கல்யாணத்திற்குப் பிறகு வாய் குறையும் என்று பார்த்தால் ஜாஸ்தி தான் ஆகியிருக்கு!'' என்றான் அண்ணன்.

''அய்யே! கம்மியானா அவ்வளோ தான். நிகில் ஏறி மேஞ்சுடுவாங்க! இப்படி இருக்கும் போதே வால்தனம் தாங்கல!'' என்றாள் மிருதுளா கணவனைக் கண்களால் துழாவியபடி.

அவர்களை நோக்கி வந்த வாசுகி, ''அண்ணா! சாப்பிட்டீங்களா? கதிர் தம்பி நீங்க?'' என்று கேட்டு, அவர்கள் இருவரும் ஒப்புதலாகத் தலையாட்டிச் சாப்பிட்டோம் என்று சொன்ன பிறகு, மருமகளிடம் திரும்பி, ''நீ சாப்பிட்டு இருக்க மாட்டே. இங்கே சாப்பிடுறியா, இல்ல வீட்டுல உக்கார்ந்து சாப்பிடுறியா?'' என்று வினவினார்.

''எப்படி சுகிமா கரெக்ட் கரெக்ட்டா சொல்றீங்க!'' என்று அவர் கன்னத்தைப் பிடித்துச் செல்லம் கொஞ்சிக் கொண்டு செல்லும் மிருதுளாவை ஒரு நிறைவுடன் பார்த்திருந்தான் கதிர்.

தந்தையிடம் திரும்பி, ''இப்போ தான் எனக்கு நிம்மதியா இருக்கு, நீங்க கல்யாணம் பண்ணிக்கோ பண்ணிக்கோ என்று சொன்னப்ப எல்லாம் நான் மிருது

எப்படி இருக்காளோ, அவ எப்படி இருக்கான்னு தெரியாம எப்படி நம்ம நிம்மதியா குடும்பம் நடத்த முடியும், இப்படிச் செய்து விட்டோமே, அவள் என்ன ஆனாளோ என்று வருந்தியதற்கு எல்லாம் விடை கிடைத்த நிம்மதி இப்போதுதான் வருகிறது,'' என்றான் நிம்மதி முழுதாய் நிரம்பிய குரலில்.

''இன்னும் உன்னுடன் என்ன சண்டை போடப் போகிறாளோ என்று பயமாக இருக்கிறது கதிர்!'' என்று சிவநாதன் கவலைப்பட, ''அவள் என்ன சண்டை போட்டாலும், என்ன திட்டினாலும் என்ன அடித்தாலும் நான் வாங்கிக் கொள்வது என்ற முடிவுடன் தான் அப்பா வந்திருக்கிறேன், நீங்க கவலைப்படாதீங்க!'' என்று அவரைத் தேற்றினான் கதிர்.

பிறகு உணவு முடிந்து அனைவரும் கிளம்பினர். அனைவரையும் வழி அனுப்பி வைத்துவிட்டு, நிகிலும் கதிரும் வெளியே இருந்த பொருட்களை எல்லாம் உள்ளே கொண்டு வந்து விஸ்வநாதன் அதன் அதன் இடத்தில் அடுக்க உதவி செய்தனர்.

"நாங்க எல்லாரும் சாப்பிட்டாச்சு. இந்தச் சாப்பாட்டிற்குத் தினம் தினம் உன்னிடம் போராட வேண்டியிருக்கு. உன் மனதில் என்னதான் நினைப்போ, தெரியவில்லை! இரண்டு குழந்தைகளுக்கு ஆகாரம் வேண்டும், நீயும் தெம்பாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் கொஞ்சமாவது இருக்கா?'' என்று வாசுகி பொரிந்து கொண்டிருக்க, சாருமதியும் தன் மகளைப் போல் இனிமையாய் இல்லாவிட்டாலும் சுதி தப்பாமல் பின்பாட்டுப் பாடினார்.



''ம்ம்ம், பசிக்கல, நான் என்ன செய்யட்டும், வேணும் என்றால் மேலே ரூமில் போய்ச் சாப்பிடட்டுமா?'' என்றாள் அப்பாவியாக.

''ரூமில் போய் உன் புருஷன் கையால் சாப்பிடுவதற்குத் தான் இந்த அலும்பலா? முன்னாடியே சொல்வதற்கு என்ன? ம்ம்ம், எங்க ரெண்டு பேரையும் தேவையில்லாமல் விட்டுட்டு இருக்கே?!'' என்று அவள் கன்னத்தில் தட்டியவர், ''சரி போ, நான் அவனிடம் கொடுத்து அனுப்புகிறேன்,'' என்றார் சிரிப்புடன்.

அசடு வழிந்து விட்டு, அனைவரையும் பார்த்து மீண்டும் ஒரு முறை சிரித்துவிட்டு மாடியேறிச் சென்றாள் மிருதுளா.

உணவுடன் மேலே வந்தவன், கண்ணாடி முன்னே அந்தச் சேலையின் முந்தியை இப்படி அப்படி ஆட்டி அழகு பார்த்துக் கொண்டிருந்த மனைவியைப் பார்த்துவிட்டு, அவள் பின்னே ஓசைப்படாமல் வந்து பின்னாலிருந்து அணைத்தான்.

கழுத்தில் முகம் புதைத்து, ''இன்னைக்கு மேடம் செம அழகா இருந்தீங்க!'' என்றான்.

அவன் வளையல் போட்ட பொழுது தோன்றிய ஆசையை இப்போது நிறைவேற்ற எண்ணித் திரும்பி அவனை அணைத்து மார்பில் முகம் புதைத்தாள்.

''பேபி, பேபி, பேபி!'' இதற்கு மேல் வார்த்தைகள் வெளிவரவில்லை என்றாலும், கைகளும், உதடுகளும் அவைகளுக்காக அவன் நியமித்திருந்த வேலையை ஒழுங்கே செய்தன.

ஒரு அரை மணி நேர வேலைக்குப் பிறகு தன்னை முதலில் மீட்டுக் கொண்ட நிகில், ''பேபி, போய் டிரஸ் மாத்திட்டு வா... சாப்பிடலாம்! ரொம்ப நேரமாகி விட்டது!'' என்றான் கன்னத்தில் விளையாடியபடி.

''எனக்கு ஒன்னும் பசிக்கல!'' என்று கூறியவளின் பதிலில் இந்த நிலையை விட்டு விலக மனமில்லை என்ற பதிலே இருந்தது.

''சொல்றது கேள்,'' என்று அவளை மாற்றுடை எடுத்துக் கொடுத்து பாத்ரூமுக்குள் அனுப்பி வைத்தான்.

உடை மற்றி வந்தவளைத் தோளில் சாய்த்து உணவு கொடுத்து உறங்கச் செய்தான்.

கீழே இறங்கி அனைவரும் இருந்த பின் கட்டிற்குச் சென்றவனை எதிர்கொண்ட கதிர், ''மிருது எங்கே, நிகில்? தூங்கிவிட்டாளா? நான் அவளோடு பேசலாம் என்று வந்தேன்,'' என்றான் ஏமாற்றத்துடன்.

''இவ்வளவு அவசரமா அடி வாங்க? இப்போ தான் தூங்கினாள், இன்னைக்கு ரொம்ப அசந்து போய் விட்டாள். நாளைக்கு வீட்டில் தானே இருப்போம், நாளைக்கு அடிகளை வாங்கிக்கோங்க!'' என்று சிரிப்புடன் கூறிச் சாப்பாடு நடக்கும் இடத்திற்குத் தோளில் கை போட்டு அழைத்துச் சென்றான்.

''இன்னும் குழந்தையாகவே இருக்கா இல்ல நிகில், நீங்க என்பதால் சமாளிக்கிறீங்க.''

''ரொம்ப கஷ்டம்! சில சமயம் ரொம்பவும் படுத்தி விடுவாள். மாமா அத்தை வந்த அன்னைக்கு மாதிரி உயிர் போக வைத்து விடுவாள்!'' என்றான் நிகில் - அன்று பட்ட வேதனையில் இன்றும் சிலிர்த்தபடி.



''ம்ம்ம். ஆனா நீங்க நல்லா சமாளிக்குறீங்கன்னு அப்பாவும் அம்மாவும் ஒரே பெருமை!'' என்றான் அண்ணன்காரன்.

''சித்திரமும் கைப் பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்!'' என்று நிகில் கூறச் சிரிப்புடன் உணவைத் தொடர்ந்தனர்.

விழா முடிந்து அனைவரும் சென்றவுடன் நிகிலும் கதிரும் வெகு நேரம் தத்தம் தொழில், இளமைக் காலம், படிப்பு, கதிரின் திருமணம், நிகிலனின் எதிர்காலத் திட்டங்கள் அனைத்தைப் பற்றியும் அலசி முடித்த போது இருவரும் ஒருமையில் பேசிக் கொள்ளும் அளவுக்கு நல்ல நண்பர்களாகியிருந்தனர்.

''சரி கதிர், மணி இரண்டாகிவிட்டது. நீ போய்த் தூங்கு. பயணம் பண்ணது வேற சோர்வா இருக்கும். நாளைக்கு வாங்கப் போற அடிக்கு இன்னைக்குக் கொஞ்சம் தூங்கினாத்தான் முடியும்!'' என்று அவனைக் கிளப்பினான்.

''அவ பேசுனதே போதும் நிகில். என்ன அடித்தாலும் வாங்கிக்கலாம்,'' என்றான் நிம்மதி நிறைந்த குரலில்.

''இதைத் திரும்ப திரும்பச் சொன்னேன்னு வச்சுக்கோ... உன் தங்கைக்கு ரொம்ப ஏறிக்கும்! அப்புறம் உன் பாடு ரொம்ப கஷ்டம், சொல்லிட்டேன்,'' என்று அவனை அவனுக்கென்று ஒதுக்கிய அறையில் விட்டு விட்டுத் தங்கள் அறைக்குச் சென்றான் நிகிலன்.

காலையில், அனைவரும் வான்கூவரில் உள்ள மகா லக்ஷ்மி கோவிலுக்குச் சென்று வரலாம் என்று முடிவு செய்து, காலை உணவை முடித்துக் கொண்டு கிளம்பினர்.

அங்கே பூஜைக்குக் கொடுத்திருந்ததால் அங்கேயே பிரசாதமாக அளிக்கப்பட்ட உணவை அருந்திவிட்டு,

வான்கூவரின் முக்கிய சுற்றுலாத் தலமான ஸ்டான்லி பார்க்குக்குச் சென்றனர்.

ஒரு இடத்தில் அனைவரும் அமர்ந்த பின், ''இந்தச் கோவில்ல தான் உன்னை அத்தை முதல பார்த்தாங் களாமே, நிகில் சொன்னான்,'' என்று கதிர் பேச்சை ஆரம் பித்தான்.

''ஆமா அண்ணா, நான் இங்க வந்து பஜன் பாடு வேன். அப்போதான் ஒரு நாள் சுகிமா பார்த்துட்டுத் தமிழ்ப் பொண்ணா அப்படின்னு கேட்டுப் பேசினாங்க,'' என்றாள் மிருதுளா.

''நிகில் வந்தானா என்ன?'' என்று அவர்களின் காதல் கதையை அறிந்து கொள்ளும் ஆவலில் கேட்டான்.

''யாரு இந்த சாரா? அவருக்கு அப்போதெல்லாம் சனிக்கிழமை நடக்கும் பார்ட்டியில் அடித்த தண்ணியின் போதை இறங்கவும், ஞாயிற்றுக்கிழமை தூங்கவும், ஃபிரண்ட்ஸ் கூட ஊர் சுற்றவுமே பத்தாதே!'' என்று விஸ்வநாதன் பதிலளிக்க.

''ஹோ, இப்போ எல்லாம் போகிறது இல்லையா?'' என்று நிகிலிடம் திரும்பிக் கேட்டான்.

''அட நீ வேற, ஒரு நாள் அங்கே போயிட்டு ஒரு வாரத்துக்கு யாரு திட்டும் அடியும் வாங்குறது? அடிச்சா கூடப் பரவாயில்ல. ஆனா மேடம் வேற மாதிரி நம்மள காய விட்டுடுவா, சோ இப்ப எல்லாம் பெரிய 'நோ' தான்!'' என்றான் ஒரு பெருமூச்சை வெளியேற்றியபடி.

''அய்யே! ரொம்ப பயந்தவர் தான்! நம்பாதே அண்ணா, எனக்குத் தெரியாம தெரியாம சார் எங்கேயாவது எஸ் கேப் ஆகிடுவார். ஆனா சீன் மட்டும் ரொம்ப பயந்தவர்



மாதிரி போடுறது!'' என்றாள் மிருதுளா நிகிலைச் செல்ல மாக முதுகில் தட்டியபடி.

''பாருங்க பாருங்க, இதுக்கே என்ன அடின்னு!'' என்று மாமியாரைக் கூட்டுச் சேர்த்தான்.

''மிருதுமா!'' என்று சாருமதி அதட்ட, ''போங்க மா!'' என்று சிணுங்கினாள்.

''ஹ்ம்ம் சரி சரி, ரெண்டு பேரும் உங்க காதல் கதையைச் சொல்லுங்க!'' என்று கதிர் கதை கேட்க ரெடியாகினான்.

''கொழுப்பா உனக்கு? எங்க லவ் உனக்குக் கதை மாதிரி இருக்கோ? நான் வாங்கிய அடிகள் என்ன, திட்டுகள் என்ன, கொஞ்சல்கள் என்ன, கெஞ்சல்கள் என்ன, எல்லாத்தையும் கதை என்று சொல்ற நீ?'' என்று அவனை முதுகில் ஒன்று போட்டான் நிகிலன்.

''சரிப்பா சரி. உன் காதல் காவியத்தைச் சொல்லு,'' என்று கதிர் சமாதானத்திற்கு வர,

''ஓகே சுகிமா, நீங்க ஆரம்பிங்க,'' என்று விட்டு கணவனை நெருங்கி அவன் தோளில் சாய்ந்து கொண் டாள் மிருதுளா.

''உங்கள் காதல் கதையை, இல்ல இல்ல காவியத்தை - கரெக்ட்டா, மகனே? - நான் சொல்ல வேண்டுமாக்கும்!'' என்று அலுத்துக் கொண்டாலும் தன் குழந்தைகளின் சேட்டையை மற்றவருக்குக் கூறும் போது ஒரு தாய்க்கு இருக்கும் ஒரு சந்தோஷத்தடன் வாசுகி பேச ஆரம்பிக்க அனைவரும் அவர் சொல்வதை ஒரு ஆர்வத்துடன் கேட்கத் தயாராய் இருந்தனர்.

வாசுகியின் எண்ண ஓட்டங்கள் மிருது கனடா வந்த பிறகு இருக்கும் நிலை வரைக்குமே செல்லும். ஆத லால் நாம் கொஞ்சம் அதற்கும் அட்வான்ஸ் ஆகி அவள் திருச்சியில் இருந்து கிளம்பிய அன்றிலிருந்து பார்ப் போம். இந்த முன்னோட்டம் முந்தையது போல ஒரு வருத்தத்தையும், கோபத்தையும் விட்டுச் செல்லாமல், மனசு கொள்ளாச் சந்தோசத்தையும், தொடர்கதையாகும் ஒரு இனிய இல்லறத்தையும் நம் நினைவுகளில் விட்டுச் செல்லும்.

## மூன்று ஆண்டுகளுக்கு முன்னர்

கல்யாணம் நின்று தன் குடும்பத்தினர் அனைவரின் நம்பிக்கையை இழந்த அந்தப் பொல்லாத நாளில், வீட்டை விட்டு வெளியேறியதற்கு முன் மிருதுளாவிற்கு யாருடைய நம்பிக்கையுமில்லாமல், நற்பெயருமில் லாமல் இந்த உலகத்தில் எப்படி வாழ்வது, தற்கொலை செய்து கொண்டு விடலாமா என்ற எண்ணம் தான்.

தற்கொலை செய்து கொள்வது கோழைத்தனம் என்று அடித்து வாதாடியதெல்லாம் நினைவில் வர, தானா இப்படி யோசிக்கிறோம் என்று அவளுக்கே அவளைப் பார்த்துப் பயமாக இருந்தது. கதிர் அடித்ததையே தாங்க முடியவில்லை. தற்கொலை பண்ணிக் கொண்டால் அந்த வலியை எப்படிப் பொறுத்துக் கொள்வது? தன் னால் முடியுமா என்று ஏதேதோ எண்ணிக் கடைசியில் உயிரை மாய்த்துக் கொள்வதில்லை என்ற முடிவுக்கு வர ஒரு மணி நேரமானது மிருதுளாவிற்கு.

பின்னர் அவளது சர்டிபிகேட், பாஸ்போர்ட், தன்னிடம் இருந்த பணம், கிரெடிட் கார்டு கையில் அடங்கும் மிகவும் முக்கியமான பொருட்களை மட்டும் அழுகையி



னூடே எடுத்தவள் ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு அடுத்த அரை மணி நேரத்தில் திருச்சி ரயில் நிலை யத்தில் இருந்தாள்.

இந்த இடத்தை விட்டு எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் சென்றுவிட வேண்டும், இல்லை என்றால் மூச்சு முட்டிச் செத்து விடுவோமோ என்ற பயம் ஒரு புறம், யாரேனும் தெரிந்தவர்கள் பார்த்துவிட்டு வீட்டில் தகவல் சொல்லித் தன்னை இழுத்துப் போய் விமலுக்குக் கல்யாணம் செய்து வைத்து விடுவார்களோ என்ற பயமும் சேர்ந்துகொள்ள, அடுத்த ரயிலில் டிக்கெட் வாங்கிச் சென்னை நோக்கிப் பயணமானாள் மிருதுளா.

காலையில் சென்னையில் ரயில் நிலையத்தில் வந் திறங்கியவளுக்கு, ஏன் சென்னை வந்தோம் என்று கூடப் புரியவில்லை. தான் படித்த ஊர் தான் என்றாலும், எப்போதும் ஏசி கோச்சில் வந்திறங்கி அவர்களது சென்னை விற்பனைக் கிளையின் கார் வந்து அவளை ஹாஸ்டலில் கொண்டேவிட, இப்போது எல்லாம் இருண்டு விட்ட நிலையில் ஒரு சின்னப் பார்வை கூடத் தப்பான பார்வையாக மாறி அவளை மிரட்டியது. அப் போது தான் கதைகளிலும், செய்திகளிலும் படித்த கொடுமையான விஷயங்கள் நினைவில் வந்து அவளை இன்னும் மிரட்டின.

சற்று நேரம் லேடீஸ் வெயிட்டிங் ரூமில் அமர்ந்து யோசித்தவள், தான் மேற்படிப்பு முடித்த கல்லூரியில் தனக்குக் கொடுத்த வேலையை வேண்டாம் என்று எழுதிக் கொடுத்துவிட்டு வந்தது நினைவில் தோன் றியது. அந்த வேலை இல்லை என்றாலும் தனது கைட் மூலமாக வேறு வேலை தேடிக் கொள்ளலாம் என் றெண்ணி நியூயார்க் செல்ல முடிவு செய்தாள்.

தனது கிரெடிட் கார்டு மூலமாக டிக்கெட் வாங்கியவள் ஃப்ளைட்டில் ஏறி அமர்ந்தவுடன் தன் வாழ்க்கை ஒரே நாளில் தலைகீழாய் மாறிய அவலத்தை எண்ணிக் கண்ணீரில் கரைந்தாள். அவளது விசா இன்னும் எக்ஸ் பயர் ஆகாமல் இருந்தது ஒரு புறம் அந்த கஷ்டத்திலும் ஒரு நிம்மதியை அளித்தது.

நியூயார்க் வந்திறங்கியவள் எங்கே போவது, தங்க இடமில்லையே என்று மலைத்து, பின் தான் படித்த கல்லூரிக்கே சென்றாள்.

பிறகு வந்த நாட்கள், தன் விரிவுரையாளர் சொன்ன கனடாவில் இருக்கும் வேலைக்கு வொர்க் பெர்மிட் வாங்குவதிலும், விசா எடுப்பதிலும், தன் குடும்பத்திற்குத் தான் இருக்கும் இடம் தெரியவே கூடாது என்பதிலும் செல்ல, அடுத்த ஒரு மாதத்தில் கனடாவில் பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள 'பர்னபி' என்ற ஊரில் இருந் தாள் மிருதுளா.

அதன் பின், வேலையில் கவனம் செல்ல, இரவுகள் மட்டும் கண்ணீரில் சென்றன. வீக் எண்டு-இல் தனிமை இன்னும் கொல்ல, ஊர் சுற்றும் மனநிலையிலும் இல்லாததால், நெட்-டில் தேடி வான்கூவரில் இருக்கும் மகாலக்ஷ்மிக்கு கோவிலுக்கு ஞாயிற்றுக் கிழமைகளில் செல்லத் தொடங்கினாள்.

அது ஒரு விதமான நிம்மதியை மனதிற்குக் கொடுக்க, காலையில் சென்று அவர்கள் தயாரிக்கும் மதிய உண வான பிரசாதத்திற்குத் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்தவள், அந்த வேலை முடிந்தவுடன் மேலே சன்னதி யில் நடக்கும் பஜனில் பாட ஆரம்பித்தாள்.



வாரம் தவறாமல் கோவிலுக்கு வரும் வாசுகியை இந்தப் புதிய குரல் மெய்ம்மறக்க வைத்தது. இரண்டு வாரங்கள், அவள் பாடும் பாட்டையும், அவள் செய்யும் வேலைகளையும் பார்த்தவர் மூன்றாவது வாரம் அவ ளுடன் சென்று பேச முடிவு செய்தார்.

பக்தர்கள் சாப்பிட்டு முடித்துப் போடும் தட்டுகளைக் கழுவி வைக்கும் பிரிவில் அந்த வாரம் இருந்த மிருதுளா, அந்தக் கோவிலின் குருஜியின் அறிவுரைப் படி முன்னரே சாப்பிட அமர்ந்தாள். அவளின் அருகில் வந்தமர்ந்த வாசுகியை நோக்கி ஒரு சிநேக முறுவலை வீசிவிட்டுத் தான் தட்டில் எடுத்து வந்த அந்தச் சிறு அளவேயான உணவை அளையத் தொடங்கினாள்.

''தமிழா கண்ணா?'' என்ற வாசுகிக்கு, ''ஆமா ஆன்ட்டி,'' என்று சுருக்கமான பதிலே கிடைத்தது.

''ரொம்ப நன்றாகப் பாடினாய் கண்ணா! முறையாகச் சங்கீதம் பயின்றாயோ?'' என்று வாசுகி அவளது சுருக்க மான பதிலைப் பொருட்படுத்தாமல் கேட்டார்.

கண்ணா என்ற அழைப்பு தந்தையின் நினைவுகளை வாரி இறைக்க, கண்ணீரைக் கட்டுப்படுத்தி, ''ஆமா ஆன்ட்டி'' என்றாள் இதற்கும் சுருக்கமாகவே.

அதை எல்லாம் கண்டு கொண்டால், நிகிலின் அம்மா வாக இருக்க முடியுமா என்ன?

''என் பெயர் வாசுகி, இங்கே வந்து இருபது வருஷம் ஆகுது, என் கணவர் பெயர் விஸ்வநாதன், இங்கே உள்ள Simon Fraser University-யில் professor ஆக இருக்கிறார், ஒரே பையன். சொந்தமாக ஒரு சாப்ட்வேர் கம்பெனி

வைத்து நடத்துகிறான்,'' எனத் தன்னையும் தன் குடும்பத்தையும் அறிமுகப்படுத்தினார்.

இதை எல்லாம் எனக்கேன் சொல்கிறார்கள் என்பது போல மிருதுளா பார்த்திருக்க, அவளிடம் இருந்து ஒரு பதிலும் இல்லாததால், ''உன் பேர் என்னம்மா?'' என்று தானே அடுத்த கேள்வியையும் கேட்டார்.

''மிருதுளா ஆன்ட்டி.''

''மிருதுளா! ரொம்ப அழகான பேர். பேர் போலவே உன் முகமும், குரலும் மிருதுவாகத் தான் இருக்கு!'' என்று பாராட்டினார்.

இதற்கும் தன் தந்தையிடம் போன நினைவை அடக்கி, ''தேங்க்ஸ் ஆன்ட்டி!'' என்றாள் இளையவள்.

''எல்லாத்துக்கும் கரெக்ட்டா ரெண்டு வார்த்தையில தான் பதில் சொல்லுவியா மிருது!'' என்று பார்த்த கொஞ்ச நேரத்திலேயே அவளை மிருது என்று அழைத்த வாசுகியைக் கண்ணீருடன் ஏறிட்டவள், ''ப்ளீஸ் ஆன்ட்டி, அப்படிக் கூப்பிடாதீங்க. இதைச் சொல்றதுக்காக என்னை மன்னிச்சுடுங்க ப்ளீஸ்!'' என்று விட்டுக் கைகழுவ எழுந்து சென்றாள்.



# 18

அவளது கண்களின் பளபளப்பைப் பார்த்த வாசுகியும் விஸ்வநாதனும் ஒருவரை ஒருவர் பார்த்துக்



கொண்டு, உணவு முடிந்தவுடன் பேசலாம் என்று கண்ணால் பேசி முடிவெடுத்து உணவைத் தொடர்ந்தனர்.

அவர்கள் உணவு முடித்து, சிறிது நேரம் பரிமாறி விட்டு வந்தபோது மிருதுளா கோவிலில் இருந்து கிளம்பி விட்டிருந்தாள்.

சரி, அடுத்த வாரம் பார்த்துக் கொள்ளலாம் என்று காரை எடுத்துக் கொண்டு கிளம்பினார்கள் இருவரும். கொஞ்ச தூரம் தாண்டியதும், மிருதுளா நடந்து செல்வது தெரிந்தாலும், குடியிருப்புகள் நிறைந்த இடம் என்பதால் அவளைத் தாண்டிச் சென்று காரை நிறுத்திவிட்டு, மிருதுளாவை நிறுத்திப் பேசினார்.

''ஹாய் ஆன்ட்டி! ஹாய் அங்கிள்!'' என்று முயன்று வரவழைத்த முறுவலுடன் அவர்களை எதிர்கொண்டாள் மிருதுளா.

''ஹாய் மிருதுளா, எங்கே பஸ் ஸ்டாப்பிற்கு நடந்து செல்கிறாயா?'' என்றார் விஸ்வநாதன்.

''ஆமாம் அங்கிள்,'' என்று பதிலளித்தவளைச் சிரிப்புடன் ஏறிட்டார் வாசுகி.

''அங்கிருந்து எங்கே செல்ல வேண்டும் நீ?'' என்று விஸ்வநாதன் மேலும் குடைய, ஐயோ என்று வந்தது மிருதுளாவிற்கு. ஆனால் பெரியவர்களை எடுத்தெறிந்து பேசிய பழக்கம் இல்லாததால், ''நான் ரயில்வே ஸ்டேஷன் போகணும் அங்கிள், அந்த பஸ் ஸ்டாப் போய் விட்டால் எல்லா பஸ்ஸும் அங்கே செல்வது தான்!'' என்று விட்டு நான் கிளம்புகிறேன் என்பது போல் பார்த்தாள்.

''நாங்களும் அந்த வழியாகத்தான் செல்கிறோம், அங்கேயே இறக்கி விட்டு விடுகிறேன்,'' என்றார் விஸ்வநாதன்.

''இல்லை அங்கிள். நானே பஸ்சிலே போய்க்கிறேன்,'' என்று மென்று விழுங்கினாள்.

''ஏன் எங்களுடன் வருவதற்கு என்ன, ஏறும்மா. நாங்கள் ஒன்றும் உனக்காக அந்தப் பக்கம் போகப் போறதில்ல,'' என்று அவளை வற்புறுத்தி காரில் ஏற்றிச் சென்றனர்.

இத்தனை நாளாக யாரும் இல்லாமல் இருந்த தனிமைக்கு, இன்று அவர்களின் பேச்சு இதமாக இருந்தாலும், அவர்களின் அணுகுமுறை தந்தையையும், தன் குடும்பத்தையும் ஞாபகப்படுத்திக் கொண்டேயிருந்தது.

போகும் வழியில் அவள் எங்கே வேலை செய்கிறாள், எங்கே தங்கியிருக்கிறாள், எங்கே படித்தாள் என்பது போன்ற கேள்விகளுக்குத் தயக்கமில்லாமல் பதிலளித்தவள், அம்மா அப்பா தமிழ்நாட்டில் எங்கே இருக்கிறார்கள் என்ற கேள்விக்குச் சிறிது யோசனை கலந்த தயக்கத்திற்குப் பிறகு, ''எனக்கு யாருமில்லை ஆன்ட்டி!'' என்றாள் ஒரு அமைதியான ஆனால் இதற்கு மேல் இதைப் பற்றிப் பேசக் கூடாது என்பது போல அறிவிக்கும் குரலில்.

விஸ்வநாதனின் கண்ணசைவில் வாசுகி அடங்கி வேறு விஷயங்களுக்குத் தாவினார்.

அவளை ரயில்வே ஸ்டேஷனில் இறக்கிவிட்டு விஸ்வநாதன் காரை எடுப்பதற்குக் காத்திருந்தாற் போல் வாசுகி, ''இந்தப் பொண்ணு நம்ம நிது மாதிரியே இருக்கா, இல்லங்க!'' என்றார் கண்ணில் கண்ணீருடனும், குரலில் ஏக்கத்துடனும்.



''என்ன சுகி, இன்னமும் இப்படி!'' என்று ஒரு கையால் மனைவியை அணைத்து ஆறுதலளித்தார் விஸ்வநாதன்.

''எத்தனை நாளானாலும் என்னால் மறக்க முடியுமா?'' என்று கூறிய மனைவியைப் போல் தன் நெஞ்சமும், ''என்னாலும் முடியாது!'' என்று கூறுவதை விஸ்வநாதனால் மறுக்க முடியவில்லை.

அமைதியாகவே வீட்டிற்கு வந்தவர்கள், கதவைத் திறந்து விட்ட மகனைக் கூடக் கவனிக்காமல் உள்ளே சென்றனர்.

''என்னாச்சு வசு, ஏன் மூட் அவுட்? கோவிலிலிருந்து வரும் போது சந்தோஷமா வருவீங்களே! இன்னைக்கு என்ன ஆச்சு?'' என்று விசாரித்தவனுக்குப் பதிலாகக் கையை நீட்டி அவனைத் தன் அருகில் அழைத்து, மடியில் சாய்த்துக் கொண்டார் வாசுகி.

அப்பாவை ஒரு முறை பார்த்துவிட்டு என்ன என்று ஊகித்துக் கொண்டவன் ஒன்றும் சொல்லாமல் தாய் மடியில் படுத்துக் கொண்டு அவர் கன்னத்தை வருடிக் கொடுத்தான்.

கொஞ்ச நேரம் அவன் தலையை வருடிக் கொடுத்தவர், ''ஏதாவது சாப்பிட்டாயா கண்ணா? இல்லை, இப்போது தான் விடிந்ததா உனக்கு?'' என்றார்.

''இன்னைக்கு நான் ரொம்ப சீக்கிரம் எழுந்துட்டேன் தெரியுமா? பதினோரு மணிக்கே!'' என்றவனை ஓங்கி ஒரு அடி வைத்தார். வாசுகி. ''11 மணி உனக்கு ரொம்ப சீக்கிரம் ஆகிவிட்டது! எல்லாம் நான் கொடுக்கும் செல்லம்!'' என்றார் தொடர்ந்து.

''ஐயோடா, இப்படி அடிப்பது தான் உங்கள் ஊரில் செல்லம் கொடுக்கும் லட்சணமா?'' என்று வியந்த வாறே எழுந்து தாயின் தாடையைப் பிடித்துப் பச்சென்று கன்னத்தில் முத்தம் வைத்துவிட்டு, ''சரி சரி, மசமச வென்று நிக்காமல் எனக்குச் சாப்பாடு ரெடி பண்ணு வசு, நீங்க ரெண்டு பேரும் நல்லா சாப்பிட்டீங்கதானே. நம்மளையும் கொஞ்சம் கவனிக்கறது!'' என்று வாசுகியைக் கைப்பிடித்து எழுப்பினான்.

''எனக்கு செம பசி! பிரட் + ஆம்லெட் பண்ணிச் சாப் பிட்டேன். ஆனா இப்போ பசிக்குது. சீக்கிரம் எதாவது செய் வசு, சீக்கிரம், சீக்கிரம்!'' என்று விரட்டிக்கொண்டே அவரைச் சமையல் அறைக்குள் பிடித்துத் தள்ளினான்.

''டேய் டேய், விழுந்துவிடப் போகிறாள், பார்த்து... பார்த்து!'' என்று விஸ்வநாதன் பதற.

''உங்க பொண்டாட்டிக்கு ஒன்னும் ஆகாது. நாங்க பார்த்துப்போம் எங்க அம்மாவை! ரொம்ப துடிக்கிறார் வசு உன் புருஷன்!'' என்றான் இருவரிடமும்.

''என்னடா இது? என்ன செய்து வைத்திருக்கிறாய். இங்கே பாருங்களேன், சமைக்கிறேன் பேர்வழின்னு கிட்சனைக் குப்பை மேடாக ஆக்கி வைத்திருக்கிறான், ஒரு பிரட் + ஆம்லெட் போட்டதிற்கு இந்தப் பாடா?'' என்று பொரிந்தவர், ''சுத்தம் சோறு போடும் நிகில்!'' என்றார் அறிவுரைபோல்.

''ஹோ, சுத்தம் சோறு போடும், அப்போ சுகாதாரம் குழம்பு ஊத்துமா வசு?'' என்று அப்பாவியாகக் கேட்ட வனைப் பூரிக் கட்டையைத் தூக்கிக்கொண்டு வாசுகி துரத்த வீட்டைப் பலமுறை சுற்றிவந்தபின் தானாகவே அவர் கையில் சிக்கி, நன்றாக ஒரு அடி வாங்கினான்.



அதன் பின் வாசுகியின் அகமும் முகமும் வேறு நினைவு களால் நோகாமல் பார்த்துக்கொண்டான் மைந்தன்.

அடுத்து அவன் செய்த வம்புகளிலும், முன் தினம் அவன் அடித்த லூட்டிகளை எடுத்துவிட்ட பாணியிலும் மிருதுளாவைப் பற்றி மகனிடம் கூற மறந்துவிட்டார் வாசுகி.

தொடர்ந்து இரு வாரங்களும் அவளைக் கோவிலில் சந்திப்பதும், திரும்பும் போது ஸ்டேஷனில் இறக்கிவிடு வதும் வழமையானது.

அடுத்து வந்த மூன்றாம் வாரத்தில் மிருதுளாவால் கோவிலுக்கு வரமுடியாத நாள். வாரத்தில் கொஞ்சம் மன நிறைவுடன் இருக்கும் நாளை இந்த வாரம் தொலைத்து விட்டோமே என்று மிருதுளா வீட்டில் வருந்திக்கொண் டிருக்க, வாசுகியோ கோவிலில் அவளைக் காணாமல் என்ன ஆகியதோ, ஏன் வராமல் இருக்கிறாள், உடம்பு ஏதும் முடியவில்லையோ, தனியாக வேறு இருக்கிறேன் என்று சொன்னாளே என்று அங்கிருந்த நேரம் முழுவதும் சாமியைக் கூட முழு மனதுடன் கும்பிட முடியாமல் தவித்து விட்டார்.

வரும் வழி முழுவதும் அவளது போன் நம்பரை வாங்கிவைக்காத தன்னையும் அதை ஞாபகப்படுத்தாத தன் கணவரையும் செம அர்ச்சனை. அன்று நிகிலன் வேலை விஷயமாக டொரோண்டோ கிளம்பிச் சென் றிருந்ததால் பிழைத்து விட்டான். அடுத்து வந்த ஒரு வாரமும் தந்தையே அந்த புலம்பலைக் கேட்டுக் கொள் ளட்டும் என்று எண்ணியவன் போல் அவன் வரவில்லை. போனில் ரொம்ப நேரம் பேசாததால், மிருதுளாவைப் பற்றி

தெரிந்து கொள்வதற்கான வாய்ப்பு அவனுக்குக் கிடைக்கவேயில்லை.

அடுத்த வாரம் காலையில் எழுந்தது முதல், மதியம் வரும் மகனின் வரவைக்கூடப் பெரிதுபடுத்தாமல் கோவிலுக்குக் கணவனைக் கிளப்புவதிலேயே கவனம் செலுத்திய மனைவியைப் பார்க்க விஸ்வநாதனுக்குப் பாவமாக இருந்தது. அவளது மனம் புரிந்ததால் ஒன்றும் சொல்லாமல் வழக்கத்தை விடச் சீக்கிரமே கிளம்பிக் கோவிலை அடைந்தனர்.

உள்ளே சென்று பார்த்தபோது மிருதுளா வந்திருக்கவில்லை. மிருதுளாவைக் காணவில்லை என்றவுடன் வாசுகி கணவனிடம், ''ஐயோ, இன்றும் காணவில்லையே, என்னவோ ஆகிவிட்டது அவளுக்கு. என் ராசியால் தான் இப்படி ஆகிவிட்டது!'' என்று யோசனையே இல்லாமல் அழ ஆரம்பித்தார்.

''ஷ் ஷ்... சுகி, என்ன இது, நிறுத்து என்கிறேனே, நிறுத்து. வந்துவிடுவாள்,'' என்று சமாதானப்படுத்திக் கொண்டிருந்த போதே மிருதுளா உள்ளே நுழைந்து செருப்பை அதன் தட்டில் வைத்துக் கொண்டிருந்தாள்.

''அதோ வந்துவிட்டாள் வாசுகி!'' என்று விஸ்வநாதன் சந்தோஷத்துடன் கூற, வாசுகி ஓடிச் சென்று, ''என்ன ஆச்சு மிருதுளா, ஏன் போன வாரம் வரவில்லை. நான் ரொம்ப பயந்து போய்விட்டேன். உன் வீடு அட்ரஸ் அப்புறம் போன் நம்பர் எல்லாம் கொடு,'' என்று அவளைப் பேச விடாமல் சொல்லிமுடித்தார்.

''இல்லை ஆன்ட்டி, போன வாரம் நான் வரக்கூடாது கோவிலுக்கு அந்த டைம். அதுதான் ஆன்ட்டி.



''ரொம்ப பயந்துடீங்களா?

''ஓ தரேன் ஆன்ட்டி! என்ன ஆன்ட்டி இது, கண்ணில் தண்ணி? வேற ஏதாவது பிரச்சனையா?'' என்றாள். அவர் தனக்காக அழுதிருக்கிறார் என்ற எண்ணமே சிறிதும் தோன்றாமல்.

விஸ்வநாதன், ''வேறு என்ன பிரச்சனை, நீ வராதது தான் உன் ஆன்ட்டிக்கு ஒரு வாரமாகப் பெரும் கவலை. இன்று அழுகை எல்லாவற்றுக்கும் காரணம்,'' என்றார்.

அதில் நெகிழ்ந்து அவரைக் கட்டிக்கொண்டவள், ''தேங்க்ஸ் ஆன்ட்டி, தேங்க்ஸ் ஆன்ட்டி!'' என்பதற்கு மேல் ஒன்றும் சொல்லவில்லை.

''எதற்கு தேங்க்ஸ்? நான் அழுததற்காக?'' என்றார் வாசுகி கிண்டலாக.

சிரித்துக் கொண்டே உள்ளே சென்று அன்றைய பூஜையை முடித்து வந்தவர்கள், மிருதுளாவை எப்போதும் போல் காரில் ஏற்றிக் கொண்டனர்.

ஸ்டேஷனில் நிற்காமல் கார் செல்லவும் ''என்ன அங்கிள், நிப்பாட்டவில்லை. நான் இறங்கவேண்டுமே!'' என்றாள் மிருதுளா அவசரமாக.

''இன்று எங்க வீட்டுக்கு வருகிறாய்! நைட் டின்னர் முடிந்து, உன் வீட்டில் அங்கிள் கொண்டுவந்து ட்ராப் பண்ணுவாங்க!'' என்று கூறியவர், அவள் மறுத்து ஏதோ சொல்லத் தொடங்கவும், ''எனக்காக வருவாயா மாட்டாயா?'' என்றார் கெஞ்சலாக.

ஏற்கெனவே அவரது பாசத்தில் உருகி, தன்னையும் நினைத்துக் கவலைப்பட இங்கு ஆட்கள், அதுவும் பாசமான ஆட்கள் இருக்கிறார்கள் என்ற எண்ணத்தில்

இருந்தவள் இந்தக் கெஞ்சலில் முற்றிலுமாக விழுந்து ஒன்றும் சொல்லாமல் மண்டையை உருட்டினாள்.

காரில் செல்லும்போது, ''நானும் அங்கிளும் ஒரு மூணு வாரத்திற்கு இந்தியா போறோம், அதனால தான் உன்னை இந்த வாரம் வீட்டிற்குக் கூப்பிட்டுவிட வேண்டும் என்று,'' என்றார் வாசுகி விளக்கம் போல்.

இவர்களையும் மூணு வாரம் பார்க்க முடியாதா என்ற எண்ணம் அவளைச் சோர்வடையச் செய்தது. ''ஹோ, ஏதும் விசேஷத்திற்குப் போறீங்களா?'' என்றாள் ஏதோ கேட்க வேண்டுமே என்பதற்காக.

''அங்கே சொந்தம் என்று ரொம்ப யாருமில்லை. இருவருக்கும் கூடப் பிறந்தவர்கள் என்று யாருமில்லை. அதனால பெரிய சொந்தபந்த வட்டங்கள் இல்லை. இருப்பவர்களைப் பார்த்துவிட்டு ஊரில் இருக்கும் ஒரே ஒரு சொத்தையும் நாங்க அங்க போய் இருக்கப்போறதில்லை என்பதால் ஒரு அநாதை ஆசிரமம் பேரில் மாற்றி எழுதி வைக்கப்போகிறோம். அதற்குத்தான் போகிறோம்,'' என்று பெரிய விளக்கம் கொடுத்து முடித்தார்.

''ஹோ'' என்று அனைத்தையும் உள்வாங்கிக் கொண்டவள், இவர்களுக்குச் சொந்தம் என்றே நெறையப் பேரில்லை. ஆனால் தனக்கோ அவ்வளவு சொந்தங்கள் இருந்தும் யாரையும் சொந்தம் கொண்டாட முடியாத நிலை என்று எண்ணினாள். யார் என்ன சொன்னாலும் அதைத் தன் குடும்பத்துடனே இணைக்கும் தன் மனதை எண்ணி வருந்துவதா, இல்ல... தன்னை நம்பாதவர்களையே எண்ணி ஏங்கும் மனதை நோவதா என்று தெரியவில்லை மிருதுளாவிற்கு. இந்தப் போராட்டத்தில்



வீடு வந்து சேர்ந்ததோ, வாசுகி நிகில் பற்றிச் சொன்னதோ ஒன்றும் காதிலேயே விழாதபோது மண்டையில் எங்கே ஏறியிருக்கும்?

''நிகில் வந்துவிட்டான் சுகி. கார் நிற்கிறது பார்,'' என்றார் விஸ்வநாதன் garage-இல் காரை பார்க் செய்தவாறே.

''யார் ஆன்ட்டி நிகில்?'' என்ற மிருதுளாவை ஒரு வினோதப் பிராணியைப் பார்ப்பதுபோலப் பார்த்தனர் இருவரும்.

விஸ்வநாதன், ''சுகி, நீ பேசிப் பேசி என் காது தான் செவிடாகிப் போயிற்று என்று நினைத்தேன்! கொஞ்ச நாளே ஆன மிருதுளா காதைக்கூட விட்டுவைக்கவில்லையா நீ?'' என்றார் கேலியாக.

''என்ன கண்ணா? இவ்வளவு நேரம் அவனைப் பற்றித்தானே சொல்லிக்கொண்டே வந்தேன்,'' என்றார் வாசுகி பாவமாக.

தன்னையே நன்றாகக் கொட்டிக் கொள்ளவேண்டும் போல் தோன்றிய உணர்வை அடக்கி, ''ஐயோ! சாரி ஆன்ட்டி, சாரி, ரொம்ப சாரி. நீங்க ஊருக்குப் போறீங்கன்னு சொன்னவுடனே ஐயோ இன்னும் 3 வாரம் பார்க்க முடியாதே என்று அதையே நினைத்துக்கொண்டே வந்தேனா, அதனால் கவனிக்கவில்லை!'' என்றாள் அவசரமாகப் பாதி உண்மையை மட்டும் கூறி.

அவள் கூறியதில் மகிழ்ந்து, ''ஹோ, அதனால் என்ன, நாங்கள் வந்தபின் ஒவ்வொரு வார இறுதியும் இங்கே வீட்டிற்கு வந்துவிடு, என்ன,'' என்று அவளைக் கைப் பிடித்து உள்ளே கூட்டிச் சென்றார்.

ஹாலில் அமர்ந்து கொஞ்ச நேரம் பேசிக் கொண் டிருந்தனர் மூவரும்.

வாசுகி, ''நான் போய்க் காபி போட்டு எடுத்து வரு கிறேன்,'' என்று எழ, அதே நேரம் ஒரு முக்கியமான போன் கால் வர விஸ்வநாதன் அதற்குத் தேவையான தகவல் தன் அறையில் இருந்ததால் வேகமாகத் தன் அறைக்குள் சென்றார்.

தனித்துவிடப்பட்ட மிருதுளா வீட்டைச் சுற்றி மாட்டப் பட்டிருந்த புகைப்படங்களில் தன் கண்களை ஓட்டினாள்.

ஒரு குடும்பப் புகைப்படத்தில் விஸ்வநாதன் ஒரு பெண் குழந்தையைத் தூக்கி நின்றிருக்க, வாசுகி ஒரு சிறுவனை அணைத்தவாறு நின்றிருந்தார்.

அதிலிருக்கும் சிறுவன் அவர்கள் மகன் நிகில் தான் என்பது புரிய, அந்தக் குழந்தை யார்? வாசுகி ஆன்ட்டி மாதிரியே அழகாய்த் துறுதுறுவென்று, அந்தக் குழந்தை பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே இந்த ஆன்ட்டி, பையன் புராணமே பாடிக் கொண்டிருந்தார்களே, அதை யுமே தான் ஒழுங்காகக் கவனிக்கவில்லை, அப்போது சொல்லியிருப்பார்களோ. இப்போது எங்கே இந்தப் பெண். நம் வயது இருக்குமே என்று பல பல கேள்விகள் எழச் சமையல் அறை நோக்கிச் செல்லத் திரும்பினாள்.

அவள் அந்தப் புகைப்படத்தைப் பார்த்துச் சிந்தனையில் ஆழ்ந்திருந்த போதே, தூங்கி எழுந்து அறையைவிட்டு வெளியே வந்த நிகில் மிருதுளா வந்திருப்பதை அறி யாததால் வீட்டில் அணியும் ஷார்ட்ஸ், ஸ்போர்ட்ஸ் பனியனுடனே கீழே இறங்க மாடிப்படியில் கால் வைத் தான்.



அங்கே நின்றிருந்த மிருதுளாவைப் பார்த்தவன் முதலில் நினைத்தது, ''என்ன அழகு! ஆனால் ஏன் கண்களில் இத்தனை சோகம்?'' என்பதுதான்.

அவனைக் கவனிக்காமல் உள்ளே சென்றவள், ''என்ன ஆன்ட்டி உங்க பொண்ணைப் பற்றி ஒண்ணுமே சொல்ல வில்லை. அவுங்க பேர் என்ன? எங்கே இருக்காங்க? கல்யாணமாகி வேற ஊர்ல இருக்காங்களா, ரொம்ப அழ காக உங்களை மாதிரியே இருக்காங்க!'' என்று ஆரம் பித்தவள், ''ஐயோ! என்ன ஆச்சு ஆன்ட்டி? ஏன் அழறீங்க, என்ன ஆன்ட்டி?'' என்று அவர் கதறலைப் பார்த்துப் பதறினாள்.

அதற்குள் உள்ளே நுழைந்த நிகில், ''அம்மா, என் னம்மா, ப்ளீஸ்மா! கொஞ்சம் கட்டுப்படுத்திக்கொள்!'' என்று அவரைத் தாங்கித் தேற்றினான்.

அவர்கள் இருவரையும் ஒரு சங்கடத்துடனும், கவலையுடனும் பார்த்துக் கொண்டிருந்தவளை நோக்கி, ''நீங்க ஒண்ணும் பயப்படாதீங்க. நீங்கன்னு இல்ல, யாரு நிது பத்திக் கேட்டாலும் இப்படித்தான் ஆகிடுவாங்க!'' என்றவாறே தாயை ஹால் சோபாவிற்குக் கைத் தாங்கலாக அழைத்துச் சென்றான்.

''என்னம்மா, அவங்க ரொம்ப பயந்துபோய் பேய் அறைந்த மாதிரி இருக்காங்க! என்ன இப்படிப் பண்றீங்க? ப்ளீஸ் வசு, இன்னும் அதையே நினைத்து உடம்பைக் கெடுத்துக் கொண்டால் எப்படி?'' என்று பலவாறாக ஆறுதல் கூறினான்.

ஒன்றும் பேசமுடியாமல் அந்தப் பெண்ணிற்கு என்ன ஆகிஇருக்கும், நம்மைப்போல் வீட்டை விட்டு எங்

கேனும் போயிருப்பாளோ, நம்ம அம்மாவும் இப்படி அழுவாங்களோ, ஆனால் அழுவார்களா? இல்லை, குடும்பத்திற்கு நேர்ந்த அவமானம் போய்த் தொலைந்து விட்டது என்று நிம்மதியாக இருப்பார்களோ, இரண்டாவது தான் நடந்திருக்கும் என்று தன் குடும்பத்துடன் இதையும் இணைத்தது மட்டுமல்லாமல், ஒரு பட்டி மன்றம் நடத்தித் தானே ஒரு முடிவு செய்து அவள் இந்த உலகத்திற்கு வருவதற்கும் வாசுகி அழுகை அடங்கி ஒரு நிலைக்கு வருவதற்கும் சரியாக இருந்தது.

"ரொம்ப பயந்து விட்டாயா கண்ணா?" என்று வாசுகி கனத்த குரலில் கேட்க, அவர் அருகில் வந்தமர்ந்தவள், "கொஞ்சம் ஆன்ட்டி!" என்றாள் அவள் கையைப் பற்றி அழுத்தியபடி.

"சாரி, நான் போய்க் காபி போட்டு எடுத்து வருகிறேன். வந்த பின் சொல்கிறேன்," என்று எழப்போனவரை இருவரும் இருபுறமும் தோளைப்பிடித்து உட்கார வைத்தனர்.

"எனக்கு ஒன்றும் வேண்டாம், ஆன்ட்டி!" என்று மிருதுளா கூற, "காபி தானே, நான் போடுகிறேன், நீங்க பேசுங்க," என்று கூறிவிட்டுச் சமையல் அறைக்குச் சென்றான் நிகில்.

"அவள் என் பெண்தான்மா, நிகில்க்குப் பிறகு பத்து வருடம் கழித்துப் பிறந்தவள்," என்று ஆரம்பித்தார்.

"ஹோ, பேர் என்ன ஆன்ட்டி?"

"நித்திலா."

"நிகில், நித்திலா - நல்ல பேர்கள்."



"ம்ம்ம், அவள் வயிற்றில் இருக்கும் போதே எனக்கு உடம்பு அவ்வளவாகச் சரியில்லை."

"ஹோ."

"பிறந்தவுடன் கர்ப்பப்பை ரொம்ப வீக்காய் இருந்ததால் அதை எடுத்துவிட்டார்கள். குழந்தையும் மூச்சுத் திணறலில் கஷ்டப்பட்டதால் இன்கூபேட்டர்லேயே பத்து நாள் இருந்தாள். அதற்குப் பிறகும் கொஞ்சம் பூஞ்சையாகவே இருப்பாள். தவமிருந்து பெற்றேன் மிருதுளா!" என்று அப்போதும் உடைந்தார் வாசுகி.

என்ன ஆயிற்று அந்தப் பெண்ணிற்கு? கடவுளே! பயத்துடனே அவரைப் பார்த்திருந்தவள் ஒன்றும் சொல்லாமல் கைகளைப் பிடித்து அழுத்தினாள்.

"ஐந்து வயதாகும் போது, காய்ச்சலில் விழுந்தவள் எழவேயில்லை!" என்று அவர் கூறி முடித்தபோது இருவரின் கண்களிலிருந்தும் நீர் கொட்டிக் கொண்டிருந்தது.

இப்போது வாசுகியே இருவரின் கண்களையும் துடைத்துவிட்டு, "அவளை மாதிரியே நீ இருப்பதால் தான் அம்மா, என்னால் உன்னை வேறாளாய் நினைக்க முடியவில்லை. அதனால் தான் முதல் நாளே உன்னிடம் அப்படிப் பேசினேன்," என்றார் விளக்கமாக.

"உங்க வாழ்க்கையில் நடந்ததற்கு நான் ரொம்ப வருத்தப்படுகிறேன், ஆன்ட்டி!" என்று முழுமனதுடன் வருத்தம் தெரிவித்தாள்.

அவர் மனதைத் திருப்பும் முயற்சியாக, "என்னை உங்கள் மகள் போல் நினைத்தேன் என்று சொன்னதற்கு ரொம்ப தேங்க்ஸ் ஆன்ட்டி!" என்றாள்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த நிகில், ''அய்யயோ, என்ன இது? நோ மகள், ஒன்லி மருமகள்!'' என்று அப்போதே மனதில் குறித்துவிட்டான். இன்னொரு மனது அவள் திருமணம் ஆகாதவள் என்று உனக்கு என்ன நிச்சயம்? குழந்தைகூட இருக்கலாம்? அப்படி இருந்தால் என்ன செய்வாய்? என்று கேள்வி கேட்டது. அப்படி மட்டும் இருக்கட்டும் என்று வீரமாக எண்ணியவன், உடனே என்ன செய்யமுடியும், எங்கிருந்தாலும் வாழ்க என்று வாழ்த்த வேண்டியதுதான் என்று முடிவுக்கு வந்து காபி கப்களை ட்ரேயில் வைத்து வெளியே எடுத்துச் சென்றான்.

அப்போது மிருதுளா, ''நித்திலாவை எப்படிக் கூப்பிடுவீங்க ஆன்ட்டி, நித்தி அப்படின்னா?'' என்றாள்.

''இல்லடா, இவனை நிக்கி என்று கூப்பிடுவதால் அவளை நிது என்போம்!'' என்றார். தொடர்ந்து, ''மிருதுளா உன்னை ரிது அப்படின்னு கூப்பிடலாமா?'' என்றார்.

சற்றும் யோசிக்காமல், ''உங்களுக்குப் பிடிச்ச மாதிரியே கூப்பிடுங்க!'' என்றாள் பதிலாக.

அதன் பின் அவள் இருந்த மூன்று மணி நேரமும் அவள் கவனிக்காத போதெல்லாம் நிகிலின் பார்வை அவள் மேலேயே இருந்தது அவள் உள்ளுணர்வு உறுத்த நிமிர்ந்து அவனைப் பார்க்கும்போது கன காரியமாகத் தந்தை பக்கமோ தாய் பக்கமோ திரும்பியிருந்தான் அவன்.

அவன் கவனிக்காவிட்டாலும் தாய் அறியாத சூலா என்பது போல் வாசுகியின் கண்களில் அனைத்தும் பட்டுவிட்டது. ஆஹா! இது நடந்தால் எவ்வளவு நன்றாக



இருக்கும் என்று தாய் மனது அப்போதே மகன் மனதிற்கு நிகராகக் கனவில் மிதந்தது.

அடுத்து வந்த நாட்கள் ஊருக்குச் செல்லும் ஏற்பாடுகளிலும், பாக்கிங்கிலும் செல்ல, வாசுகியும் விஸ்வநாதனும் இந்தியா கிளம்பினர்.

அடுத்த வார இறுதியில், ஞாயிற்றுக்கிழமை காலையில் சீக்கிரமே எழுந்து குளித்துமுடித்துக் காரை எடுத்துக்கொண்டு கிளம்பினான் நிகில்.

எங்கேயா? மகாலக்ஷ்மி கோவிலுக்கு!!!



## 19

**கா**ரைக் கோவிலுக்கு எதிர் சாரியில் பார்க் செய்துவிட்டு, அதன் கீழே சாய்ந்து மிருதுளாவின் வரவுக்காகக் காத்திருந்தான் நிகிலன்.

வான்கூவர் ஒரு மலைப் பிரதேசம் என்பதால், பஸ் நிறுத்தத்திலிருந்து கோவிலுக்கு ஏறுமுகமாக ஏறிவந்த மிருதுளாவிற்குக் காலைப் பட்டினியும் சேர்ந்துகொண்டு மூச்சு வாங்க வைத்தது.

அவளைப் பார்த்தவுடன் மலர்ந்த முகம், அவள் வாங்கிய மூச்சுகளையும், வாடிய முகத்தையும் கண்டவுடன், ''ஐயோ, நாம் மட்டும் சொகுசாக காரில் வந்திறங்க, அவள் மட்டும் மூச்சு வாங்க நடந்து வருகிறாள்,

ச்சே, உனக்கு என்னோட முதல் பரிசு என்ன தெரியுமா? கார் தான்!'' என்று அடுத்த தீர்மானம் எடுத்தான். இவன் யாரைக் கேட்டு இப்படித் தீர்மானம் எல்லாம் எடுக்கிறான், ஒரு நாள் ஒரு பொழுதாவது என்னைப் பார்க்க வந்திருப்பானா, இப்போது ஓடி வருவதுமில்லாமல், சும்மா சும்மா தீர்மானம் எடுத்துக்கொண்டு... இதற்கு வைக்கிறேன் பாரு ஒரு ஆப்பு என்று எதிரிலிருந்த மகாலக்ஷ்மி தேவி சொன்னது பாவம் நிகிலுக்குக் கேட்கவில்லை.

நிகில் எவ்வளவு நேரம் அவளையே பார்த்து, அவளைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்தானோ, அதற்கு நேர்மாறாக மிருது அவன் நின்றதைக்கூடக் கவனிக்காமல் உள்ளே சென்றுவிட்டாள்.

''இவ்வளவு பெரிய கண்ணை வச்சுக்கிட்டு அங்கே இங்கே பார்த்துடாதே! சரியான மடசாம்பிராணி!'' என்று திட்டிக்கொண்டே கோவிலில் உள்ளே சென்றான்.

அதற்குள் அவள் பஜன் நடக்கும் இடத்திற்குப் பெண்கள் இருக்கும் பக்கத்தில் சென்றமர்ந்து, இப்போது தான் ஒரு பாட்டை முடித்திருந்ததால், அடுத்த பாட்டை அவளே பாடத் தொடங்கினாள்.

அவளது குரல் இனிமையில் தன்னைத் தொலைத்து உலகம் மறந்துகொண்டிருந்தவனை, ''ஹாய் நிகில்!'' என்ற குரல் மீண்டும் இந்த உலகத்திற்குத் திருப்பியது மட்டுமல்லாது திரும்பவும் வானத்தில் பறக்கவைத்தது. ஏனென்றால் அந்தக் குரலுக்கு உரியவள் மிருதுளா.

''ஹாய் பே... ரிது!'' என்றவனை விநோதமாகப் பார்த்தாள் மிருதுளா. ''அது என்ன பே, ரிது... இவன் என்ன என்னை ரிது என்று அழைக்கிறான்? ஆன்ட்டி



மட்டும் தான் கூப்பிடலாம்! ரொம்ப ஓவர்!'' என்ற எண்ணங்கள் தோன்றத் திரும்பவும் தன் கூட்டுக்குள் சென்றாள்.

அவளது பார்வையிலிருந்த வித்தியாசம் புரிய மனதிற்குள் தன்னைத்தானே பலமாகக் கொட்டிக்கொண்டு அவளைப் பார்த்து, ''ரொம்ப நல்லா பாடினே!'' என்றான்.

முதலிலேயே வாசுகி ஆன்ட்டியின் மகன் என்பதால் தான் அவள் ஒரு ஹாய் சொன்னதே. அவன் பே... என்று ஆரம்பித்ததும், ரிது என்று கூப்பிட்டதும், ஒருமையில் வந்த பாராட்டும், சுறுசுறுவென்று கோபத்தை ஏற்றியது.

''ம்ம்ம்'' என்று விட்டு அந்த இடத்திலிருந்து வேகமாக நகர்ந்தாள். ''உன் வாய் தான் உனக்கு எதிரி, இப்போ போய்ட்டாளே, என்ன செய்வியாம்?'' என்று திரும்பவும் தன்னையே நொந்துகொண்டு கீழே இறங்கி உணவருந்தும் ஹாலுக்குச் சென்றான்.

அங்கிருந்த கூட்டத்திற்குள் அவளைப் பார்ப்பதே அரிதாய் இருக்க, ஒன்றும் செய்ய முடியாமல் காரில் வந்து அவளது வருகைக்காகக் காத்திருக்க ஆரம்பித்தான்.

ஒரு அரை மணி நேரத்தில் வெளியே வந்தவள் பஸ் ஸ்டாப் நோக்கி நடக்க ஆரம்பித்தாள். வேகமாகக் காரை எடுத்து அவள் செல்லும் வழியில் சென்று கொஞ்சம் முன்னர் நிறுத்திவிட்டு, அவளை நோக்கி நடந்து வந்தவனை உறுத்து நோக்கினாள்.

''வா ரிது, நம்ம கார்லே நான் ட்ராப் பண்றேன்,'' என்றவனை முடிந்தால் எரித்துப் பஸ்பமாக்கியிருப்பாள்.

அவளின் பார்வை புரிய, ''அம்மா, அப்பா கூடப் போவேதானே, அப்புறம் என்ன? இப்போ அம்மா அப்பா

ஊர்ல இல்லாததுனால என்னோட வா!'' என்றான் உரிமையுடன்.

சாதாரணமாக இருந்திருந்தால் சென்றிருப்பாளோ என்னவோ, ஒரு பெரிய அடி வாங்கிய மனது ஆண்களை முற்றிலும் வெறுத்து ஒதுக்கியது.

பொங்கிய கோபத்தை வாசுகியின் முகம் மனதில் தோன்றிக் கொஞ்சம் அடக்க, ''பரவாயில்லை, நானே போய்க்கிறேன்,'' என்று அவனைக் கடந்து செல்ல முயன்றாள்.

ஒரே எட்டில் அவளை வழி மறித்து, ''ஏன் என்னோடு வருவதற்கென்ன? மூச்சு வாங்க நடப்பதில் என்ன சந்தோசம் உனக்கு!''என்றான். அவன் வளர்ந்த நாட்டில் இதுபோல் எல்லாம் அவன் கண்டதே இல்லை. சரியான காரணமில்லாமல் அவள் வரமுடியாது என்று சொன்னது அவனை இன்னும் கோபமுறச் செய்தது.

''உங்க அம்மா அப்பாவுடன் போனேன் என்றால், உங்களுடனும் வர வேண்டும் என்று எந்தச் சட்டமும் இல்லை!'' என்றாள் கோபக் குரலில்.

''எதற்கு இவ்வளவு கோபம்? வீட்டில கொண்டு போய் விடுறதுக்குத்தான் கூப்பிட்டேன்! ஊர் சுத்தறதுக்கு இல்லை!'' என்றான் அவனும் ஒரு வேகத்துடன்.

''அப்படிக் கூப்பிட்டிருந்தா... உங்க கன்னம் பழுத்திருக்கும்!'' என்று பொரிந்துதள்ளிவிட்டு விடுவிடுவென்று நடக்கத் தொடங்கினாள்.

தன்னை அவமானப் படுத்தியதாக எண்ணி நிகிலனும் சற்று நேரம் ஒன்றும் பேசாமல் அவள் போவதையே வெறித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு அவளை ஒரு



சாதாரணப் பெண்ணாகத்தான் தெரியும். அதுவும் வெளிநாட்டில் படித்தவள். இங்கும் ஒரு பெரிய ஹாஸ்பிடலில் வேலை செய்பவள். இப்படி நடந்துகொள்கிறாளே என்று கோபம் வந்தது.

காரை எடுத்தவன்,

''ரொம்பத் தான்... பெரிய அழகியோ??''

''அடிப்பாளாமே, அழகாய் இருக்கிறோம் என்று திமிர், கர்வம்! கொழுப்பு!''

''போயேன்! உனக்காக வந்தேன் பார், என்னைச் சொல்லணும்''

''என்னைக்கும் இல்லாத திருநாளாய்ச் சீக்கிரம் எழுந்து வேறு வந்தேன், எனக்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும்!'' என்று வாய்விட்டுப் புலம்பிக்கொண்டே வீடு வந்து சேர்ந்தான்.

என்னதான் அந்த வாரம் முழுவதும் புலம்பினாலும் காதல் கொண்ட மனம் அவள் வேலை செய்யும் ஹாஸ்பிடலுக்கு அல்லது வீட்டுக்கோ சென்று பார்க்கத் துடித்தது. ஆனால் அன்று வாங்கிய திட்டோ தயங்கவைத்தது.

அடுத்த வாரம் தயக்கத்தை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டு சார் கோவிலில் ஆஜர். அவளிடம் ஒன்றும் பேசவேண்டாம். சும்மா பார்த்துவிட்டு வந்து விடலாம் என்று தான் அவன் வந்தது. ஆனால் இந்த வாரம் நடந்ததோ போன வாரத்திற்கு முற்றிலும் வேறாக அமைந்தது.

கோவிலில் எல்லாம் முடிந்து மிருதுளா நடந்துவந்து கொண்டிருந்தாள். அவளை நெருங்காமல், அவளிடம்

ஒன்றும் பேசாமல் தூரத்தில் இருந்தே தன் பேபியை ரசித்துக் கொண்டிருந்தான் நிகிலன்.

சற்று நேரம் நடந்தவள், அப்படியே ரோட்டில் மயங்கிச் சரிந்தாள். அவளையே பார்த்துக் கொண்டிருந்த நிகிலன் பதறி ஓடிவந்தான். அவளை நிமிர்த்தித் தன் மேல் சாய்த்துக்கொண்டு, கன்னத்தைத் தட்டினான். அவளிடம் அசைவே இல்லாமல் போகவும் பயந்து, அவளைத் தூக்கிக் கொண்டு காருக்கு விரைந்து, அதிலிருந்த தண்ணீர் பாட்டிலில் இருந்து கொஞ்சம் தண்ணீர் எடுத்துத் தெளித்தான்.

லேசாகக் கண் திறந்தவள் திரும்பவும் கண்ணை மூடி மயங்கவும் உடல் பதற ஹாஸ்பிடலுக்கு அவளை அழைத்துக் கொண்டு விரைந்தான்.

ஹாஸ்பிடல் பரிசோதனைக்குப் பிறகு, சரியாகச் சாப்பிடாததால் வந்த மயக்கம் என்றும், அல்சராலும் பாதிக்கப்பட்டுள்ளாள் என்றும், சத்தானதாக வேளை தவறாமல் சாப்பிடவேண்டும் என்றும் கூறி இருவரையும் அனுப்பி வைத்தனர்.

ஹாஸ்பிடலை விட்டு வெளியே வந்தவுடன், “ரொம்ப நன்றி! நான் இங்கிருந்து போய்க்கிறேன். நீங்க கிளம்புங்க!”என்று சொல்லி நகர முற்பட்டாள் மிருதுளா.

“வெறும் தேங்க்ஸ் மட்டும் தானா? அப்புறம் இங்கே வந்தது என்னுடன் என் காரில்தான். நினைவிருக்கிறதா? போகும்போது என்னோடு வர என்ன தயக்கம்?” என்றான் கண்டிக்கும் குரலில். அவனுக்கு இப்படித் தன் உடம்பைக் கூடக் கவனிக்காமல் இவள் என்ன பெரிய டாக்டர், கொஞ்சமும் அறிவில்லாமல் என்று கோபம் தகித்துக்கொண்டே இருந்தது.



“இல்ல, நானே போய்க்கொள்கிறேன். உங்களுக்கு எதுக்கு வீண் அலைச்சல்? பேசாமல் வீட்டுக்குப் போங்க!” என்றாள் - இவ்வளவு தூரம் உதவி செய்தவனைக் கோபமாய்ப் பேசமுடியாமல், முயன்று வரவழைத்த சிநேக பாவத்துடன்.

“எனக்கு வீண் அலைச்சல் என்று உனக்கு யார் சொன்னது? அதற்கு மேல் நான் ஏன் பேசாமல் வீட்டுக்குப் போகணும்? பேசுவது என்னோட பிறப்புரிமை. தெரிஞ்சுக்கோ, என்ன?” என்று மிரட்டலாகக் கூறியவன், அவள் ஏதோ கோபமாகச் சொல்ல வரவும், “இப்போ மரியாதையா காரில் ஏறுகிறாயா, இல்ல - நான் தூக்கிட்டுப் போகட்டுமா?” என்றான்.

“ஹான்” என்று வாயில் ஈ போகும் அளவுக்குத் திகைத்துப் போய் நின்றிருந்தவளைக் கைப்பற்றிக் காருக்கு அழைத்துச் சென்றான்.

அவன் மனதில் இவளிடம் சும்மா கெஞ்சிக் கொண்டிருந்தால் ஒன்னும் வேலைக்கு ஆகாது, தடாலடியா இது மாதிரி ஏதாவது பண்ணாத் தான் கொஞ்ச நேரத்திற்காவது வாய்மூடிக் கத்தாமல் வருவாள் என்ற எண்ணம்.

அவள் மனதில், ‘அடப் பாவி!! தூக்கிட்டுப் போவானா, என்ன தைரியம், ஆனால் இவன் இல்லை என்றால் அனாதை மாதிரி அங்கேயே விழுந்து கிடந்திருக்க வேண்டியது தான். ஆனாலும் நான் இருந்து என்ன செய்யப்போகிறேன்? அப்படியே செத்துப்போயிருக்கலாம்! என்னை ஏன் இவன் காப்பற்றினான்?’ என்று ஆச்சரியத்தில் தொடங்கி, சுயபட்சாதாபம் நடுவில் வந்து, எப்போதும் போல் கோபத்தில் முடிந்தது.

''கையை விடுங்க, விடுங்க என்கிறேனே! காது கேக்காதா உங்களுக்கு? இப்போ விடப்போறீங்களா இல்லையா?'' என்று பல்லைக்கடித்து வார்த்தைகளைத் துப்பினாள்.

ஒன்றும் சொல்லாமல், அவள் புறம் திரும்பியும் பாராமல் காரை நோக்கிச் சென்றவன், அவளை உள்ளே தள்ளிக் கதவைச் சாத்தினான்.

அவளை உள்ளே தள்ளியதும், அவள் அடுத்துச் செய்யும் முயற்சி, கார் கதவைத் திறந்துகொண்டு வெளியேறுவதாகத் தான் இருக்கும் என்று தெரிந்தவன் போல், அவள் ஏறியதும் கதவை லாக் செய்துவிட்டு அவன் ஏறியபின் வேகமாக லாக்கைப் போட்டான்.

''என்ன செய்துக்கிட்டு இருக்கீங்க. முதல லாக் ரிலீஸ் பண்ணுங்க,'' என்றாள் கோபத்துடன்.

''பண்றேன், பண்றேன். எனக்கு ரெண்டு கேள்விகள் இருக்கு. ரெண்டுக்கும் பதில் வந்துவிட்டால் நீ போகலாம்,'' என்றான் கெத்தாக.

''நீங்கள் என்ன என்னைக் கேள்விகேட்பது? உங்களுக்குப் பதில் சொல்லணும் என்று எனக்கு ஒரு தேவையும் இல்லை!'' என்றாள் இன்னும் கடுப்பாக.

'' பதில் வரும் வரை என்னோடு இருப்பதென்றால் எனக்கு ரொம்ப சந்தோசம். நீ சொல்லும்வரை திறக்க மாட்டேன்!'' என்றுவிட்டு காரைச் செலுத்தினான்.

எவ்வளவு நேரம் அவனால் அப்படித் திறக்காமல் இருக்க முடியும் என்று மனதில் பொருமியவாறே பல்லைக் கடித்துக் கொண்டு பேசாமல் உட்கார்ந்து இருந்தாள் மிருதுளா. ஒரு பார்க்கில் கொண்டு காரை நிறுத்தியவன்



ஒன்றும் சொல்லாமல் கார் சீட்டைப் பின்னுக்குத் தள்ளி நன்றாகச் சாய்ந்து அமர்ந்தான்.

''கதவைத் திறக்கப் போறீங்களா இல்லையா? இப்ப நீங்க திறக்கல வாசுகி ஆன்ட்டி பையன்னு கூடப் பார்க்க மாட்டேன். 911 கால் பண்ணிடுவேன், ஜாக்கிரதை!'' என்றாள் மிரட்டலாக.

பதிலேதும் கூறாமல், அவளது செல்போனையும், தன்னுடையதையும் தன் பான்ட் பாக்கெட்டிலிருந்து எடுத்துக் காண்பித்துவிட்டுத் திரும்பவும் சாய்ந்து கொண்டான்.

''என்னோட செல்போனை நீங்க ஏன் எடுத்தீங்க? கொடுங்க!'' என்று அவன் கையிலிருந்து பிடுங்க முயன்று, அவன் மேல் தன் தேகம் படுவது பிடிக்காமல் சீட்டில் அமர்ந்தாள்.

நேரம் நேரம் செல்லச் செல்ல, மிருதுளாவின் பொறுமை கொஞ்சம் கொஞ்சமாய்க் கரைந்து கொண்டிருந்தது.

பத்து நிமிடத்தில் பொறுமை பஞ்சாய்ப் பறக்க, ''ஹலோ மிஸ்டர், இப்ப என்ன வேணும் உங்களுக்கு?'' என்று வார்த்தைகளைத் துப்பினாள்.

''கேள்விக்குப் பதில்!'' என்றவனைக், ''கேள்வியே கேக்காமல் பதில் வேணும்னு சொல்றீங்களே, நீங்க என்ன லூசா?'' என்று இடைமறித்தாள்.

''உன்னை மாதிரி லூசு இல்ல, கொஞ்சம் பரவாயில்லை ரகம் தான்!'' என்றான் இவனும் நக்கலாக.

அவளது முறைப்பைப் பெற்றுக்கொண்டு, ''சரி சரி, கேள்வி இதோ...'' என்றுவிட்டு அவளை நேராக நோக்கி

"உன் உடம்பையே உன்னால் பார்த்துக் கொள்ள முடியவில்லை என்றால், நீ டாக்டராக இருந்து என்ன புண்ணியம்? ஏன் ஒழுங்காகச் சாப்பிடமாட்டேன்றே?" என்று அவள் பதில் கூறுவதற்காக ஒரு இடை வெளி விட்டான்.

ஒன்றும் சொல்லாமல் அவள் அவளது உலகத்தில் இருக்கவே, "சரி, அடுத்ததையும் கேட்டுவிட்டு ஒன்றாகச் சொல்லலாம் என்று இருக்கிறாய் போல," என்று தொடர்ந்து அவன் கேட்ட கேள்வி அவளைத் தன்னிலை மறக்க வைத்தது.

"ஆமா நீ என்ன பெரிய அழகியா, ஓவர் சீன் போடற? சும்மா ஒருவரோடு காரில் போய் சிரித்துப் பேசினால் உன் கற்பா போய்விடும்? கொஞ்சம் இயல்பா இருக்க முடியாதா உன்னால?" என்று அவன் கேள்வியை முடிப்பதற்கும், அவள் கை அவன் கன்னத்தைப் பதம் பார்ப்பதற்கும் சரியாக இருந்தது.



## 20



அவள் அடித்ததும் முகம் ரத்தமெனச் சிவக்க, ஜிவுஜிவுவென்று கோபம் தலைக்கேற, சில நொடிகள் அவளை உறுத்து நோக்கினான். அவள் முகத்தில் அடித்துவிட்டோமே என்ற வருத்தம் கொஞ்சமும் இல்லாமல் போகவும், சினத்தில் முகமும், உதடும் துடிக்க



என்ன செய்கிறோம் என்றே புரியாமல், அவள் முகத்தைத் தன்பால் இழுத்து முரட்டுத்தனமாக அவளது உதடுகளை முத்தமிட்டான்.

அவன் பேசிய வார்த்தைகளில் கொதித்துக் கொண்டிருந்தவள், இதில் முற்றிலும் அதிர்ந்து தன் பலம் கொண்டமட்டும் அவனைப் பிடித்துத் தள்ள முயன்றாள். அவள் உடலின் பலவீனமோ, இல்லை. அவனது உடலின் பலமோ அந்த முயற்சி ஒன்றுமில்லாமல் போனது.

எத்தனை நேரம் அந்த முரட்டுத்தனம் நீடித்ததோ இருவருமே அறியவில்லை. கடைசியில் நிகிலனே அவள் போராடாமல் இருக்கவும் அவளை விட்டான். "ச்சே, இதுக்குத் தானே, இப்படி ஏதும் நடந்துவிடும் என்று பயந்து தான் என்னோடு வரவில்லை நீ? இப்போது நடந்துவிட்டதே, என்ன செய்வியாம்?" என்று எகத்தாளமாகக் கேட்டுக்கொண்டே அவளைப் பார்த்தவன் பதறிப் போனான்.

ஏனென்றால் அவள் சுயநினைவின்றி, கார் கியரின் மேல் விழுதிருந்தாள்.

"பேபி பேபி!" என்று எழுப்ப முயன்று, அதில் தோற்று அவளை நிமிர்த்தி சீட்டில் சாய்த்து உட்கார வைத்தான்.

"ஐயோ கடவுளே, என்ன மடத்தனம் செய்துவிட்டேன்! உடம்பு சரியில்லாமல் இருந்தவளைப் போய்..." என்று செய்து முடித்த காரியத்திற்காக வருந்திக்கொண்டே கொஞ்சம் தண்ணீர் எடுத்துச் சற்றுமுன் செய்தது போல் தெளித்தான்.

அதில் சற்றுத் தெளிந்தவள் தன் முகத்தின் அருகே அவன் முகத்தைக் காணவும், பயத்தில் முகம் வெளிறி, ''ப்ளீஸ் வேண்டாம், வேண்டாம்!'' என்று கெஞ்ச ஆரம்பித்தாள்.

''சாரி பேபி, ப்ளீஸ் இனிமேல் அப்படியெல்லாம் செய்யமாட்டேன்!'' என்று மன்னிப்புக் கோர, அவனது பேபி என்ற அழைப்போ, அவனது வருத்தமோ, உறுதி மொழியோ அவள் மனதில் பதியவே இல்லை.

''வேண்டாம் வேண்டாம்!'' என்று புலம்பலை அவள் தொடர, ''சை'' என்று தன்னையே வெறுத்தவன் நெற்றியை ஒரு தரம் அழுந்தத் தடவிவிட்டுக் கொண்டான். பின்னர் அவளை நெருங்கி, அவள் கைப்பற்ற முயன்றான்.

அவன் கைப்பட்ட அடுத்த நிமிடம், ''ஐயோ! வேண்டாம், என்னை விட்டுடுங்க. ப்ளீஸ், எனக்குப் பயமாக இருக்கே!'' என்று அவள் அனத்தவும் நிகிலன் துடித்துப் போனான்.

''என்னைப் பார்த்துப் பயப்படாதே பேபி ப்ளீஸ், கடவுளே! இங்கே பாரேன், கொஞ்சம் அமைதிப்படுத்திக் கொள் கண்ணம்மா!'' என்று அவன் அவள் தன்னுடையவள் என்ற உரிமையில் உருகினான்.

அவன் உருகலுக்குச் செவிகூடச் சாய்க்காமல்''ஐயோ, ஒண்ணுமே செய்யாமலேயே என்னை அத்தனை சொன்னாங்களே, இப்ப இது தெரிஞ்சா என்ன சொல்லுவாங்களோ?'' என்று புலம்பியவள் ஏதோ பயங்கரமாக மனதில் தோன்றியது போல் திடுக்கிட்டுத் திரும்பி அவனைப் பார்த்து, ''என்னை ஒன்னும் செஞ்சுடாதிங்க ப்ளீஸ் உங்களைக் கை எடுத்துக் கும்புடுறேன்!'' என்றாள் கண்களில் இருந்து நீர் அருவியாய் வழிய.



''ஹே என்னை என்ன நினைச்சே?'' என்று ஒரு நிமிடம் புலி போல் உறுமியவன் அவளது மிரண்ட தோற்றத்தில் தணிந்து, ''இல்ல பேபி, இனி ஒன்னும் செய்யல்ல. உன்னை வீட்டில் விட்டுவிடுகிறேன்,'' என்று விட்டுக் காரை எடுத்தான்.

சில நொடிகளில் அவன் அவள் புறம் திரும்ப, தன்னிச்சையாகப் பின்னே நகர்ந்து பயத்துடன் அவனை ஏறிட்டாள் மிருதுளா. கண்களை இறுக ஒரு முறை மூடித் திறந்தவன், ''சீட் பெல்ட் போட்டுக்கொள்,'' என்றுவிட்டு திரும்பிக் கொண்டான்.

போகும் வழி யாவும்,

''பார்த்து ஒரு பத்து நாட்களே ஆன ஒரு பெண்ணிடம் இப்படியா நடந்துகொள்வது? அம்மாவிற்குத் தெரிந்தால் அவ்வளவு தான். இவளைப் போல் அடித்தால் கூடப் பரவாயில்லை, அம்மா பேசவே மாட்டார்களே!''

''நம் நிலைமையையே யோசிக்கிறோமே. பாவம் அவள், ரொம்பவும் பயந்துவிட்டாள்.''

''தன்னை மறந்து ஏதோ சொன்னாளே, ஒன்னும் செய்யாதபோதே அப்படிச் சொன்னார்களே என்று? யார் என்ன சொன்னார்களோ?''

''தனக்கு யாருமில்லை என்று சொன்னாள் என்று அம்மா கூட வருத்தப் பட்டார்களே!''

''யாருமில்லாமல் தனியாக இங்கு வந்து, தான் உண்டு தன் வேலையுண்டு, தன் பாட்டு உண்டு என்று

இருந்தவளை இப்படிப் பயமுறுத்தி நிமிர்ந்து கூடப் பார்க்கவிடாமல் செய்துவிட்டோமே!''

''நான் என்ன சொன்னேன் என்று கை நீட்டினாள்? அதில் தான் கோபம் தலைக்கேறிவிட்டது...''

என்று ஏதேதோ எண்ணக்கலவைகளுடனே வண்டியை பிட்சா ஹட் இருக்கும் ஒரு மாலுக்குள் கொண்டு போய் நிறுத்தினான்.

அவள் இருக்கும் மனநிலையில் வீட்டில் போய் ஏதேனும் செய்து உண்பாள் என்று அவனுக்குத் தோன்றவில்லை. அதனால் ஏதேனும் வாங்கிக் கொடுத்து வீட்டில் விட்டுவிடலாம் என்ற எண்ணத்துடன் அவன் நிறுத்த, வண்டி நின்றது கூடத் தெரியாமல் சீட்டில் பயத்துடன் ஒன்றி இருந்தவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது என்றால் தன் மேல் சொல்ல முடியாத அளவுக்குக் கோபம் ஏறியது.

கோபம் ஏறுவதால் என்ன செய்ய முடியும், ஒன்றும் கிழிக்க முடியாது, நடந்ததை மாற்றவும் முடியாது என்ற எண்ணம் தோன்ற, அதை அடக்கி அவள் புறம் திரும்பி, ''நான் போய் உனக்குச் சாப்பிட ஏதாவது வாங்கிட்டு வரேன். ஓகே. உனக்கு என்ன பிடிக்கும்?'' என்று அதுதான் இப்போது முக்கியம் போல் நிறுத்தினான்.

''ஹான், எனக்கு ஒன்னும் வேண்டாம், கதவை மட்டும் திறந்துவிடுரீங்களா??'' என்று கெஞ்சியவளைக் கண்டவுடன், ''இவளை எப்படி மாற்றப்போகிறேன்?'' என்று ஆயாசப்பட்டவன், இவளை இப்படியே விட்டு விட்டுச் சென்றால் இறங்கி எங்கேனும் விழுந்து வைத்து விடுவாள் என்றெண்ணி போன் மூலமாக ஆர்டர் செய்து



அவள் வீட்டிற்குக் கொண்டுபோய்க் கொடுக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டு அவளின் இருப்பிடம் நோக்கிக் காரைச் செலுத்தினான்.

''நியூ வெஸ்ட்'' என்னுமிடத்தில் அவள் வசிக்கும் அபார்ட்மென்ட் முன் காரைக் கொண்டுபோய் அவன் நிறுத்தும் வரை ஒன்றும் சொல்லாமல், கண்ணீரில் கரைந்து, பயத்தில் நடுங்கிக் கொண்டே வந்தாள் அவள். நிறுத்திவிட்டு நிகிலன் அவளிடம் திரும்பும் போது, கொஞ்சம் கவலையுடன் காயம்பட்ட உதடுகளை வருடிக் கொடுத்துக்கொண்டு சிறுபிள்ளை போல் தேம்பிக் கோண்டிருந்தாள் மிருதுளா.

தன்னைக் கொஞ்சம் சமாதானப் படுத்திக் கொண்டு, ''வீடு வந்துவிட்டது ரிது,'' என்றான் அமைதியாக.

அவன் சொன்னதும் வேகமாகக் கதவைத் திறக்க முயன்று அதில் தோற்று, பயம் அதிகரிக்க, அவன் புறம் திரும்பிக் கெஞ்சலாகப் பார்த்தாள் மிருதுளா.

அவள் பார்வை புரிந்து, ''பயப்பட வேண்டாம், திறந்துவிட்டு விடுகிறேன்... ஒன்னே ஒன்னு மட்டும். இப்போது பிட்சா வீட்டிற்கு வரும். அதைச் சாப்பிட்டுவிடு. என் மேல் உள்ள கோபத்தில் உடம்பைக் கெடுத்துக்கொள்ளாதே, சரியா?'' என்றுவிட்டு, அவள் ''ம்ம்ம்'' என்றாவது சொல்லுவாள் என்று சிறிது நேரம் காத்திருந்தான்.

அவளோ எப்போதடா திறப்பான், வீட்டில் முடங்கலாம் என்று தவித்துக் கொண்டிருக்கவே, லாக் ரிலீஸ் ஆனவுடன் அவசர அவசரமாக இறங்கி வீடு நோக்கி வேகமாக நடந்தாள். இல்லை, ஓடினாள்.

நடையில் தடுமாற்றம் இருந்தபோதும் அவள் வேகம் குறையாமல், அவனைத் திரும்பியும் பாராமல் செல்ல வும் மனதில் பெரிய ஏமாற்றம் குடிகொள்ள ஒரு நெடிய பெருமூச்சை வெளியேற்றிவிட்டு வீடு வந்து சேர்ந்தான்.

வீடு வந்த சேர்ந்த பிறகும் வெகு நேரம் மனம் நிலைகொள்ளாமல் தவித்தான் நிகில்.

ஒரு நிலைக்கு மேல் ஒன்றும் முடியாமல் தாயின் இந்தியன் மொபைலுக்குத் தொடர்பு கொண்டான். அவர்களது விடிகாலையில் போன் வரவும் பதறிப்போய் எடுத்துப் பேசிய விஸ்வநாதனிடம், ''ஒண்ணுமில்லை அப்பா, அம்மாவிடம் கொஞ்சம் பேசணும் போல் இருந்தது. தூங்கிட்டு இருந்தா அப்புறம் கூப்பிடறேன்,'' என்று அவன் அவசரமாகக் கூறவும், ''இல்ல இல்ல, அம்மா எழுந்துவிட்டாள், கொடுக்கிறேன்,'' என்று மனைவி யிடம் செல்லைக் கொடுத்தார்.

''என்ன கண்ணா?'' என்ற தாயிடம், ''அம்மா ஒரு தப்பு பண்ணிவிட்டேன்!'' என்று முதலிலேயே தொடங்கிவிட் டான்.

''என்னடா செய்தாய்? உனக்கு ஒன்றுமில்லை தானே, எங்கே இருக்கிறாய்?'' என்று வாசுகி கேள்விகளைப் பதற்றமாக அடுக்க -

''ஐயோ அம்மா! எனக்கு ஒன்றுமில்லை. தப்பு செய்து விட்டேன் என்கிறேன். எனக்கு ஒன்றுமில்லையே என்று கேக்குறீங்க! என்னம்மா?'' என்று அவன் எரிச்சலாகக் கூறவும் -

''சரி சரி, பெற்ற மனம். ஒன்றைப் பறிகொடுத்தவள் வேறு, அதுதான் பயந்து விட்டேன்!'' என்று தன்



செயலுக்குச் சமாதானம் சொல்லிவிட்டு, ''நீ விஷயத்தைச் சொல்லு,'' என்று மகனைத் தூண்டினார்.

கடகடவென்று போன வாரம் தான் கோவிலுக்குச் சென்றது முதல் இன்று வரை அவளை வீட்டில் விட்டு விட்டு வந்த சூழ்நிலை வரை அனைத்தையும் சொல்லி முடித்தான் ஒரு 15 நிமிட நேரத்தில்.

அவன் ஆரம்பிக்கும் போது, ''நம் கணிப்பு சரிதான், பையன் இப்படி விழுந்து விட்டானே, ரிது நம் வீட்டுக்கே வந்துவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!'' என்றெல் லாம் வானில் பறந்தவர் -

அவள் அடித்தாள் என்று சொன்னவுடன் ஒரு சாதாரணத் தாய் மனதாய் மிருதுளா மேல் கோபம் வராமல், ''என்ன வார்த்தைகள்? இன்னும் வாயை அடக்கிப் பேசத் தெரிய வில்லை, இவன் எல்லாம் ஒரு கம்பெனி நடத்திப் பணம் சம்பாதித்து என்ன புண்ணியம்!'' என்று மகன் மீது தான் கோபம் வந்தது.

கடைசியில் அவன் செய்த வேலையைத் தயங்கித் தயங்கி வாசுகியிடம் சொல்லி முடித்தவுடன், வாசுகி பல நொடிகள் ஒன்றும் பேசவேயில்லை. ''அம்மா ப்ளீஸ்ம்மா, பேசுங்கம்மா, ஏதாவது திட்டுங்க!'' என்று அவன் மறு முனையில் தவிக்கவும் -

''ஆண் பிள்ளை என்ற திமிர் உனக்கும் இருக்கிறது தானே! உன்னை வெளிநாட்டில் வளர்த்திருந்தாலும் நம் நாட்டுப் பண்பாட்டையும், நல்ல பழக்க வழக்கங் களையும் சொல்லிக் கொடுத்து வளர்த்திருக்கிறேன் என்று நான் பெருமைப் பட்டுக் கொண்டிருக்கிறேன், நீ என்னடாவென்றால்...'' என்று வாசுகி பொரியவும், ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருந்தான்.

''அவளது முகத்தில் எப்படிக் கண்ணா முழிப்பது? சும்மாவே அவள் மிகவும் தயங்குவது போல் இருக்கும். நிது விஷயம் தெரிந்தவுடன் தான் கொஞ்சம் நெருங்கிய மாதிரி இருந்தது. இப்போது நீ செய்திருக்கும் வேலைக்குக் கோவிலுக்கே வருவாளோ என்னவோ!'' என்று அவர் தொடர, இதையெல்லாம் எண்ணித் தான் நானும் சற்றுமுன் வரை தவித்துக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லாமல் மௌனத்தைத் தொடர்ந்தான்.

சில வினாடிகளுக்குப் பிறகு ''அம்மா, அவளுக்கு போன் பண்ணி சாப்பிட்டாளா என்று கேளுங்கள் அம்மா, டாக்டர் வேறு அல்சர், சரியாகச் சாப்பிடுவதில்லை என்று சொல்கிறார். இதற்குப் பிறகு அவள் சாப்பாட்டை ஏறெடுத்தும் பார்த்திருப்பாள் என்று எனக்குத் தோண வில்லை, ப்ளீஸ்மா!'' என்று கெஞ்சினான்.

''ஏன் நீ செய்வதுதானே?'' என்றார் வாசுகி எரிச்சலாக.

''இல்லமா, நான் பேசுகிறேன் என்று தெரிந்தால் பேசு வாளோ என்னவோ? அதுதான்...'' என்று அவன் தயங்கவும்.

''சரி சரி, பண்ணுகிறேன். இன்னொன்று. நான் அங்கு வரும்வரை நீ எனக்கு போன் செய்யத் தேவையில்லை!'' என்று கறராய்ச் சொல்லிவிட்டு அவனாக ஏதோ தொடங்கு வதற்குள் போனை கட் செய்து விட்டு, ரிதுவின் நம்பருக்கு முயன்றார். ரிங் போய் யாருமே எடுக்காததால் திரும்பவும் மூன்று முறை முயன்றுவிட்டுக் கணவனிடம் சென்று, ''நிகிலுக்குக் கூப்பிட்டு, ரிது நம்பர் கிடைக்க வில்லை... அவனை ட்ரை பண்ணச் சொல்லுங்கள். நான் போய்க் குளித்துவிட்டு வந்து திரும்ப ட்ரை பண்றேன் என்றும் சொல்லுங்கள்,'' என்றார்.

''ஏன் நீயே உன் பையன்கிட்டே சொல்றதுதானே?'' என்றவரை, ''சொல்லுங்கள் என்றால் சொல்லுங்கள். அவ்வளவுதான்!'' என்று விட்டு நகர்ந்தார்.



நிதுவின் மறைவுக்குப் பிறகு நிகில் வாசுகி மனம் நோகும்படி ஒரு சின்னக் காரியம் கூடச் செய்ததில்லை எனலாம். அப்படி இருக்கும் போது அவன் மேல் திடீரென்று என்ன கோபம் என்ற யோசனையோடு நிகிலுக்கு போன் செய்து விவரம் கூறினார்.

அவனும் முயன்று முயன்று பல தோல்விகளைத் தழு வியபின் தான் புரிந்தது அவளது செல்போன் தன்னிடமே தங்கிவிட்டது என்று. அதைக் கூட வாங்காமல் சென்று விட்டாளே என்று நொந்து திரும்பத் தாயை அழைத் தான். விஸ்வநாதன் எடுத்து மனைவியிடம் கொடுக்கவும், ''உன்னைப் பேச வேண்டாம் என்று நான் சொல்ல வில்லை?'' என்று வாசுகி கோபமாகத் தொடங்கவும்.

''சாரிமா, இனிமேல் இல்லை. அவளோட போன் என்கிட்டேதான் இருக்கு!'' என்று தொடங்கி, அதை எடுத்த விவரத்தைச் சொல்லி முடித்தான். ''இப்போ போய்க் கொடுத்துட்டு வரவா?'' என்று அவன் கேட்க, ''இந்த டைம்ல நீ ஒன்னும் அங்கே போகத் தேவை யில்லை, நாளைக்கு அவள் வேலை செய்யும் இடத்தில போய்க் கொடுத்துட்டு வா,'' என்று பட்டென்று சொல்லித் தொடர்பைத் துண்டித்தார்.

நிகிலனுக்கு அந்த இரவு தூங்கா இரவாய்க் கழிய, மிருதுளாவிற்கோ நினைவே இல்லாத இரவாய்க் கழிந்தது.

சமீபத்தில் குடும்பம் மொத்தமும் தன்னை வெறுத்து ஒதுக்கிய வேதனை ஒருபுறம், இன்று நடந்த திடீர்த் தாக்குதல் ஒருபுறம் என்று மனம் விரக்தியிலும், தனக்கு யாருமில்லை என்ற சுயபட்சாதாபத்திலும், இனிமேலும் இப்படி நடந்தால் என்ன செய்வது என்ற பயத்திலும், இன்று இவன் இப்படி, இன்னும் வேறு யாராவது செய்தால் தான் என்னவாவோம் என்ற நடுக்கத்திலும் ஓய்ந்து போய்ப் படுக்கையில் சுருண்டாள் மிருதுளா.

அவன் ஆர்டர் செய்த பிட்சா வந்து, அவர்கள் இருபது முறை கதவைத் தட்டியும், அழைப்பு மணியை அடித்தும் பார்த்துவிட்டு நிகில் கொடுத்திருந்த போன் நம்பருக்குத் தொடர்பு கொண்டனர். அது மிருதுளாவின் போன் நம்பர் என்பதாலும், அப்போது நிகிலுக்கே தன்னிடம் இருப்பது தெரியாத சமயம் என்பதாலும், உணவும் ஒன்றில்லாமல் பசியிலும் பயத்திலேயுமே இரவைக் கழித்தாள் மிருதுளா.

காலையில் எழுந்து ஆபீஸ் சென்று கொஞ்சம் வேலைகளை முடித்து விட்டு அவளைப் பார்க்கச் செல்லலாம் என்று எண்ணி அலுவலகம் சென்றவனுக்கு அன்றைய வேலைகள் தலை நிமிர முடியாமல் இருக்க, மதியம் தான் கொஞ்சம் மூச்சுவிட முடிந்தது. அப்போதும் செல்ல முடியாமல் திடீரென்று வந்த ஒரு வாடிக்கையாளரின் அழைப்பு நகரவிடாமல் செய்தது.

சாயங்காலம் அவள் ஹாஸ்பிடல் சென்று அவளைப் பார்க்க வேண்டும் என்று சொன்னபோது, அவனுக்குக் கிடைத்த பதிலில் ஒரு நிமிடம் உலகம் இருண்டு விட்டது நிகிலனுக்கு.



## 21

அவள் இன்று அலுவலுக்கு வரவில்லை என்றும், அவளது மொபைல்லுக்கு முயன்றால் எடுக்கவில்லை



என்றும், அவர்கள் கூறக் கூற, அவனது நெஞ்சக்கூடு காலியானது.

''ஹய்யோ, நேற்றில் இருந்து உடம்பு சரியில்லாமல் இப்போது என்ன நிலையில் இருக்காளோ... கடவுளே! அவளுக்கு ஒன்றும் ஆகியிருக்கக் கூடாது. என்ன செய்தாவது அவளை எனக்குக் கொடுத்து விடு! நான் கண்ணுக்குள் வைத்துப் பார்த்துக்கொள்கிறேன்!'' என்று ஆயிரம் ஆயிரம் மன்றாடல்களுடன் மிருதுளாவின் வீட்டை அடைந்த போது மனது படபடவென்று அடிக்கும் சத்தம் வெளியில் கேட்டது நிகிலனுக்கு.

மனம் இடைவிடாமல் கடவுளை வேண்ட, கதவைத் தட்டினான் நிகிலன். அவனது பலமான தட்டுகளுக்கோ, ஐம்பது முறைக்கு மேல் அவன் அடித்த அழைப்பு மணியின் சத்தத்திற்கோ பலனில்லாமல் போகவே, கண்ணை இருட்டி மயக்கம் வருவது போலிருந்தது அவனுக்கு.

''பேபி என்ன செய்கிறாய்?''

''கதவைத் திற பேபி, ப்ளீஸ்டா வாயேன்!''

''வீட்டில் இருக்கிறாயா இல்லையா?'' என்று பலவாறாக அவன் கத்த, ஒரு கட்டத்தில், ''நாம் தான் பைத்தியம் போல் கத்திக்கொண்டிருக்கிறோமோ, அவள் வீட்டிலேயே இல்லையோ?''என்ற எண்ணம் தோன்றியது. தோன்றிய விரைவிலேயே அது மறைய, இன்னொரு மனம், ''இல்லை, அவள் வீட்டில் தான் இருக்கிறாள்,'' என்று அடித்துச் சொன்னது.

அபார்ட்மென்ட் மேலாளரைக் கூப்பிட்டு மாஸ்டர் கீ இருந்தால் அதைக் கொண்டு திறக்கலாம் என்று

முடிவுக்கு வந்து கடைசி முயற்சியாகக் கதவைப் பலமாகத் தட்டி, அழைப்பு மணியையும் ஒருங்கே அடித்தான்.

அடித்துவிட்டுக் காதை கதவின்மேல் வைத்து உன்னிப் பாகக் கவனித்தான். ''ஹ்ம்ம்'' என்ற மெல்லிய முனகல் சத்தம் காதில் விழ, மனம் நிம்மதியில் தோய்ந்தது.

''பேபி, மெதுவா வந்து கதவைத் திற கண்ணா!''

''நான் பேசுறது கேக்குதா?''

''கொஞ்சம் முயற்சி பண்ணுடா! கதவைத் திறடா!'' என்று அவன் ஒரு அரைமணி நேரம் தொண்டை உலரக் கெஞ்சிய பிறகு தான் மிருதுளா மெது மெதுவாகச் சுயநினைவு பெற்றுக் கதவின் லாக்கை ரிலீஸ் செய்தாள்.

அவள் திறப்பதற்காகவே காத்திருந்த நிகில் உள்ளே நுழைய அவன் மீதே உடல் தளரச் சாய்ந்தாள்.

அவளை நிமிர்த்திப் பார்த்தவனுக்கு நெஞ்சு வலித்தது. நேற்றுப் போட்டிருந்த உடையிலேயே இருந்தவளின் கண்கள் கோவைப் பழமாய்ச் சிவந்திருக்க, உடம்பு நெருப்பாய்ச் சுட்டது. கண்கள் வீங்கி, உடல் தளர்ந்து அவள் இருப்பதைக் கண்கொண்டு பார்க்கமுடியாமல் ஒரு நிமிடம் கண்களை இறுகமூடித் திறந்தவன், அவளது நிலை புரிய, வருத்தம் கொள்ள இது சரியான சமயமில்லை என்று முடிவு செய்து அவளைக் கைகளில் ஏந்திக்கொண்டு காரை நோக்கி விரைந்தான். அவளைக் காரில் கிடத்திவிட்டு, சாவியைத் தேடி வீட்டைப் பூட்டியவன் விரைந்து மருத்துவமனை நோக்கிச் சென்றான்.

போகும் வழியாவும் நிகில் கடவுளுடன் ஒரு டீலிங்கில் இருக்க, மிருதுளாவோ நினைவு அரை குறையாய் இருந்த நிலையில் -



''நான் தப்பு பண்ணல அண்ணா... ப்ளீஸ் அண்ணா! அடிக்காதே!''

''டாடி, நம்புங்க டாடி.''

''ஐயோ வேண்டாம்! என்னால விமலைக் கல்யாணம் பண்ண முடியாது''

''வேண்டாமே, என்னை விட்டுடுங்க!''

என்று சிறிது நேரம் புலம்பினாள் என்றால், சிறிது நேரத்தில்

''வேண்டாம், என்னை ஒன்னும் செய்யாதீங்க.''

''ஒண்ணுமே பண்ணாதப்பவே என்னை அடிச்சாங்களே, இப்போ என்னைக் கொன்னுடுவாங்களா?''

''அச்சச்சோ, நான் செத்துப் போய்ட்டா என்ன செய்றது? அடிக்கிறது வேற வலிக்குமே!'' என்று நிகிலனின் செயல்கள் நினைவில் வரச் சிறு பிள்ளைபோல் மறுகினாள்.

*அவளது புலம்பல்களும், மறுகல்களும் நிகிலை முதலில் ஆச்சரியத்திலும், பின்னர் வருத்தம் கலந்த கோபத்திலும், கடைசியில் என்ன நடந்திருந்தாலும் அவள் என்னுடையவள் என்ற தீர்க்கமான முடிவில் கொண்டு வந்து நிறுத்தியது. மருத்துவமனையில் அவளைச் சேர்த்துவிட்டு, அவர்கள் முதற்கட்டப் பரிசோதனை செய்வதற்காக எடுத்துக்கொண்ட பதினைந்து நிமிடங்களும் கத்தி மேல் நிற்பது போலிருந்தது.

உடம்பில் எதிர்ப்புச் சக்தியில்லாமல் போனதுதான் காரணமென்று நிகில் அறியாத (!?!?!) உண்மையை அவனுக்குக் கூறுவது போல் டாக்டர்கள் கூறிய போது

கடவுளே! வேறொன்றும் பெரிதாக வராமல் காப்பற்றிக் கொடுத்தாயே! அதுவே போதும் என்று கடவுளுக்கு நன்றி தெரிவித்தான்.

ஆனால் மகாலக்ஷ்மி தேவி, '' இதுக்கு மேல் தான் கண்ணா உனக்கு இருக்கு பெரும் ஆப்பு... காத்திருந்து பார்!'' என்று கூறியது. பாவம்! சாதாரண மனிதப் பிறவியான நிகிலுக்குக் கேட்கவேயில்லை. அவரவர் விதைத்த வினையை அவரவர் தானே அறுக்க வேண் டும்!

ட்ரிப்ஸ் இறங்கிக்கொண்டிருக்க அவளருகில் சென்று அவளது மெலிந்த கரங்களை வருடிக் கொடுத்துக் கொண்டே அவளை இமைக்காமல் பார்த்திருந்தான் நிகில்.

''ரொம்பவே சாரி பேபி, நீ எழுந்து அடித்துப் போட் டால் கூட சந்தோசம். ஆனால் உன் உடம்பை ஏன் இப்படிக் கெடுத்துக் கொள்கிறாய், ஹ்ம்ம்?''

''உனக்கு என்ன கஷ்டம் பேபி, என்னவாக இருந் தாலும் இனிமேல் அதை நினைத்து நீ வருத்தப்படக் கூடாது, ஓகே?''

''யாருடா அந்த விமல்? நல்லவேளை, நீ அவனைக் கல்யாணம் செஞ்சுக்கல. நான் பிழைச்சேன். என் செல்ல பேபி எப்படிடா நான் உனக்காகக் காத்திருப்பேன் என்று தெரிந்து வேண்டாம்ன்னு சொல்லிட்டியா, ரொம்ப ஸ்வீட் ரிது நீ!''

''என்கிட்டே வந்துடுடா, நான் உன்னை இனிமேல் எந்த மாதிரியும் கஷ்டப்படுத்தாமல் பூப் போல் தாங்கு கிறேன். என்ன, டீல் ஓகே வா?''



''அம்மா கூட என்னை ரொம்ப திட்டிட்டாங்கடா, பேசவே மாட்டேன்னு சொல்லிட்டாங்க, தெரியுமா?''

இப்படியெல்லாம் நிகில் மிருதுவிடம் நேரில் பேசியிருப்பான் என்று நீங்க தப்பா நினைத்தால், நான் என்ன செய்றது? நினைக்கக் கூடாது. அவ்வளவுதான். அவள் கண் மூடிப் படுத்திருக்க, அவளிடம் தனியாகப் பேசிக்கொண்டிருந்தார் நம்ம ஹீரோ.

கண் விழித்து அவள் அவனைப் பார்க்கும் வரை அவளது சோர்வையும், அதையும் மீறி அவளது அழ கையும் ஒவ்வொன்றாக அளந்து கொண்டிருந்தான் நிகில்.

மயக்கம் முழுதாகத் தெளிந்து அவள் திட்டி வீட்டிற்கு வரமாட்டேன் என்று அழும்பு பண்ணும்வரை ஏன் காத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்ற, ட்ரிப்ஸ் முடிந்தவுடன் அரை மயக்கத்தில் இருந்தவளைக் காரில் ஏற்றி அவனது வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

அவளை வாசுகியின் அறையில் படுக்க வைத்து விட்டு, வாசுகிக்கு போன் போட்டான்.

போனை இப்போதும் விஸ்வநாதன் எடுக்க, ''அம்மா கிட்ட கொடுங்கப்பா,'' என்றவனிடம், ''என்னடா செஞ்சு வச்சிருக்க, நீ செஞ்ச வேலைக்கு என்னை இங்கே காச்சி எடுக்குறா உங்க அம்மா!'' என்று பொரிந்த தந் தையைச் சமாதானப் படுத்தி ஒரு வழியாக வாசுகியிடம் திட்டுவாங்க ஆயத்தமானான் மைந்தன்.

''என்னடா, ஒரு தடவை சொன்னா உறைக்காது உனக்கு, சும்மா போன் செஞ்சுகிட்டு!'' என்று வாசுகி எரிந்து விழ. ''அம்மா அம்மா, ப்ளீஸ், ரிதுக்கு ரொம்ப

முடியலமா, இப்போ தான் ஹாஸ்பிடல்ல இருந்து வீட்டுக்குக் கூட்டிட்டு வந்தேன்,'' என்று அவசர அவசரமாக அவன் சொல்ல

வாசுகி கேட்ட முதல் கேள்வி ''யார் வீட்டுக்கு?'' என்பதுதான். குரல் இறங்கிவிட, ''நம்ம வீட்டுக்குத் தான்,'' என்றான் நிகில்.

''அறிவில்லை உனக்கு? நீ செஞ்ச வேலை பத்தாதுன்னு அவளை நம்ம வீட்டுக்கு நான் இல்லாதப்ப ஏன் கூட்டிட்டு வந்தே?'' என்று அவர் எகிற -

''என்னம்மா, அவளுக்குத் துணை ஒரு ஆள் வேண்டாமா? அவள் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போனாலும் நான் துணை இருக்கணும்மா. எல்லாத்துக்கும் திட்டாதீங்க!'' என்று அவனும் எரிச்சல் கொஞ்சம் எட்டிப் பார்க்க -

''என்னவோ பண்ணித் தொலை! இப்ப எதுக்கு போன் பண்ண? அவளை ஒழுங்காப் பார்த்துக்கோ, என்ன?'' என்றார் அதட்டலாக.

''அதெல்லாம் நாங்க பார்த்துப்போம். அவளுக்கு இப்ப சாப்பிட என்ன கொடுக்கலாம், பிரட் கொடுக்கவா, இல்ல, தண்ணீர் ஆகாரம் தான் கொடுக்கணுமா?'' என்றான். இவை அனைத்தும் டாக்டர் சொல்லி அவனுக்குத் தெரிந்திருந்தாலும் தாயிடம் பேச ஒரு சாக்காகத்தான் அவன் அழைத்ததே.

அவர் கூறியதைக் கேட்டு போனை அணைத்துவிட்டு ரிது அறைக்குள் சென்று பார்த்த போது அவள் இன்னும் அந்த மயக்க நிலையில் தான் இருந்தாள்.



ஒரு மணி நேரம் கழித்து, அவளுக்கு உணவு தயார் செய்து எடுத்துக்கொண்டு அவளை எழுப்பினான் நிகில்.

''ரிது பேபி, எழுந்திரிடா கண்ணா! கொஞ்சம் சாப்பாடு எடுத்துக்கோ. அப்புறம் தூங்கலாம்,'' என்று நெற்றியை இதமாக வருடி அவன் மென்மையாக எழுப்பிய போதும், எழுந்து பார்த்தவுடன் என்ன செய்வாளோ, பயந்து அழுதால் என்ன செய்வது என்று மனது படபடவென்று அடித்துக் கொண்டது.

மெதுவாகக் கண் திறந்தவள் அவனைக் கண்டவுடன் பேயைக் கண்டது போல் மிரண்டு போய் ஒரு பார்வை பார்க்க, நிகில் தான் ரொம்பவும் நொந்து போனான்.

''நீங்க எப்படி இங்க வந்தீங்க? முதல்ல வெளியே போங்க.''

''எனக்குப் பயமா இருக்கு. ப்ளீஸ் போங்க!''

''நேத்து மாதிரி செய்வீங்களா?'' என்று அவள் தொடர்ந்து பேசிக்கொண்டே கண்களைச் சுழல விட்டாள்.

கண்களில் பட்டவை தன் வீடில்லை இது என்று எடுத்துரைக்க, ''எங்கே கூட்டிட்டு வந்திருக்கீங்க என்னை?''

''என்ன இடம் இது?''

''என்னை என்ன செய்யப் போறீங்க?'' என்று அவள் திரும்பவும் கேள்விகளைத் தொடுக்க, நிகிலுக்குத் தன் மேல் மட்டுமில்லாமல் அவள் மேலும் கோபம் பெருகியது. ஒரு முறை தவறியவன் திரும்பத் திரும்ப அதைச் செய்வான் என்று நினைத்துவிட்டாளே, ச்சே என்று வருத்தமும் மேலோங்கியது.

''உன்னை யாரும் ஒன்னும் செய்யல. இதைச் சாப்பிட்டுவிட்டு, மாத்திரையைப் போட்டுக்கொண்டு

பேசாமல் தூங்கு.'' என்றான் கோபத்தையும் மீறிய இத மான குரலில்.

''மாட்டேன். நான் வீட்டுக்குப் போறேன். இங்கே இருக்க மாட்டேன்!'' என்று அவள் அழ எத்தனிக்க,

''ஷ் ஷ், என்ன அழுகை? எல்லாத்துக்கும் அழுகை. முதல்ல நிறுத்து!'' என்று அவன் குரலை உயர்த்த, அவளது அழுகை ஓங்கி ஒலித்தது.

''நிறுத்து என்கிறேன், திரும்பக் கத்துற? ரிது, நிறுத்து!'' என்று அவன் ஒரு விதமான மீற முடியாத அழுத்தமான குரலில் சொல்ல, அவனது அதட்டலிலும் பயத்திலும் அழுகையின் சுருதி குறைந்தாலும், முழுதாக நிற்க வில்லை ரிதுவுக்கு.

ஒரு இரண்டு நிமிடங்கள் கழித்து, ''என்னை வீட்டுல விட்டுடுங்க, எனக்கு என்னைப் பார்த்துக்கத் தெரியும்!'' என்றாள் முயன்று வரவழைத்த மிடுக்கான குரலில்.

''என்னத்தைப் பார்த்த? இன்னைக்கு நான் வரலன்னா வீட்டுக்குள்ளேயே சமாதியாகி இருப்பே!'' என்று சொன்ன போது அவனுக்கே அப்படி ஆகியிருந்தால் தானும் ஒன்றுமில்லாமல் குற்ற உணர்ச்சியிலும், காதலிலும் செத்திருப்போம் என்பது உறைத்தது.

''நான் என்ன ஆனா உங்களுக்கு என்ன? எதுக்கு என்னை இங்கே கூட்டிட்டு வந்துருக்கீங்க?'' என்று அவளும் குரலை முடிந்த அளவு உயர்த்த,

''உடம்பு சரியில்லாதப்பவும் சவுண்டைப் பாரு!'' என்று மனதிற்குள் வியந்துவிட்டு,



''எதுக்காக... இன்னுமா உனக்குப் புரியல பேபி?'' என்று அவன் கேட்க,

''என்னது பேபியா? யாரு பேபி? என்கிட்டே வேண் டாம். எனக்குக் கோபம் வரும், சொல்லிட்டேன்,'' என்றாள் கோபத்தில் குரல் நடுங்க.

''கோபம் வந்தா என்னடா செய்வ?''

''நான் நான்...'' என்று அவள் பல்லைக் கடித்துக் கொண்டு அவனை எரித்துவிடுவது போல் பார்த்தாள் மிருதுளா.

''என்ன பார்வை பார்க்கிற? கூல் கூல்!'' என்று அவன் சிரித்தான்.

அந்தச் சிரிப்பு இன்னும் கோபத்தைக் கிளற, ''என்னை என்னோட வீட்டுல கொண்டுபோய் விடுங்க, இல்ல உங்கம்மா கிட்டே சொல்லுவேன்,'' என்றாள் குரலில் நடுக்கம் விழ.

''என்ன வேணும் என்றாலும் சொல்லிக்கோ? யார் கிட்டே வேணும் என்றாலும் சொல்லிக்கோ... அதுக்கு முன்னால இதைச் சாப்பிட்டுடு. என்ன,'' என்று அவன் பதில் சொல்வதற்கு முன் உணவை அருகிலிருந்த மேஜை யில் வைத்துவிட்டுக் கதவை வெளிப்புறமாகச் சாத்திக் கொண்டு வேகமாக நழுவினான்.

அடுத்து அவன், அவள் உணவு எடுத்துக் கொள்ள ஆகும் நேரத்தைக் கணக்கு செய்து மாத்திரை போட்டுக் கொள்ளச் சொல்லலாம் என்று கதவைத் திறந்த ஐந் தாவது நிமிடத்தில் தரையில் ரத்தம் வழிந்து கொண் டிருந்தது.



# 22

ஐந்து நிமிடங்களுக்கு முன் -

நிகில் கதவைத் திறக்கும் சத்தம் கேட்டதும் பக்கத்து மேஜை மேலிருந்த கண்ணாடிப் பூஞ்சாடியை, அதிலிருந்த பூக்களைத் தூக்கியெறிந்துவிட்டு, கையில் எடுத்துக் கொண்டு வேகமாகக் கதவின் பின்னால் மறைந்து நின்று கொண்டாள் மிருதுளா.

நிகில் உள்ள நுழைந்து அவளைக் கட்டிலில் தேடிக் கொண்டிருக்க, கதவுக்குப் பின்னால் இருந்து சத்தம் வரவே லேசாகத் திரும்பினான். அவன் திரும்புவான் என்று எதிர்பாராத மிருதுளா, அவன் பின் மண்டையில் அடிக்கலாம் என்றெண்ணிக் கையில் எடுத்திருந்த கண்ணாடிக் குவளையை அவனது நெற்றியில் சரேலென உடைத்தாள்.

''ஆ ஆ!'' என்று அவன் அலற, அந்தக் கண்ணாடிக் குவளை உடைந்து அதிலிருந்து வெளிப்பட்ட கண்ணாடிச் சில்லுகள் மிருதுளாவின் மணிக்கட்டில் குத்தி அவளது கையையும் அங்கங்கே பதம் பார்த்தன.

தனது கையால் நெற்றியில் பட்ட காயத்தை மூடிக் கொண்டிருந்தவன் அவளது கையிலும் கிழித்துவிட்டதைக் கண்டு, ''அச்சோ, என்ன ரிது என் உயிரை இப்படி வாங்குறே? கடவுளே!'' என்று திட்டினாலும் அவளது



வலி மிகுதியான முகபாவம் கண்டு, அடுத்து என்ன செய்வது என்று வேகமாக யோசித்தான்.

அவனை அடித்துப் போட்டுவிட்டு அங்கிருந்து தப்பிவிட வேண்டும் என்ற எண்ணத்தில் சினிமாவில் பார்த்த காட்சிகளை அரங்கேற்ற எண்ணியவள் அது தன்னையே திருப்பித் தாக்கிவிடும் என்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. மணிக்கட்டில் பட்ட காயம் உயிரைப் பறிக்கும் அபாயம் உள்ளது என்று தெரிந்திருந்ததால் அடுத்து என்ன செய்யவேண்டும் என்று மருத்துவம் படித்த மூளை எடுத்துச் சொன்னாலும், அதைச் செய்ய உடம்பிலிருக்க வேண்டிய தெம்பு கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்ததால் அவளால் ஒன்றும் செய்ய முடியாமல் திரும்ப மயக்கத்திற்குச் சென்றாள்.

நிகிலிற்குத் தலை சுற்றுவதுபோல் இருந்தாலும், இப்போது விரைந்து செயல்படவில்லை என்றால் இரண்டு பேரும் பரலோகம் செல்ல வேண்டியதுதான் என்று தோன்ற, ரத்தம் வழிந்து கொண்டிருந்த காயத்தையும் பொருட்படுத்தாமல் அவளைத் தூக்கிக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தான்.

இரண்டு நாட்களில் எத்தனை முறை மருத்துவமனைக்குச் செல்கிறான், ''பாவம் நிகில் நீ!'' என்று நாம் வருத்தப்படுவது போல் மகாக்ஷ்மி தேவியும் வருத்தப்பட்டு, பிழைத்துப் போகட்டும் என் மைந்தன் என்று அவனுக்கு ஆப்பு வைக்கும் வேலையைக் கைவிட்டுவிட்டு, ''இனி எல்லாம் சுகமே!'' என்று வாழ்த்தினார்.

அவளது காயம் அவன் எண்ணியது போலில்லாமல் விரைவில் குணமாகிவிட, நிகிலுக்குத் தான் நிறைய

ரத்தம் போய், இரண்டு நாட்கள் சிகிச்சை அளிக்க வேண்டியதாகிப் போனது.

மிருதுளாவிற்குக் கையில் கட்டுப்போட்டு, மாத்திரைகளின் வேகத்தில் குணமாகித் தெளிந்தவுடன்தான் தான் செய்த காரியத்தின் வீரியம் புரிந்தது.

அவன் அறையில் அவனைக் கவனித்துக் கொண்டு, மருத்துவமனை கொடுத்த தனிமையிலும், அவனது தளர்ந்த முகத்தைப் பார்த்துத் தன்னையும் மீறிய வேதனையிலும் அமைதியாக இரண்டு நாட்கள் நடந்த அனைத்துக் காரியங்களையும் ஒன்றொன்றாக யோசிக்க ஆரம்பித்தாள்.

அவன் தவறு செய்தான் தான்! ஆனால் அடுத்த நாள் தன்னை வீட்டிலிருந்து அவன் சொன்னதுபோல் சமாதியாகிவிடாமல் காப்பாற்றி, வீட்டில் வைத்துத் தாங்கிப் பார்த்துக் கொண்டானே...

ச்சே! நாம் என்ன செய்தோம், அவனை அடித்தோம், அடுத்து திட்டித் தீர்த்தோம், அவனைப் பார்த்து மிரண்டு அழுதோம், அப்புறம் ஹைலைட்டாக அவன் மண்டையைப் பிளந்து வைத்திருக்கிறோம்.

வாசுகி ஆன்ட்டி என்ன நினைப்பார்கள்? ஒரே பையன் வேறு, நித்திலா இறந்த பிறகு, அவர்களது உலகமாக இருக்கும் இவனைத்தான் அடித்ததை எப்படிச் சொல்வது?

உதவி செய்தவனை இப்படியா நடத்துவது? பாவம்! வாய் ஓயாமல் அவன் பேசுவது கேட்காமல் எனக்கே(!?!?) கஷ்டமாக இருக்கே, அவங்க அம்மா அப்பா பார்த்தா பதறிப் போய்டுவாங்க, பாவம்!



நீங்க செய்றது தப்பு, என்னை வீட்டுல விட்டுடுங்க என்று மெதுவாக அவனுக்குப் புரியவைத்து, அங்கிருந்து கிளம்பியிருக்க வேண்டியதை விட்டுவிட்டு, அவனை அடித்து, தானும் அடிபட்டு, ஐயோ!

அவனுக்கு அடிபட்டு ரத்தம் கொட்டிய நேரத்திலும் தன்னைக் காப்பாற்றி உயிர் பிழைக்க வைக்க வேண்டுமென்று அவனுக்கு என்ன தேவை? நாம் செய்ததற்கு அப்படியே விட்டிருந்தால் என்ன கதியாகியிருப்போம்? ஆனால் இப்படி ஆனாலும், யார் கவலைப்படப் போகிறார்கள்? ச்சே எனக்காகக் கவலைப்படுவான் என்று அவள் மனதில் தோன்றிய உணர்வு அவளையே அதிசயிக்க வைத்தது.

ஏன் இப்படித் தோன்றுகிறது என்று மூளையைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருக்கும் போதே நிகில் மெல்லக் கண் திறந்தான்.

மெதுவாக அவனருகில் சென்று காயத்தை மிருதுவாக வருடி, ''இப்போ எப்படி இருக்கு?'' என்றாள் கம்மிய குரலில்.

''ம்ம்ம்'' என்ற முனகல்களுடன் அவன் கண்கள் திரும்பவும் மூடிக்கொள்ள, மிருதுளாவிற்குத் தன்மேல் உள்ள கோபத்தினால் தான், தன்னைக் கண்கொண்டு பார்க்கப் பிடிக்காமல் தான் இப்படிச் செய்கிறான் என்ற எண்ணம் தோன்றக் கஷ்டமாக இருந்தது.

''அப்புறம், என்ன அடி அடித்திருக்கிறாய், உன்னைப் பார்த்து அப்டியே புன்னகை பூப்பாங்கன்னு நினைச்சியோ?'' என்று இன்னொரு மனம் கேள்வி கேட்டது.

இவ்வாறாக அவள் வாதப் பிரதிவாதங்கள் நிகழ்த்திக் கொண்டே அடுத்த ஒரு மணி நேரத்தைக் கழித்தபின் நிகில் சுயநினைவு பெற்று எழுந்தமர்ந்தான்.

''இன்னும் கொஞ்ச நேரம் படுத்துக்கோங்க. இந்த ட்ரிப் முடிந்தவுடன் போகலாம்,'' என்று அவள் அவசரமாகச் சொல்ல,

''இல்ல, இப்ப பரவாயில்ல. நான் கொஞ்சம் உட்கார்ந்துக்கிறேன்,'' என்றவன் அதற்குமேல் அவளை நிமிர்ந்தும் பார்க்கவில்லை.

ஒரு ஆங்கில வார இதழைப் புரட்டியவனின் மனது அதில் செல்லாமல் அவனுடைய எண்ணங்களின் வழியே சென்றது.

''தன்னை அடித்துப் போட்டுவிட்டுத் தன்னிடம் தப்பிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்ற வேண்டுமென்றால் அவள் தன்னை எவ்வளவு கீழ்த்தரமாக நினைத்திருக்க வேண்டும்.

''செய்த ஒரு தவறுக்குத் தண்டனையாகப் பட்ட மன வேதனை பத்தாது என்று அம்மாவும் பேசுவதில்லை என்றால், என்ன மாதிரி நினைத்து விட்டாள் இவள்...

''ச்சே, போகட்டும். இனி அவளிடம் ஒன்றும் பேசக் கூடாது... சும்மா அவளைப் பற்றியே நினைத்து, அவளையே சுற்றிவந்து இதெல்லாமும் கூடாது... ஹ்ம்ம்!'' என்று பெருமூச்சை வெளியேற்றிவிட்டு, அவளிடம் செல்லத் துடித்த பார்வையை வலுக் கட்டாயமாக விலக்கிப் பத்திரிகையில் செலுத்தினான்.



அவனது பெருமூச்சும், தன்னைத் தவிர்க்கும் முயற்சியும் வெகுவாக மிருதுளாவை வருத்தின. அந்த வருத்தத்தை மறைத்துக்கொண்டு அவனது பார்வைக்காகவும் பேச்சுக்காகவும் தான் தவிப்பது புரிய, தானாக எப்படிப் பேச்சு வார்த்தையைத் துவக்குவது என்ற தயக்கத்தில் அமைதியாக அமர்ந்திருந்தாள்.

அந்த ட்ரிப்ஸ் முடிவதற்கான ஒரு மணி நேரமும் ஒரு வார்த்தை கூடப் பேசாத மௌனத்தில் கழிய, அதன் பிறகு அவன் கிளம்ப ஆயத்தமானான். தனியாகச் சென்று அவனால் எப்படி உடம்பைப் பார்த்துக் கொள்ள முடியும், தானும் அவனுடன் அவனது வீட்டிற்குச் சென்று, வேண்டியதைச் செய்துவிட்டுப் போகலாம் என்று அவள் எண்ணிக்கொண்டிருக்க, அவன் அவளை அழைக்கவேயில்லை.

கார் வரை அவனுடன் நடந்து வந்தவளிடம், கார் அருகில் வந்தவுடன், ''ஓகே, நான் கிளம்புறேன், நீங்களே உங்க வீட்டுக்குப் போய்டுவீங்க இல்ல, இல்ல நான் டாக்ஸி எதாவது வரச் சொல்லட்டுமா?'' என்றான் யாரோ அந்நியரிடம் பேசுவது போல்.

அவன் உபயோகித்த மரியாதைப் பன்மையும், அந்நியர் போன்ற விலகலும் மனதைப் பிசைய, ''இல்ல, நான்...'' என்று இழுத்துவிட்டு ஒரு முடிவுடன், ''நான் உங்களோடு உங்க வீட்டுக்கு வரேன். உங்களுக்குத் தேவையானதைச் செய்துகொடுத்துவிட்டு அங்கேயே நைட் இருந்துட்டு, மார்னிங் என் வீட்டுக்குப் போய்க்கிறேன்,'' என்று கோவையாகக் கடகடவென்று சொல்லி முடித்தாள். அவளது பார்வையில் பிடிவாதத்தைக் கண்டவன், ''எது செய்தாலும் பிடிவாதம் தான் போல!''

என்று எண்ணி, ஒன்றும் சொல்லாமல் காரில் ஏறப் போனான்.

அவசரமாக அவனைத் தடுத்துவிட்டு, ''நான் ஓட்டு கிறேன், உங்களுக்கு அசதியாக இருக்கும்!'' என்று அவனிடமிருந்து சாவியைப் பிடுங்கிக் கொண்டு டிரைவர் சீட்டில் ஏறி அமர்ந்தாள்.

ஒன்றும் மறுத்துச் சொல்லாமல் அவன் காரில் ஏறி அமர்ந்ததையே சம்மதமாக ஏற்று, காரை நிகிலின் வீடு நோக்கிச் செலுத்தினாள்.

ஒரு வார்த்தைகூடப் பேசாமல், பேசுவது என்ன, அவள் புறம் பார்வையைக் கூடத் திருப்பாமல், சாலையை வெறித்துக் கொண்டு வந்தவன், என்ன நினைத்தானோ சாய்ந்தமர்ந்து கண்களை மூடித் தூங்க முயற்சி செய்து அதில் வெற்றியும் கண்டான்.

மிருதுளா அந்த நகரத்திற்குப் புதிது என்பதாலும், அங்கு வந்ததிலிருந்து பஸ்ஸிலேயே எல்லா இடத்திலும் சென்று வந்ததாலும், வாசுகியுடன் காரில் சென்ற சமயங் களிலும் சாலையில் கவனமில்லாமல் தன் கவலையி லேயே முழுகியிருந்ததாலும் அவளால் சற்றுத் தொலை வுக்குப் பிறகு எப்படி அவர்கள் வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்று புரியவில்லை. திரும்பி நிகிலைப் பார்த்தால், அவனோ ஆழ்ந்த நித்திரையில் இருந்தான். அவனைத் தொந்தரவு செய்ய மனம் வராமல், காரை ஓரமாக ஒரு குடியிருப்புப் பகுதிக்குள் நிறுத்திவிட்டு அவன் முழிப்பதற்காகக் காத்திருந்தாள்.

ஜம்பமாக நான் ஓட்டுகிறேன் என்று சொல்லிவிட்டு அவனை எப்படி எழுப்புவது? எழுந்து திட்டுவானோ



என்று அவள் யோசிக்க, சிறிது நேரத்தில், வீடு வந்து விட்டது என்றெண்ணி விழித்தவனுக்கு எங்கே இருக் கிறோம், என்ன இடம் என்று ஒன்றுமே புரியவில்லை.

வினாடியில் சமாளித்து, ''காரில் என்ன பிரச்னை?'' என்றான் அவளிடம்.

''அது... அது வந்து, எனக்கு வழி தெரியல, அதுதான்,'' என்று அவள் மென்று விழுங்கவும், மலர்ந்த புன்ன கையை முயன்று அடக்கி, ''இனி நான் ஓட்டுகிறேன், நீங்க இந்த சைடு வந்துடுங்க!'' என்றான்.

அவன் புன்னகையை அடக்கியதையும், இன்னமும் யாரோ ஒருவரிடம் பேசுவது போல் பேசியதையும் கவனித்து அதற்குத் தான் ஏன் வருந்த வேண்டும் என்று எண்ணிக் கொண்டாலும் மிருதுளாவால் வருத்தப் படாமல் இருக்க முடியவில்லை. சமாளித்து, ''இல்ல எப்படிப் போகணும்னு மட்டும் சொல்லுங்க, நானே டிரைவ் பண்றேன், சொல்லிட்டு நீங்க தூங்குங்க. நோ ப்ராப்ளம்!'' என்றாள்.

அவளுக்கு வழி சொல்லிவிட்டு அவன் தூங்க வில்லை என்றாலும், அவளோடு பேசவுமில்லை.

வீடு வந்து சேர்ந்து, அவள் சூடாகச் சாதம், ரசம் இன்ன மும் ஒரு காய் வைத்துச் சமைத்து அவனை உணவருந்தக் கூப்பிடும் வரை இருவரும் ஒரு வார்த்தைகூடப் பேச வில்லை.

ஊருக்கு அழைத்தால் தன்னால் உண்மை சொல் லாமல் இருக்க முடியாது, அவர்களை வேறு ஏன் கலரவப் படுத்த வேண்டும், பாவம், அப்புறம் சொல்லிக் கொள்ளலாம் என்ற எண்ணம் தோன்ற, பேசாமல் அவன்

அறையில் அமர்ந்து ஆபீஸ் வேலையில் மூழ்கினான் நிகிலன்.

இடையிடையே,

''இப்போது ஏன் இங்கே வந்திருக்கிறாள்? அடித்து விட்டோம் என்று தோன்றியது போல!''

''அடிப்பதற்கு முன்னோ, தலையைப் பிளப்பதற்கு முன்னோ, இதில் ஒரு 5 சதவீதம் புரிந்திருந்தாலும் இத் தனை தூரம் வந்திருக்காதே.''

''ச்சே என்ன அடி? தலை விண்விண் என்று தெறிக்கிறது... பிசாசு, சரியான ரத்தக் காட்டேரி...''

''என்னோட ரத்தத்தைப் பார்த்தாதான் என்னோட ஒழுங்கா பேசுவியோ, அதுக்காக அடி வாங்கிட்டே இருக்க என்னால முடியாதுப்பா.''

''இவளை ஒதுக்கி, பார்க்காமல் பேசாமல் இருக்க முடியுமா?' என்று ஒரு மனம் கேள்வி கேட்க, இருந்து தான் ஆகவேண்டும். விஷமாய் வெறுத்துக் கொண் டிருப்பவளை என்ன செய்வது, எப்படிப் போய் வலிய வலியப் பேசுவது...''

இவ்வாறாக நிகிலன், பலப்பல கற்பனைகளில் ஆழ்ந் திருக்க, மிருதுளா அவனது அறைக் கதவைத் தட்டி விட்டு, உள்ளே நுழைந்து, ''சாப்பிட வரீங்களா, இல்ல நான் இங்கே எடுத்துட்டு வரட்டுமா?'' என்றாள்.

''கீழேயே போய் ரெண்டு பேரும் சாப்பிடலாம்,'' என்று அவளைக் கடந்து கீழே டைனிங் ஹால் நோக்கி நடந்தான்.

இவளைப் பார்த்துக்கொண்டே இருந்தால், மனம் நிலைகொள்ளாமல் தவித்து பேசி எதாவது ஆகிவிடும்,



சீக்கிரம் அனுப்பிவிட வேண்டும், அனுப்பிவிட்டுத்தான் என்ன செய்வது? என்று நிகில் நினைக்க, மிருதுளாவோ, சாப்பிடும் போது செய்ததற்கு சாரி கேட்டு, அவனிடம் பேசிவிட வேண்டும், அவன் பேசாமல் இருந்தால் நன் றாகவே இல்லை என்று எண்ணினாள்.

அவனுக்கு உணவு பரிமாறிவிட்டுத் தானும் எடுத்துக் கொண்டு அமர்ந்தவள், சாப்பிடாமல் அவன் முகத் தையும் தட்டையுமே மாறிமாறிப் பார்த்துக் கொண் டிருக்க, அவனோ அந்தச் சுமாரான சாப்பாட்டிலேயே கவனமாக இருந்தான்.

கொஞ்சம் தைரியத்தை (!!!???!!!) வரவழைத்துக் கொண்டு, ''ரொம்ப சரி, நான் ஏன் அப்படிப் பண்ணி னேன்னே எனக்குத் தெரியல, ஏதோ ஒரு கோபத்தில அப்படி நடந்துகிட்டேன், மன்னிச்சிடுங்க!'' என அவனது மன்னிப்பை வேண்டினாள் மிருதுளா.

அவன் அப்போதும் ''ம்ம்ம்'' என முனகினானே தவிர, அவளைப் பார்ப்பதைத் தவிர்த்தான். அவனது நீண்ட மௌனம் தொடர, ''ப்ளீஸ் ஏதாவது பேசுங்க, நீங்க பேசாம இருந்தா எனக்கு ரொம்பக் கஷ்டமா, குற்ற உணர்வா இருக்கு, ப்ளீஸ்...'' என்று தன்னை மீறித் தனது ஏக்கத்தை வார்த்தையில் வெளியிட்டுவிட்டாள்.

அவள் தயவாகப் பேசிப்பேசி அவனைத் தாங்கித் தடுக்குப் போட, நம்ம ஹீரோ இவ்வளவு நேரம் மனதில் எடுத்த உறுதிமொழிகள் அனைத்தையுமே நொடியில் மறந்து வானத்தில் பறந்துகொண்டிருந்தான் ''அடடா பேபி, நான் கொஞ்ச நேரம் பேசலன்னா உனக்குக் கஷ்ட மாக இருக்காடா... சூப்பர் சூப்பர், பொண்ணு கவிழ்ந் துடுச்சு!'' என்று குதூகலித்தான், மனதிற்குள் தான்.

சொன்ன வார்த்தைகள் அப்போது தான் உறைக்க உதட்டைக் கடித்துக் கொண்டு அவள் பேசாமல் இருந்தாலும், அவளது முகம் பார்க்காமல் இருக்க வில்லை.

"அதெல்லாம் ஒண்ணுமில்லை, நான் செய்ததும் தப்புத்தானே! இப்படிப் பார்த்த பத்து நாட்களில் நான் முரட்டுத்தனமாக நடந்து கொண்டால் நீங்கள் என்னைத் தவறாக நினைப்பதில் என்ன தப்பு?" என அவன் அவளை நியாயப்படுத்தவும், அவசரமாக, "நீங்க தப்பு செஞ்சீங்க தான், ஆனா எனக்கு உடம்பு சரியில்லன்னா உடனே, என்னை ஹாஸ்பிடல் கூட்டிட்டுப் போய் எல்லாம் பார்த்தீங்க தானே. எனக்கு அது முன்னாடி உறைக்கவேயில்லை! ரொம்ப சாரி!" என்று மிருது அவனை நியாயப்படுத்தினாள்.

லேசாகச் சிரித்துவிட்டு, "நான் ஏன் நேற்று காரில் அப்படி நடந்துகொண்டேன் என்றே எனக்குப் புரியல. என்னவாக இருந்தாலும் மனதார மன்னிப்புக் கேட் கிறேன், சாரி!" என்றான் தன்னைப் புரியவைத்துவிடும் குரலில்.

"நானும் சாரி!" என்று அவள் சொல்லவும், சிரித்து விட்டு இன்னும் முறுக்கிக் கொள்ள மனம் வராமல், "ஓகே ஃபிரண்ட்ஸ்!" என்று இடது கையை நீட்டினான்.

'நட்பு' என்ற வார்த்தை திரும்பவும் தன் கடந்த காலத்தை நினைவுபடுத்த, "இல்ல ஃபிரண்ட்ஸ் இல்ல!" என்றாள் பிடிவாதமான குரலில்.

அவளை விசித்திரமாகப் பார்த்துவிட்டு, பின் தனது வழக்கமான குறும்பு எட்டிப் பார்க்க "அப்போ, என்



னோட ஸ்வீட் ஹார்ட்! என்னில் பாதி! எதுவா வந்தாலும் எனக்குச் சந்தோஷம் தான். உனக்கு எப்படி பேபி?" என்றான் உதட்டோரம் துடிக்க.

## 23



கையில் எடுத்த உணவு வாய்க்குச் செல்லாமல், நடுவிலேயே நிற்க, அவனை "ஹான்" என்று திறந்த வாய் மூடாமல் பார்த்தாள் மிருதுளா.

"என்ன அப்படிப் பார்க்கிற? அவ்வளவு அழகாவா இருக்கேன்?" என்றான் விரிந்த சிரிப்புடன்.

அந்தச் சிரிப்பு ஏதோ செய்ய, தலையை ஒரு முறை உலுக்கிக் கொண்டு, இன்னும் ஒன்றும் புரியாத நிலை யில் அவனை விழியகல நோக்கினாள்.

"அய்யயோ! என்ன இப்படிப் பார்க்கிறே? திரும்பி அடிக்கப் போறியா?" என்றான் பயந்தவன் போல. வெளியே நடித்தாலும் மனதிற்குள் பயம் இருந்து கொண்டே தான் இருந்தது. வாங்கிய அடி(கள்) பல + பலம் இல்லையா?

"என்ன கேட்டீங்க?" என்று அவள் புரியாமல் வினவ வும், "இன்னும் உனக்குக் கேட்டதே புரியலையா? கஷ்டம்!" என்று சத்தமாகவே முனகிவிட்டு, "சரி, தெளி வாவே கேட்கிறேன்," என்று விட்டு ஓரொரு வார்த்தை

யாக நிறுத்தி நிதானமாக (அடி வாங்கத் தோதாக)க் கூறினான். ''எனக்கு உன்னை ரொம்ப ரொம்ப பிடிச்சிருக்கு, என்னைக் கல்யாணம் பண்ணிக்கோ அப்படின்னு கேக்கிறேன். இல்ல சொல்றேன்,'' என்றான்.

அந்தக் கேள்வியில் இல்லை இல்லை தகவலில் முதலில் திகைத்து, பின்னர் சிலிர்த்து, ''உங்களுக்கு என்னைப் பத்தி தெரியும்? வாய்க்கு வந்ததை உளறாதீங்க!'' என்று அவள் கோபமாய்த் தொடங்கும் போதே குறுக்கிட்டு, ''ரிலாக்ஸ் பேபி, எதுவா இருந்தாலும் நிதானமா பேசு, நான் கேட்கிறேன், ஓகே?'' என்றான் குரலில் ஒரு கண்டிப்புடன்.

அந்தக் கண்டிப்பு இன்னும் கோபத்தையே கிளறிவிட கோபத்தில் முந்தைய தினம் போல் எதும் செய்துவிடுவோமோ என்ற பயத்தில் முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

''பேபி ப்ளீஸ், உனக்கு என்ன ப்ராப்ளம்? யார்கிட்டவாவது ஷேர் பண்ணிக்கிட்டா தானே தெரியும்... உள்ளுக்குள்ளே வச்சிருந்தா எப்படி?'' என்று அவன் குடைய, ஆத்திரத்துடன் திரும்பி, ''தெரிஞ்சு என்ன பண்ணப் போறீங்க?'' என்று வெடித்தாள்.

ஆத்திரத்தில் சிவந்த அவள் முகம் கண்டு பயம் வராமல் ஏனோ அதை ரசிக்கத்தான் தோன்றியது நிகிலனுக்கு. ''என்ன பண்ணப்போறேன்னா? அடடா! உனக்கு எத்தனை தரம் சொல்றது? கல்யாணம் பண்ணப் போறேன். அதுவும் உன்னைத்தான்,'' என்றான் சிரிப்புடன்.

''ச்சு, சும்மா என்ன இது!'' என அவள் சலித்துக் கொள்ள, சிரிப்பைக் கைவிட்டு, ''ப்ளீஸ், என்ன தான் உன்



பிரச்னை என்று சொல்லு? நீ அம்மாவிடம் உனக்கு யாருமில்லை என்று சொன்னாயாமே. ஆனால் நேத்திக்கு அண்ணா அடிக்காதீங்க, டாடி நம்புங்க, கல்யாணம் பண்ணிக்க மாட்டேன் அப்படி இப்படி ஒரே புலம்பல்! என்ன பேபி, என்கிட்டே சொல்லுடா. என்னால முடிந்ததை நான் செய்றேன். உள்ளுக்குள்ளேயே வச்சுட்டு இருந்தால் உன் உடம்பும் மனசும் தான் பாதிக்கும். இப்பவே ஒன்னும் சரியில்லை, அவுட் வித் இட் கண்ணா!'' என்றான் இதமாக, அதே சமயம் அவள் குறுக்கே பேசுவதற்கு இடமே கொடாமல்.

''உங்ககிட்டே நான் ஏன் சொல்லணும்? என் உடம்பு கெட்டுப்போய் நான் செத்துக்கூடப் போவேன், உங்களுக்கு என்ன?'' என்று அவள் திரும்ப,

''ஒரு அறை விட்டேன்னா தெரியும்! இன்னைக்கு அடிக்க வேண்டாம்ன்னு பார்க்கிறேன். அதுனால பிழைச்ச, பேச்சைப் பாரு!'' என்று அவன் முழங்க, பயத்தில் முகம் வெளுக்க, ''நீங்களும் அடிப்பீங்களா? எல்லாரும் அடிங்க, என்னையே எல்லாத்துக்கும் அடிங்க, என் தலையெழுத்து! முதல்ல அண்ணா, அப்புறம் அம்மா, இப்ப நீங்களா?'' என்று இனம் புரியாத வலியில் அவள் வாயில் வந்ததைப் புலம்பினாள்.

''ஷ் ஷ், அடிக்கல என்றேனே, என்னன்னு சொல்லேன்டா!'' என்று அவன் கெஞ்ச, ''சொல்றேன், ஆனா அதைக் கேட்டுட்டு நீங்க முதல்ல சொன்னதைத் திருப்பி வாங்கிக்கப் போறீங்க பாருங்க, அதைக் கேட்டபிறகு யாருக்கும் என்னைக் கல்யாணம் பண்ணப் பிடிக்காது!'' என்றாள் ஒரு விரக்திப் புன்னகையை உதட்டில் தவழவிட்டு.

''இது கொடுத்தே பழக்கப்பட்ட மனசு. திரும்ப வாங்கிக்க மனசு வராது! முதல நீங்க சொல்லுங்க மேடம். நான் என்ன செய்யலாம் என்று முடிவு செய்றேன்,'' என்றான்.

வீட்டைப் பிரிந்து வந்த நாள் முதல் யாரிடமும் சொல்லாத தவிப்பும், அவனிடம் தன்னையும் அறியாமல் ஏற்பட்டுவிட்ட நெருக்கமும், மனதை அழுத்தும் பாரம் யாரிடமாவது சொன்னால் கொஞ்சமேனும் குறையுமோ என்ற உந்துதலும் மிருதுளாவைப் பேச வைத்தன. கை கழுவிவிட்டு சோபாவில் அமர்ந்து விவாதத்தைத் தொடங்கினர் இருவரும்.

அவளது கடந்த காலத்தை, கல்யாணம் நிச்சயம் பண்ணியவரை ஒரு வேகத்துடனும் ஒரு இளம் நகையுடனுமே சொல்லிக்கொண்டு வந்தாள் மிருதுளா.

அவளது விவரிப்பில் நெகிழ்ந்து ஒவ்வொரு நிகழ்ச்சியை அவள் சொல்லும் போதும்,

''அந்த மாதிரி ஒரு குடும்பத்தை விட்டுவிட்டு ஏன் வந்தாய்?''

''கல்யாணம் நிச்சயம் ஆனதா? யார் அவன்?''

''அய்யயோ! கல்யாணம் முறிந்துவிட்டதா? அச்சோ! நிகில், செம ஆப்பு போலவேடா?''

''இல்லை இல்லை. ஆகியிருக்காது...''

''அதெப்படி உனக்குத் தெரியும்?''

''எல்லாம் எனக்குத் தெரியும், அவள் எனக்குத் தான்...''



''ஓவர் தன்னம்பிக்கை உடம்புக்கு ஆகாது மகனே... அடங்கு!'' என்று விதவிதமாய் எண்ணங்கள் தோன்ற மௌனமாக அவளையே பார்த்திருந்தான் நிகிலன்.

கல்யாண நாள் அன்று வந்த கடிதங்களையும், அதன் பின் சர்வேஷ் பேசிய வார்த்தைகளையும் அவள் கூறிய போது, ''ச்சே இவன் எல்லாம் ஒருமனிதன், இவனுக்கெல்லாம் ஒரு தங்கை, அதற்கு மேல் இவனுக்கு எல்லாம் ஒரு கல்யாணம்... பொறுக்கி ராஸ்கல்!'' என்று ரத்தம் கொதித்தது.

அதைச் சொல்லிவிட்டுக் கண்களில் கண்ணீருடன் தொடர்ந்தாள் மிருதுளா, ''எனக்கு அவன் சொன்னது கூட கஷ்டமா இல்ல. அவனை எனக்கு எத்தனை நாளா தெரியும் அவன் என்னை நம்புவதற்கு என்று தான் தோணியது... ஆனா என்னால அதுக்குப் பிறகு எங்க வீட்டுல நடந்துகிட்டது தான் தாங்கவே முடியல! இத்தனை வருஷம் என்னை அன்பா வளர்த்ததெல்லாம் பொய் என்பது மாதிரி நடந்துக்கிட்டாங்க...'' என்று தொடர்ந்து பேச முடியாமல் திக்கிய போது நிகில் மெல்ல நகர்ந்து அவள் அருகில் வந்து அவள் கையைத் தன் கையில் எடுத்துக்கொண்டு, ''என்ன பேபி சொன்னாங்க? ஒரு டைம் சொல்லிட்டா உனக்குக் கொஞ்சம் பரவாயில்லயா இருக்கும். அதுதான் கேக்கிறேன்,'' என்றான் கையை வருடி.

அவனது தொடுகை ஒரு விதமாக அவளைத் தாக்க, ''அடிச்சாங்க நிக்கி!'' என்று கூறும்போதே கேவல் பெரிதானது. அவளது நிக்கி என்ற அழைப்பும் அந்தக் கேவலும் மனதை ஒருங்கே வருத்தமும் சந்தோஷமும்

படவைக்க அவளை இழுத்துத் தோளில் சாய்த்துத் தலையை வருடிவிட்டான்.

அந்த இதம் அவளுக்கு ரொம்ப நாட்களுக்குப் பிறகு ரொம்பவே அவசியமாகப்பட்டது.

பத்துக்கும் மேற்பட்ட நிமிடங்களாகியும் அவள் அழுகை நிற்காமல் இருப்பதாய் உணர்ந்து, ''ஷ் பேபி, போதும்டா! நினைச்சு நினைச்சு அழாத, இப்ப தான் உடம்பு தேறியிருக்கு, அழுது இன்னும் கெடுத்துக் காதடா ப்ளீஸ்!'' என்று கண்கள் துடைத்துவிட்டான்.

''யாருமே நம்பல நிக்கி! நம்பறது நம்பாதது இருக்கட்டும்... இப்படிப் பண்ணியா நீ அப்படின்னு விசாரிக்கக் கூட இல்லை தெரியுமா?'' என்று மீண்டும் தொடங்கினாள். ஒன்றும் சொல்லாமல், சொல்ல முடியாமல் அவளது முதுகை வருடிக் கொண்டே இருந்தான் நிகிலன்.

''கதிர் அண்ணா அடிச்சான் முதல்ல, அப்புறம் சந்து அக்கா. அப்டியே முகத்தில ஒரு வெறுப்பைக் காட்டினா தெரியுமா, அதுக்கு கதிர் அண்ணா மாதிரி அவளும் அடிச்சிருக்கலாம். அம்மாவும் அடிச்சாங்க. ஆனா அவங்க அடிக்கல அப்படின்னா தான் பயப்படணும், விபு அண்ணாவும், அத்தானும் என்னை நம்பல என்பதை விமலை அடிச்சு வெளிப்படுத்திட்டாங்க... எல்லாத்தையும் விட!'' என்று அன்று நடந்தது அனைத்தையும் அவளுக்கு யாரிடமாவது சொல்ல வேண்டும் போலிருந்ததால் சொல்லிக் கொண்டே வந்தவள், அந்த இடத்தில் முகத்தில் பெரும் வேதனை படிய நிறுத்தினாள்.



சற்று நேரம் என்ன என்று கேட்டால் அவள் என்ன மாதிரி கஷ்டப்படுவாளோ என்ற எண்ணத்தில் நிகிலன் மௌனமாக இருக்க, அந்த நாள் ஞாபகத்தில் முகம் வாடி மிருதுளாவும் அமைதியாக இருந்தாள். பின்னர் ஏதோ தோன்ற, ''என்னனு கேட்க மாட்டீங்களா, பிடிக்கலையா நான் பேசுறது?'' என்றாள் தவிப்புடன்.

''சரியான மண்டு பேபி, திடீர் திடீர்ன்னு உனக்கு ஏதாவது லூசு மாதிரிக் கேக்கணுமா?'' என்று அவள் மூக்கைப் பிடித்து ஆட்டிவிட்டு, ''உனக்குக் கஷ்டமா இருக்குமேன்னு தான் கேட்கல, நீயே வருத்தப்படும் போது இந்த விஷயத்தை நான் துருவித் துருவிக் கேட்டா நீ இன்னும் அழுவியேன்னு தான் நானா கேட்கல, இப்போ கேட்கிறேன், சொல்லு,'' என்றான்.

''ம்ம்ம், ம்ம்ம்'' என்றுவிட்டு, ''அப்பா பேசவே இல்ல நிக்கி!'' என்றவள் குலுங்கி அழுதாள்.

''ஸ்ஸ் பேபி, இதுக்குத்தான் நான் கேட்கல, ப்ளீஸ் டா அழாதே!'' என்று ஆறுதலாக அவளை அழைத்துக் கண்களைத் துடைத்துவிட்டான்.

அவனால், மிருதுளா தனது எண்ணத்தில் கூட அப்படி ஒரு தப்பான காரியத்தைச் செய்திருப்பாள் என்று தோணவில்லை. அவளிடம் இயற்கையாகவே ஒரு அழகும், எல்லை மீறி நடக்க முடியாதபடியான ஒரு எச்சரிக்கை உணர்வும், தூரவே நில் என்பது போல கண்ணில் ஒரு நிதானமும் இருப்பதாகவே தோன்றியது.

எந்தவொரு நிலையிலும் அந்த சர்வேஷ் சொன்னது போல் தரமிறங்கி அவள் நடந்திருக்க மாட்டாள் என்று மனது வெகு உறுதியாகக் கூறியது.

கொஞ்சம் அழுகை அடங்கியதும், குடிக்க ஏதாவது எடுத்து வந்து அவளை அருந்த வைக்கலாம் என்ற எண்ணம் தோன்ற அவளை விட்டு எழ முற்பட்டான்.

எழ முடியாமல் அவனை இறுகப் பற்றியிருந்த மிருதுளாவைப் பார்க்க அவனுக்கே ஆச்சரியமாகவும் பாவமாகவும் இருந்தது. நேற்று இதுநேரம் தன்னை அவள் அடித்த அடி என்ன, இந்த வயதில் எல்லா நம்பிக்கையையும் இழந்து எவ்வளவு கஷ்டம் என்று நினைத்தவன். இனிமேல் அவள் எதற்கும் அழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று உறுதி பூண்டான்.

''விடுமா, குடிக்க ஏதாவது எடுத்துட்டு வரேன். அழுதழுது தொண்டை வறண்டு போயிருக்கும்!'' என்றவனை இடைமறித்து. ''இல்ல எனக்கு ஒண்ணும் வேண்டாம், நீங்க இங்கேயே இருங்க!'' என்றாள் கண்ணில் கெஞ்சலுடன். ''அஞ்சே நிமிஷம் பேபி!'' என்று வற்புறுத்தி எழுந்து சென்று கொஞ்சம் ஜூஸ் எடுத்து வந்து அவளைப் பருகவைத்தான். ''உங்களுக்கு?'' என்றவளிடம், ''நானா அழுதேன், நீதான் அழுதே கரைகிறாய்... நீ முதல்ல குடி!'' என்று அவளுக்குப் புகட்டினான். அவள் குடித்து முடித்தவுடன் கொஞ்ச நேரம் இன்னும் அமைதியில் கழிந்தது. அந்தச் சூழ்நிலையைக் கொஞ்சம் இலகுவாக்க எண்ணி, ஏதோ நினைத்து அவன் லேசாகச் சிரிக்கவும் -

''எதுக்குச் சிரிக்கிறீங்க?'' என்று அவள் முறைக்க ஆரம்பிக்கும் போதே, ''நோ டென்ஷன், கூல்!'' என்று கை அமர்த்திவிட்டு, ''இல்ல நிறையப் பேர்கிட்டே அடி வாங்கி இருப்பே போலிருக்கே, அதை ஸ்டாக் பண்ணி வச்சு என்னைப் பழி தீர்த்துட்டே இல்ல! என்னமா



அடிக்கிற பேபி... ஸ்ஸ் அப்பா!'' என்று அவன் தலைக் காயத்தையும், கன்னத்தையும் மாறி மாறித் தடவிக் கொண்டே சிரிக்க, முதலில் அவனை முறைத்தவள் பிறகு காயத்தை வருடி, ''ரொம்ப வலிக்குதா? ரொம்ப சாரி, ஏதோ கோபத்தில...'' என்றாள் வருத்தமாக.

''இட்ஸ் ஓகே டா, ஆமா நீ அவங்க சொன்னதற்காகக் கிளம்பி வந்துட்டியா? அங்கேயே இருந்து நான் பண்ணியது தப்பில்லை என்று அவுங்களுக்குச் சொல்லியிருக்க வேண்டாமா?'' என்று கேட்டான் நிகிலன். அவனுக்கு அவள் அப்படி வந்ததால் தான் இங்கே தன்னிடம் இப்போது இருக்கிறாள் என்று தோன்றிய போதும் மிருதுளா தன்னைக் குற்றமற்றவள் என்று வீட்டில் நிரூபித்துவிட்டு வந்திருக்க வேண்டுமோ என்று தோன்றியது.

''நான் நிரூபிக்கிறேன்... யார் பண்ண வேலை என்று கண்டுபிடிக்கிறேன் என்றுதான் சொன்னேன் நிக்கி... அவங்கெல்லாம் விமலை அடிச்சு, மிரட்டி, ப்ளாக்மெயில் பண்ணி இந்தக் கல்யாணத்திற்கு ஒத்துக்கவச்சுட்டாங்க... எனக்கு விமலை அப்படி நினைக்கவே முடியல நிக்கி. அதுதான், ரெண்டு பேர் வாழ்க்கையும் பாழாகிவிடுமே என்று பயந்துபோய் ஓடிவந்துட்டேன், தப்பா நிக்கி?'' என்று தான் செய்த காரியம் தப்பா கரெக்ட்டா என்று இன்று வரை தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டிருந்த கேள்வியை அவனிடம் கேட்டாள்.

அவள் நிலை புரிய, ''இல்லடா. நீ சொல்றதும் கரெக்ட்தான். நீ அங்க இருந்திருந்தா விமலைக் கல்யாணம் பண்ணி வச்சிருப்பாங்க. உன்னை நான்

பார்த்திருக்கவே முடியாதே... அதுனால கரெக்ட் தான்!'' என்றான் முறுவலுடன்.

''ஹ்ம்ம்'' என்று அவன் சொன்னதை உள்வாங்கியவள், சில நிமிடங்கில் கண்ணில் ஒரு கலக்கத்துடன் எழுந்து. ''நீங்க என்னை நம்புறீங்களா?'' என்றாள்.

''உன்னை நம்பாமல் இருந்தால் நான் என்னையே நம்பவில்லை என்று அர்த்தம்!'' என்றவனைக் கண்ணீர் மல்கக் கை கும்பிட்டாள் மிருதுளா. ''அச்சச்சோ! என்ன பேபி நீ. கணவனே கண் கண்ட தெய்வம் என்ற ஊரில் சொல்லி வளர்ந்திருப்பாங்கதான். அதுக்காக நீ கல்யாணத்திற்கு முன்னாடியே அதைப் பின்பற்றணும்ன்னு யாரும் சொல்லல. கல்யாணத்திற்கு அப்புறம் பண்ணாப்போதும்!'' என்றான் சீரியஸ் குரலில்.

அதில் சிரித்து, பின்னர், ''அய்யே, அப்படியெல்லாம் கனவு காணாதீங்க! வாங்கின அடி மறந்துவிட்டது போல... இன்னும் ரெண்டு போடட்டா?'' என்றாள் குறும்பாக.

''இன்னுமா, அய்யயோ! நீ அடிச்சா எங்க அம்மா கிட்டே கூட கம்ப்ளைன்ட் கொடுக்க முடியாது!'' என்றான் பயந்தவன் போல. புரியாமல் அவள் முழிக்கவும், ''நீ அடிச்சே என்று நான் சொன்னா, வசு என்ன தெரியுமா கேப்பாங்க, அவ அடிக்கிற மாதிரி நீ என்ன பண்ணினே? அப்படிக் கேட்கிறதோட நிக்காம அதுக்கு அவங்களும் சேர்ந்து சாத்துவாங்க!'' என்றான் போலிப் பயத்துடன்.

கலகலவென்று அவள் சிரிப்பதைக் கண் நிறைய ஒரு ஆர்வத்துடன் ரசித்தவன், அவள் இங்கே எப்படி வந்தாள்,



எப்படி இந்த வேலை கிடைத்தது என்று விவரம் கேட்க ஆரம்பித்தான். எல்லாம் கேட்டு முடித்தவன் அவள் கிட்டத்தட்ட எட்டு மாதங்களாகப் படும் வேதனை நெஞ்சைக் கசக்க இன்னும் கொஞ்சம் முன்னரே அவளிடம் பேசியிருக்க வேண்டும், கொஞ்சம் நிம்மதியோடு அதற்கும் மேலாக கொஞ்சம் ஆரோக்கியத்தோடு இருந்திருப்பாள் என்று தன்னையே திட்டிக் கொண்டான்.

இவ்வளவு நேரமும் விமலைப் பற்றி அவள் ஒன்றும் கூறவில்லை என்பது புரிய, ''விமல் எங்கேடா இருக்கான்? நீ அப்புறம் பேசினியா?'' என்றான்.

சட்டென்று சிலிர்த்தவள், ''அவனைப் பத்தி என் கிட்டே பேசாதீங்க, ரொம்ப ரொம்ப கோபமா வருது!'' என்று கன்னம் சிவக்கக் கூறியவளை, ''என்ன பேபி எதுக்குக் கோபம்... அவன் என்ன செஞ்சான்மா? எனக்கு என்னவோ அவன் இந்த போட்டோஸ் எல்லாம் அனுப்பி இருப்பான் என்று தோணவில்லை. நீ சொல்வதை வைத்துப் பார்க்கும்போது அவன் உனக்கு ஒரு நல்ல நண்பனாகத் தான் இருந்திருக்கிறான், அப்புறம் என்ன?'' என்றான் புரியாமல்.

''அவன் எப்படி நிக்கி கல்யாணத்திற்குச் சரின்னு சொல்லலாம்? அப்படிச் சொன்னதால நாங்க பண்ணாத தப்பை ஒத்துக்கிற மாதிரி தானே?'' என்றாள் கோபமாக.

அவள் சொல்வதில் இருந்த உண்மை புரிந்த போதும், விமலின் நிலைமை நிகிலைப் பரிதாபப் படவைத்தது. ''இல்லடா, எல்லாருமா அடிச்சு, கார்னர் பண்ணதால

ஒத்துக்கிட்டு இருப்பான். அவனும் என்ன செய்வான்?'' என்று அவனுக்குப் பரிந்தவனை முறைத்துவிட்டு, ''சரி, அப்போ இப்போவே நான் இந்தியா போய் அவனைக் கல்யாணம் பண்ணிக்கட்டா?'' என்றாள் தலை சரித்து.

''அச்சச்சோ, நிக்கி உன் வாய் இருக்கே வாய்... என்ன செய்றது அதை... அவனுக்கு சப்போர்ட் செய்றேன் என்று உன் வாழ்க்கையைப் பாழாக்கும் உன்னை என்ன செஞ்சாதான் தகும்??'' என்று அவனுக்கு அவனே நடத்திய வாக்குவாதத்தில் முகம் மலர்ந்து சிரித்தாள் மிருதுளா.

அவளது சிரிப்பு மனதைக் கொள்ளையடிக்க சட்டென அவளைப் பற்றி அவளது கன்னத்தில் அழுத்தமான முத்திரை ஒன்றைப் பதித்தான் நிகிலன்.

அவனது திடீர்த் தாக்குதலில் நிலை குலைந்து, ஒரு நிமிடம் குழம்பி பின்னர் அவனை விலக்கினாள் இல்லை இல்லை விலக்க முயன்றாள். அவனது பிடி கொஞ்சமும் தளராமல் இன்னும் அதிகமானதே தவிரக் குறைய வில்லை. அவனது பார்வை முகம் முழுதும் வருடி, பின்னர் உதடுகள் அந்த வேலையை எடுத்துக்கொள்ள, அவள் ஒரு மயக்க நிலையில் தான் இருந்தாள். முதலில் தவித்தவள், பின்னர் தானும் தயங்கி மயங்க ஆரம் பித்தாள்.

சற்று நேரம் இந்த மௌன விளையாட்டுத் தொடர மூளைக்குள் ஏதோ தப்பென்று மணி அடித்தது மிரு துளாவிற்கு. ''விடுங்க நிக்கி, விடுங்க!'' என்று குரலைச் சரி செய்து, அவனைத் தள்ளினாள். அப்போதும் பதிலில் லாமல் அவன் முகம் அவள் கழுத்தில் இறங்கி இருக்க,



''நிகில்! என்னை என்னன்னு நினைச்சீங்க... ஹ்ம்ம், விடுங்க!'' என்றாள் கடுமையாக.

அவளது குரல் கேட்டபோதே கொஞ்சம் நனவுலகில் இருந்து திரும்பியவன் அவளது கடுமையில் முகம் நிமிர்ந்தான். அவள் கோபத்துடன் எழ முயல அவளைப் பற்றி நிறுத்தி, ''என்னால கட்டுப்படுத்த முடியல பேபி! அது உன்னோட தப்பும் தான்!'' என்றான் சமாதானமாக.

''எது என் தப்பு?'' என்ற அவளது கேள்வியில் இன் னும் கோபம் இருந்தது.

''நீ அப்படிச் சிரிச்சா என்னால முடியல பேபி, அது தான், இனிமேல் கன்ட்ரோல் பண்ணிக்கிறேன்...'' என்று கொஞ்சலாக ஆரம்பித்து மிரட்டலில் முடித்தான்.

ஒன்றும் சொல்லாமல் உர்ரென்று அமர்ந்திருந்த வளை, இடுப்பை வளைத்து அருகில் அமர்த்தி, ''கூல் டௌன்... எப்போ போகலாம் சொல்லு,'' என்றான். அவன் சொன்னது நமக்கே புரியவில்லை எனும்போது மிருதுளாவிற்குச் சுத்தம்.

''எங்கே போறது?'' என்று அவள் விழி விரிக்க, ''இப்படியெல்லாம் பார்க்காதே, சொல்லிட்டேன்... அப்புறம் என்னை அதைச் செய்யாத இதைச் செய்யாத என்று பாடவேண்டியது!'' என்றான் அலுப்புடன்.

''ச்சு சொல்லுங்க நிக்கி, எங்கே போறது?'' என்றாள்.

''அம்மா அப்பா ரெண்டு பேரும் இந்தியாவுல தான் இருக்காங்க. நம்மளும் இப்போ கிளம்பலாம், உங்க வீட்டுல பேசி ஒரு நல்ல நாளா பார்த்துக் கல்யாணத்தை முடிச்சுகிட்டு வந்துவிடலாம்,'' என்று அவன் முடிப்ப தற்குள் அவனை எரித்துவிடுவாள் போல் பார்த்தவளை

வியப்பாக நோக்கி, "என்னடா, நான் கல்யாணம் செய்வது பற்றிதானே பேசுறேன், எதுக்கு இவ்வளவு உஷ்ணமான பார்வை?" என்றான் காரணம் புரியாமல்.

"எனக்கு யாரும் வேண்டாம். என்னை நம்பதாவங்க கிட்டே போய் எதுக்குச் சம்மதம் வாங்கணும்? அவுங்க கிட்ட கேட்டுத்தான் என்னை லவ் பண்ணிங்களா? இல்லை இப்போ எதுக்கு அவங்க? நான் ஒரு அனாதை. எனக்கு யாருமில்லை என்ற நினைப்பில் தான் இந்தக் கல்யாணம் நடக்கணும்!" என்று காட்டமாகத் தொடங்கி அழுத்தத்தில் முடித்தாள் மிருதுளா.

"அனாதையாம்... என்ன வார்த்தை மிருதுளா?" என்று அவன் கண்டிக்க, "இல்ல நிக்கி, நான் திரும்ப அவங்களைப் போய்ப் பார்க்கமாட்டேன், நீங்களும் எனக்காகப் போய் அவங்களைப் பார்க்கக் கூடாது!" என்றாள் கெஞ்சலாக.

"இல்ல மா, என்னதான் இருந்தாலும், உன் குடும்பத்துக்கிட்ட சொல்லாம எப்படிமா? நான் போய் அந்த ஃபோட்டோஸ் எப்படி வந்ததுன்னு விமல், அப்புறம் வேற யார்கிட்டயாவது விசாரிச்சு, உண்மை என்னன்னு அவுங்களுக்கு நிரூபிச்சுட்டு அப்புறம் நம்ம கல்யாண விஷயம் பேசுறேன்."

"உண்மை பொய் அப்படின்னே இல்லை நிகில்! எதுவா இருந்தாலும் அவுங்க என்னை நம்பி இருக்கணும். அதுதான் என்னோட பாயிண்ட்!" என்று உறுதியாக அவள் நிற்க, என்ன பேசியும் அவளைக் கரைக்க முடியாமல் தாயாரின் வரவிற்காகக் காத்திருக்கத் தொடங்கினான்.



வாசுகியிடம் போனில் ஒன்றும் சொல்லாமல் இருந்துவிட்டு, நேரில் அவரை ஆச்சரியப்பட வைக்க வேண்டும் என்று நிகில் நினைக்க, மிருதுளாவோ, "ஐயோ ஆன்ட்டி கிட்டே எப்படி பேசுறது, நிகிலை அடிச்சது தெரிஞ்சா என்ன சொல்லுவாங்களோ?" என்று அடுத்து வந்த ஒரு வாரத்தைப் போக்கினர்.

அந்த ஒரு வாரமும் அவர்கள் பேசிய போன் கால்களில், ரிதுவிற்குக் காது வலியே வந்துவிட்டது. இது போக, வான்கூவர் நகரத்தின் அனைத்துப் பார்க்குகளும் அவர்கள் பார்த்துவிட்ட பட்டியலில் சேர்ந்தன.

அடுத்த வாரத்தில் வந்திறங்கிய வாசுகிக்கும், விசு சாருக்கும் முதலில் மனம் மகிழ்ச்சியில் பூரித்தாலும், அவளது கடந்த காலச் சோகம் மனதைப் பெருமளவு வருத்தி, இன்னுமின்னும் அவள் மேல் பாசத்தைப் பொழிய வைத்தது.

அவளது கோபம் பிளஸ் பிடிவாதம் புரிந்து அப்போது தாங்கள் இங்கேயே நடத்தி வைத்த திருமணத்திற்கு இப்போது வாசுகி மேடம் சிவநாதனிடமும், சாருமதியிடமும் மன்னிப்புக் கேட்பதோடு அவர்களது காதல் காவியம் தொடங்கிய கதை முடிகிறது.

அதைச் சொல்லி முடித்த வாசுகி, மிருதுவைச் சிரிப்புடன் நோக்கி, "இத்தனை வருஷமாகியும் நீ இன்னும் நான் அப்போது கேட்ட கேள்விக்குப் பதிலே சொல்லவில்லை ரிது!" என்றார் கண்டனக் குரலில்.

"அப்படியா? என்ன கேள்வி சுகிமா..." என்றாள் ரிது வியப்புடன்.

''இல்ல முதல் நாள் பையன் தலையைப் பிளந்தவள், அடுத்த நாளே எப்படித் தொபுகடீர்ன்னு விழுந்தே?'' என்றார் கேலிச் சிரிப்புடன்.



# 24

நிகில் ஒரு மர்ம சிரிப்புடன் அவளையே பார்த்துக் கொண்டிருக்க, ''ஹ்ம்ம், ஹ்ம்ம்...'' என்று பலமான யோசனையில் இருந்தாள் மிருதுளா.

''என்ன பேபி, இவ்வளவு நேரம் யோசிக்கிறே? கதிர் வேற ஒரு மார்க்கமா என்னைப் பார்க்கிறான்...'' என்ற நிகிலை இன்னும் நெருங்கி அவன் தோளில் சாய்ந்து கொண்டு, ''இல்ல நிக்கி, நிறையக் காரணம் இருக்கற மாதிரி இருக்கு. ஆனா சொல்லணும்னு ஆரம்பிச்சா ஒண்ணுமே இல்லாத மாதிரியும் இருக்கு!'' என்றுவிட்டு அனைவரது சிரிப்பையும் பரிசாகப் பெற்றுக் கொண்டு அசடு வழிய மீண்டும் தொடங்கினாள்.

''கோவில்ல வச்சு நிக்கியை பார்த்தப்பவே ஒரு விதமா இருந்தது. அப்புறம் என்னை வந்து ஹாஸ்பிடல் கூட்டிட்டுப் போய்க் கூடவே இருந்தது, அப்போவெல்லாம் எனக்குப் புரியல. புரியல என்றதைவிட புரிஞ்சுக்கிற மனநிலையில நான் இல்லை!'' என்றவள், யாராவது ஏதாவது சொல்வார்கள் என ஒரு இடைவெளி விட்டாள். ஆனால் அவரவர் அவளது நிலையைத் தங்களுக்கே



உரிய வகையில் கற்பனை செய்து வருந்திக் கொண்டிருக்க, ஒரு பதிலுமில்லாததால் அவளே தொடர்ந்தாள்...

''கடைசியா ஒரு அரை நாள் நிக்கி பேசவே இல்லை. அதுதான் எனக்கு ரொம்பக் கஷ்டமா இருந்தது. நிகில் பேசாம இருந்தது எதையோ ரொம்பவே மிஸ் பண்ற மாதிரி இருந்தது. ஆனா அப்பகூட அசராம நான் என்னோட மனசைப் புரிஞ்சுக்கல..'' என்று சிரித்தவள்,

''ஹ்ம்ம்... அப்புறம் எப்படிக் கண்ணா சரி சொன்னே?'' என்ற விசு சாரின் தூண்டுதலில் மனம் திறந்து அனைத்தையும் அனைவரிடமும் சொல்ல ஆரம்பித்தாள்.

நிகிலுக்கோ தங்கள் தேனிலவின் போது அவள் மடியில் தலை வைத்து இதைக்கேட்டது நினைவு வர, அந்த நாள் நினைவுகளில் கொஞ்ச நேரம் சஞ்சரித்து விட்டு ரிது சொல்வதில் முயன்று கவனத்தைச் செலுத்தினான்.

''ஹ்ம்ம், ஒரு தாயின் கனிவோட ஒரு அப்பாவின் கண்டிப்போட, ஒரு நண்பனின் அக்கறையோட நிகில் என்கிட்டே நடந்ததைக் கேட்ட விதம், அப்புறம் என்னைச் சமாதானப்படுத்தினது, சும்மா நான் சொல்லும் எல்லாத்தையும் சரி என்று சொல்லாம விமல், அண்ணா, அப்பா எல்லாருக்காகவும் வாதாடினது... எல்லாத்துக்கும் மேல என்னை விழ வச்சது எது தெரியுமா?'' என்று கேள்வியாய் முடித்தவளை எல்லாரும் ஒரு ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருந்தனர்.

''எல்லாரும் ஒரு செகண்ட் கண்ணை மூடிக் கோங்க...'' என்ற மிருதுளாவை நிகில் தவிர அனைவரும்

புரியாமல் பார்த்தனர்... ''ப்ளீஸ் ப்ளீஸ் ஒரே ஒரு செகண்ட்... நான் சொல்ற வரை கண்ணைத் திறக்கக் கூடாது... ஓகே?'' என்று அனைவரையும் கண்களை மூட வைத்துவிட்டுச் சத்தமில்லாமல் ஒரு முத்தத்தை நிகிலின் கன்னத்தில் பதித்தாள். அவன் இதை எதிர்பார்த்தவன் போல மெல்ல அவள் காதில் குனிந்து, ''வர வர, என்னோட சேர்ந்து, ரொம்ப கெட்டுப் போயிட்டே பேபி நீ! இதுக்கு என்னோட பதிலை வீட்டுல வந்து ஸ்பெஷலா வாங்கிக்கோ!'' என்றான் ரகசியக் குரலில்.

அவன் சொன்னதில் முகம் சிவந்தாலும் அதற்குமேல் பெரியவர்கள் முன் இப்படித் தன்னை மீறிச் செய்தது வேறு உறுத்திக் கொண்டிருக்க, முகம் திருப்பி, ''ஓகே... கண்ணைத் திறங்க! நான் கவிழ்ந்த முக்கிய காரணத்தைச் சொல்றேன்,'' என்றாள் மிருதுளா.

அனைவரும் கண்ணில் ஒரு குறும்புச் சிரிப்புடன் அவளைப் பார்த்ததைக் கண்டுகொள்ளாமல் தன் பேச்சில் கவனம் செலுத்தினாள்.

''என் மேல் நிகில் வைத்த நம்பிக்கை! அந்த ஃபோட்டோஸில் என்ன இருந்தது என்பதைக் கண்ணால் கூடப் பார்க்காதபோதும், என் மேல நான் அப்படிச் செய்திருக்க மாட்டேன் என்று முழுசாய் அவர் வைத்த நம்பிக்கை, நானும் விமலும் நண்பர்கள் என்பதை என் வார்த்தையை மட்டுமே வைத்து நம்பினார்... அதுல தான் முழுசா விழுந்துட்டேன்!'' என்றாள் ஒரு பெருமித முறுவலுடன்.

அவள் சொன்னதில் வாசுகியும், விஸ்வநாதனும் மலர்ந்த முகத்தோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு, பின்னர் நிகிலைப் பெருமையாகப் பார்த்தனர்.



நிகிலோ அவள் தன் மேல் கொண்ட காதலிலும், அவளது பெருமையிலும், பூரிப்பிலும் திளைத்து, அன்று போல் உடனடியாகத் தனது தாகத்தையும், அன்பையும் வெளிப்படுத்த முடியாமல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவளின் அருகாமையை மட்டும் ரசித்துக் கொண்டிருந்தான்.

இவர்கள் மூவரும் பூரிப்பிலும், பெருமையிலும் திளைத்திருக்க, மற்ற மூவரும் குற்ற உணர்வில் குறுகிப் போயினர்.

இவர்களிடம் கிடைத்த அதே சந்தோஷப் பார்வைகள் பெற்றோரிடம் வெளிப்படாமல் இருக்கவே திகைத்து அவர்கள் புறம் திரும்பியவள், அண்ணனின் கன்றிச் சிவந்த முகத்தைப் பார்த்ததும் ஒன்றும் புரியாமல் ''என்ன அண்ணா?'' என்று கதிரின் கையைப் பற்றினாள். அவளது கையை இன்னும் இறுகப் பற்றியவன் கண் மூடி இரண்டு சொட்டுக் கண்ணீரை வெளியேற்றினான். ''ஐயோ என்ன அண்ணா, என்னம்மா, என்னாச்சு? ஓ ஓ, நான் நிக்கியைப் பற்றி நல்லா சொன்னதை, உங்களைக் குறை சொன்னதா நினைச்சுட்டீங்களா... அய்யயோ! நான் அப்படிச் சொல்ல வரலை!'' என்றாள் அவசரமாக.

''உன்னைக் குத்தம் சொல்லல கண்ணமா! பாசத்தைக் கொட்டி வளர்த்த நாங்கள், உன்னை எந்த நிலையிலும் நம்பியிருக்க வேண்டாமா? எல்லோரும் உன்னை இப்படி விரட்டிவிட்டோமே... என்ன மாதிரி கஷ்டமெல்லாம் பட்டிருக்கிறாய்... நிகில் குடும்பம் இல்லாவிட்டால் என்ன ஆகியிருப்பாய்...'' என்று சிவநாதன் தழுதழுக்க மிருதுளாவிற்கு என்ன சொல்வதென்றே தெரிய

வில்லை. ஒருவாறு சுதாரித்து, ''ஷ் ஷ் என்னபா? சும்மா சும்மா... இப்போ தான் எல்லாம் சரியாகிவிட்டதே, அப்புறம் என்னவாம்... அண்ணா! என்ன அண்ணா, கண்ணைத் துடை!'' என்று அதட்டி ஒருவாறு மூவரையும் கொஞ்சம் வழிக்குக் கொண்டுவந்தாள்.

பேச்சை மாற்றும் விதமாக, ''என்ன கதிர், எப்போ சிக்கிக்கிறதா ஐடியா?'' என்றான் நிகில்.

அவன் சொன்னதை வேறு மாதிரிப் புரிந்துகொண்டு, ''ஆமா நிகில், பயமா இருக்கு, பார்க்கலாம்,'' என்றான் கதிர் சீரியஸ் குரலில்.

''பார்த்தியா பேபி, ஏன் தான் இப்படிச் செய்கிறாயோ?'' என்று கதிர்க்குப் பதில் சொல்லாமல் மிருதுளாவை அவன் கண்டனக் குரலில் கேட்டது அனைவருக்குமே புரியவில்லை.

''ச்சு, நான் என்ன செய்தேன்? சுகிமா! வரவரப் புரியாமப் பேசுறதே நிக்கிக்கு வேலையாய்ப் போச்சுது... சும்மா சும்மா என்னையே எல்லாத்துக்கும் குத்தம் சொல்றாங்க சுகிமா...'' என்று எப்போதும் போல் வாசுகியிடம் புகார் செய்தாள் மனைவி.

''வசு, நோ வசு, டோன்ட் ஸ்டார்ட் தி மியூசிக்... ஓகே!'' என்று வாசுகி வாயைத் திறப்பதறகு முன்னரே கையமர்த்தி அவரை அடக்கிவிட்டு, மிருதுளாவிடம் திரும்பி, ''புரியாத மாதிரி என்னமா நடிக்கிற பேபி! நான் படற கஷ்டத்தைப் பார்த்துக் கதிர் ரொம்பவே பயந்து போய்ட்டான் போல. அதுனால தான் கல்யாணத்தைப் பத்தி கேட்டவுடனே பயந்து நடுங்கிறான். அவன் இப்படிப்



பயப்படற மாதிரி நீ என்னைப் படுத்தி வைக்கிற!'' என்றான் நிகில் சிரிப்புடன்.

''உங்களை...'' என்று பல்லைக் கடித்தவாறே நாலு அடி பலமாக வைத்தாள் மிருதுளா. ''இது மாதிரி செஞ்சா யார் தான் பயப்பட மாட்டாங்க... சொல்றதே கேக்காதே!' என்று நிகில் சிரிப்புடன் அவள் கைகளைப் பற்றித் தடுத்தான் என்றால், சாருமதி, ''என்ன மிருது அடிக்காதே அடிக்காதேன்னு உனக்கு எத்தனை தடவை சொல்றது. சொல்ற பேச்சைக் கேக்கமாட்டியா நீ... சின்னப் பிள்ளை மாதிரி...'' என்று கண்டித்தார்.

இதையெல்லாம் சிரிப்புடன் பார்த்திருந்த கதிர், ''ஏன் நிகில், நான் கல்யாணத்தை நினைத்து அப்படிச் சொல்லல, மிருது நேத்துச் சொன்னதை நினைத்துச் சொன்னேன்... ஆனாலும் மிருதுமா நீ செய்ற வேலை இருக்கே, பாவம்டா நிகில்!'' என்று மீண்டும் சிரித்தான்.

''யாரு இந்த சார்? ம்ம் பாவம்! நான் ஒன்னும் சொல்லல. நீயே தெரிஞ்சுகோ!'' என்று நிகிலிடம் நக்கலாக ஒரு பார்வையை செலுத்திக் கதிரைப் பாவமாகப் பார்த்தாள்.

பின்னர், 'ஆமா அண்ணா, மானஸா கிட்டே பேசினியா, எப்படி பேசுறாங்க?''என்று விசாரித்தாள் மிருதுளா. ''இல்ல டா இன்னுமில்ல, கொஞ்ச நாள் ஆகட்டும் என்று அப்போ பேசல, ஊருக்குப் போய்த் தான் பேசணும்,'' என்றான் கதிரவன்.

வாசுகி சாருமதியிடம் எப்போது நிச்சயம், கல்யாணம் என்று விசாரணையைத் தொடங்கினார். ''இன்னும் ஒன்னும் முடிவு பண்ணல அண்ணி. மிருதுக்குக் குழந்தை

பிறந்த பிறகு. நீங்க எல்லாரும் அங்கே வர டைம்ல தான் நிச்சயமே வைக்கணும்!'' என்றார் சாருமதி.

''என்னமா, அவ்வளவு நாளா? அண்ணா பாவம்மா... மனசுக்குள்ள என்னைத் திட்டிட்டே இருப்பான். இவ ளால் தான் எத்தனை நாள் தான் பிரம்மசாரியா இருக் கிறதுன்னு!'' என்றாள் வருத்தத்துடன்.

''ச்சே ச்சே, என்னடா! நான் தான் நீ வந்தவுடன் கல்யாணம் என்றுவிட்டேனே. நீங்க எல்லாரும் வந்து எது வேண்டுமென்றாலும் செய்துகொள்ளலாம்,'' என்று வற்புறுத்தும் குரலில் முடிந்தவனைத் தோளில் தட்டி,

''அண்ணா! ஆனாலும் நீ ரொம்ப உருகுற என்கிட்டே, எப்போதும் போலச் சண்டை போட்டுட்டு, சீண்டி விளை யாடிட்டு, அப்படி இருண்ணா... எனக்கு ரொம்ப வித்தி யாசமா படுது!'' என்றவளை வாசுகி சிரிப்புடன் நோக்கி, ''உனக்கு யாரோடாவது சண்டை போட்டுட்டே இருக் கணுமா ரிது? சண்டை இல்லாம நாளே ஓட மாட் டேன்தா? என்றார்.

''போங்க சுகிமா... நான் என்ன சண்டைக்கோழியா? ம்ம்ம்...'' என்று அவரிடம் முகம் திருப்பி, பின் சமா தானமாகி முடித்தவுடன் நிகில், ''சரிமா நானும் கதிரும் ஒரு இடத்திற்குப் போயிட்டு அப்படியே வீட்டுக்கு வந்துடுறோம்... நீங்க எல்லாரும் கடைக்குப் போய் ஏதோ பார்க்கணும்ன்னு சொன்னீங்களே, அதைப் பார்த்துட்டு, வாங்கணும்னா வாங்கிட்டு அப்படியே வீட்டுக்கு வந்துடுங்க... ஓகேவா... கதிர், போகலாமா?'' என்று எழுந்தான்.

''நீங்க வரலையா நிக்கி? என்ன வேலை?'' என்று மிருதுளா கேட்டதற்கு, ''என்னோட ஆபீஸ்க்குக் கதிரைக்



கூட்டிட்டுப் போறேன் கண்ணா... அம்மாவோட போடா,'' என்றான் நிகில் விளக்கமாக.

''அதை ஏன் முதல்லே சொல்லல... நான் கேட்ட பிறகு சொல்றீங்க...'' என்று ஆராயும் பார்வையுடன் திரும்பியவளை, ''அடடா, ஏதோ ஞாபகத்தில சொல் லிட்டேன்... நீ பேசாம வக்கீல்க்குப் படிச்சிருக்கலாம்...'' என்று கன்னத்தில் தட்டிவிட்டு எல்லாரிடமும் விடை பெற்று, கதிருடன் கிளம்பினான்.

சற்று தூரம் சென்றபின் திரும்பி, ''பேபி, நீ வக்கீலுக்குப் படிச்சிருந்தா ஒரு கேஸ் கூட ஜெயிக்காது... ஏன் தெரி யுமா? நீ எல்லாரையும் அப்படியே நம்பிடுறே...'' என்று பாவனையோடு சொல்லிவிட்டு, கதிரை இழுத்துக் கொண்டு வேகமாகக் காருக்கு விரைந்தான்.

மிருதுளா, ''உங்களை...எங்கே போய்டுவீங்க, வீட் டுக்கு வாங்க வச்சுகிறேன்,'' என்று கத்தவும்... அதுவரை சிரிப்புடன் அவனது கேலியைப் பார்த்துக் கொண்டிருந்த வாசுகி, ''ரிது! இந்த டைம்ல இப்படிக் கத்தாதே, எங்கே யாவது பிடிச்சிக்கப் போகுது!'' என்றுவிட்டு எழ, அதன் பின்னர் விசு சார், அனைவரையும் அழைத்துக் கொண்டு குழந்தைகளுக்குத் தேவையான பொருட்கள் விற்கும் அந்தக் கடைக்குச் சென்றார்.

ஒன்றரை மணி நேரம் கழித்து அவர்கள் கடையி லிருந்து வீடு திரும்பும்போது, நிகிலின் கார் வீட்டில் நின்றிருக்கவில்லை.

''பாருங்க சுகிமா... இன்னும் காணோம்! எங்கேயோ ஊர் சுத்துறாங்க ரெண்டு பேரும்... வரட்டும், இன் னைக்குப் பேசிக்கிறேன்... போன் பண்ணா எடுக்கவே

மாட்டேன்றாங்க'' என்று கறுவிக் கொண்டே உள்ளே நுழைந்தாள் மிருதுளா.

மற்ற அனைவருக்கும் அவர்கள் சென்ற காரணம் தெரியும் என்பதால் ஒன்றும் சொல்லாமல் உள்ளே வந்தனர்.

இன்னும் ஒரு அரை மணி நேரம் அவள் திட்டை வாங்கிக்கட்டிய பிறகே, நிகில் வந்து சேர்ந்தான்.

அவன் கார் வரும் சத்தம் கேட்டதும் கதவைத் திறக்க எழுந்த விஸ்வநாதனைக் கைப்பற்றி நிறுத்திவிட்டு, ''அப்பா, நீங்க கதவைத் திறக்காதீங்க... நான் திறந்து, நல்லாத் திட்டிட்டு அப்புறம் தான் உள்ளே விடுவேன்!'' என்று எழுந்து சென்று கதவைத் திறந்தவள் சில நிமிடங்கள் ஸ்தம்பித்து நின்றுவிட்டாள்.

அங்கே நின்றவனின் பின்னிருந்து, ''பேபி, எவ்வளவு நேரம்டா இப்படி நிக்கிறது? வழிவிடு...'' என்ற நிகிலனின் குரலிலும், ''வாப்பா விமல், எப்படி இருக்கே?'' என்ற தன் பின்னிருந்து ஒலித்த வாசுகியின் குரலிலும் நிகழ்காலத்திற்கு வந்தவள், கண்ணீருடன் வழிவிட்டாள்.

தன்னை விசாரித்து வாசுகிக்குப் பதில் கூடச் சொல்ல முடியாமல் கண்கள் குளமாகி, நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொள்ள மிருதுவைப் பார்த்துக் கொண்டே உள்ளே நுழைந்தான்.

''அடடா, உள்ளே போயேன் விமல்...'' என்று அவனைத் தள்ளிக்கொண்டு மிருதுளாவின் அருகில் வந்தான் நிகிலன்.



அவனைத் தொடர்ந்து உள்ளே நுழைந்த பெண்ணையோ, கதிரையோ கவனிக்கும் நிலையில் மிருதுளா இருக்கவில்லை.

''வாம்மா, பயணம் எல்லாம் நல்லபடியா இருந்ததா?'' என்று வாசுகியின் வரவேற்பைத் தொடர்ந்து மற்ற மூன்று பெரியவர்களும் அந்தப் பெண்ணிடம் பேசிக் கொண்டே உள்ளே அழைத்துச் சென்றனர்.

அவர்கள் ஹாலுக்குச் சென்ற பின்னரும் மிருதுளாவிற்கும், விமலுக்கும் இடையே நிலவிய மௌனம் கலையாமல் இருந்ததைக் கண்டு, இப்போது கதிர், ''என்ன மிருது, வான்னு கூப்பிடு. பாவம் அவன் ரொம்ப செம டென்ஷன்ல இருக்கான்!'' என்றான்.

விமல், ''மிருது! எப்படி இருக்கே?'' என்று ஆரம்பித்த அதே சமயம், மிருதுளாவும், ''வா விமல்... எப்படிடா இருக்கே?'' என்றாள். இருவரும் ஒரே நேரத்தில் பேசியதில் சிரித்துக் கொஞ்சம் சகஜ நிலைக்கு வந்தனர்.

''ம்ம்ம் நல்லா இருக்கேன்... நீ எங்கே இருக்கே? ஏன் இன்னைக்கு வர? ஏன் நேத்திக்கு வரல? உன்னைக் கூப்பிடத் தான் நிகிலும் அண்ணாவும் வந்தாங்களா?'' என்று வாய்ப் பூட்டு அகன்று, கடகடவென்று கேள்விகளை அடுக்கியவளை மலர்ந்த சிரிப்புடன், ''மாறவே இல்ல மிருது நீ... கொஞ்சம் மெதுவாதான் கேளேன்,'' என்றான் விமல்.

''ஜஸ்ட் ஸ்டார்டிங் ட்ரபிள் தான் விமல்... அப்புறம் நிறுத்தாமல் பேசிட்டே இருப்பா உன்னோட ஃபிரண்ட்!'' என்றான் நிகிலன் கேலியாக.

''ஆமா, அவன் வர்றான்னு நீங்க ஏன் என்கிட்டே சொல்லல... என்கிட்டே வரவர ரொம்ப பொய் சொல்றீங்க நிக்கி நீங்க...'' என்று இப்போது நிகிலனைப் பிலுபிலுவென்று பிடித்தாள் மிருதுளா.

''நான் ஹரிச்சந்திரன் சாரோட நாலாவது தலைமுறை தெரியுமா, உனக்கு?? என்னைத் திட்டுறதை விட்டுட்டு வந்தவுங்களைக் கவனி. விமலோட மனைவி வந்திருக் காங்க பாரு!'' என்று நிகில் அப்போதைக்கு ஒரு மண் டகப்படியைச் சாமர்த்தியமாக ஒத்திவைத்தான்.

''ஹ்ம்ம், ஆமா உள்ளே வாடா,'' என்றுவிட்டு விமலின் மனைவியைப் பார்க்க முன்னே நடந்தாள்.

''ஹாய் வாங்க! சாரி, கொஞ்சம் அதிர்ச்சில நீங்க வந்தவுடனே உங்களைக் கவனிக்கல, எப்படி இருக்கீங்க? விமல் நல்லா வச்சிருக்கானா? இல்லைனா சொல்லுங்க, ரெண்டு போடறேன்!'' என்று சிரிப்புடன் அந்தப் பெண் ணின் அருகில் போய் அமர்ந்தாள்.

''நீங்க ரொம்ப நாள் கழிச்சுப் பார்க்கறீங்க இல்ல, அதனால தானே... பரவாயில்லை,'' என்று மெல்லிய குரலில் அவள் பதிலளிக்க, நிகிலனோ, ''ஆமா ரிது நல்லா போடுவா! என்னை நாலு போட்டுப் போட்டு அவளுக்கு செம ட்ரைனிங்... நீங்க சொல்லுங்க, உடனே போட்டுடுவா...'' என்றான் கேலிச் சிரிப்புடன்.

''நிக்க்க்க்க்க்க்க்க்க்க்க்க்கி!'' என்று அவள் முறைக்கவும், ''சரி சரி நீ பேசு, நீ பேசு,'' என்று நல்ல பிள்ளையாக அருகிலிருந்த சாப்பாட்டு அறையிலிருந்து நாற்காலி எடுத்து வந்து விமல், கதிர் இருவருக்கும் கொடுத்துவிட்டுத் தானும் அமர்ந்தான்.



''சாரி, தப்பா எடுத்துக்காதீங்க... உங்க பேர் என்ன? இந்த விமல் அறிமுகப்படுத்தவே இல்லை அதுதான்,'' என்று கொஞ்சம் தயக்கத்தோடு மிருதுளா கேட்க,

''அச்சச்சோ! தப்பாவெல்லாம் எடுத்துக்க மாட்டேன்... என் பேர் தேன்மொழி. எனக்கு உங்களை ரொம்ப நல் லாத் தெரியும். அவுங்க சொல்லியிருக்காங்க... இப்போ உங்களைப் பார்த்ததில என்னை அறிமுகப்படுத்த மறந்துபோய் இருப்பாங்க...'' என்று அழகான கொஞ்சும் தமிழில் தன்னை அறிமுகம் செய்தது மட்டுமில்லாமல் தன் கணவனையும் விட்டுக் கொடுக்காமல் பேசியவளை உடனே பிடித்துவிட்டது மிருதுவிற்கு.

''விமல்... ரொம்ப லக்கி... ரொம்ப ஸ்வீட்டா இருக் கீங்க தேன்மொழி நீங்க!'' என்று மிருது மனதாரச் சொல்ல, ''நானும் தாங்க லக்கி!'' என அழகாய் வெட்கப்பட்டாள் தேன்மொழி.

''நேத்திக்கு வந்திருக்கலாம் இல்லையா? உங்களுக் குத் தெரியுமா, நேத்து எனக்கு வளைகாப்பு நடந்தது!'' என்று அவர்களுக்குத் தெரியாதோ என்ற சந்தேகத்தில் கேட்டாள்.

''ம்ம்ம் தெரியுமே, அண்ணா போன வாரமே போன் பண்ணிச் சொன்னாங்க... நேத்திக்குக் கிளம்பும்போது நான்...'' என்று தயங்கிவிட்டுக் கன்னம் சிவக்க விமலை நோக்கினாள்.

''தேனு கர்ப்பமாக இருக்கா மிருது... நேத்து ஏர்போர்ட் கிளம்பும்போது மயங்கி விழுந்துட்டா... அப்புறம் ஹாஸ் பிடல் போய்ப் பார்த்துட்டு டாக்டர் பயணம் செய்யலாம்

என்ற சொன்னபிறகு. இன்னைக்கு ஃபிளைட்ல கிளம்பி வந்தோம்!'' என்றான் விமல் விளக்கமாக.

''கங்கிராட்ஸ்!'' என்று முகமலர அவர்களை வாழ்த்தி விட்டு, மற்ற அனைவரும் ஒன்றும் சொல்லாமல் அமர்ந் திருப்பதைப் பார்த்துவிட்டு ''ஓ, உங்களுக்கெல்லாம் முன்னாடியே தெரியுமா? என்கிட்டே ஏன் சொல்லல?'' என்று எல்லாரையும் ஒருங்கே பார்த்துக் கேட்டாள்.

''அதெல்லாம் அப்புறம் பேசலாம்... நீ வாமா, கொஞ்சம் ரெஸ்ட் எடு... ரொம்ப அசதியா தெரியுற... எங்க ரிதுக்கு பேச ஆள் கிடைச்சா பேசிட்டே இருப்பா...'' என்று வாசுகி தேன்மொழியை அழைத்துச் சென்று மேலறையில் வசதி செய்து கொடுத்தார்.

சாருமதி சமையலைக் கவனிக்கச் செல்ல, இரண்டு நாதன்ஸும் பக்கத்துக்கு பார்க் வரை வாக்கிங் செல்வதாகக் கூறிக் கிளம்ப, கதிர், நிகில் மற்றும் மிருது மட்டும் ஹாலில் அமர்ந்து பேச ஆரம்பித்தனர்.

தேன்மொழி படுத்திருந்த அறையின் புறம் பார் வையைச் செலுத்திவிட்டு, ''ஹே விமல், தேன்மிட்டாய் என்ன ஆனாடா...''' என்றாள் ரகசியக் குரலில்.

''தேனுக்குத் தெரியும் மிருது... நீ சத்தமாகவே பேசு... நான் செஞ்ச ஒரு தப்பு தொடர்ச்சியா எல்லாரையும் பாதிச்சு, உன்னை எந்த நிலைமை வரைக்கும் தள்ளி விட்டது என்பது வரை அவளுக்குத் தெரியும்!'' என்றான் மிகுந்த வருத்தத்துடன்.

''நீ சொன்ன போதெல்லாம் எனக்குப் புரியல மிருது... நீ அவமானப்பட்டு, அடிபட்டுக் கதறின அப்போக்கூட, நான் செய்த தப்புத்தான் இதற்குக் காரணமா இருக்கும்னு



எனக்குத் தெரியல... ஆனா தெரிஞ்ச பிறகு நான் பட்ட வேதனை... ஹய்யோ கடவுளே... செய்யாத தப்பிற்கு என்ன என்ன வார்த்தைகள்... உன்னை வேறு காணவில்லையா... என்னையே எனக்குப் பிடிக்கல மிருது... தங்கைகள் கல்யாணத்திற்காகவும், சித்தியின் வார்த்தைகள் மெய்யாகக்கூடாதே என்ற வைராக்கிய மும் இல்லை என்றால் நான் என்ன ஆகியிருப்பேனா?'' என்று அவன் புலம்பிக்கொண்டே போக,

''ஹே ஹே நிறுத்து... புரியற மாதிரி என்னைக்குமே பேசத் தெரியாதாடா உனக்கு... தலையும் புரியாம... லூசா டா...நீ... நான் மட்டுமா அடி வாங்கினேன்... நீயும் தான் வாங்கின...'' என்று அவனை அடக்கியவள், ஏதோ நினைவு வந்தாற் போல் கோபத்தோடு சிலிர்த்தெழுந்து,

''அப்புறம் எனக்கு ஒரு விஷயத்தில் உன் மேல ரொம்ப ரொம்ப கோபம்... தேனுவைப் பார்த்த பிறகு கொஞ்சம் அடங்கி இருந்தாலும் இன்னும் போகலை!'' என்று முறைத்தாள்.

''பேபி என்னானாலும் நோ டென்ஷன் ப்ளீஸ்... உனக்கும் குழந்தைகளுக்கும் நல்லதில்லை!'' என்று நிகில் அவள் தோள் தொட்டு அறிவுறுத்த, ''ஹ்ம்ம் சரி, நீங்க என் பக்கத்தில வாங்க,'' என்றுவிட்டு விமலிடம் திரும்பினாள்.

''ஆமா, எல்லாரும் சொன்னா நீ எப்படிக் கல்யாணத் திற்குச் சரி சொல்வே? ஹ்ம்ம்? அவுங்க அடிச்சா உன் னால திருப்பி அடிக்க முடியாதா? நீ இப்படிப் பண்ணு வேன்னு நான் நினைக்கவே இல்லை!'' என்று அவள் பொரிய -

''நிகில் சொன்னார்... நீ என்மேல இந்த விஷயத்தில கோபமா இருக்கேன்னு... ஆனா நான் சரி சொல்லலைன்னா என்னை அடிக்கிறது இருக்கட்டும். உன்னையும் ரொம்ப இன்னும் அடிப்பாங்களோ என்ற பயத்தில் சரி சொல்லிட்டேன் போல. நீ சொல்றது கரெக்ட் தான் மிருது... ரெண்டு பேர் வாழ்க்கையும் பாழாகியிருக்கும்... வெரி சாரி மிருது!'' என்றான் தயவாக.

அவன் தனக்காகப் பார்த்தான் என்று சொன்னதில் கொஞ்சம் சமாதானம் ஆனவள், ''ம்ம்ம்'' என்று மட்டும் சொன்னதிலிருந்து அவளது கோபம் இன்னும் குறையவில்லை என்று மூவருக்கும் புரிந்தது.

''நாங்க செஞ்ச மிருகத்தனம் தான் அவனை இப்படி நினைக்க வச்சிருக்கு மிருதுளா... பாவம்டா அவன்!'' என்று சொன்ன கதிரை நோக்கிப் பார்வையைத் திருப்பியவளின் முகத்தில் கோபம் கொப்பளித்தது.

''ஆமா... உங்களுக்கு என்னையே அடிக்க உரிமை இல்லாத போது, அவனை எப்படி அடிப்பீங்க... நீங்க இப்படி ஒரு தப்பு செஞ்சா நான் அடிக்கலாமா? ஒத்துப்பீங்களா?''

''மானசா கிட்ட இந்த மாதிரி நடந்துக்காதே, கதிர் அண்ணா!''

''கோபத்தைக் கட்டுக்குள் வைக்கத் தெரியாம நீ என்ன பெரிய தொழில் நடத்திற... ம்ம்ம்?''

''யாரும் தப்பே பண்ணாக் கூட இப்படி அடிக்கற வேலை வச்சுக்காத, சொல்லிட்டேன்!'' என்று அடுக்கு அடுக்காய் அவள் கதிரைத் தாக்க அவன் முகம் கன்றிச் சிவந்துகொண்டே போனது.



சட்டென்று நிகில் ''ஆமா பேபி, நீயும் இதைப் பின்பற்றுடா, நான் தப்பே பண்ணாலும் அடிக்காதே ஓகே?'' என்று சீரியஸ் குரலில் முடிக்கவும், ஒரு கணம் அனைவரும் திகைத்து, பின்னர் சிரிக்க, மிருதுளா ஓங்கி முதுகில் ஒன்று வைத்தாள்.

இறுக்கம் தளரக் கொஞ்சம் நேரம் பேசியவர்கள், ''ஹே விமல், நான் கேட்டதற்குச் சொல்லவே இல்லையே, தேனுமிட்டாய் என்ன ஆனாள்?'' என்று மிருதுவின் கேள்வியில் முகம் சுருங்கி,'' அவளை மூணு வருஷம் முன்னாடியே தலை முழுகிட்டேன் என்றவன்,

''அவ தான் மிருது அந்த போட்டோஸ் அனுப்பியது!'' என்று கூறி மிருதுளாவை ஒரேயடியாய்த் திகைக்க வைத்தான்.

## 25



''நீலாவா...'' என்று அதிர்ந்துவிட்டு நிகிலின் கையை இறுகப் பற்றிக் கொண்டாள்.

ஆதரவாய் அணைத்தவனின் தோளில் சாய்ந்து கொண்டு, ''உங்களுக்குத் தெரியுமா நிக்கி?'' என அவனது முகம் பார்த்து வினவினாள்.

''ஹ்ம்ம் தெரியும்டா! நான் இந்தியால இருந்தப்ப விபு மச்சான் சொன்னாங்க!'' என்றான் நிகில்.

"ஹோ, ஏன் என்கிட்டே சொல்லல?" என்று எல்லா நேரமும் போல் அடுத்த கேள்வியைக் கேட்காமல், "ஹ்ம்ம்" என்று அவனது பற்றிய கையை இன்னும் இறுகப் பற்றிக் கொண்டாள்.

பின்னர் வாடி இருந்த விமலின் முகத்தைப் பார்த்து, "அவளா விம்மி? அவளுக்கு நான் என்னடா செஞ்சேன்? ஏன் இப்படிச் செய்தாளாம்? நீ கேட்டியா? சரி, உனக்கு எப்படித் தெரியும்?" என்று உணர்ச்சி வேகத்தில் பதட்டமாகக் கேள்விகளை அடுக்கினாள்.

"பேபி, ஏன் இவ்வளவு பதட்டம்? எல்லாம் நடந்து முடிந்து, நீ என்கிட்டே வந்துட்டே! அப்புறம் எதுக்கு எவ்வளவு பதட்டப்படுறே? கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிக்கோ கண்ணா!" என்று நிகில் ஒரு அழுத்தமான குரலில் சொல்ல, "இல்ல நிக்கி, நான் இதை எதிர்பார்க்கவே இல்லை, அவளை நான் ரொம்பப் பார்த்தது கூடக் கிடையாது நிக்கி!" என்று முகம் கசங்கக் கூறியவளைத் தோளை அழுத்திக் கொடுத்துச் செய்கையால் தேற்றினான்.

கதிரும், விமலும் ஒன்றும் சொல்லமுடியாமல், நிகில் தான் அவளைத் தேற்றுவதற்கான சரியான ஆள் என்று எண்ணியது போல் இருவரையும் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தனர்.

அவளது முகத்தில் கசங்கல் குறையாமல் இருக்கவே, "ரிது பேபி, என்னைப் பாரு... நாம ரெண்டு பேரும் அவளுக்கு நன்றிக்கடன் பட்டுருக்கோம்... அவ அப்படிப் பண்ணலன்னா நானும் நீயும் சேர்ந்திருக்க முடியுமா சொல்லு? அப்படி நினைச்சு, மனசை ரிலாக்ஸா வச்சுக்கோ, ஹ்ம்ம் என்னமா!" என்று வார்த்தைகளில்



தேவையான அழுத்தம் கொடுத்து அவன் சொன்னது கொஞ்சம் மனதை "கரெக்ட் தானே" என்று எண்ண வைத்து அவளை நிமிர வைத்ததுமில்லாமல் விமலைக் கேள்விகேட்டுக் குடைய வைத்தது.

"நீ எப்படிடா கண்டுபிடிச்ச? எனக்கும் முதல்ல யாரு செய்தான்னு கண்டுபிடிச்சு நிரூபிக்கணும்னு இருந்தாலும்... அப்புறம் என்ன நிரூபிச்சு என்னனு ஆகிடிச்சு... நிகில் கூடச் சொன்னாங்க... நான் தான் அப்போ இருந்த பிடிவாதத்தில் ஊருக்குப் போறதுக்கு ஒத்துக்கவே இல்ல!" என்று தான் இதுநாள் வரை அதைப்பற்றி விசாரிக்காமல் இருந்தது பற்றிச் சொல்லிவிட்டு அவனைக் கேள்வியாய் நோக்கினாள்.

முகம் ஒரு நிமிடம் அதிகமாகக் கன்றிச் சிவந்தது விமலுக்கு. கம்மிய குரலில் சீர்படுத்திக் கொண்டு, "அந்த ஃபோட்டோஸ் எல்லாம் நான் அவளோடு எடுத்துக் கொண்டது மிருது..." அவளது ஆச்சரியம், கோபம் மற்றும் அதிர்ச்சியைக் கவனித்து, "இல்ல இல்ல, அவ்வளவு மோசமாக இல்ல மிருது..." என்று அவசரமாகச் சொன்னவன்.

"உனக்குத் தெரியும் இல்லையா... அவளோட முக்கியப் பாடம் புகைப்படத் தொழில் நுட்பம்... உன்னோட ஃபோட்டோசை, அந்த ஃபோட்டோஸ் கூட ஒன்றவச்சு, இன்னும் அங்கங்கே மோசமா ஏதோ பண்ணி, உன் கல்யாணத்தப்போ அனுப்பின படங்களைத் தயார் செய்சிருக்கா! படித்தத நல்ல வழியில யூஸ் பண்ணியிருந்தா நல்லா இருந்திருக்கும்..." என்று பெருமூச்சு விட்டவன்.

''புத்தி போகுது பாரேன்... அந்த ஃபோட்டோஸ் மட்டுமில்ல மிருது, அதுக்கு முன்னாடியும் ரெண்டு மூணு லெட்டர்ஸ் எல்லாம் உங்க வீட்டுக்கு உங்க அப்பாவுக்கு எல்லாம் அனுப்பியிருக்கா... ஆனா ரொம்ப மோசமா இல்லாம, சும்மா நீ சரியில்ல... என்னோட சுத்துற... அப்படி இப்படின்னு... பெரிய பாதிப்பு இல்லன்னு தெரிஞ்சவுடன், மோசமா இந்த ஃபோட்டோஸ் ரெடி பண்ணி, கரெக்டா கல்யாணத்திற்கு முன்னாடி நாள் அந்த சர்வேஷ்க்கு அனுப்பிட்டா...'' என்றான்.

''ஹோ லெட்டர்ஸ் எல்லாம் வந்ததா? ஆனா அவ ஏன் பண்ணான்னு நீ சொல்லவேயில்லையே? என்ன காரணம்? என் மேல என்ன கோபம்? எனக்கு முன்னாடியே அவளைப் பிடிக்காது தான், பட் நேரடியா அப்படி அவகிட்டே சொன்னதே இல்லையே?'' என்று விசாரித்தாள்.

''நீ சொல்லிட்டே இருப்பே இல்ல மிருது, ''நீலா உனக்கு ஏற்றவள் இல்லை... இது என்னோட கருத்து... உனக்கு மனசுக்குப் பிடிச்சிருந்தா எனக்கு சந்தோஷம் தான் அப்படி''ன்னு. அப்பவே நான் கேட்ருக்கணும்... ஹ்ம்ம்... அப்படிப் பண்ணி இருக்கணும்... இப்படி நடந்திருக்கணும் அப்படின்னு இப்போ பீல் பண்ணுறதில ஒன்னும் ஆகிடாது... சரி, சொல்ல வந்ததைச் சொல்லி முடிச்சுடறேன்,'' என்று விட்டுத் தொடரும் போது தேன் மொழி கீழே இறங்கி வந்துகொண்டிருந்தாள்.

கடைசிப் படியில் வரும்போது அவள் லேசாகத் தடுமாறவும், விரைந்து சென்று அவளைத் தாங்கிப் பிடித்தான் விமல். ''என்னமா செய்யுது? இன்னும்



கொஞ்சம் நேரம் தூங்குறதுதானே... ஏன் எழுந்தே?'' என்று அவன் உருகவும்.

''ஒண்ணுமில்லே மாமா, லேசா தலை சுத்திடுச்சு, இன்னொரு மனுஷங்க வீட்டுக்கு வந்திட்டு பகல்ல இப்படித் தூங்க ஒரு மாதிரி இருக்கு மாமா!'' என்றாள், அவன் காதில் மட்டும் விழும்படியான மெல்லிய குரலில்.

''மிருது வீட்ல நீ நம்ம வீடு மாதிரி இருக்கலாம் தேனுமா, சரியா? கொஞ்சம் தூங்குறியா? இல்ல, அங்க வந்து என்கூட உக்கர்ந்துக்கிறியா?'' என்று அவன் தோளில் சாய்த்து தலையை வருடவும் கூச்சத்தில் முகம் சிவக்க, ''என்ன மாமா இது? வீட்டுல இருக்கிற மாதிரி செய்றீங்க? விடுங்க, எல்லாரும் இருக்காங்க...'' என்றாள் மிக மெல்லிய குரலில்.

அதற்குள் கைவளைவில் வைத்திருந்தவன், அனைவரும் இருந்த இடத்திற்கு வந்திருக்கவே, மிருது சிரிப்புடன், ''உங்க மாமா வீட்டுல இவ்வளவு மட்டும் தான் செய்வாரா தேனு, ரொம்ப நல்லவரோ?'' என்றாள் கேலியாக.

''ரொம்ப நல்லவங்க மிருதுக்கா! ஏன் வேற என்ன செய்யவாங்களான்னு கேட்குறீங்க?'' என்று அப்பாவியாக அவள் விழி விரிக்கவும், நிகில் கேலியாக, ''என்னை விட உன் நிலைமை மோசம் போல... பாவம் விமல் நீ!'' என்றான் சிரிப்புடன்.

அப்போதும் ஒன்றும் புரியாமல் விமலை நோக்கி, ''என்ன மாமா, நான் ஏதாவது தப்பா சொல்லிட்டேனா?'' என்று பரிதாபமாகக் கேட்கவும், அனைவரும் சிரிக்க.

விமல், "ச்சே ச்சே இல்லம்மா, நீ இருக்கிற நிலைமையைப் பார்த்தே நான் செய்ற வேலை என்னனு அவுங்களுக்குப் புரிஞ்சிருக்கணும். ஆனா பாரு, இந்த மிருது கல்யாணத் திற்குப் பிறகு ரொம்ப ட்யூப்லைட் ஆகிட்டா... அதுக்கு நீயும் நானும் என்ன செய்றது சொல்லு!" என்று அவளைச் சமாதானப்படுத்துவது போல் எல்லாருக்கும் பதில் சொல்லிக் கேலியில் இறங்கினான் விமல்.

இன்னமும் அவள் முகத்தில் தெளிவான ரேகைகள் ஓடாமல் இருப்பதைக் கண்டு, 'நீ ரொம்ப மண்டையை உடைச்சுக்காத... நான் நைட் சொல்றேன் என்னனு,' என்று அவள் காதைக் கடித்து அவன் சொன்னவிதம், கன்னம் சிவக்க வைத்தது மட்டுமில்லாமல், கணவன் குரலில் இருக்கும் ஒரு அதிகப் படியான சந்தோசத்தைக் கண்டுகொள்ள வைத்தது.

பின்னர் அவரவர் வேலை, வீடு, விமலின் தங்கைகள் என்று திசை மாறி விமலின் திருமணம் முடிந்த கதையில் வந்து நின்றது.

விமலின் தாய்வழி சொந்தத்தில் ரொம்பவே கஷ்டப் பட்டுக்கொண்டிருந்த ஒருவரின் மகள் தான் தேன்மொழி என்றும், பார்த்ததும் அவளது அப்பாவித்தனமான முகமும், குணமும் உடனே பிடித்துவிடக் கல்யாணம் முடித்துக் கூட்டி வந்து விட்டதாகவும், இப்போதும் அவள் தம்பி தங்கைகளை அவன் படிக்கவைப்பதாகவும் அவன் கூறி முடித்தபோது அனைவருக்கும் முகம்பெரு மிதத்தில் மலர்ந்திருக்க, தேன்மொழி பாதி வெட்கத் திலும், மீதி நன்றியிலும் இன்னும் அழகாய்த் தெரிந்தாள்.

இன்னும் கொஞ்ச நேரம் கதைகள் பேசிவிட்டு, உணவு நேரம் முடிந்து, எல்லாரும் அவர்கள் அறைக்குள்



செல்ல ஆயத்தம் ஆகி அவரவருக்கு ஒதுக்கப்பட்ட அறைக்குள் செல்ல, மிருதுளா மட்டும், "விமல், அவ ஏன் செய்தான்னு எனக்கு இன்னும் சொல்லவே இல்லை யேடா, எனக்குத் தலைக்குள்ள ஓடிகிட்டே இருக்கு!" என்றாள் தனியாக அவனை அழைத்து.

"ஹ்ம்ம் சொல்றேன்! பட் உனக்குத் தூக்கம் வர லையா? இதைப் பத்தியே நினைச்சுகிட்டு உடம்பைக் கெடுத்துக்காத என்ன? அந்த ஒரு பிரச்சனை நிறைய நல்லதற்கு வித்தா இருந்திருக்குன்னு நினைச்சு சந் தோஷமா இரு, என்ன? இந்த டைம்ல உடம்பு மட்டு மில்ல, மனசும் நல்லா இருந்தாதான் டெலிவரி நல்ல படியா நடக்கும்!" என்று அக்கறையாய் அவன் கூறியதைக் கேட்டுக் கேலியாய்ச் சிரித்த மிருதுளா, தலை சரித்து, "சரிங்க டாக்டர் சார், கண்டிப்பா பார்த்துகிறேன்!" என் றாள்.

"நீ ஒரு டாக்டர் மாதிரி நடந்துகிட்டா, நான் ஏன் சொல்றேன் இதை? நிகில் சொல்லிட்டு இருந்தார், சில டைம் ரொம்பவே உடம்பைக் கெடுத்துகிறியாமே!" என்றான் கொஞ்சம் கண்டிப்புடன்.

"சரிங்க சார், ஒழுங்கா இருக்கேன், நீங்க சொல் லுங்க!" என்று அவனைத் தோளில் தட்டினாள்.

"ஹ்ம்ம், என்ன சொல்றது..." என்று ஒரு பெரு மூச்சை வெளியேற்றிவிட்டு "சும்மா நான் உன்னைப் பத்தி பேசினாலே அவளுக்கு எரிச்சலா வரும்... நாம இந்தியா கிளம்புறதுக்கு ரெண்டு நாள் முன்னாடி எங்களுக்கு ஒரு பிரச்சனை, நான் இந்தியால போய் என்னோட தங்கைகள் கல்யாணம் முடிச்சுட்டு, சொத்தெல்லாம் எனக்கு வேண் டாம் என்று சித்தி பேரிலேயே மாத்திவைக்கப் போறதா

சொல்லிட்டு இருந்தேன் இல்லையா, அதை நீலாகிட்டே சொன்னேன். அதுல ஆரம்பிச்ச சண்டை... சொத்தைக் குடுக்கக் கூடாது. இப்போ சம்பாரிச்சதையெல்லாம் தங்கைகள் கல்யாணத்திற்குச் செலவு செய்யக் கூடாது. இனிமேல் அவுங்களைப் போய்ப் பார்க்கக்கூடாது அப்படி இப்படின்னு போய்க் கடைசில நான் நீ இப்போதும் சொல்றதை, அது தான் அவ எனக்கு மேட்ச் இல்லன்னு அதைச் சொல்லப்போய் ரொம்ப மோசமா அங்க இங்க போய்டுச்சு...''

''ஒரு பாயிண்ட்ல, எனக்கு மிருதுதான் முக்கியம், அவளை இப்படிப் பேசினா என் கூடப் பேசாத, உனக்கும் எனக்கும் கல்யாணம் நடக்கணும்ன்னா மிருது எஸ் சொல்லணும், அவ சொல்லலைன்னா ஒண்ணுமில்ல... அப்படி இப்படின்னு நானும் கோபத்தில கத்திவிட்டு வந்துட்டேன்,''

''நீ சொல்லவேயில்லையே விமல்?'' என்று மிருது கேட்க, ''நான் அந்தப் பிசாசு இப்படி சீரியஸ் நோட்ல எடுத்துக்கிட்டு இப்படி வேலை செய்வான்னு யோசிக்கல. கொஞ்சம் உணர்ந்து, யோசிப்பா அப்படின்னு தான் நினைச்சேன். உங்கிட்டே உன்னைப் பத்தி தப்பா சொன்னான்னு சொல்ல ஒரு மாதிரி வேற இருந்தது.''

''ஹ்ம்ம், நீ எப்படி நீலா தான்னு கண்டுபிடிச்ச?'' என்று அவள் அடுத்த கேள்வியோடு அவனை ஏறிட்டாள்.

''நான் முதல்ல அந்த போட்டோஸ் பார்க்கவே இல்லை மிருது, அப்புறம் பார்த்தப்பவே எங்கேயோ பார்த்த மாதிரி இருந்தது... ஆனா சரியா எங்கேன்னு தெரியல...''



''நீ கிளம்பின பிறகு, ஒரு நாள் நீலாவைத் திருச்சி ரயில்வே ஸ்டேஷன்ல பாத்தேன்... என்னைப் பார்த்து மறைந்த மாதிரி இருந்தது... அப்படியே நூல் பிடிச்சுக் கண்டு பிடிச்சேன்!'' என்று முடித்தான்.

''நீலாவும் (தேனுமிட்டாய்) தேனுவும் எவ்வளவு வித்தியாசம்! இல்லையா விமல்!'' என்று மிருதுளா சிறு யோசனைக்குப் பின் சொல்ல, ''ஆமா ரிது, ரொம்பவே! தேனுக்கு நான் தான் உலகம்... நீலாவுக்கு... ப்ச் அது எதுக்கு? தேனுவைப் பார்த்தப்ப, என்னைத் தேனுமிட்டாய் தேனுமிட்டாயின்னு கேலி பண்றது தான் ஞாபகம் வந்தது. ஆனா அது நான் நீலாவை இங்கிலீஷ்-ல ஹனின்னு கூப்பிடறதற்காக, இப்போ நான் தேனு தேனுன்னு கூப்பிடறது என்னோட வாழ்க்கைக்கு இனிமை கூட்டுறா என்பதால்... நிறைய வித்தியாசம் மிருது!'' என்று அவன் உருக, நண்பனைப் பெருமையாகப் பார்த்தாள் மிருதுளா.

பல வருடக் கதைகளை அவனோடு பேசிக்கொண்டிருந்துவிட்டு, மிருதுளா தங்களின் படுக்கை அறைக்குள் நுழைவதற்கு ஒரு மணி நேரமானது.

கட்டிலில் அமர்ந்து லேப்டாப்பில் ஏதோ வேலையிலிருந்த நிகில், நிமிர்ந்து அவளைப் பார்த்து ஒரு புன்னகையைச் சிந்திவிட்டுத் திரும்ப அதில் மூழ்கினான்.

உடை மாற்றிக் கொண்டு வந்து, அவனருகில் படுத்துக் கொண்டவள் ஒன்றும் சொல்லாமல், காதலோடு, பெருமிதத்தோடு, நன்றியோடு, ஏக்கத்தோடு என்று பலவகை உணர்வுகளோடும் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சற்று நேரம் (ஒரு இரண்டு நிமிடங்கள்:)) பொறுத்தவள், ''நிக்கிகிகி'' என்று உள்ளே போய்விட்ட ஹஸ்கியான குரலில் கூப்பிடவும் -

''என்ன பேபி?'' என்றான் கணினியிலிருந்து பார்வையை எடுக்காமலேயே.

அதற்குள் பொறுமை பறக்க, ''போதும் வேலை, வாங்க!'' என்று சிணுங்க, ''ஜஸ்ட் இரண்டு நிமிஷம், பேபி!'' என்றான் அப்போதும்.

''வாங்க நிக்கி, ப்ளீஸ்!'' என்று அவள் விடாமல் சிணுங்கவும்... ''இரு இரு வரேன்... என்ன அவசரம், நான் வந்தவுடனே தூங்கப்போற. அப்புறம் எதுக்கு இந்த ஹஸ்கி வாய்ஸ்... ஹ்ம்ம்'' என்று கேலியாகக் கேட்டவாறே கணினியை எடுத்துவைத்துவிட்டு அவள் அருகில் வந்து அவளை அணைத்து அவளது முகம் நோக்கிப் படுத்தான்.

அவன் படுத்தவுடன், அவன் முகத்தை அருகில் இழுத்து, ''தேங்க்ஸ் நிக்கி!'' என்று சொல்லிவிட்டு முகமெங்கும் முத்திரைகளை அழுத்தமாகவும், ஒரு வேகத்தோடும் அள்ளி வழங்கினாள்.

''பயங்கர மூட்ல இருக்கீங்க போல... மேடம்!'' என்று அவனும் கிறங்க, தன் பதில்களை அவளது வேகத்திற்கு இருமடங்கு அதிகமான வேகத்தில் திருப்பிக்கொடுத்தவன், அவளது உதடுகளை அடைந்த போது பலமடங்கு காதலில் அங்கே பல நிமிடங்களைச் செலவழித்தான்.

கொஞ்ச நேரம் பொறுத்தவள் அவனது தோளைப் பிடித்துத் தள்ளவும், ''என்ன பேபி... எனக்கு வேணும்!''



என்று திரும்பக் குனிவதற்குள்... ''மூச்சு முட்டுது நிக்கி!'' என்று அவள் சிணுங்கவும் ''ஹ்ம்ம் சரி'' என்று அப்போதைக்குச் சமாதானம் ஆகினான்.

அப்போதும் அவள் முகத்தில் கைகளால் கோலம் போட்டுக்கொண்டே இருந்தவனைக் காதலின் தாகத்தோடும், தாபத்தோடும் நோக்கி, ''என்ன வேலையெல்லாம் செஞ்சுருக்கீங்க... எனக்காக... என் செல்ல நிக்கி!'' என்று கழுத்தை வளைத்து இன்னும் அருகிலிழுத்தாள்.

''உன் முகத்தில் தெரியுற இந்த சந்தோசத்திற்கும், நிம்மதிக்கும் என்ன வேண்டும் என்றாலும் செய்யலாம் பேபி... நீ ப்ரெக்னன்ட் ஆனதிலிருந்து உன்னோட முகத்தில் எப்போதும் ஒரு ஏக்கமும், தவிப்பும் இருந்துட்டே இருக்கும்... அதைப் பார்க்கப் பிடிக்காம தான், இத்தனை வேலை, இத்தனை திட்டு, கடைசிலே நீ சந்தோஷமா இருக்கிறதைப் பார்க்கும் போது உலகத்தில் வேற ஒண்ணுமே பெருசில்லைன்னு தோணுது!'' என்று அவன் இயல்பிற்கு மாறி அவன் குரல் கரகரக்க உருகவும் மிருது அப்படியே கரைந்துவிட்டாள்.

''தேங்க்ஸ் நிக்கி, தேங்க்ஸ் நிக்கி, தேங்க்ஸ் நிக்கி!'' என்று வேறு வார்த்தையின்றி இன்னுமின்னும் அவனை நெருங்கி அவனிடம் சரண் புகுந்தாள்.

அவனுள் புகுந்தவளை அவனுள்ளேயே நீக்கமற அவன் வைத்துக் கொள்ளுவான் என்ற நிம்மதியோடு நாம் அங்கிருந்து வெளியே வருவோம்.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு

பிரசவத்திற்குக் குறித்திருந்த நாளுக்கு மூன்று நாட்கள் முன்னேரே மிருதுளாவிற்கு வலி எடுத்துவிட, அவளுக்கு வலி எடுத்தவுடன் அலுவலிலிருந்து விரைந்து வந்த நிகிலனின் கையை மறந்தும் கூட அவள் விடவில்லை. வாசுகியும், சாருமதியும் அவளுக்கு இடுப்பை நீவி விட்டும், குடிக்கச் சூடாகக் கொடுத்தும், வார்த்தையால் தைரியம் கூறியும் இருந்தனர் என்றால் நிகில் பார்வையாலும்,பேபி என்ற அழைப்பாலுமே அவளை வருடிக் கொண்டிருந்தான்.

இரு தாய்மார்களும் என்ன செய்தபோதும், அவளது வலியை வாங்கிக் கொள்ள முடியாதில்லையா... ஒவ்வொரு வலியிலும் அவள் படும் வேதனையைப் பார்த்துச் சகித்துக் கொள்ளத் தான் வேண்டியிருந்தது.

இரு குழந்தைகள் என்பதால், இப்போதும் ஹாஸ்பிடல் வரவேண்டும் என்று அறிவுறுத்தப்படும் நேரத்திற்குச் சில மணி நேரங்கள் முன்னரே மிருதுளா கூட்டிச் செல்லப்பட்டாள்.

பெற்றோர் நால்வரும் வெளியே இருக்க, நிகிலனை லேபர் ரூம்மிற்கு அனுமதித்தனர் மருத்துவர்கள்.

வெளியே நின்றிருந்த நால்வரில் விஸ்வநாதன் தவிர அனைவரும் ஒரு பதட்டத்திலேயே இருந்தனர். விஸ்வநாதன் மட்டும்தான், வெளி வேலைகள் தவிர மற்ற மூவரையும் கவனிக்கும் பணியும் இருந்ததால் கொஞ்சம் தைரியமாக இருந்தார்.



உள்ளே போன நிகிலனோ அவள் படும் வேதனையில் உடைந்து போனான். பெண்களுக்கு ஆண்களை விடப் பெரும் உடல் மற்றும் மன வலியைத் தாங்கும் சக்தி இருப்பதால் தான் கடவுள் அவர்களுக்குத் தாய்மை என்னும் வரத்தைக் கொடுத்திருக்கிறான் என்ற வாக்கை மெய்ப்பிப்பது போல் மிருதுவிற்கு வந்த ஒவ்வொரு வலிக்கும் நிகிலனின் மனம் பதறி, உடல் உதறி, கண்ணில் ஆறு ஓடியது.

தாங்க முடியாத வலியில் வீரிட்டுத் தனது முதல் குழந்தையை இயற்கை வலியில் உலகத்திற்குக் கொண்டு வந்தாள் மிருதுளா. வெளியே வந்து, தன் தந்தையைப் பார்த்து அந்த அழகான ஆண் குழந்தை அழுத முதல் ஒலியை நிகில் வாழ்நாள் முழுவதும் மறக்கமாட்டான்.

தொப்புள் கோடியை டாக்டர் அறுக்கச் சொல்ல, இன்றுவரை அனுபவிக்காத சந்தோசம், வேதனை என்ற கலவை உணர்வோடு அவன் அதை அறுத்தபோது மிருதுளாவிற்கு அடுத்த குழந்தைக்கான வலி புறப்பட்டுவிட்டது.

முதல் குழந்தைக்கான வலியைச் சகித்த மிருதுவால் அடுத்த குழந்தைக்கான வலியைச் சகிக்கமுடியாமல் போக, அடுத்த பெண் குழந்தை அறுவைச் சிகிச்சை முறையில் பிறந்தாள்.

''வாவ், ஒரே நேரத்தில் ஆண் குழந்தையும்... பெண் குழந்தையும் பிறந்திருக்காங்க! வாழ்த்துக்கள்!'' என்று மருத்துவர் ஆங்கிலத்தில் கூவியதைக் கேட்காமல் மிருதுவும், நிகிலும் ஒரு மௌனப் பெருமை மற்றும் சந்தோஷப் பார்வையைப் பரிமாறிக்கொள்ள, மிருதுளா கண்மூடி மயக்கத்தில் ஆழ்ந்தாள்.

தாத்தா பாட்டியாகிவிட்ட பெருமையில் வாசுகி - விஸ்வநாதன் மற்றும் சாருமதி - சிவநாதன் வானத்தில் பறந்தனர்.

குழந்தைகள் பிறந்த செய்தி, அடுத்த நொடியில் இந்தியா பறக்க, விபுவும், சந்த்யாவும் முடிந்த அளவு சீக்கிரம் கிளம்பி வருவதாகக் கூறினர்.

ஹாஸ்பிடலில் குழந்தைகளின் பெயர்கள் கேட்க, நிகில் சற்றும் தயங்காமல் ''பெண்ணிற்கு-நிதிஷ்டா, பையனுக்கு-நந்தன்!'' என்றான்.

கணவன், மனைவிக்குத் தன் காதல் பரிசாக, அவளது குடும்பத்தையும், நட்பையும் மீட்டுக் கொடுக்க, மனைவியோ கணவனுக்குத் தன் காதல் பரிசாக அவனுக்கென்று ஒரு குடும்பத்தைத் தன்னுள் தாங்கி, உயிர்க்கு உயிராய் வளர்த்துக் கொடுத்தாள்.

1457

1214